வெளியீடு எண்: 997

திருமூலர்
திருமந்திரம் 1, 2, 3

பத்தாம் திருமுறை-1

ஞானசம்பந்தம் பதிப்பகம்
தருமை ஆதீனம்
மயிலாடுதுறை 609 001

திருமுறைகள் ஓதாய் தினமும் என அறிவித்த
தருமை ஆதீன ஸ்தாபகராம் முதற்குரவர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

உ

குருபாதம்

தருமை ஆதீனம்
25 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி
குருபூஜை வெள்ளிவிழா


நினைவு வெளியீடு

சிதம்பரம்
அருள்மிகு நடராஜப் பெருமான்
சந்நிதியில் வைத்துப் பூசித்து,
ஆயிரங்கால் மண்டபம் என வழங்கும் இராஜ சபையில்
உரை அரங்கேற்றம் செய்து,
வெளியிடப் பெற்றது.

திருக்கயிலாய பரம்பரை
எல்லாம் சிவன் செயல்
தருமபுரம் ஆதீனம்

1997

திருமுறைகள் உரையோடு வெளிவருமாறு அருள் சுரந்து,
ஒன்று முதல் ஒன்பதாம் திருமுறைகள் வெளியிட்ட,



தருமை ஆதீனம் 25ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வெளியீடு எண்: 997

உ

திருச்சிற்றம்பலம்

திருமூலதேவ நாயனார்

அருளிச்செய்த

திருமந்திரமாலையாகிய

திருமந்திரம்

பத்தாம் திருமுறை

முதல் மூன்று தந்திரங்கள்

பொழிப்புரை, விளக்கக்குறிப்புரைகளுடன்.

இந்நூல்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்
திருவருள் ஆணையின் வண்ணம்

இராஜபாளையம், இராம்கோ கூட்டுத் தொழில் நிறுவனத்தின்
தலைவர், குருபக்தமணி, திருப்பணித்திலகம்,
திரு. பி. ஆர். இராமசுப்பிரமணிய ராஜா அவர்களின்
அறக்கொடையாக

ஞானசம்பந்தம் பதிப்பகத்தில்
வெளியிடப்பெற்றது.

1997

பதிப்புரிமை : ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமை ஆதீனம்,
மயிலாடுதுறை - 609 001. தமிழ்நாடு, இந்தியா.

முதற் பதிப்பு : 1974
இரண்டாம் பதிப்பு : 1997

பதிப்பாசிரியர்:

வித்துவான் ஸ்ரீமத் மௌன மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள்,


கட்டளை விசாரணை, மௌன மடம், திருச்சிராப்பள்ளி

பொழிப்புரை, விளக்கக் குறிப்புரை:

தருமை ஆதீனப் புலவர், சித்தாந்தக்கலைமணி, மகாவித்துவான்,
முனைவர் சி. அருணைவடிவேல் முதலியார்,
காஞ்சிபுரம்.

அச்சிடல்-தயாரிப்பு:
மறவன்புலவு க. சச்சிதானந்தன்

காந்தளகம்
(யாழ்ப்பாணம் - சென்னை),
834. அண்ணா சாலை, சென்னை - 600 002.



உ

திருமூலதேவ நாயனார் அருளிய
திருமந்திரம் - முதல் தொகுதி

இராஜபாளையம், *இராம்கோ* கூட்டுத் தொழில் நிறுவனங்களின் தலைவர், குருபக்த மணி, திருப்பணித் திலகம் திரு.பி.ஆர். இராமசுப்பிரமணியராஜா அவர்களின் நன்கொடை

இராஜபாளையம் பி.ஏ.சி. இராமசாமி ராஜா, திருமதி சேதுராமம்மாள் ஆகியோரின் அரும்பெறற் புதல்வராய் 1935ஆம் ஆண்டில் பிறந்தவர் பி.ஆர். இராமசுப்பிரமணிய ராஜா. வளமான நற்குடியில் பிறந்த இவர் தன் தந்தையார் அறிவுரைப்படி அலுவலகத்தாருடனும் தொழில் செய்வோருடனும் கலந்து பழகி, பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்விகளுடன் நூற்பாலை தொடர்பான தொழில் நுட்பங்களையும் கற்றுத் தேர்ந்து 1962ஆம் ஆண்டு முதல் *இராம்கோ* கூட்டுத் தொழில் நிறுவனங்களின் தலைவராய் விளங்கி வருகின்றார்.

இந்திய நாட்டின் பலமாநிலங்களிலும் நவீன தொழில்நுட்பங்களுடன் இயங்கிவரும் இந்நிறுவனங்களில் 10,000க்கு மேற்பட்டோர் பணிபுரிந்து நல்வாழ்வு பெற்று வருகின்றனர். இங்கு உற்பத்தியாகும் பொருள்கள் ஜப்பான் முதலிய வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இனிய பண்பாளராக இலங்கும் திரு. இராமசுப்பிரமணிய ராஜா, தெய்வ பக்தியும் குருபக்தியும் உடையவர். ஆண்டு தோறும் கந்தசஷ்டி நாட்களில் திருச்செந்தூர் சென்று விரதமிருந்து செந்திலாண்டவனை வழிபட்டு வருகின்றார். சிருங்கேரி சாரதாபீடம் ஸ்ரீமத் பரமாசாரிய சுவாமிகளிடமும் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்திடமும் அளவற்ற பத்திமை கொண்டவர். தருமை ஆதீனம் 24ஆவது குருமகா சந்நிதானம் காலந்தொட்டே இவர்தம் குடும்பம் தருமை ஆதீனத் தொடர்புடையதாய் விளங்கிவருகிறது.

இவர், சீர்காழி அருள்மிகு சட்டை நாதர் திருக்கோயில், மதுரை அருள்மிகு அழகர் கோயில், அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில், தருமையாதீனம் அருள்மிகு ஞானபுரீசுரர் கோயில் முதலிய ஆலயங்களின் திருப்பணிகளுக்குப் பெரும் பொருள் உதவியுள்ளார்.

திருக்கடவூர் அருள்மிகு அமிர்தகடேசுரர் ஆலய வாயிலில் மார்க்கண்டேயர் மண்டபத்தையும் வேளூர் அருள்மிகு வைத்தியநாத சுவாமி திருக்கோயிலில் கீழைக் கோபுர வாயிலில் அருள்மிகு செல்வமுத்துக்குமாரன் மணிமண்டபத்தையும் உபயமாகக் கட்டி உதவியுள்ளார்

இவர்தம் இல்லத்தரசியார் திருமதி சுதர்சனம் அம்மையார், கணவர் செய்யும் நல்லறங்களுக்குத் துணையாக விளங்குவதோடு சமஸ்கிருத வேதாந்த நூலகத்தையும் வேதபாடசாலையையும் நடத்தி வருகின்றார்.

இராஜபாளையத்தில் *இராம்கோ* நிறுவனம் நடத்தி வரும் கல்வி தர்ம ஸ்தாபனமானது, பாலிடெக்னிக், தொழிற்கல்வி நிலையம், ஆரம்பப்பள்ளி, மேல்நிலைப்பள்ளிகள் எனப் பல கல்வி நிலையங்களைச் சிறப்புற நடத்தி வருகிறது.

திரு. இராமசுப்பிரமணிய ராஜா தலைவராய் விளங்கும் *இராம்கோ* கூட்டுத் தொழில் நிறுவனங்களின் நன்கொடையால் தருமை ஆதீனம் ஞானசம்பந்தம் பதிப்பகத்தின் சார்பில் பத்தாம் திருமுறையின் முதல் தொகுதி (திருமந்திரம் 1-3) வெளிவருகிறது.

குறிப்பு: இத்திருமுறைப் பதிப்பின் விற்பனைத் தொகை மீண்டும் இத்திருமுறையைத் தொடர்ந்து வெளியிடப் பயன்படுத்தப் பெறும்.

பத்தாம் திருமுறை -1

நூல் அளவுகள்

பக்கங்கள்:	940
படிகள்:	1,000
அளவு:	215மிமீ. X 135 மிமீ. (1/8 டிமை)
அச்சுக்கோப்பு:	கணிப்பொறி- லேசர்ஒளி அச்சுக் கோப்பு
எழுத்தளவு:	10 மற்றும் 12 புள்ளி
அச்சுமுறை:	எதிரம், அச்சுத்தட்டு, மறுதோன்றி
தாள்:	மீவெண் மாப்லித்தோ 70ஜிஎஸ்எம். (18.6கிகி.)
கட்டு:	அட்டை, ரெக்சின்போர்வை, உருள்முதுகு

2/2

உ

திருச்சிற்றம்பலம்

தருமை ஆதீனத்தை நிறுவியருளிய

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள் வரலாறு

சீரணியும் நுதலின்விழி மழுமான் நாகம்
திருந்தும்எரி பொருந்துவிடம் தெரிந்தி டாமல்
தாரணிஅன் பரையாள அவர்போல் வந்த
சைவசிகா மணிஎவர்க்கும் தலைவன் எங்கோன்
காரணியும் நெடியபொழிற் கமலை வேந்தன்
கருணைமழை பொழியும்இரு கடைக்க ணாளன்
பாரணியும் ஞானசம் பந்தன் எந்தை
பரமன்இரு சரணமலர் பரவி வாழ்வாம்.

– ஸ்ரீ சம்பந்தசரணாலயர்.

ஞானக்குழந்தை:

தமிழகத்தில் - தென்பாண்டி நாட்டில் ஸ்ரீவில்லிபுத்தூரில் கார்காத்த வேளாளர் மரபில் சுப்பிரமணிய பிள்ளை மீனாட்சியம்மை என்ற நல்லறப் பெரியோர்கட்கு அருந்தவ மகவாகப் பதினாறாம் நூற்றாண்டில் அவதரித்தவர், தருமை ஆதீன முதற் குருமூர்த்திகளாகிய ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள். இவருக்குப் பெற்றோர்கள், திருஞானசம்பந்தரைப்போல் தமது குழந்தையும் சிவஞானம் பெற்றுச் சைவம் வளர்க்கும் ஞானாசிரியனாகத் திகழ வேண்டும் என்று எண்ணி 'ஞானசம்பந்தன்' என்ற நற்பெயரைச் சூட்டி வளர்த்து வருகையில், தமது குலதெய்வமாகிய சொக்கநாதரையும் மீனாட்சியம்மையையும் தரிசிப்பதற்கு ஞானசம்பந்தருடன் மதுரை சென்று பொற்றாமரைத் தடாகத்தில் நீராடி வழிபட்டனர். பெற்றோர்கள் ஊருக்குப் புறப்படுங்கால் ஞானசம்பந்தர் தன்னைத் தொடர்ந்து நின்ற தாயும் தந்தையுமாகிய சொக்கநாதரைப் பிரிய மனமின்றி, உடலுக்குத் தாய் தந்தையர்களாகிய பெற்றோர்களுக்கு விடை கொடுத்தனுப்பிச் சொக்கநாதர் வழிபாட்டிலே ஈடுபாடு கொண்டவரானார்.

கண்ணுக்கினிய பொருள்:

நாள்தோறும் பொற்றாமரைக் கரையில் அடியார்கள் சிவபூசை புரிவதைக் கண்டார் ஞானசம்பந்தர். தாமும் அவ்வாறு சிவபூசை புரிய

எண்ணினார். சொக்கநாதரை வேண்டினார். கருத்தறிந்து முடிக்கும் கண்ணுதற் கடவுளும் அன்றிரவு அவர் கனவில் தோன்றி, 'நாம் பொற்றாமரைத் தடாகத்தின் ஈசான்ய பாகத்தில் கங்கைக்குள் இருக்கிறோம். நம்மை எடுத்துப் பூசிப்பாயாக' என அருளினார். அவ்வண்ணமே மறுநாள் காலையில் பெருமானின் கருணையை வியந்து போற்றிப் பொற்றாமரைத் தடாகத்தில் மூழ்கினார். ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் கண்ணுக்கினிய பொருளாகத் தமது கரத்தில் வரப்பெற்றார். 'ஆசாரியன் மூலமாகத் தீக்ஷை பெற்றுத்தானே சிவபூசை புரிதல் வேண்டும்; ஆசாரியன் வேண்டுமே; சிவஞான உபதேசம் பெறவேண்டுமே; எப்படிப் பூசையைப் புரிவேன்! என்ற எண்ணம் தோன்றவே, அது பற்றி இறைவனிடமே முறையிட்டார்.

ஞானாசாரியனை அடைதல்:

வேண்டத்தக்கது அறிந்து வேண்ட முழுதுந் தருவோனாகிய சொக்கநாதப் பெருமான் மறுநாள் கனவில் எழுந்தருளி 'திருக்கயிலாய பரம்பரை - திருநந்தி மரபு மெய்கண்ட சந்தான வழியில் திருவாரூரில் விளங்கும் கமலை ஞானப்பிரகாசர் என்ற ஆசாரியரிடத்தில், வருகிற சோமவாரத்தில் ஞானோபதேசம் பெற்று நம்மைப் பூசிப்பாயாக' என அருளினார். அன்றிரவே கமலை ஞானப்பிரகாசர் கனவிலும் எழுந்தருளி, 'ஞானசம்பந்தன் வருகிற சோமவாரத்தன்று வருவான்; அவனுக்கு ஞானோபதேசம் செய்து சிவபூசையும் எழுந்தருளுவிப்பாயாக' என்று அருளினான். ஞானசம்பந்தர் பல தலங்களையும் தரிசித்துக் கொண்டு திருவாரூர் சென்று, பூங்கோயிலில் உள்ள சித்தீச்சரம் தக்ஷிணாமூர்த்தி சந்நிதியில் அமர்ந்திருந்த கமலை ஞானப்பிரகாசரைக் கண்டார். காந்தம் கண்ட இரும்புபோல ஆசாரியரால் ஈர்க்கப்பட்டார். சமய விசேட நிர்வாண தீக்ஷைகளால் பாச ஞானம் பசுஞானங்கள் நீங்கிப் பதிஞானம் கைவரப் பெற்றார். சொக்கநாதப் பெருமானை ஆன்மார்த்த பூஜாமூர்த்தியாகப் பூசிக்கப்பெறும் பேற்றையும், ஞான அநுபூதியையும் அடைந்தார்.

கைவிளக்குப் பணிவிடை:

பன்னாளும் ஆசாரியப் பணிவிடை செய்து தங்கி இருக்கும் நாள்களில் ஒருநாள் தியாகராசப் பெருமானின் அர்த்தயாம பூசையைத் தரிசித்து ஆசாரியர் தமது மாளிகைக்கு எழுந்தருளினார். அப்பொழுது கைவிளக்குப் பணியாளன் உறங்கிவிட ஞானசம்பந்தர் தமக்கு ஞான ஒளியேற்றி நல்வழிகாட்டிய ஞானாசாரியருக்கு ஒளிவிளக்கு ஏந்தி முன்சென்றார். திருமாளிகையின் வாயில் முன்னர்ச் சென்றவுடன்,

2/2

சிவானுபூதியிலேயே திளைத்திருந்த ஞானப்பிரகாசர், அருள்நிலை கைவரும் பக்குவத்திலிருந்த ஞானசம்பந்தரை 'நிற்க' எனக் கட்டளை யிட்டு உட்சென்றார். ஆசாரியர் பெற்ற சிவானுபூதியை ஞான சம்பந்தரும் கைவரப் பெற்றவராய் மாளிகை வாயிலில் கைவிளக்கு ஏந்தியவராகவே நின்றார். ஞானசம்பந்தரின் பெருமையை ஞாலம் அறியச்செய்து அதன்மூலம் சைவப் பயிர் தழைக்க இறைவன் திரு வுளம் பற்றினான் போலும். அன்றிரவு பெருமழை பெய்தது. சிவானு பூதியில் திளைத்திருந்த ஞானசம்பந்தர் மீது ஒருதுளி மழை் கூடப்பட வில்லை. விளக்கோ அணையாது சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டு இருந்தது.

குருஞானசம்பந்தராயினார்:

வைகறைப் பொழுதில் ஞானப்பிரகாசரின் பத்தினியார் சாணம் தெளிக்க வருங்கால், ஞானசம்பந்தர் அநுபூதி நிலையில் நிற்பதையும், விளக்குச் சுடர்விட்டுப் பிரகாசிப்பதையும் கண்டு உட் சென்று பதியிடம் வியப்புடன் அதனை வெளியிட்டார்.

ஞானப் பிரகாசர் விரைந்து வந்து பார்த்து, ஞானசம்பந்தரிடம் திருவருள் பெருகுகின்ற நிலையைக் கண்டு மகிழ்ந்து ''ஞானசம்பந்தா! நீ ஆசாரியனாக இருந்து, பக்குவம் உடையவர்களுக்கு ஞானோப தேசம் செய்து ஆசாரியனாக விளங்குவாயாக'' என்று அருளினார். அப்பொழுது ஞானசம்பந்தர்,

''கனக்கும் பொதிக்கும் எருதுக்கும் தன்னிச்சை கண்டதுண்டோ
எனக்கும் உடற்கும் எனதிச்சை யோஇணங் கார்புரத்தைச்
சினக்குங் கமலையுள் ஞானப்ர காச சிதம்பரஇன்
றுனக்கிச்சை எப்படி அப்படி யாக உரைத்தருளே''

என்ற பாடலைப்பாடி ''எங்குச்சென்று எவ்வாறு இருப்பேன்'' என்று விண்ணப்பிக்க, ஞானப்பிரகாசர், ''மாயூரத்தின் ஈசான்ய பாகத்தில் வில்வாரணியமாய் உள்ளதும், திருக்கடவூரில் நிக்கிரகம் பெற்ற எமதருமனுக்கு அநுக்கிரகம் செய்ததும் ஆன தருமபுரத்தில் இருந்து கொண்டு, அன்பு மிக உண்டாய், அதிலே விவேகமுண்டாய், துன்ப வினையைத் துடைப்ப துண்டாய், இன்பம் தரும் பூரணத்துக்கே தாகமுண்டாய் ஓடி வருங்காரணர்க்கு உண்மையை உபதேசித்துக் குருவாக விளங்குவாயாக'' என்று கட்டளையிட்டருளினார். ஞான சம்பந்தர், ''குருஞானசம்பந்தர்'' ஆயினார்.

தருமபுரத்தில் ஆதீனம் கண்டார்:

ஆசிரியர் ஆணையை மறுத்தற்கு அஞ்சியவராய்க் கன்றைப் பிரிந்த பசுப்போல வருந்தும் குருஞானசம்பந்தரை நோக்கிக் ''குருவாரந்தோறும் வந்து நம்மைத் தரிசிப்பாய்'' என்று தேறுதல் கூறினார் ஞானப்பிரகாசர்.

குருஞானசம்பந்தர் தம் குரு ஆணையைச் சிரமேற்கொண்டு தமது ஆன்மார்த்த மூர்த்தியுடன் தருமபுரத்திற்கு எழுந்தருளி, தருமபுர ஆதீன மடாலயத்தை நிறுவியருளினார். ஞானாநுபூதியில் திளைத்துப் பல பக்குவ ஆன்மாக்களுக்குச் சிவஞானோபதேசம் செய்து அநுபூதிச் செல்வராய்த் திகழ்ந்தார். அவர் அநுபூதியில் பொங்கித் ததும்பிப் பூரணமாய் எழுந்த சிவஞானப் பேரருவியே *சிவபோக சாரம், சொக்க நாத வெண்பா, முத்தி நிச்சயம், திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல், சோடசகலாப் பிராசாத ஷட்கம், சொக்கநாதக் கலித்துறை, ஞானப் பிரகாசமாலை, நவமணிமாலை* ஆகிய எட்டு நூல்கள் ஆகும். பாடல்கள் எளிமையும், இனிமையும் பயப்பனவாய், பதி, பசு, பாசம் என்ற முப்பொருளுண்மையைத் தெளிய விளக்குவனவாய் உள்ளன.

ஆனந்த பரவசருக்கு உபதேசம்:

குருஞானசம்பந்தர் தம்மை அடைந்த பக்குவமுடையவர் களுக்கு உபதேசித்து அநுபூதிமானாக விளங்கும்போது, உபதேச பரம்பரையை வளர்த்துவர அதி தீவிர பக்குவ நிலையிலிருந்த ஆனந்த பரவசருக்கு உபதேசித்துத் தாம் ஜீவசமாதி கூடியருளினார்கள். அதிதீவிர நிலையில் இருந்த ஆனந்தபரவசர் தமது குருநாதர் உபதேசித்த ஞானநிலை விரைவில் கூடியவராய், தம் ஞானாசாரியர் ஜீவசமாதி கூடிய ஸ்ரீ ஞானபுரீசுவரர் ஆலய விமான ஸ்தூபியைத் தரிசித்தவாறு நிட்டை நிலை கூடினார்கள்.

மீண்டும் எழுந்தருளினார்:

அதுகண்ட ஏனைய சீடர்கள் குருமரபு விளங்க வேண்டுவதை ஆசாரியர் திருமுன் சென்று விண்ணப்பிக்க, பரமாசாரிய மூர்த்திகள் ஜீவசமாதியினின்றும் எழுந்து வந்து ஸ்ரீ சச்சிதானந்த தேசிகருக்கு உபதேசம் செய்து அநுபூதிநிலை வருவித்து ஞானபீடத்து இருத்தி வைகாசி மாதம் கிருஷ்ணபக்ஷ சப்தமி திதியில் தாம் முன்போல் ஜீவ சமாதியில் எழுந்தருளினார்கள்.

தருமை ஆதீனப் பணி:

கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் ஸ்ரீ குருஞானசம்பந்தரால் தோற்றுவிக்கப் பெற்ற இத்திருத்தருமை ஆதீனம் அதுமுதல் வழி வழியாக விளங்கி, மொழித் தொண்டும், சமயத் தொண்டும், சமூகத் தொண்டும் ஒல்லும் வகையெல்லாம் ஆற்றி வருகிறது. இப்பொழுது ஞானபீடத்தில் இருபத்தாறாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் எழுந்தருளியிருந்து அருளறப் பணிகள் பல இயற்றி அருளாட்சி புரிந்து வருகிறார்கள்.

வாழ்க தருமை ஆதீனம்! வளர்க குருபரம்பரை!

ஆய்வார் பதிபசு பாசத்தின் உண்மையை
ஆய்ந்தறிந்து
காய்வார் பிரபஞ்ச வாழ்க்கையெல் லாங்கல்வி
கேள்வியல்லல்
ஓய்வார் சிவானந்த வாரியுள் ளேயொன்
றிரண்டுமறத்
தோய்வார் கமலையுள் ஞானப்ர காசன்மெய்த்
தொண்டர்களே.

ஆசையறாய் பாசம்விடாய் ஆனசிவ பூசைபண்ணாய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீநினையாய் - சீ சீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய்.

- ஸ்ரீ குருஞான சம்பந்தர்.

தருமை ஆதீனம் ஞானசம்பந்தம் பதிப்பகத்தின்

பன்னிரு திருமுறைத் தொகுதி

(16 பகுதிகள்)

உ

பத்தாம் திருமுறை

1-3 தந்திரங்கள்

பொருளடக்கம்

உ

குருபாதம்

பன்னிரு திருமுறை ஆசிரியர்கள்

[1]திருஞான சம்பந்தர் [2]வாகீசர் [3]சுந்தரர்
[4]திருவாத வூரர் மற்றைத்
[5]திருமா ளிகைத்தேவர் [6]சேந்தனார் [7]கருவூரர்
தெள்ளு[8]பூந் துருத்தி நம்பி
வருஞான [9]கண்டரா தித்தர்[10]வே ணாட்டடிகள்
வாய்ந்த[11]திரு வாலி யமுதர்
மருவு[12]புரு டோத்தமர் [13]சேதிராயர் [14]மூலர்
மன்னு திரு [15]ஆல வாயார்
ஒரு [16]காரைக் காலம்மை [17]ஐயடிகள் [18]சேரமான்
ஒளிர் [19]கீரர் [20]கல்லாடனார்
ஒண் [21]கபிலர் [22]பரணர்மெய் உண [23]ரிளம்பெருமானொடு
ஓங்கும் [24]அதி ராவடிகளார்
திருமேவு [25]பட்டினத் தடிகளொடு
[26]நம்பியாண்டார் நம்பி [27]சேக்கிழாரும்
சிவநெறித் திருமுறைகள் பன்னிரண் டருள்செய்த
தெய்விகத் தன்மையோரே.

– புலவர். திரு. வை. தருமலிங்கம் பிள்ளை.
தமிழாசிரியர், தருமை ஆதீனத் தேவாரப் பாடசாலை,
தருமபுரம்.

உ

பத்தாம் திருமுறை

திருமந்திரம் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9 - அதிகார முற்றைமை

விநாயகர் வணக்கம்

பாயிரம்

1. கடவுள் வாழ்த்து
2. நுதலியபொருள்
3. நூற்சிறப்பு
4. குருபாரம்பரியம்
5. தம் வரலாறு
6. அவையடக்கம்
7. நூலின் அளவும் பயனும்
8. குருமட வரலாறு

முதல் தந்திரம்

1. சிவபரத்துவம்
   திரிமூர்த்திகளின் சேட்ட கனிட்ட முறைமை
2. வேதச் சிறப்பு
3. ஆகமச் சிறப்பு
4. உபதேசம்
5. யாக்கை நிலையாமை
6. செல்வம் நிலையாமை
7. இளமை நிலையாமை
8. உயிர் நிலையாமை
9. கொல்லாமை
10. புலால் மறுத்தல்
11. பிறன்மனை நயவாமை
12. மகளிர் இழிவு

இரண்டாம் தந்திரம்

18. தீர்த்த உண்மை
19. திருக்கோயிற் குற்றம்
20. அதோமுக தரிசனம்
21. சிவநிந்தை கூடாமை
22. குருநிந்தை கூடாமை
23. மாகேசுர நிந்தை கூடாமை
24. பொறையுடைமை
25. பெரியாரைத் துணைக் கோடல்

மூன்றாம் தந்திரம்

1. அட்டாங்கயோகம்
2. இயமம்
3. நியமம்
4. ஆதனம்
5. பிராணாயாமம்
6. பிரத்தியாகாரம்
7. தாரணை
8. தியானம்
9. சமாதி
10. அட்டாங்கயோகப்பேறு
11. அட்டமாசித்தி
12. கலைநிலை
13. காயசித்தி உபாயம்
14. கால சக்கரம்
15. ஆயுள் பரீட்சை
16. வாரசரம்
17. வார சூலம்
18. கேசரியோகம்
19. பரியங்கயோகம்
20. அமுரிதாரணை
21. சந்திரயோகம்

நான்காம் தந்திரம்

1. அசபை

ஐந்தாம் தந்திரம்

ஆறாம் தந்திரம்

1. சிவகுரு தரிசனம்
2. திருவடிப் பேறு
3. ஞாதுரு ஞான ஞேயம்
4. துறவு
5. தவம்
6. தவ தூடணம்
7. அருளுடமையின் ஞானம் வருதல்
8. அவவேடம்
9. தவவேடம்
10. திருநீறு
11. ஞானவேடம்
12. சிவவேடம்
13. அபக்குவன்
14. பக்குவன்

ஏழாம் தந்திரம்

1. ஆறாதாரம்
2. அண்ட லிங்கம்
3. பிண்டலிங்கம்
4. சதாசிவ லிங்கம்
5. ஆத்துமலிங்கம்
6. ஞான லிங்கம்
7. சிவலிங்கம்
8. சம்பிரதாயம்
9. திருவருள்வைப்பு
10. அருள் ஒளி
11. சிவபூசை
12. குரு பூசை
13. மாகேசுர பூசை
14. அடியார் பெருமை
15. போசன விதி

எட்டாம் தந்திரம்


10. அண்டாதி பேதம்
11. பதினொன்றாந் தானமும் அவத்தை எனக் காணல்
12. கலவு செலவுகள்
13. நின்மலாவத்தை
14. அறிவுதயம்
15. ஆறந்தம்
16. பதி பசு பாசம் வேறின்மை
17. அடிதலை அறியும் திறம் கூறல்
18. முக்குற்றம்
19. முப்பதம்
20. முப்பரம்
21. பரலக்கணம்
22. முத்துரியம்
23. மும்முத்தி
24. முச்சொரூபம்
25. முக்கரணம்
26. முச்சூனிய முத்தொந்தத்தசி
27. முப்பாழ்
28. காரிய காரண உபாதி
29. உபசாந்தம்
30. புறங்கூறாமை
31. அட்டதளகமல முக்குண அவத்தை
32. நவாவத்தை அபிமானி
33. சுத்தா சுத்தம்
34. மோட்ச நிந்தை
35. இலக்கணாத்திரயம்
36. தத்துவமசி மகா வாக்கியம்
37. விசுவக்கிராசம்
38. வாய்மை
39. ஞானிகள் செயல்
40. அவா அறுத்தல்
41. பத்தியுடைமை
42. முத்தியுடைமை
43. சோதனை

ஒன்பதாம் தந்திரம்

திருமந்திரம் - 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9,
அதிகார முறைமை முற்றிற்று



மறைமொழி வந்தாம் திருமுறை முதலா,
பன்னிரு திருமுறை உரை வெளியிட்டு அருளிய,



தருமை ஆதீனம் 26ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்
26 ஆவது குருமகா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த

பரமாசாரிய சுவாமிகள் வழங்கியருளிய

ஆசியுரை

தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகம்என்று உணர்

- ஔவையார், நல்வழி பா.40

கருத்து ஒன்றே:

''பலகலை ஆகமம் வேதம் யாவையினும் கருத்துப் பதி, பசு, பாசம் தெரித்தல்'' என்பது உமாபதி சிவாசாரிய சுவாமிகளின் உபதேசம்.

இதனை ஒட்டியே ஔவையாரும் *திருக்குறள்*, நான்மறை முடிவு, மூவர் தமிழாகிய தேவாரம், முனிமொழி கோவை, திருவாசகம், திருமூலர் சொல்லாகிய திருமந்திரம் ஆகியவற்றின் முடிவான கருத்து பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மை மொழிதலேயாம் என்பதைத் தெரிவித்துள்ளார்.

ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்கள் ஒத்த கருத்து உடையவர்களாகவே இருப்பர். இதற்கு இந்நூல்களே சான்று.

மந்திரம்:

அருளாளர்கள் மொழிவன எல்லாம் மந்திரங்கள். மந்திரம்

என்ற சொல்லுக்குப் பொருள், நினைப்பவரைக் காப்பது என்பதாம். மந்திரங்களை ஜெபிப்பதுடன் நினைப்பதற்கு ஆற்றல் அதிகம். மந்திரங்களாக விளங்கும் அருள் நூல்களை வழங்கிய பெருமக்களை *நிறைமொழி மாந்தர்* என்பர் *தொல்காப்பியரும்*, *திருவள்ளுவரும்*.

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப. **- தொல் செய்யுள் - 178**

என்பது *தொல்காப்பியம்.*

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும். **-குறள் 28**

என்பது *திருக்குறள்*. இப்பெரியோர்களின் வார்த்தைகள் அனைத்துமே மந்திரங்கள் ஆயினும் சிறப்பாக யோகப் பயிற்சிக்கும் வழிபாட்டிற்கும் உரிய மந்திரங்கள் நிறைந்திருத்தல் பற்றி இப்பத்தாம் திருமுறை திருமந்திரம் என்றே போற்றப் பெறுகிறது.

முகம்:

இவ்வளப்பரிய பெருநூலைப் பருப்பொருட்டாகப் புரிந்து கொள்வதற்கு உரைநடையில் ஒரு முகவுரை இன்றியமையாதது. ஒரு மனிதனைப் புரிந்துகொள்ள அவன் முகம்தான் துணை செய்கிறது. அதுபற்றியே 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' (*பழமொழி*) என்றனர்.

எவ்வளவுதான் உடல் வளமாகவும் வலமாகவும் நலமாகவும் இருந்தாலும் அவன் முகம்தான் அவனது வளத்தையும், வலத்தையும், நலத்தையும் எடுத்துக்காட்டும். இது பற்றியே *திருவள்ளுவரும்*;

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம். **-குறள் 706**

என்றார். எனவே ஒரு நூலின் முகவுரை அந்நூலில் உள்ள கருத்துகளைப் புரிந்துகொள்ளப் பெரிதும் துணைசெய்யும் என்பது ஒருதலை.

இம்முகவுரையைப் பாயிரம் என்று இலக்கண நூல் கூறும். இம்முறையில் இத்திருமந்திரத்திற்கும் திருமூலர் பாயிரம் எழுதி யுள்ளார். அது பாடல் பகுதியாய் உள்ளது;

''பருப்பொருட் டாகிய பாயிரம் கேட்டார்க்கு
நுண்பொருட் டாகிய நூல் இனிது விளங்கும்.''
(தி.10 பாயிரம்)

ஆதலின் இந்நூலின் அமைப்பினை ஓரளவு புரிந்து கொள்ளத் துணையாகவே முகவுரை (பாயிரம்) தேவைப்படுகிறது.

பத்தாம் திருமுறை :

திருமுறை ஆசிரியர்கள் இருபத்து எழுவருள் ஒருவராகிய திருமூலர் அருளிச் செய்த திருமந்திரம் பத்தாம் திருமுறையாக விளங்குவது. இது மூவாயிரம்பாடல்களைக் கொண்டது.

காரணாகமம், காமிகம், வீரம், சிந்தம், வாதுளம், வியாமளம், காலோத்தரம், சுப்பிரம், மகுடம் என்னும் ஒன்பது ஆகமங்களின் சாரமாகத் திகழ்வது. ஒன்பது ஆகமங்களையும் ஒன்பது தந்திரங்களாகக் கொண்டுள்ளது.

முதல் தந்திரம் நிலையாமை கூறுமுகத்தால் ஞானம் பெற அறம் உணர்த்துகிறது.

இரண்டாம் தந்திரம் புராணங்களின் வழியே சிவபராக் கிரமங்களையும் அவர்தம் புகழையும் பேசுகிறது.

மூன்றாம் தந்திரம் பெருமானை அடையும் யோக சாதனங்களைக் குறிப்பிடுகிறது.

நான்காம் தந்திரம் மந்திர யந்திர வழிபாட்டு முறைகளை விளக்குகிறது.

ஐந்தாம் தந்திரம் சைவத்தின் பிரிவுகளையும், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகை நெறிகளையும் தெளிவிக்கிறது.

ஆறாம் தந்திரம் சிவமே குருவாக நின்று அருள்புரிவதையும் சற்குரு கிடைப்பது அவரவர் தவத்தின் பயனாலாகும் என்பதையும் உணர்த்துகிறது.

ஏழாம் தந்திரம் அண்டமும், பிண்டமும் இலிங்க உருவாய் உள்ளதையும், சிவபூசை, குருபூசை செய்ய வேண்டிய அவசியத்தையும் அறிவிக்கிறது.

எட்டாம் தந்திரம் உயிர் எடுக்கும் உடல் பற்றிய அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமய கோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமய கோசம் பற்றிய விளக்கங்களைக் கூறுகிறது.

ஒன்பதாம் தந்திரம் அகர, உகர, மகரமாகிய ஓங்காரப் பிரணவமே எல்லாவற்றிற்கும் மூலம் என்பதையும், தூல பஞ்சாக்கரம், சூக்கும பஞ்சாக்கரம், முதலிய ஐந்தெழுத்து உண்மைகளையும் ஐந்தொழில் நடனத்தையும் சிறப்புற விளக்குகிறது.

அன்பும் அறிவும்:

சைவ சமய நூல்களைச் சான்றோர் தோத்திரம், சாத்திரம் என இருவகையாகப் பகுத்துள்ளனர். தோத்திரம் அன்பின் அடிப்படையில் எழுவது. சாத்திரம் அறிவின் அடிப்படையில் எழுவது.

மெய் அன்பில் மெய்யறிவும், மெய்யறிவில் மெய்யன்பும் கலந்தே இருக்கும் என்பது நியதி. இங்கு அன்பின் அடிப்படை அறிவின் அடிப்படை என்றது மிகுதி பற்றி எழுவதையே குறிப்பதாகும்.

இறைவனது கருணைப் பெருக்கால் நடைபெறும் ஐந்தொழிற் சிறப்புகளையெல்லாம் அன்பினால் ஆவியோடு ஆக்கை ஆனந்தமாய்க் கசிந்துருகப் புகழ்ந்து பாடுதல் தோத்திரம் எனப்படும். ஆனால் இப்புகழ் உண்மைக்கு மாறாக உபசாரமாகப் பாடப்பட்டது அல்ல. அருளாளர்கள் அருளிய பொருள்சேர் புகழேயாம். என்னெனில், மெய்யறிவும், மெய்யன்பும் உடையாராகலின் இவர்களிடம் மறந்தும் பொய்ப்புகழ் வாராது என்க.

சாத்திரம் என்பதும் அன்புடையார் அறிவு மிகுதிப்பாட்டால் இறைவன் பெருமைகளையும் உயிர்களின் சிறுமைகளையும் உலக இயல்புகளையும் திருவருள் வலிமையால் ஒக்க ஆய்ந்து மக்கள் கடைத்தேற அருளிச் செய்ததாகும். எனவேதான் தோத்திரமும் சாத்திரமும் ஆனார்தாமே என்று இறைவனைப் பாடினார் அப்பர் பெருமான்.

தோத்திரமும் சாத்திரமும் :

இவ்விரு திறத்து நூல்களும் பொய்யன்பிலா அடித்

தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியம் வாய்க்கப்பெற்ற மெய் உணர்வாளர்களால் அருளிச் செய்யப்பெற்றவை.

இவ்விரு வகையிலும் பல நூல்கள் இருப்பினும் சைவ உலகில் சமயாச்சாரியர் உள்ளிட்ட 27 ஆசிரியர்கள் அருளிய 12 திருமுறைகளே சிறப்பாகத் தோத்திரங்கள் எனப் போற்றப் பெறுவன.

இதேபோல் சந்தானாச்சாரியர் உள்ளிட்ட அறுவர் அருளிச் செய்த பதினான்கு நூல்களே சாத்திரங்கள். (*மெய்கண்ட சாத்திரம்*) எனப் போற்றப்பெறுவன.

எழுகோடி மந்திரங்கள்:

இந்த அடிப்படையில் பார்த்தால், திருமூலர் அருளிச் செய்த திருமந்திரம் தோத்திரத்தின்பாற்படும். ஆனால் இதில் தோத்திரத்தை விட சாத்திரக்கூறுகளே அதிகம் உள்ளன. இது பத்தாம் திருமுறையாகப் போற்றப்பெறுவது.

''மந்திரங்கள் எழுகோடி ஆதலினால் மன்னும் அவர் இந்த வகை திருமுறைகள் ஏழாக எடுத்தமைத்து'' என்பது *திருமுறை கண்ட புராணக்* கூற்று. எழுகோடி என்றால் ஏழு கோடி மந்திரங்கள் என்பது பொருள் அல்ல. ஏழு முடிவுகளை உடைய மந்திரங்கள் என்பதே பொருளாகும்.

அவையாவன- **நமஹா, சுவாஹா, சுவதா, பட், உம்பட், வௌஷட், வஷட்** என்பனவாகும்.

நமஹா	-	ஐஸ்வர்யம் அளிப்பது.
சுவாஹா	-	தேவதைகளைத் திருப்தி செய்வது.
சுவதா	-	தைரியம், வசீகரம் கொடுப்பது.
பட்	-	விக்கினங்களைத் துரத்துவது.
உம்பட்	-	காமாதிகளைப் போக்குவது.
வௌஷட்	-	தேவதைகளை இழுப்பது.
வஷட்	-	தேவதைகளை வசம் செய்வது.

திருமுறைகள் அனைத்துமே மந்திரங்கள் ஆகையினால் ஏழு முடிபுகளை வைத்தே மூவர் தேவாரங்களை 7 திருமுறைகளாக வகுத்தனர்.

யோகநூல்:

''பந்தமுறும் மந்திரங்கள் பதினொன்றும் ஆதலினால் அந்த முறை நான்கினொடும் முறை பதினொன்றாக்கினார்'' என்கிறது *திருமுறை கண்ட புராணம்*. அந்த முறையில் நான்கினொடு என்பது 8, 9, 10, 11ஆம் திருமுறைகளைக் குறிக்கின்றது.

''மந்திரங்கள் பதினொன்றும்'' என்பது ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் ஆகிய ஐந்து பிரம்ம மந்திரங்களும், இருதயம், சிரசு, சிகை, கவசம், நேத்திரம், அஸ்திரம் ஆகிய ஆறு அங்க மந்திரங்களும் கொண்டதாம்.

இவற்றுள் பத்தாவது மந்திரம் நேத்திர மந்திரமாக உள்ளது. எனவே, பத்தாம் திருமுறையும் நேத்திரத்திற்கு ஒப்பாகக் கொள்ள இருப்பது.

நேத்திரம் - கண். இறைவனுக்கு மூன்று கண்கள் உண்டு. வலது கண் சூரியன், இடது கண் சந்திரன். நெற்றிக்கண் நெருப்பு. இது புருவ மத்தியில் இருப்பது. இக்கண் சிறப்பாக ஆக்கல், அழித்தலுக்குப் பயன்படுத்தப்படும். முருகவேளை ஆக்கியதும், கருவேளாம் மன்மதனை அழித்ததும் இந்நெற்றிக்கண்ணேயாம்.

நமக்கும் மூன்று கண்கள் உண்டு. மூன்றாவது கண் யோக முயற்சியால் திறக்கப்படத்தக்கது. இது பிராணாயாமப் பயிற்சியால் அடையத்தக்கது.

இத்திருமந்திரம் தோத்திர நூல். சாத்திர நூல் என்று போற்றப்பெற்றாலும் பெரும்பகுதி யோக நூலாகவே காட்சி தருகிறது. நெற்றிக் கண்ணும் உச்சித் தலையும் (பிரம்ம ரந்திரம்) யோகத்தால் திறக்கத் தக்கன. எனவேதான் பத்தாவது தந்திரமாகிய நேத்திரத்திற்கு ஒப்பான இதனைப் பத்தாம் திருமுறையாக அமைத்தனர் என்பது *திருமுறைகண்ட புராணத்தால்* உணர முடிகிறது.

மூலன் உடலில் புகுமுன்:

திருமந்திர ஆசிரியருக்கு அவர் தம் தாய் தந்தையர் இட்ட

பெயர் சுந்தரன் என்பதாம். இவர் தென்தமிழ்ப் பொதியத்தில் அகத்தியர் நடத்திய தமிழ்ச் சங்கத்தில் உலகநூல் கற்றார். அவர் ஆதரவால் அறிவு நூல்களைக் கற்க வடகயிலையில் நடைபெற்ற குருகுலத்தில் சேர்ந்து அறிவு நூல்களாம் வேத ஆகமங்களை நந்தியெம் பெருமானிடம் கற்று, நாதர் என்ற பட்டம் பெற்றுச் சுந்தர நாதராய்த் தவம் செய்து வாழ்ந்திருந்தார். அங்கு இவருடன் பயின்றோர், **சனகர், சனந்தனர். சனாதனர், சனற்குமாரர், பதஞ்சலி, வியாக்கிரபாதர், சிவயோக மாமுனிவர்** ஆகிய எழுவராவர்.

பதஞ்சலி, வியாக்கிர பாதருடன் இவர் ஒருமுறை தில்லை வந்து நடன தரிசனம் செய்து திருக்கயிலை மீண்டார். பதஞ்சலி வியாக்கிர பாதர் இருவரும் தில்லையிலேயே ஆச்சிரமம் அமைத்துத் தங்கி விட்டனர்.

பெரிய புராணத்தில் திருமூலர்:

சுந்தரநாதர் அகத்தியரைக் காணும் விருப்பினால், திருக்கேதாரம், பசுபதிநாதம், காசி, விந்தியமலை, சீபற்பதம், திருக்காளத்தி, திருவாலங்காடு, காஞ்சிபுரம், தில்லை ஆகிய தலங்களைத் தரிசித்துத் திருவாவடுதுறை சேர்ந்தார். ஒப்பிலாமுலையம்மை உடனாகிய ஸ்ரீ மாசிலாமணி ஈசரைத் தரிசித்தார்.

உள்ளம் துறைசையை நாடியபோதிலும் பொதியமலைக்குப் புறப்பட்டார். காவிரிக் கரையில் சாத்தனூரில், அந்தணர்களின் பசுக்கள் வினைமாள இறந்த மூலன் என்ற இடையன் உடலைச் சுற்றிக் கதறின. செந்தண்மை பூண்ட அந்தணராகிய சுந்தரநாதர், பசுக்களின் துன்பத்தைப் போக்கத் திருவுளம் கொண்டார்.

தமது உடலை ஓரிடத்தில் பாதுகாப்பாக வைத்துவிட்டு, தம் உயிரை அட்டமா சித்திகளுள் ஒன்றாகிய பிராகாமியம் என்ற சித்தியினால் பவன வழியாக அம்மூலன் உடலில் பாய்ச்சினார். மூலன் எழுந்தான். பசுக்கள் மகிழ்ந்தன. புற்களை மேய்ந்தன. காவிரியில் நீர் பருகின. மாலையில் வீடு சேர்ந்தன. இவர் அவற்றுடன் சென்று ஊர்ப்பொது மடத்தில் தங்கினார். மனைவியுடன் தொடர்பில்லை என்பதை மனைவிக்கும் மக்கட்கும் அறிவித்தார்.

மறுநாள் தாம் சேமித்து வைத்த உடலில் புகுதற்குச் சென்றார். ஆனால் உடல் காணப்படவில்லை.

இல்லாளன்:

திருவருள், துறைசையில் தவம் இயற்றப் பணித்துள்ளதைத் திருவருளால் உணர்ந்தார்.

திருக்கோயிலின் மேல்பால் படர் அரசின் கீழ் இருந்து ஆண்டுக்கு ஒரு பாவாக மூவாயிரம் ஆண்டு தவம் செய்து மூவாயிரம் திருமந்திரம் மொழிந்தார்.

மூலனின் உடலில் புகுந்த சிவயோகியாரின் நிலைகண்டு மூலன் மனைவி வருந்தினாள். இந்த இடத்தில் இல்லாளன் என்ற அரியதொரு சொல்லைச் சேக்கிழார் எடுத்தாள்கிறார். ''இல்லாளன் இயல்பு வேறானமை கண்டு'' என்பது அப்பகுதி.

மற்றும் காரைக்காலம்மையார் வாயிலாகவும், ''இல்லாளன் வைக்க எனத் தம் பக்கல் முன்னிருந்த நல்ல நறுமாங்கனிகள்'' என்ற இடத்திலும் இவ்வரிய சொல்லை ஆள்கிறார்.

இல்லாள் என்ற பெண்பாற் சொல் இல்லத்தை ஆள்பவள் என்ற பொருள் தருகிறது. ஆனால் அதற்கு நேராக உள்ள இல்லான் என்ற ஆண்பாற் பெயர் இல்லாதவன் என்பதைக் குறிக்கிறது. என்பர் சிலர்.

அவர்களைத் தெளிவிப்பாராக ''இல்லாளன்'' என்னும் இவ்வரிய சொல்லை இவ்விரு இடங்களில் காட்டியுள்ளார் சேக்கிழார். இதன் பொருள், இல்லத்தையும் அதை ஆள்கின்ற இல்லாளையும் ஆள்பவன் என்பதாகும்.

மேலும் ''இல்லான்'' என்ற சொல் இல்லாதவன் என்னும் பொருளை உணர்த்துவதோடு இல்லத்தை உடையவன் என்ற பொருளிலும் வருகிறது. இதனை விளக்க, இல்லான் என்பதற்கு இல்லத்தை உடையவன் என்ற பொருள்தரும் பாடல் ஒன்றையே நமக்கு அருளியுள்ளார் திருஞானசம்பந்தர்.

நல்லானை நான்மறை யோடிய லாறங்கம்
வல்லானை வல்லவர்பால் மலிந்து ஓங்கிய
சொல்லானை தொல்மதிற் காழியே கோயிலாம்
இல்லானை ஏத்தநின்றார்க்குள தின்பமே. (தி.2 ப.11 பா.1)

என்பது அப்பாசுரம்.

வேதாகமம்:

வேத காலம் கி.மு. 6000 என்பர். கி.மு. 3000இல் வேத ஆகமம் பற்றிக் குழப்ப நிலை ஏற்பட்டது. அப்போது அக்குழப்பத்தைத் திருமூலர் தெளிவித்தார் என்பர்.

அதற்கேற்ப வேதச் சிறப்பு என்ற பகுதியில் 'சீலாங்க வேதத்தைச் செப்பவந்தேனே' என்றும், 'ஆகமச் சிறப்பு' என்ற பகுதியில் 'சிந்தை செய்து ஆகமம் செப்பலுற்றேனே' என்றும் குறித்துள்ளமையால் தெளியலாம்.

வேதத்தை விட்ட அறமில்லை என்றும், வேதத்தில் ஓதத்தகும் அறங்கள் எல்லாம் உள்ளன என்றும், தர்க்கவாதத்தை விட்டு வளமுற்ற, வேதத்தை ஓதியே வீடு பெற்றார்களே என்றும், வேதமொடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல் என்றும், வேதம் பொதுவும், ஆகமம் சிறப்புமாகும் என்றும் நந்தியெம்பெருமான் வாயிலாக நமக்குக் கிடைத்த ஆகமங்கள் *காரணம், காமிகம், வீரம், சிந்தம், வாதுளம், வியாமளம், காலோத்தரம், சுப்பிரம்,* மகுடம் என்னும் ஒன்பதே என்றும், அவ்வொன்பது ஆகமங்களின் சாரங்களைத் தான் திருமூலர் ஒன்பது தந்திரங்களாகப் பாடியுள்ளார் என்றும் தெளியலாம்.

பாயிரத்தோடு கூடிய ஒன்பது தந்திரங்களையும் ''காலை எழுந்து கருத்தறிந்து ஓதிடின் ஞாலத் தலைவனை நண்ணுவரன்றே'' என்று இவரே பலனும் கூறியுள்ளார்.

மூலன் உரைசெய்த மூவாயிரம் தமிழ்
மூலன் உரைசெய்த முந்நூறு மந்திரம்
மூலன் உரைசெய்த முப்பது உபதேசம்
மூலன் உரைசெய்த மூன்றும் ஒன்றாமே. (தி.10 பா.3046)

என்ற பாடலை வைத்து முப்பது உபதேசம் என்பதும், முந்நூறு மந்திரம் என்பதும், தனித்தனி நூல்கள் என்றும் அந்நூல்கள் மூலன் உடலில் புகுவதற்கு முன்னர் சுந்தரநாதர் செய்தது என்றும், மூலன் உடலில் புகுந்த பிறகு செய்தது மூவாயிரம் தமிழ் ஒன்றே என்றும் கூறுவர்.

மூலன் உரைசெய்த என்று இத்திருமந்திரத்திலேயே இருப்பதனால் மூன்றும் திருமூலராயிருந்து அருளிச் செய்ததே என்று கொள்ளுதலும் பொருத்தம் என்று தோன்றுகிறது. மேலும் மூன்றும் ஒன்றாமே என்பதனால் மூன்று நூல்களும் ஒரே கருத்தை மூன்று

வரிசையாகக் கூறுவனவே என்று கொள்வதும் பொருத்தமுடைய கருத்தேயாகும்.

பாயிரம்:

ஒரு மனிதனைப் புரிந்து கொள்ள முகம் இன்றியமையாதது. அதுபோல ஒரு நூலுக்கு முகம் போன்றதான முகவுரை இன்றியமையாதது. முகவுரையைத்தான் பாயிரம் என்கிறோம்.

இதில் பொதுப்பாயிரம் இந்நூலைப் பற்றியது. சிறப்புப் பாயிரம் திருமூலரைப் பற்றி மாணாக்கர்கள் செய்தது. தற்சிறப்புப் பாயிரம் தம்மைப் பற்றித் தாமே கூறியது. ஆக முப்பாயிரமும் இதில் இடம் பெற்றுள்ளன. சிறப்புப் பாயிரத்துள் குருமட வரலாறும், திருமந்திரத் தொகைச் சிறப்பும் உள்ளன.

பொதுப்பாயிரம்:

1 கடவுள், 2. மழை, 3. நீத்தார், 4. அறம் 5. முடியுடைவேந்தர் என்ற ஐவகை வாழ்த்துக்களை உடையது. *திருவள்ளுவரும்* கடவுள் வாழ்த்து என்ற பாயிரப் பகுதியில் *கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை அறன் வலியுறுத்தல்* என்று அமைத்திருப்பது ஒப்புநோக்கத்தக்கது.

திருவள்ளுவர் அரச வாழ்த்தைப் பொருட்பாலில் புகன்றுள்ளார். இதனால்தான், தேவர் குறளும் திருமூலர் சொல்லும் ஒரு வாசகம் (*ஔவையார் - நல்வழி 40*) என்றனர். அஃதாவது, இருநூல்களும் ஒரே கருத்தை வெவ்வேறு வகையில் அறிவிக்க வந்தன என்பதாம்.

காலம்:

இவர் காலம் கி.மு. 3100 லிருந்து கி.மு. 100 என்று துடிசைக்கிழார் குறிப்பிடுகிறார்.

மற்றைய ஆய்வாளர்கள் ஏறத்தாழ கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு என்று கொண்டுள்ளனர். கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டு வரை தமிழக வரலாற்றில் இருண்ட காலம் அஃதாவது சிறப்பில் காலம் எனக் கொள்கின்றனர்.

''முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரிவளங் குன்றும்'' (தி.10 பா. 518)

''ஈசனடியார் இதயம் கலங்கிட
தேசமும் நாடும் சிறப்பும் அழிந்திடும்'' (தி.10 பா. 534)

என்பன போன்ற பாடல்கள் இருண்ட காலத்தின் கொடுமைகளை விளக்கிக் கூறுவன போன்று உள்ளமையால் இவர் காலம் ஐந்தாம் நூற்றாண்டாகக் கொள்ளத் துணை செய்கின்றன.

கலிவிருத்தச் சிறப்பு:

திருமந்திரம் முழுவதும் இயற்சீர் வெண்டளை வெண்சீர் வெண்டளைகளாலான கலிவிருத்தங்களாலாயது.

பெரியபுராணம், *கந்தபுராணம்*, *திருவிளையாடற்புராணம்*, *கம்பராமாயணம்*, ஆகிய பெருங்காப்பியங்களில் கடவுள் தோத்திரங்களாக உள்ள பாடல்கள் அனைத்தும் இக்கலிவிருத்தப் பாடல்களாலாயது. என்பது இங்கு நினைவு கூரத்தக்கது.

ஒன்பது தந்திரங்களைக் கொண்டதாய் 232 தலைப்புகளில் இந்நூல் நடையிடுகிறது.

திருவள்ளுவர் தாம் இயற்றிய *திருக்குற*ளில் 133 அதிகாரங்களைக் கொண்டுள்ளார். அவர் ஒவ்வோர் அதிகாரத்திற்கும் பப்பத்துக் குறள் வெண்பாக்கள் பாடியுள்ளார்.

ஆனால் திருமூலரோ ஒவ்வொரு தலைப்பிலும் வரையறையின்றி இரண்டு பாடல்கள் முதல் 100 பாடல்களை வரை பாடியுள்ளார்.

கூடுதலாக மூவாயிரத்து நாற்பத்தேழு பாடல்கள் உள்ளன. மூவாயிரம் பாடல்களே இருத்தல் வேண்டும். சில பாடல்கள் முழுவதும் அப்படியேயும். சில மாற்றங்களுடனும் பலவிடத்தும் வந்துள்ளன. இடைச்செருகலும் சேர்ந்துள்ளது. இஃதன்றிச் சில ஏட்டுப்பிரதிகளிலும் உரைகளிலும் காணப்படும் பாடல்களும் 22 உள்ளன. அருணையார் இந்நூலுள் 3000 பாடல்களையே தேர்ந்துகொண்டுள்ளார்.

நூல் அமைப்பு:

பாயிரத்தில், கடவுள் வாழ்த்து, வேதச் சிறப்பு, ஆகமச் சிறப்பு, குரு பாரம்பரியம், திருமூலர் வரலாறு, அவையடக்கம், திருமந்திரத் தொகைச் சிறப்பு, குருமட வரலாறு, திரிமூர்த்திகளின் சேட்ட கனிட்ட முறை என்ற ஒன்பது தலைப்புகளும், அவற்றுள் 112 பாடல்களும் இடம்பெற்றுள்ளன.

முதல் தந்திரம் உபதேசம் முதலாக கள்ளுண்ணாமை ஈறாக 21 தலைப்புகளில் 224 பாடல்களைக் கொண்டுள்ளது.

இரண்டாம் தந்திரம் அகத்தியம், பதிவலியில் வீரட்டம் எட்டு முதலாக, பெரியாரைக் துணைக்கோடல் ஈறாக 25 தலைப்புகளில் 212 பாடல்களைக் கொண்டு விளங்குகிறது.

மூன்றாம் தந்திரம் அட்டாங்க யோகம் முதலாக, சந்திர யோகம் ஈறாக 21 தலைப்புகளில் 335 பாடல்களைக் கொண்டு விளங்குகிறது.

நாலாம் தந்திரம் அசபை முதல் நவாக்கரி சக்கரம் ஈறாக 13 தலைப்புகளில் 535 பாடல்களைக் கொண்டு இலங்குவது..

ஐந்தாம் தந்திரம் சுத்த சைவம் முதல் உட்சமயம் முடிய 23 தலைப்புகளில் 154 பாடல்களைக் கொண்டுள்ளது.

ஆறாம் தந்திரம் சிவகுரு தரிசனம் முதல் அபக்குவன் முடிய 13 தலைப்புகளில் 131 பாடல்களைக் கொண்டுள்ளது.

ஏழாம் தந்திரம் ஆறாதாரம் முதல் இதோபதேசம் முடிய 38 தலைப்புகளில் 418 பாடல்களைக் கொண்டு இலங்குவது.

எட்டாம் தந்திரம் உடலில் பஞ்ச பேதம் முதல் சோதனை முடிய 43 தலைப்புகளில் 527 பாடல்களைக் கொண்டு விளங்குகிறது.

ஒன்பதாம் தந்திரம் குருமட தரிசனம் முதல் சர்வவியாபி முடிய 32 தலைப்புகளில் 399 பாடல்களைக் கொண்டு நிறைகிறது.

ஆக, பாடல்கள் 3047

முதல் தந்திரம்:

முதலில் சிவபரத்துவம் கூறுகிறார். சிவனோடொக்கும் தெய்வம் தேடினும் இல்லை என்பது முதலாக 46 பாடல்களில் இதனை விளக்குகிறார். இது காரணாகமத்தின் சாரமாகக் கொள்ளப்படுகிறது. ''ஞான முதல் நான்கும் மலர் நல் திருமந்திரமாலை'' என்ற சேக்கிழார் வாக்கிற்கேற்ப சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு பாதம் (நிலைகளைப்) பற்றி விளக்க வந்தவர் முதலில் சிவபரத்துவம் கூறி பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மையை விளக்குகிறார்.

பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல்பசு பாசம் அனாதி
பதியினைச் சென்றணு காப்பசு, பாசம்
பதிஅணு கில்பசு, பாசம் நிலாவே. (தி.10 பா.115)

என்பது அப்பாடல். கடவுள், உயிர், மலம் என்ற மூன்றுமே என்றும் உள்ள உண்மைப் பொருள்கள். ஆனால் கடவுளை உயிர்களும் மலமும் சென்றடையா. பதியாகிய கடவுள் பசுவாகிய உயிரை அணுகுவார். அணுகினால் உயிரைப் பற்றி நிற்கும் பாசமாகிய மலம் அகலும். அகன்றால் உயிர் கடவுளுடன் கலந்து பேரா இன்பப் பெருவாழ்வு பெறும். இக்கருத்தே சைவம் கூறும் உண்மை.

இறைவன் உயிர்களை அனாதியாகவே பற்றி நிற்கும் மலமாகிய அழுக்கை அகற்றுதற்குக் கருணையினால் உடல், கரணம், புவனம் போகங்களைக் கொடுக்கிறான்; அவற்றை உயிர் அநுபவிக்கும் போது நல்லது கெட்டதை அறிவதற்கும் நிலையானவை நிலையில்லாதவை இன்னவை என உணர்த்தி நிலையானவற்றைப் பற்றி உய்தற் பொருட்டும், வேதாகமங்களை அருளி, அதன் வாயிலாக இளமை, செல்வம், யாக்கை முதலியவற்றின் நிலையாமையை உணர்த்தியும், வேதத்தில் விதிக்கப்பட்ட கொல்லாமை, அன்புடைமை முதலாய அறங்களை வற்புறுத்தியும், அந்நெறி பற்றி உயரும் உயிர்கள் தத்துவரூபம், தத்துவ தரிசனம், தத்துவசுத்தி, ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம் என்னும் இவ்வழியே சென்று சிவபோகம் துய்த்து உப்பானது தண்ணீரில் கூடித் தன்னிலை கெட்டு தண்ணீராகவே ஒன்றாகுமாறு போல் சீவனும் தன்னிலை கெட்டு சிவத்துள் அடங்கும் என்ற எடுத்துக் காட்டுடன் நிறைவு செய்துள்ளார்.

பாயிரம் - கடவுள் வாழ்த்து:

இதில் முதல் பாடல் ''ஒன்றவன்தான்'' என்பது. இதனைச் சேக்கிழார், ''பான்மை முறை ஓராண்டுக் கொன்றாகப் பரம்பொருளாம் ஏன எயிறணிந்தாரை ஒன்றவன்தான்'' என எடுத்து என்ற தொடரால் குறிப்பிட்டுள்ளார்.

ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான் குணர்ந்தான் ஐந்து
வென்றனன் ஆறுவிரிந்தனன் ஏழும்பர்ச்
சென்றனன் தானிருந்தான் உணர்ந்தெட்டே. (தி.10 பா.1)

ஏகம்சத் என்பது வேதம். 'ஒருவன் என்னும் ஒருவன் காண்க' என்பது திருவாசகம். 'ஒருவனே தேவன்' என்பது இத்திருமந்திரம்.

இறைவன் ஒருவனே என்பதைத்தான் திருமூலர், ஒன்றவன் தானே என்று முதலில் குறிப்பிட்டார்.

அடுத்து தன்னிடமிருந்து பிரிப்பின்றி நிற்கும் ஆற்றலை அதாவது அருளை இரண்டெனக் கொண்டுள்ளார். இரண்டவன் இன்னருள் என்பதில் அவனது அருள் இருதிறப்படும் என்ற பொருள்பட அறக்கருணை, மறக்கருணையைக் குறிப்பிட்டுள்ளார்.

நின்றனன் மூன்றினுள் என்பது ஒடுக்க காலத்தும் (அழித்தல்) அனுபவ காலத்தும் (காத்தல்) செயற்படுங்காலத்தும் (படைத்தல்) அவற்றுள் நிற்பவன் என்றார். இலய போக அதிகாரத்துள் நின்றமையை இது குறிப்பிடுகிறது.

நான்கு உணர்ந்தனன் என்பது அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கனையும் தானே உணர்ந்து உயிர்கட்கு உணர்த்துபவன் என்பதைக் காட்டுகிறது.

ஐந்து வென்றனன் என்பது ஐந்தவித்தான் என்ற *திருக்குறள்* கருத்தும், நேரிழையைக் கலந்திருந்தே புலன்களைந்தும் வென்றானை என்ற அப்பர் திருவீழிமிழலைத் தாண்டகக் (தி.6 ப.50 பா.3) கருத்தும் புலப்படத் தோன்றுவது.

ஆறு விரிந்தனன் என்பது, மந்திரம். பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை என்னும் ஆறு (அத்துவாக்கள்) வழிகளாக

விரிந்தனன் என்பதை உணர்த்துகிறது.

ஏழு உம்பர்ச் சென்றனன் என்பது பிரமலோகம், விஷ்ணு உலகம், உருத்திரலோகம், மகேசுவரலோகம், சதாசிவலோகம், சக்திலோகம், சிவலோகம் என்னும் ஏழுலகங்கட்கும் மேற்சென்று நின்றவன் என்பதை உணர்த்தும்.

அங்கு அவன் தனித்துச் செயற்படாது இருந்தான் அவனை நெஞ்சமே நீ உணர்ந்து எட்டு அடைவாயாக என்று பூர்த்தி செய்துள்ளார். தனித்துச் செயல்படாதிருந்தான் என்பது பரசிவமும், பராசக்தியும் தன்னிலையில் உலகமுகப்படாது சும்மாயிருக்கும் சொரூப நிலையைக் குறிப்பதாகும்.

முதல் தந்திரத்தில் சில பாடல்கள்:

தான் பெற்ற இன்பத்தை எல்லோரும் பெற்று இன்புற வேண்டும் என்ற கருணையினால் திருமந்திரம் என்னும் இந்நூல் எழுந்தது. இதனை,

நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே. (தி.10 பா.85)

என்ற பாடலால் குறிப்பிடுகின்றார். இப்பரந்த உள்ளப்பாங்கை உணர்த்தும் இப்பாடல் பாயிரத்துள் காட்சி தருகிறது.

யாக்கை நிலையாமையை,

அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடி யாரொடு மந்தணம் கொண்டார்
இடப்பக்கமே இறை நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே. (தி.10 பா.148)

என்ற அரிய பாடலால் விளக்கியுள்ளார்.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே. (தி.10 பா.139)

என்ற திருமந்திரம்,

நல்லாரைக் காண்பதும் நன்றே நலம்மிக்க
நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று.

என்ற *நல்வழிப்* பாடலை நினைவு கூர்கிறது.

யாவர்க்கும்ஆம் இறைவற்கொரு பச்சிலை
யாவர்க்கும்ஆம் பசுவுக் கொருவா யுறை
யாவர்க்கும்ஆம் உண்ணும்போதொரு கைப்பிடி
யாவர்க்கும்ஆம் பிறர்க்கு இன்னுரை தானே. (தி.10 பா.252)

என்ற பாடலால் எல்லோரும் பின்பற்றத்தக்க எளிய அறம் நான்கினை விளக்கியுள்ளார்.

அன்பே சிவம்:

அன்பு என்பது உள்ளத்தின் நெகிழ்ச்சி. இவ்வன்பு எல்லோரிடமும் இருப்பதுதான். இருப்பினும் அவரவர்க்கு ஏற்படும் நன்மை, தீமை காரணமாக அவ்வன்பின் தன்மை வேறுபடும். அங்ஙனம் வேறுபடாது ஒரே தன்மைத்தாய் உள்ள அன்பையே இங்குத் திருமூலர் குறித்துள்ளார்.

இதனால்தான், காரைக்காலம்மையார் திருக்கயிலைப் பெருமானிடம் ''இறவாத இன்ப அன்பு'' வேண்டினார். இறவாத எனில், கெடுதல் இல்லாததும் என்றும் நீங்காததும் நிலையானதும் ஆகும், அத்தகு நிறைவான இன்பமே பேரின்பம். அப் பேரின்பத்தைப் பெறவே நிலையான அன்பை இங்ஙனம் வேண்டினார். அன்பே இன்பத்திற்கு அடிப்படை என்பதை உணர்த்தினார்.

அன்பும் சிவமும் வேறல்ல என்பதுபோலவே அன்பும் இன்பமும் வேறல்ல.நமது அன்பின் முதிர்விலே முடிவிலா இன்பமான சிவம் வெளிப்பட்டுத் தோன்றும்.

நிலையான அன்புப் பிழம்பாகச் சிவம் திகழ்கிறது. அதனை அடைய நாமும் அன்புருவாய், நிலையான அன்புருவாய் ஆகவேண்டும். நமது அன்பு வளரும்; தளரும்.இறை அன்போ என்றும் ஒரே படித்தாய், உயிர்களிடத்தே நீங்காதிருக்கும். இதனை

மணிவாசகரும், திருவாசகம், போற்றித்திருவகவலில் ''சாயா அன்பு'' என்று குறிப்பிடுகிறார்.

''சாயா அன்பினை நாள்தொறும் தழைப்பவர்
தாயேயாகி வளர்த்தனை போற்றி.''
-தி.8 போற்றித் திருவகவல் 86,87

என்பது அப்பகுதி. இதனைத்தான் திருமூலர் அருளியுள்ள பாடலும் தெளிவிக்கிறது.

அன்புசிவம் இரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே. (தி.10 பா.269)

இதனை வேறொரு வகையிலும் சிந்திக்கலாம். அறிவு, சிவம், அன்பு, சக்தி இவ்விரண்டும் வேறல்ல. ஒன்றே, அறிவாகிய சிவம் பொருளாயிருப்பது. அன்பாகிய சக்தி சிவத்தின் தன்மையாயிருப்பது. எனவே, ஒரு பொருளும் அதன் தன்மையும் ஒன்றேயாமாறுபோல அறிவாகிய சிவமும் அதன் தன்மையாகிய அல்லது பண்பாகிய சக்தியும் வேறல்ல ஒன்றேயாம் என்பதை இம்மந்திரத்தால் தெளிவிக்கின்றார்.

இரண்டாம் தந்திரம்:

முதல் தந்திரத்தில் கூறியபடி நின்றவர்கள் அடையும் நன்மைகளையும் நில்லாதவர் அடையும் தீமைகளையும் புராண வரலாற்று வாயிலாக விளக்கியுள்ளார்.

அசுரர்களைப் பொதிய மலைக்கு வடக்கே செல்லவொட்டாமல் தடுத்த அகத்தியர் திறத்தினை அகத்தியம் என்ற தலைப்பிலும், அட்டவீரட்டச் செயல்களைப் பதிவலி என்ற தலைப்பிலும், அயனுக்கு வாளும், அரிக்கு ஆழியும், இராவணனுக்கு நாளும் வாளும் கொடுத்ததையும், சூரபன்மன் வதத்தையும் சண்டீசர் பதம் பெற்றமையையும் இலிங்க புராண(தி.10)ப் பகுதியிலும் குறித்துள்ளார்.

திருமால் சக்கரம் பெற்ற வரலாறு சக்கரப்பேறு என்ற பகுதியில் விளக்கப்படுகிறது. பிரமவிஷ்ணுவின் அகங்காரத்தைப் போக்கிய பகுதி ''அடிமுடி தேடல்'' என்ற பகுதியில் விளக்கப்படுகிறது. பரமன் எலும்பும் கபாலமும் ஏந்திலனேல் ஐந்தொழில் நடைபெறா என்பது

''எலும்பும் கபாலமும்'' என்ற பகுதியில் விளக்கப்படுகிறது. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில்களையும், முறையே அயன், மால், உருத்திரன், மகேசன், சதாசிவனாய் நின்று செயற்படும் திறனையும், புவனங்களையும் அதில் உள்ள எண்பத்து நான்கு நூறாயிரம் ஜீவபேதங்களையும் பரிபாலிக்கும் திறனையும், இப்பகுதிகள் விளக்கிக் காட்டுகின்றன.

அடுத்து, ஒருமலமுடைய விஞ்ஞானகலர், இருமலமுடைய பிரளயாகலர், மும்மலமுடைய சகலர், உற்பவிக்கும் முறை, கரு உற்பத்தி, உற்பவித்த சீவர்கள், குருநிந்தை, சிவநிந்தை, மாகேசுவர நிந்தையின்றிப் பெரியாரைத் துணைக்கொண்டு சத்பாத்திரம் அசத்பாத்திரம் தெரிந்து ஒழுகினோர் இறைவனடி சேர்வர் என்பவற்றை விளக்கியுள்ளார்.

இரண்டாம் தந்திரத்தில் சில பாடல்கள்:

பொதுவான அறங்கள் பலவும் சிவநெறிக்கண் சிறந்து நிற்றலையும், சிவபரத்துவம் நிரந்து நிற்றலையும் முதல்தந்திரத்துள் அருளிய திருமூலர் புராண தந்திரம் எனப் போற்றப் பெறும் இரண்டாந் தந்திரம் சிவபரத்துவத்திற்குச் சான்று காட்டுவதாயுள்ளது.

இதில் உள்ள முதல்பாடல் அகத்தியர் பெருமை கூறுமுகத்தால் சிவபரத்துவம் கூறுகிறது.

நடுவு நில்லாது இவ்வுலகம் சரிந்து
கெடுகின்ற தெம்பெருமான் என்ன ஈசன்
நடுவுள அங்கி அகத்திய நீபோய்
முடுகிய வையத்து முன்னி ரென்றானே. (தி.10 பா.337)

தீ வண்ணனாகிய சிவபெருமானைச் சதாகாலமும் அகத்தே தியானிப்பவரானதால் அகத்தீயர் எனப்பெற்றார். இப் பெயர்ப் பொருள் பலரும் அறியாத ஒன்று. அகத்தீயரே மருவி அகத்தியர் என வழங்குகிறது என்பது இதனால் புலனாகிறது.

மக்கள் அறநெறி பிறழ்வார்களானால் நிலநடுக்கமும் நிலப்பெயர்ச்சியும் ஏற்படும். அதுபோது சான்றோர் சிலர் இருப்பரேல் உலகம் அழியாது நிலைபெறும். இக்கருத்தைத் திருவள்ளுவரும்,

சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை. *-குறள் 990*

பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன். *-குறள் 96*

என்ற குறட்பாக்களால் தெளிவுபடுத்தியுள்ளார்.

அறம் குறைந்து மறம் பெருகியதால் நிலம் ஒரு பக்கம் சரியத் தொடங்கியது: அப்போது தேவர்கள் சிவபெருமானை வேண்டினர்; பெருமான் சதாகாலமும் செம்பொருளாகிய தன்னை அகத்தே கொண்ட அகத்தியரைத் தெற்கே அனுப்பி, தான் வடக்கே வீற்றிருந்தருளினான். நிலம் சமமாயிற்று. இந்நிகழ்ச்சி சிவபெருமான் திருமணக்காலத்தில் நிகழ்ந்ததாகவும் சொல்லப்பெறும்.

இவ்வரிய பெரிய சிவன் பெருமை, சிவனடியார் பெருமை கூறுவதையே முதலாகக் தொடங்குகிறது இரண்டாந் தந்திரம். இதில் திருக்கோயில்களில் பூசை தடைப்படுமானாலும், பூசை புரிவோர் அன்பு, அறிவு ஆசாரமில்லாதவரானாலும் நாட்டிற்குத் தீங்குவரும் என்று அறிவுறுத்துகிறார்.

முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரிவளங் குன்றும்
கன்னம் களவு மிகுத்திடும் காசினி
என்னரு நந்தி எடுத்துரைத் தானே. (தி.10 பா.510)

பேர்கொண்ட பார்ப்பான் பிரான்தன்னை அர்ச்சித்தாற்
போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்
பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமு மாம்என்றே
சீர்கொண்ட நந்தி தெரிந்துரைத் தானே. (தி.10 பா.511)

மூன்றாம் தந்திரம்:

இது எண்வகை யோகங்களைக் கூறுவது. இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன அவை.

தவிர்க்க வேண்டிய கெட்ட பழக்கங்களை விடுதல் இயமம் எனப்பெறும்.

கடைப்பிடிக்க வேண்டிய நற்பழக்கங்களை மேற்கொள்ளுதல் நியமம் எனப்பெறும்.

யோகம் பயில்வோர் அமர்ந்திருக்கும் நிலை **ஆசனம்** எனப்பெறும்.

மூலாதாரத்தில் மூண்டெழுகனலைப் பிராண வாயுவினால் எழுப்பி முறைப்படுத்தும் நிகழ்வே **பிராணாயாமம்** எனப்படும்.

மனத்தைப் பொறி வழி போகவிடாது அகமுகமாக ஆறு ஆதாரங்களில் நிறுத்துதல் **பிரத்தியாகாரம்** எனப்படும்.

பொறுமை **தாரணை** எனப்படும்.

இடையறாது நினைத்தல் **தியானம்** எனப்படும்.

இறையுடன் கலத்தல் **சமாதி** எனப்பெறும்.

யோக சித்திகளைப் பெறக் கருவியாயிருக்கும் உடம்பை அழியாதபடி நோயின்றிக் காக்கும் வழிகளைக் **காய சித்தி** என்ற தலைப்பிலும், உடம்பைப் பக்குவப்படுத்தவேண்டிய முறையை **வார சரம், வார சூலை, அமுரி தாரணை, ஆயுள் பரீட்சை, கால சக்கரம்** முதலிய தலைப்புகளாலும் விளக்கிப் பின் **கேசரி யோகம், பரியங்க யோகம், சந்திர யோகம்** முதலியவற்றை விளக்கிப் பிறகு **சிவயோகங்கள் எல்லாவற்றினும் அட்டாங்க யோகமே** சிறந்தது என்றும் முடித்துள்ளார்.

கேசரி யோகம் என்பது அடயோகத்தின் பாற்படும். கடினமானது. எல்லோரும் பயிற்சி செய்ய இயலாதது.

பரியங்க யோகம் இல்லாளுடன் கூடிச் செய்வது; இது கருத்தொருமித்த காதலனும் காதலியும் கூடிச் செய்வது. இதுவும் எல்லோருக்கும் இயல்வதன்று. சுந்தரர், பரவையார், சங்கிலியாருக்கும், திருவள்ளுவர் வாசுகிக்கும் ஏற்றது.

சந்திரயோகம் என்பது: சந்திரன் கலை 16, சூரியன் கலை 12, அக்கினி கலை 64, தாரணை கலை 4, ஆக 96 கலைகளையும் அறிந்து வளர்பிறை, தேய்பிறைகளில் பயிலப்படும் யோகம்.

இவற்றுள் **அட்டாங்கயோகமே** சிறந்தது. மேற்கொள்ளத் தக்கது என்று நிறைவு செய்துள்ளார்.

மூன்றாம் தந்திரத்தில் சில பாடல்கள்:

சாத்திரம் என்பது தவமும் அதன் பயனாகிய ஞானமும் என இருவகைப்படும். தவம் சாதனமாகும். அதில் சிறந்து நிற்பது அட்டாங்க யோகம். இதுபற்றி மூன்றாந் தந்திரத்துள் பெரிதும் உணர்த்துகின்றார்.

இயம நியமமே எண்ணிலா ஆசனம்
நயமுறு பிராணாயாமம் பிரத்தியா காரம்
சயமிகு தாரணை தியானம் சமாதி
அயமுறும் அட்டாங்க மாவது மாமே. (தி.10 பா.542)

இயமம் என்பது சான்றோரால் விலக்கியனவற்றை நீக்குதல். அவையாவன: கொல்லாமை, பொய்யாமை, விருப்பு வெறுப்பின்மை, புலால் உண்ணாமை, கரவாமை, மாசின்மை, கள்ளுண்ணாமை, மிக்க காமமின்மை முதலியனவாம்.

நியமம் என்பது தவம், செபம், ஆத்திகம், மனநிறைவு, தானம், விரதம், ஞானநூற்கேள்வி, சிவவேள்வி, சிவபூஜை, நற்பண்பு முதலியவற்றை நியமமாகச் செய்தல்.

ஆசனம் என்பது யோகம் பயில்வோர் கை, கால் முதலிய உடல் உறுப்புக்களைத்தக்கபடி அமைத்துக் கொண்டு அமர்ந்திருக்கும் முறையாகும். இது பத்துவகை, நூறுவகை எனக் கூறினும், எட்டு ஆசனங்களையே இவர் சிறந்ததாகக் கொண்டுள்ளார்.

பத்திராசனம், கோமுகாசனம், பத்மாசனம், சிங்காசனம், சுகாசனம், ஸ்திராசனம் என்ற ஆறும் உத்தமாசனம் என்றும் சுகத்திகாசனம், உத்தமோத்தமாசனம் என்றும் குறிக்கின்றார்.

இம்மூன்று நிலையும் கடைப்பிடிப்போரே அடுத்துள்ள பிராணாயாமம் செய்தற்குரியராவார்.

பிராணன் என்பது மூச்சுக்காற்று. இதனால்தான் உயிர் உடலில் தங்கி இருக்கிறது. பிராண ஆயாமம் என்பதைப் பிராணாயாமம் எனச் சேர்த்துச் சொல்கிறோம். ஆயாமம் என்றால் அடக்குதல் என்பது பொருள். மூச்சை முறைப்படி அடக்கினால் ஆயுள் நீளும். பிராணாயாமத்தை முறையாகச் செய்வோர் ஐம்புலன்களையும் அடக்கி ஆள்வர். இதனைத் தெளிவிக்கும் பாடல்,

ஐவர்க்கு நாயகன் அவ்வூர்த் தலைமகன்
உய்யக்கெண் டேறுங் குதிரை மற்றொன்றுண்டு
மெய்யர்க் குப்பற்றுக் கொடுக்கும்: கொடாதுபோய்ப்
பொய்யரைத் துள்ளி விழுத்திடுந் தானே. (தி.10 பா.552)

இங்குக் குதிரை என்றது மூச்சுக்காற்றை. இதனை வாசி என்று கூறுவர். அதுபற்றியே குதிரை என்றருளினார். வாசி - குதிரை - பிராண - யாமம் எனப்பிரித்து பிராணவாயுவை நடுநாடியில் செலுத்துவதே பிராணாயாமம் என்று கொள்ளவும் இடந்தருகிறது. யாமம் - நடு. மூலாதாரத்தில் மூண்டெழு கனலை இடது நாசி பூரகத்தால் இழுக்கும் பிராணவாயுவைக் கும்பகமாக அடக்கி அதனை நடுநாடியின் மூலம் மூலாதாரம் முதல் பிரமரந்திரம் வரை படிமுறையாகக் கொண்டுபோய்ப் பரம்பொருளைப் பிரிப்பின்றித் தியானிப்பதே பெரும் பயன் எனக் கொள்ளப்படுகிறது. பிராணாயாமம் செய்யும் முறையை ஒரு பாடலில் விளக்குகிறார்.

ஏறுதல் பூரகம் ஈரெட்டு வாமத்தால்
ஆறுதல் கும்பம் அறுபத்து நால்; அதில்
ஊறுதல் முப்பத் திரண்ட திரேசகம்
மாறுதல் ஒன்றின்கண் வஞ்சக மாமே. (தி.10 பா.556)

பூரகம் என்பது காற்றை இடது நாசியால் உள் இழுத்தல். **கும்பகம்** என்பது நிறுத்துதல், **ரேசகம்** என்பது வலது நாசியால் விடுதல். பூரகம் 16 மாத்திரை நேரமென்றால், நிறுத்துதல் நான்கு மடங்கு அஃதாவது 64 மாத்திரை. விடுதல் அதில் பாதியாகிய 32 மாத்திரையளவு. இதை முறையாகச் செய்தால் நரை திரை மூப்பற்றுப் பல்லாண்டு வாழலாம். முறைமாறின் தீங்கு பயக்கும்.

பிரத்தியாகாரம் என்பது மனம் பொறிவழி போகாமல் அகமுகப்படுத்தி மூலாதாரம் முதலிய ஆறு ஆதாரங்களில் நிற்கச் செய்தல். அங்கு இறையருளில் கலந்து அமைதி பெறலாம்.

தாரணை என்பது பொறை நிலை என்பர். பிரத்யாகாரத்தால் ஆறு ஆதாரங்களில் நிறுத்தப்பட்ட மனத்தை மீளவும் புறம்போக விடாமல் அவ்வாதாரங்களிலேயே நிறுத்துதல். அவ்வாதார நிலைகளில் ஊன்றி நிலைப்பதே **தியானம்** எனப்பெறும் அத்தியான முயற்சியால் தன்னை மறந்து அவ்வாதாரப் பொருளேயாய் விடுதல் **சமாதி** எனப்படும்.

தியானம் என்பது இடையறாது நினைத்தல். இங்ஙனம்

நினைப்பதால் மார்கழி நீராடுவோர் போல் இன்பவெள்ளத்தில் மூழ்கிச் சிறப்பர் என்று அறிவிக்கின்றார்.

சமாதி என்பது முடிவான நிலையைக் குறிப்பது; அஃதாவது நிறைவு. இயமம் முதலியவற்றை வழுவாது கடைப்பிடிப்பவர்கட்கே சமாதி நிலை கைகூடும். அல்லாதவர்க்குக் கூடாது.

இவ்வெண்வகை யோகம் பயிலுங்கால் அட்டமாசித்திகளும் இடையில் கைகூடும். அவற்றை அகற்றி சமாதிநிலை கூடுதலே பெரும் பயனாகும். சித்தியில் ஈடுபடுதல் சிறுபயன் பெறவே பயன்படும். கடவுளோடு ஒப்ப இருக்கும் **சமாதி** நிலையை விட்டுச் சிறுபயன் கொள்ள விழையார் சான்றோர்.

இனி இத்தந்திரத்தில் அகநோக்கில் காணத்தக்க ஆறு ஆதாரங்களைப் பற்றிச் சிந்திப்போம்.

ஆறு ஆதாரம் – மூலாதாரம் :

ஆறு ஆதாரங்களைப் பற்றியும் அவற்றிற்குரிய மூர்த்திகளைப் பற்றியும், அக்ஷரங்கள் பற்றியும் தெரிந்தால்தான் தியானிப்பதற்கு இயலும்.

மூலதாரம் - இது எருவாய் கருவாய்க்கு இடைப்பட்ட இடம்; மூலாதாரம் என்பது மண், பிருதிவி, முதலாவது ஆதாரம் எனப்படுவது; நான்கு இதழ்த்தாமரை. வீணா தண்டத்தின் அடிப்பாகத்தில் உள்ளது. இத்தாமரையில் சித்தலக்ஷ்மி, வல்லபை என்ற தேவியருடன் கணபதி வீற்றிருப்பதாகத் தியானித்தல் வேண்டும். நான்கு தளத்திற்கும் நான்கு எழுத்துக்கள், வம் சம் ஷம் ஸம்.

சுவாதிட்டானம் என்பது தனது இடம் எனப்பொருள் தரும். சோதியாகிய இறைவனது இடம். குறியினுக்கும் உந்திக்கும் இடைப்பட்ட இடமே சுவாதிட்டானம். கசேரு தண்டத்தின் முதுகுத் தண்டு அடிப்பாகத்தில் இருந்து சிறிது மேல்பாகத்தில் இருப்பது. ஆறிதழ்த் தாமரையில் பம் முதல் லம் வரை ஆறெழுத்துக்கள். சாவித்திரி காயத்திரியுடன் பிரம்மா வீற்றிருப்பார்.

மணிபூரகம் வாயுவைக் கும்பிக்கும் சிறந்த இடம் : டம் முதல் பம் வரையுள்ள பத்து எழுத்துக்கள். பத்திதழ்த் தாமரையில் பூதேவி சீதேவியுடன் விஷ்ணு வீற்றிருக்கிறார். இது தொப்புள் பிரதேசம்.

அனாகதம் என்றால் வடிவற்றது என்பது பொருள். மனத்தின் இடம் இதுவே. கம் முதல் டம் வரை 12 அக்ஷரங்கள் 12 இதழ்த்

தாமரையில் கௌரி அம்பிகையுடன் உருத்திரன் வீற்றிருக்கிறார்.

விசுக்தி என்பது மிக்க தூய்மை எனப் பொருள் தரும். அ முதல் ஃ வரை 6 எழுத்துக்கள். 16 இதழ்த் தாமரையில் உன்மனி வாக்வாதினியுடன் மகேஸ்வரன் வீற்றிருக்கிறார். இடம் நாக்கின் அடிப்பாகம்.

ஆக்ஞை என்பது அறிவிற்கு நிலைக்களம் எனப் பொருள் படும்.

ஹம், க்ஷம் இரு எழுத்து. ஈரிதழ்த் தாமரையில் மனோன்மணி, தர்மசத்தியுடன் சதாசிவம் குருவடிவாக வீற்றிருக்கின்றார். இடம் புருவ மத்தியம், **பிரம்மரந்திரம்** - இது சிரத்தின் உச்சியில் உள்ளது. அதில் பராசக்தியுடன் பரமசிவன் வீற்றிருக்கிறார்.

இங்குக் குறிப்பிட்ட ஆதாரங்களில் அவ்வம் மூர்த்திகளைத் தியானித்தல் வேண்டும். **அனாகததளம்** இதயம். மனத்தின் இடம் இது. இங்கு அட்டசித்திகளும் கைகூடும். அதனை அகற்றி மேற்செல்ல வேண்டும். சித்திகளில் ஈடுபட்டால் உண்மை ஞானம் தடைப்பட்டுவிடும்.

பிராசாத யோகம்: கலை நிலை என்ற தலைப்பில் நமது ஆதீன யோகப் பயிற்சிக்கு உரியதாகிய பிராசாத யோகம் பற்றிக் கூறுகிறார். பிராசாதம் என்பதற்குப் பொருள் சிவஞான கதியைத் தருவது என்பது பொருளாகும். பிரா - சிவஞானம்; ஸா - கதி; த - தருவது; இது வாசி யோகத்தினும் நுண்ணிதாய் மேம்பட்டு விளங்குவது. ஓம் என்ற பிரணவத்தைப் பதினாறு கூறுகளாகப் பிரித்துப் பயிற்சி செய்வது **சோடசகலாப் பிராசாதம்** ஆகும். குரு ஞானசம்பந்தர் அருளிய *சோடசகலாப் பிராசாத சட்கம்* என்ற நூலில் இதுபற்றிய விளக்கம் காணலாம்.

வார சரம்:

வாரம் என்பது இங்கு கிழமைகளைக் குறிக்கின்றது. கிழமைகள் ஏழனுள், வெள்ளி, திங்கள், புதன் ஆகிய மூன்று நாள்களிலும் பிராண வாயு இடது நாடி (நாசி) வழியாகவும், சனி, ஞாயிறு, செவ்வாய் ஆகிய மூன்று நாள்களிலும் பிராண வாயு வலது நாடி (நாசி) வழியாகவும், வியாழனில் வளர்பிறையாயின் இடது நாடி வழியாகவும், தேய் பிறையாயின் வலது நாடி வழியாகவும் இயங்குதல் உடல் நலத்திற்கு ஏற்புடைய இயற்கைப் பிராண வாயு இயக்கமாகும். இதை விளக்கும் பாடல்,

வெள்ளிவெண் திங்கள் விளங்கும் புதன்இடம்
ஒள்ளிய மந்தன் இரவிசெவ் வாய்வலம்
வள்ளிய பொன்னே வளரும் பிறையிடம்
தெள்ளிய தேய்பிறை தான்வல மாமே. -தி.10 பா.774

அமுரி தாரணை :

அமுரி என்பது சிறுநீரில் உள்ள ஒரு மருந்துப் பொருள். தாரணை என்பது தரித்தல் எனப் பொருள் தரும். அமரி என்பது மருவி அமுரி என வழங்குகிறது. அமரி - மரித்தலை (இறத்தலை) நீக்குவது.எனவே இதுவும் அமிர்தம் என்பதும் ஒரு பொருட் சொற்களாம்.

அமுரி என்பது சிறுநீரே என்பாரும் உளர். அது பொருந்தாது என்பதை அமுரி தாரணைப் பகுதியிலுள்ள ஐந்து திருமந்திரங்களும் பல கோணங்களில் தெளிய விளக்குகின்றன.

துறவிகளும், துறவிகளாய் வாழும் எண்ணம் உடையவர்களும் மிளகுப் பொடியைப் பல வகையாலும் உணவில் சேர்த்து உண்பர். இவ்வாறு உண்டால் சிறு நீரானது சிவ நீராய் மாறும். இதனால் துறவிகள் எண்ணெய் தேய்த்துக் குளிக்காமல் மிளகு தேய்த்துக் குளிக்கிறார்கள். மிளகு தேய்த்துக் குளிப்பவர்களுக்கு நரை திரை வராது. இதை விளக்கும் பாடல்,

நூறும் மிளகு நுகரும் சிவத்தின் நீர்
மாறும் இதற்கு மருந்தில்லை மாந்தர்காள்
தேறி இதனைத் தெளிஉச்சி கப்பிடின்
மாறும் இதற்கு மறுமயி ராமே. -தி.10 பா.831

சந்திர யோகம்:

சந்திரனை விளக்கம் செய்கின்ற யோகம் என்பது இதன் பொருள். சந்திரன் என்பது இங்குச் சந்திர மண்டலத்தைக் குறிக்கும். இஃது ஆறாதாரங்களைக் கடந்த ஏழாம் இடமாகிய பிரமரந்தரத்தைக் குறிப்பது. இது சகஸ்திராரம் எனவும் பேசப்படும். இந்த இடத்தை ஆயிரம் இதழ் உள்ள தாமரை மலராகக் கொண்டு அதில் சிவம் பிரகாசிப்பதாகக் கொள்வர்.

பதினாறு கலைகளுடன் சந்திரன் வளர்ந்தும் தேய்ந்தும் வருவது போல், உடம்பிலுள்ள சந்திர மண்டல ஆற்றலும் வளர்ந்தும்

தேய்ந்தும் ஒடுங்குவதாகும். அண்டத்தில் உள்ள சந்திரனைப் போலவே, பிண்டத்தில் உள்ள சந்திர மண்டலமும் ஒத்துள்ளதைக் கூறுகிறது இப்பகுதி.

சூரிய கலை பன்னிரண்டு என்கிறார். இது 12 சூரியர்களைக் குறிக்கும். வளர்பிறை தேய்பிறைகளால் சந்திர கலை பதினாறு என்பதை உணரலாம். அக்கினி கலை பத்து எனக்கூறினாலும், விரிவில் அறுபத்துநான்கு எனப் பேசுகிறார். மேலும் நட்சத்திரக் கலைகளையும் சேர்த்து 96 கலையாகக் கணக்கிட்டு, தத்துவம் 36, தாத்துவிகம் 60, ஆக 96 தத்துவங்களாகக் குறிப்பிடுகிறார்.

மூன்றாம் தந்திரத்தின் முடிவில் யோக நெறியை விளக்கி நிறைவு செய்கின்றார்.

இத்திருமந்திர நூலை உரையின் துணைக்கொண்டு தெளிவு கண்டு பயிற்சி பெறுபவரெல்லாம் பல்லாண்டு வாழலாம். அன்பர்கள் படித்துப் பயிற்சி மேற்கொண்டு பல்லாண்டு வாழ, செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

வாழ்க திருமந்திரம்,
வளர்க அட்டாங்க யோக நெறி.

உ

குருபாதம்

பதிப்புரை

திருச்சிற்றம்பலம்

நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே. (தி.10 திருமந்திரம் 24)

வடமொழியில் அமைந்த பதஞ்சலியோக சூத்திரத்திற்கு நிகராகத் தமிழில் அமைந்த யோகநூல் திருமந்திரமாகும். இதனை அருளிச் செய்தவர் திருமூலதேவராவார். இவர் அருளிய திருமந்திரம் மூவாயிரம் பாடல்களையுடையது. ஒன்பது தந்திரங்களைக் கொண்டது.

மந்திரம் என்பதற்கு நினைப்பவர்களைக் காப்பது என்பது பொருளாகும். இந்நூலில் கூறப்படும் செய்திகள் படித்து அநுபவத்தில் பின் பற்றுவாரைக் காக்கும் திறனுடையன ஆதலின் இந்நூல் மந்திரம் எனப்பெற்றது.

தமிழ் மொழியில் யோக நெறியைக் கூறும் சிறப்புடைய நூலாய்த் திருமந்திரம் விளங்குவது நாம் கருதி மகிழத்தக்கதாகும்.

பன்னிருதிருமுறைகளில் பத்தாவதாக விளங்கும் இந்நூலுக்கு விரிவான பொழிப்புரை, விளக்கக் குறிப்புரை எழுதி வெளியிட வேண்டுமெனத் திருவுளம் பற்றிய தருமையாதீனம் 25ஆவது குருமகாசந்நிதானம் அவர்களின் அருளாணையை ஏற்று, மும்மூன்று தந்திரங்கள் கொண்ட மூன்று தொகுதிகளாகப் பகுத்துக் கொண்டு, மகாவித்துவான், முனைவர் திரு. சி. அருணைவடிவேல் முதலியார் உரை எழுத முற்பட்டார்கள்.

திருமந்திரம் முதல் தொகுதி வெளி வருவதற்கு முன்னரே, ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் காசி சென்று விசுவேசன் திருவடி நீழலிற் கலந்தருளினார்கள்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் அருள் வழித் தோன்றலாய் எழுந்தருளிய தருமை ஆதீனம் 26ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் இத்திருமுறைப் பதிப்பைத் தொடர்ந்து 1974, 1984, 1994 ஆகிய ஆண்டுகளில் ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூசை விழா மலர்களாக வெளியிட்டருளினார்கள்.

இதுபோது அந்நூல்களை ஏனைய திருமுறைகளுடன் ஒளியச்சில் அழகிய பதிப்புகளாக, ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் வெள்ளிவிழா மலராக ஞானசம்பந்தம் பதிப்பகத்தின் சார்பில் 26ஆவது குருமகா சந்நிதானம் வெளியிட்டருளுகின்றார்கள்.

திருமந்திரம் முதல் தொகுதிக்கு இராஜபாளையம் இராம்கோ நிறுவனத் தொழிலதிபர் திரு. பி. ஆர். இராமசுப்பிரமணிய ராஜா நன்கொடை வழங்கியுள்ளார்.

இத்திருமுறைப் பதிப்புக்களைச் செம்மையான முறையில் அச்சிட்டு வழங்கும் பொறுப்பைச் சென்னை-யாழ்ப்பாணம் காந்தளகம் உரிமையாளர், மறவன்புலவு திரு. க. சச்சிதானந்தன் அவர்கள் ஆர்வத்தோடும் பக்தி உணர்வோடும் ஏற்று நன்முறையில் நிறைவேற்றியுள்ளார்.

அன்பர்கள் இத்திருமுறையை ஓதியுணர்ந்து இறையருள் பெற்று இன்புறுவார்களாக.

கட்டளை விசாரணை
மௌனமடம்
திருச்சிராப்பள்ளி.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின்
உத்தரவுப்படி
மௌன மகாலிங்கத்தம்பிரான்

உ

குருபாதம்

முதல் பதிப்பின் பதிப்புரை

''சக்கர வர்த்தி தவராச யோகியெனும்
மிக்கதிரு மூலனருள் மேவுநாள் எந்நாளோ!''

– தாயுமானவர், பா.1113

திருமந்திர நூற்சிறப்பு:

திருமூல நாயனார் அருளிச் செய்த, 'திருமந்திரம்' என வழங்கும் திருமந்திரமாலை, சைவத் திருமுறைகள் பன்னிரண்டில் பத்தாவதாய் விளங்குவது. 'தோத்திரம், சாத்திரம்' என்னும் இரண்டனுள் 'திருமுறைகள் யாவும் தோத்திரம்' என்பது பெரும் பான்மை பற்றிய முறை. எனினும் திருமந்திரம், உண்மையில் சாத்திரமே. என்றாலும், இதனைத் திருமூலர் தோத்திர முறையிலே தான் கூறுகின்றார். ''போற்றிசைத்து இன்னுயிர் மன்னும் புனிதனை ... ... கூறுகின்றேன்'' (தி.10 பாயிரம் பா.2) ''பரமனைப் புக்குநின்று உன்னி யான் போற்றுகின்றேன்'' (தி.10 பாயிரம் பா.3)என்பன நாயனார் கூறும் தொடக்க மொழிகள். இப் போற்றுதல் தன்மை, நூல் நெடுகிலும் காணப்படும். எனவே, திருமந்திரம் தோத்திரத்திற்குத் தோத்திரமாயும், சாத்திரத்திற்குச் சாத்திரமாயும் நிற்கும் பெருமையுடையதாம்.

தமிழ் ஆகமம்:

'திருமந்திர நூல் வடமொழியில் உள்ள சைவாகமங்களின் பொருளைத் தமிழால் கூறுவது' என்பதை ஆசிரியரே பாயிரத்தில் தெளிவாகக் கூறுகின்றார். அதனால் சேக்கிழார்,

''தண்ணிலவார் சடையார்தாம் தந்தஆ கமப்பொருளை
மண்ணின்மிசைத் திருமூலர் வாக்கினால் தமிழ்வகுப்ப''

(தி.12 திருமூல. பா.23)

என எடுத்தோதினார். இதனால் திருமந்திரம், 'தமிழ் ஆகமம்' எனப் பெறுகின்றது.

சிறப்பு நூல்:

வடமொழியில், வேதம் பொதுநூலாயும், சிவாகமம் சிறப்பு நூலாயும் விளங்குகின்றன. அதுபோலத் தமிழில் *திருக்குறள்* பொதுநூல்; திருமந்திரம் சிறப்பு நூல். வடமொழியில் வேத சிவாக மங்களில் அனைத்துப் பொருள்களும் அடங்கி உள்ளன. அதுபோலத் தமிழில் *திருக்குற*ளிலும் திருமந்திரங்களிலும் அனைத்துப் பொருள்களும் அடங்கி உள்ளன. இக் கருத்தைக்கொண்டே *ஔவையார்*,

தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகம்என் றுணர். *-நல்வழி பா.40*

என்று அறிவுறுத்தினார். திருமூலரை ''நம்பிரான்'' (தி,7 ப.35 பா.5)எனச் சுந்தரரும் குறித்தல் வாயிலாகத் திருமந்திரத்தின் உயர்வை உணர்த்தினார்.

ஆகமப் பொருள்:

'திருமூலர் வடமொழிச் சைவாகமத்தைத் தமிழிற் செய்தார்' என்பதனால். 'அவ் ஆகமங்களை அவர் அப்படியே மொழி பெயர்த்தார்' என்பது பொருள் அன்று; 'ஆகமங்களின் பொருளைத் தமிழில் தாம் ஓர் ஒழுங்கில் வைத்துக் கூறினார்' என்பதே பொருள். சேக்கிழாரும் ''ஆகமப் பொருளை'' எனக் கூறியிருத்தல் நினைவிற்கொள்ளத் தக்கது.

ஆகமப் பொருளை இங்ஙனம் அமைத்து நூல்செய்யப் புகுந்த நாயனார், நூலின் ஒவ்வொரு பகுதிக்கும், 'தந்திரம்' எனப் பெயர் தந்து, ஒன்பது தந்திரங்களாகச் செய்தருளினார். 'நூல்' எனப் பொருள் தரும் 'தந்திரம்' என்பது ஆகமங்கட்கும் பெயராய் வழங்கும். அதனை நாயனார் ஆகமப் பொருள் ஒழுங்கிற்குப் பெயராக அமைத்தார்.

'திருமூலருக்கு ஆசிரியராகிய நந்திதேவர் சிவபெருமானிடம் ஒன்பது ஆகமங்களைக் கேட்டார்' என்று திருமூலர் இந்நூலின் பாயிரத்தில் கூறினார். அஃதே பற்றி, 'திருமந்திரத்தின் ஒவ்வொரு தந்திரமும் அந்த ஆகமங்களில் ஒவ்வொன்றின் பொருளையே கூறுகின்றன' என்று கருதுவோரும் உளர். ஆயினும் எண் ஒற்றுமை பற்றியே அவ்வாறு கூறுதல் உண்மை ஆகாமை, மேற்குறித்தவாற்றால் விளங்கும்.

நாற்பொருள் நலம்:

நூல்களால் மக்கள் அறியத்தக்க பொருள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்குமாம். பொதுநூல் அவைகளைப் பொதுப் படக் கூறும். *திருக்குறள்* அப்படித்தான் கூறுகின்றது. சிறப்பு நூல் அவைகளைச் சிறப்பாகக் கூறும். ஆகவே, திருமந்திரம் அவற்றைச் சிறப்பாகக் கூறுகின்றது. எனினும், *திருக்குறள்* அறத்தை முதன்மை யாகக் கூறும் அறநூல் ஆதலின், அதில் வீடு சிறிதளவே கூறப்பட்டது. திருமந்திரம் வீட்டு நூல் ஆதலின், இது அறம் முதலியவற்றைச் சிறுபான்மை கூறி, வீட்டினையே பெரும் பான்மையாக விளக்குகின்றது. எனவே, *திருக்குறள்* முற்ற முடிந்த பொதுநூல் ஆதல்போலத் திருமந்திரம் முற்ற முடிந்த சிறப்பு நூலாகின்றது.

பாயிரமும் நூல் தொடக்கமும்:

திருமந்திரம், முன்னே பாயிரத்தைக் கொண்டு விளங்கு கின்றது. பாயிர வகை பலவற்றுள் இது தற்சிறப்புப் பாயிரமாகும். அஃதாவது, நூலாசிரியர் தாமே தம் நூலிற்குரிய சிலவற்றைக் கூறும் பாயிரம். இதில் நாயனார் முன்னோர் மரபுப்படி கடவுள் வாழ்த்து, நூல் நுதலிய பொருள், அவையடக்கம் என்பனவற்றுடன், தமது வரலாறு, தமது உபதேச பரம்பரை, அவற்றிற்குரிய திருமடங்களின் வரலாறு என்பவற்றையும் தாமே கூறியிருத்தல் மிக்க பயன் தருவதாய் உள்ளது.

சிவநெறிச் சிறப்பு நூலாகிய இந்நூல், சிவபெருமானது தன்மையை விளக்குகின்ற சிவ பரத்துவம், அவன் உலகிற்கு அருளிய பொது நூல் சிறப்பு நூல்களாகிய வேத சிவாகமங்களின் சிறப்பு அவற்றுள் வேத சாரமாகிய சிவாகமப் பொருள் முடிபைச் சிறப்பாக உணர்த்தும் உபதேசம் என்பனவற்றை முதலிற்கொண்டு, பின் ஏனைய பொருள்களைக் கூறிச் செல்கின்றது. முதலில் உள்ள சிவபரத் துவத்தைச் சார்ந்து திரிமூர்த்திகளின் நிலைகளும் கூறப்படுகின்றன.

முதல் மூன்று தந்திரப் பொருள்:

ஒன்பது தந்திரங்களுள் முதல் தந்திரம் பொதுவாக அறங் களைக் கூறுவது. இதில் பல்வேறு நிலையாமைகள், கொல்லாமை, புலால் உண்ணாமை, அந்தணர் ஒழுக்கம், அரசர் ஒழுக்கம், அறம் (ஈகை) செய்தல், அறம் செயாக்குற்றம், அன்புடைமை, நடுவு நிலைமை, கள்ளுண்ணாமை முதலியவை கூறப்படுகின்றன. 'நல்குரவு (இன்மை), கல்வி, கல்லாமை, கேள்வி' என்னும் பொருட் பகுதிகள்

இங்கு ஏற்ற பெற்றி கூறப்படுகின்றன. பிறன்மனை நயவாமை, பொது மகளிரைச் சேராமை இவை இன்பம் பற்றியவை எனலாம்.

இரண்டாம் தந்திரம் புராண மரபாகும். இதில் புராண வரலாற்றின் தத்துவங்கள், இறைவனது ஐந்தொழில்கள், திருக்கோயில் முறைமை, தீர்த்தச் சிறப்பு, தானம் செய்தற்கு உரிய பாத்திரம் இவைகள் கூறப்படுவதுடன், படைப்பின் விளக்கமாகக் கருப்பக் கிரியையும், மூவகைச் சீவ வருக்கமும் கூறப்படுகின்றன.

மூன்றாம் தந்திரம் யோகத்தை விரித்துக் கூறுகின்றது. யோகத்தின் உறுப்புக்களாகிய இயமம், நியமம் முதலிய எட்டு, பிராசாத யோகம், யோகத்தின் பயன்களாகிய அட்டமாசித்தி, காயசித்தி, ஆயுள் பரீட்சை, முதலியவற்றுடன், யோகத்தின் பல்வேறு வகைகள் ஆகிய பலவும் இத்தந்திரத்திலே விரிவாய்க் காணப்படும்.

திருமந்திரத்தின் முதல் மூன்று தந்திரங்கள் இவ்வாறு அமைந்துள்ளன.

நூற்பொருள்:

சைவாகமங்களிற் சொல்லப்படும் பொருள்கள் 'சரியை, கிரியை, யோகம், ஞானம்' என நான்கு. அந்நான்கும் தமிழ் ஆகம மாகிய திருமந்திரத்தில் பொருந்தியிருத்தல் இயல்பு. அவற்றுள் சரியை கிரியைகளின் பகுதியாகப் பலவகை மந்திரங்களும், எந்திரங்களும், ஆசிரியர் மாணவர்களின் இயல்புகள், சம்பிரதாயங்கள் முதலி யனவும், சமய பேதங்களும், பிறவும் விரித்துக் கூறப்படுகின்றன. யோகம் மேற்கூறியவாறு மிக விரித்துக் கூறப்படுகின்றது. ஞானத்தின் பகுதிகளாகிய பதி, பசு, பாச இயல்பு, தத்துவங்கள், அவத்தை பேதம், இறைவன் திருக்கூத்து உண்மை முதலியன விரிக்கப்படுகின்றன.

திருமந்திர உரை:

இவ்வாறு திருமந்திரம் அனைத்துப் பொருள்களையும் கூறினும், யோகத்தையே சிறப்பாகக் கொண்ட ஒரு யோக நூலாகவே உள்ளது. இதனுடன், இந்நூல் பெரும்பாலும் சித்தர் முறையில் கருத்துக்களைப் புதிர்போல மறைபொருளாகவே கூறுகின்றது. இன்னோரன்ன காரணங்களால் இந்நூற்கு உரை காண்பது பிற நூல்கட்கு உரை காண்பதுபோல இல்லாமல், மிக அரிதாய் உள்ளது. எனினும், இதற்கும் பகுதியாகவும், முழுமையாகவும், உரைகள் வெளிவந்துள்ளன.

திருமந்திரம் 'இரும்புக் கடலை' என்று சொல்லத்தக்க வகையில்

இருப்பினும், அதற்கு ஓரளவேனும் உரை காணாவிடின், இந்த அரிய நூலால் நாம் எப்படித்தான் பயன் அடைவது? எந்த உயரிய நூலின் உரையும், அதன் முழு நிலையை எட்டி விடுவதில்லை; அதை எட்டுவதற்கு உரைகள் ஒரு துணையாகவே இருக்கும். அந்நிலை திருமந்திர உரைகளில் குறைவாய் இருக்கலாம். ஆனால், 'உரையால் பயனே இல்லை' என்று சொல்லிவிட முடியாது.

அநுபவ நூல்:

சிலர், 'திருமந்திரம் யோகநூல்; சிறந்த அருள் அநுபவநூல்; அதற்கு யார் உரை எழுதமுடியும்?' என்றுகூறி, 'அதற்கு உரை சொல்லவோ எழுதவோ புகுவதே ஒரு தவறான செயல்' என்பது போலக் கூறுவர். திருமந்திரம் ஒன்றுதான் அருள் அநுபவ நூல் என்பதில்லை. மற்றும் எத்தனையோ அநுபவ நூல்கள் உள்ளன. தேவார திருவாசகங்கள் மட்டும் என்ன? அநுபவ நூல் அல்லவா? அவற்றிற்கு உரை சொல்லாமலும், எழுதாமலுமா இருக்கின்றோம்? ஆயினும், திருமந்திர உரை பற்றி மேற்கூறியவாறு சொல்கின்றவர்கள், மற்றைய அருள் நூல்களின் உரைபற்றி அவ்வாறு கூறுவதில்லை.

எந்த அநுபவ நூற்கும் நாம் அறியப் புகுவது சொற் பொருளே. அநுபவப் பொருள் அன்று. அநுபவம் சாதனத்தில் நின்று பெற வேண்டிய ஒன்று. சொற்பொருளை அறிதல், சாதனத்திற் செல்லத் தூண்டும். ஆகவே, சொற்பொருளையே அறிய முற்படாவிடின், சாதனத்திலே செல்ல இயலாது, இது திருமந்திரத்திற்கும் ஒத்ததுதான்.

மற்றைய அருள் நூல்களில் அவற்றின் அநுபவம் நமக்கு விளங்காவிடினும், சொற்பொருள் ஓரளவேனும் விளங்கும். திருமந்திரத்தில் அதுவும் மிக அரிதாகின்றது. அதுதான் இதில் உள்ள ஓர் தனித்தன்மை. அது பற்றியே, 'மற்றைய நூல்களுக்கு உரை எழுதினாலும், திருமந்திரத்திற்கு எழுதலாகாது' என்பது போலக் கூறுதல் பொருந்துவதாகாது.

திருமந்திர மூலம்:

திருமந்திர நூலைப் பற்றிச் சொல்லுமிடத்து மற்றொன்றையும், வருத்தத்துடன் குறிப்பிட வேண்டி உள்ளது. அது, சைவர்களால் - சிறப்பாகச் சித்தாந்த சைவர்களால் - இந்நூலினது மூலம் தக்க வகையில் பாதுகாக்கப்படவில்லை என்பதே. பாடத் திரிபு, இடைச் செருகல் என்பன பண்டைப் பெருநூல்கள் பலவற்றில் சிறிது சிறிது உள்ளன எனக் கருதப்படுகின்றது. ஆயினும், திருமந்திரத்தில் அவை மிகுந்துள்ளமை வெளிப்படையாகவே

காணப்படுகின்றது. இதனைத் திருமந்திர உரையாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், பதிப்பாளர்கள் அனைவருமே ஒப்புக்கொள்கின்றார்கள்.

பாடல் தொகை:

முதலாவது திருமந்திரப் பாடல்களின் தொகையிலே மாறுபாடு. இத் தொகை 'மூவாயிரம்' என்பது, வலிய அகச்சான்று புறச்சான்றுகளால் திட்டமாக அறியப்பட்டது. எனினும் பதிப்புக் களில், முறைப்படி அமைந்தவையாக 3047 பாடல்கள் பதிப்பிக்கப்பட்டு 'அதிகப் பாடல்கள்' என்று பல பாடல்கள் காட்டப்படுகின்றன. 'முறைப்படி உள்ளவை' என்பவற்றிலே ஒன்றே பல இடங்களில் வந்த பாடல்கள் பல. இன்னும், பிற நூல்களில் தக்க உரையாசிரியர்களால் 'திருமந்திரம்' எனக் காட்டப்பட்ட பாடல்கள் பதிப்புக்களில் காணப்படவில்லை. முறைப்படி அமைந்தவையாக உள்ள பாடல்களில் காணப்படும் பாட வேறுபாடுகள் சிறிய அளவின அல்ல; மிகப் பெரிய அளவின. முழுமையான இடைச்செருகற் பாடல்களும் பல.

யாப்பு வகை:

திருமூல தேவர் தமது திருமந்திரம் முழுவதையும் ஒருவகையான யாப்பிலே அமைத்துள்ளார். அவ் யாப்பு நாற்சீரடி நான்கு கொண்டது முழுவதும் பெரும்பான்மை இயற்சீர் வெண்டளையும், சிறுபான்மை வெண்சீர் வெண்டளையும் வர, பிற தளைகளைக் கொள்ளாதொழிவது. இதனைக் 'கலி விருத்தம்' எனல் வேண்டும். இவ்வாறான ஒரு கலி விருத்தம் பிற நூல்களில் இல்லாமையும் நோக்கத்தக்கது. இந்த யாப்பு வரையறைக்கு மாறாகச் சில பாடல்கள் பதிப்புக்களில் உள்ளன. மற்றும் சொல் நடையாலும், பொருளாலும் 'நாயனார் திருமொழியல்ல' என எளிதில் அறியத்தக்க பாடல்களும் பல உள்ளன. எனவே, திருமந்திரத்தின் மூலத்தை உள்ளவாறு துணிதலே அரிதாகின்றது. எனினும், எந்த வகையிலேனும் ஒரு துணிவு கொள்ள வேண்டுவதும் இன்றியமையாததே.

வைப்பு முறை:

இனி, பாடல்களின் வைப்பு முறைகளும், இடங்களும் பிறழ்ந்து காணப்படுதலையும் அறிஞர்கள் உணர்கின்றார்கள். இன்னோரன்ன இடர்ப்பாடுகள் இருப்பினும், அரிய பெரிய நூல் - திருமுறை - ஆகிய திருமந்திரத்திற்குப் பொருள் காண முயலாதிருத்தல்

பொருந்துவதாகாது. அதனால்தான் இந்நூற்குப் பகுதியாக வும், முழுமையாகவும் பல உரைகள் வெளிவந்துள்ளன.

இவ்வுரை வரலாறு:

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீன ஞான பீடத்தில் 25ஆவது குருமகாசந்நிதானமாய் எழுந்தருளியிருந்த கயிலை ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருமுறையில் ஒரு தனிப்பட்ட ஈடுபாடு கொண்டவர்கள். தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் அனைத்தையும் அவர்கள் சென்று தரிசித்தார்கள். கயிலை யாத்திரையை மேற்கொண்டு கயிலாய தரிசனம் செய்து, 'கயிலைக் குருமணி' என்று அனைவராலும் போற்றப் பெற்றார்கள். அவர்கள், திருமுறை பன்னிரண்டும் தனித்தனிப் புத்தகமாகச் சிறந்த குறிப்புரை, ஆய்வுரைகளுடன் வெளிவந்து பலர்க்கும் பயன் தரல் வேண்டும் எனத் திருவுளம் பற்றினார்கள். அதனால் அவர்கள் காலத்திலே ஒன்பது திருமுறைகள் அவ்வண்ணமே தருமை ஆதீன வெளியீடாக வெளிவந்தன. அவைகளில் ஆறாந் திருமுறை முதலாக நான்கு திருமுறைகளுக்குக் குறிப்பு எழுதும் அரிய வாய்ப்பினை அடியேனுக்கு அளித்தருளிய அவர்களது அருட்பெருக்கினை என்றும் நினைந்து நினைந்து போற்றும் கடப்பாடு உடையேன்.

திருமந்திரத்தின் மூவாயிரம் பாடல்களும் 'பத்தாம் திருமுறை' என்று ஒரு திருமுறையாகவே இருப்பினும், அன்பர்கள் எளிதில் எடுத்துப் படித்துப் பயனடைவதற்கு ஏற்புடையதாக, மூன்று தந்திரம் - ஏறக்குறைய ஓர் ஆயிரம் பாடல் - ஒரு பகுதியாக வெளிவரத் திருவுளம் பற்றி, அதற்குக் குறிப்பெழுதும் பணியினையும் அடியேனுக்கே அவர்கள் பணித்தருளி, 1970ஆம் ஆண்டில் பாயிரப் பகுதியையே ஒரு வெளியீடாகச் செய்வித்தார்கள். ஆயினும், அப்பாயிரம் உட்பட முதற்பகுதி முடிவதற்கு முன்னே அவர்கள் காசிக்கு எழுந்தருளி, அத்தலத்திலே கயிலைப் பெருமானது கழற்போதினை எய்தினார்கள்.

அவர்களது அருள்வழித் தோன்றலாய் ஆதீன ஞான பீடத்து அமர்ந்து இதுபொழுது அருளாட்சி செலுத்தி வரும் 26ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அத் திருமந்திரப் பணியை அடியேன் தொடர்ந்து செய்யத் திருவுளம் பாலித்தார்கள். குருவருளையும், திருவருளையும் துணைக்கொண்டு அப்பணியை இயன்ற அளவில் முதற் பகுதிக்குச் செய்துள்ளேன்.

உரை அமைப்பு:

மந்திரங்களின் திரண்ட பொருள், யாவரும் எளிதில் உணரும் வண்ணம் தெளிவுரையாக முதலிலும், பின் அப்பொருள், மூலத்தில் அமைந்துள்ளமையை அறிதற்கு வேண்டிய குறிப்புக்கள் குறிப்புரை யாகவும் இதன்கண் தரப்பட்டுள்ளன. மூல பாடம், மந்திரங்களின் முறைவைப்பு ஆகியவைகள் பொருள் அமைதி முதலிய பல துணைகள் பற்றி ஏற்ற பெற்றியால் கொள்ளப்பட்டன. இவை பற்றிக் கருத்து வேறுபாடுகள் தோன்றுவது தவிர்க்க முடியாதது. இவ் விடங்களில், ஏடு பெயர்த்தெழுதுதல், அச்சிடுதல் முதலிய காலங்களில் நேர்ந்த எழுத்துப் பிழைகள் எனத் தெளிவாகத் தோன்றியவை தவிர ஏனையவை, முன்னைப் பதிப்புக்களில் உள்ளவாறு காட்டப்பட்டுள்ளன. மந்திரங்களின் பொருள் தொடர்பான பிற செய்திகளும் சில இடங்களில் தந்துரைக்கப் பட்டிருத்தல் பலர்க்குப் பயன்படுவதாகலாம்.

இவ்வகையில் பத்தாம் திருமுறையாகிய திருமந்திரத்தின் முதற் பகுதி, தருமை ஆதீனம் 26ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருவுளப் பாங்கின் வண்ணம், ஆதீன முதற்குரவர் ஸ்ரீ குருஞான சம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகளது ஆனந்த ஆண்டுக் குருபூஜை விழாவின் அணி மலராக இதுபொழுது வெளிவருகின்றது.

நன்றி நவிலல்:

இப்பகுதிக்குத் தமிழ்நாடு அரசு திட்டக்குழு, பொருளாதார ஆலோசகர், டாக்டர். திரு. பா. நடராசன், எம்.ஏ., டி.லிட். அவர்கள் மதிப்புரை வழங்கியுள்ளார்கள். இவர்கள் திருமந்திர ஆராய்ச்சியை மேற்கொண்டு, இந்நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டிருப்பவர்கள்.

தருமையாதீனத் தமிழ்ப்புலவரும், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களால் ''சித்தாந்தக் கலைச் செல்வர்'' என்னும் பட்டம் வழங்கிச் சிறப்பிக்கப் பெற்றவரும் திருவாவடுதுறை ஆதீன வித்துவானும் ஆகிய திரு. க. வச்சிரவேல் முதலியார் பி.ஏ., எல்.டி., அவர்கள் இதற்கு விரிவானதோர் ஆராய்ச்சி முன்னுரை அளித்துள்ளார்கள். சைவசித்தாந்தத்தில் தனிப்பெரும்புலமை வாய்ந்த இவர்களது முன்னுரை, இவ் வெளியீட்டின் பொருள் நிலை முழுதும் யாவரும் எளிதில் உணர்ந்து கொள்ளும் வண்ணம் இன்றியமையாத

மூலங்களுடன் அடைவுபட உணர்த்துவதாய் உள்ளது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் ஆராய்ச்சித்துறை வித்துவான். திரு. க. வெள்ளைவாரணனார் அவர்கள் திருமூலரது வரலாற்றை ஆராய்ச்சிக் குறிப்புடன் எழுதியுள்ளார்கள். இயல்பாகவே மதிநுட்பம் நூலோடு உடையராய்ப் பன்னிரு திருமுறைகளைப் பற்றியும் சிறந்த வகையில் ஆய்வு செய்து நூலாக வெளியிட்டுள்ள இவர்கள், இவ்வரலாற்று ஆராய்ச்சியையும் இவ்வெளியீட்டிற்கு அளித்துள்ளார்கள். இவர்கள் அனைவர்க்கும் ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் திருவருளும், ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தின் அருளாசியும், எல்லா நலங்களையும் இனிது வழங்குவனவாகும்.

தருமை ஆதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர், வித்துவான் திரு. இரா. செல்வக்கணபதி சொல்லதிகாரச் சுருக்கத்தைத் தொகுத்து அளித்துள்ளார். ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப் பள்ளித் தமிழ் ஆசிரியர், வித்துவான் கா. ம. கண்ணப்பன் இவ்வெளியீட்டில் உள்ள பாட்டுகளின் முதல் குறிப்பு அகராதியைத் தொகுத்து அளித்துள்ளார். ஆதீனப் பல்கலைக் கல்லூரிப் பொறுப்பு முதல்வர், திருநெறிச்செம்மல், வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகரும், பேராசிரியர், சிரோமணி, வித்துவான் திரு. வி. சபேசனாரும் இவ்வெளியீடு நன்கு வெளிவருவதற்குப் பிழை திருத்தம் முதலியவைகளைச் செய்து உடனிருந்து உதவினார்கள். 'ஞானசம்பந்தம்' அச்சகப் பணியாளர்கள் பலரும் இந்நூற் பதிப்பு நன்கு அமையப் பணியாற்றியுள்ளார்கள். இவர்களுக்கும் செந்தமிழ்ச் சொக்கர் திருவருளும் தருமைக் குருமணியின் தண்ணருள் ஆசியும் உரியன.

மூவாயிரம் ஆண்டு சிவயோகத்திலிருந்து ஆண்டிற்கு ஒரு மந்திரமாகத் திருமூலதேவர் அருளிச்செய்த திருமந்திரத்தின் முதற்பகுதியாகிய இதனைப் பலரும் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்திற்கு நன்றி செலுத்தும் கடப்பாட்டுடன் பெற்றுக் கற்று உணர்ந்து, நற்பயன் பலவும் நனிமிகப்பெற்று உய்வார்களாக.

இங்ஙனம்
அடியேன்,

தருமபுரம்
10. 06. 1974.

சி. அருணைவடிவேல்
தருமையாதீனப் புலவர்.

உ

சிவமயம்

முதல் பதிப்பின் முன்னுரை

திருச்சிற்றம்பலம்

திருமூலர் என்னும் தவராச யோகியார் அருளிச்செய்த திருமந்திர மாலையாகிய தமிழாகமம் சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் பத்தாம் திருமுறையாக வைத்துப் போற்றப் பெறுவது. இது தேவார காலத்திற்கு முற்பட்டது; பிற்காலத்து இறை உயிர் தளை என்னும் மேலான அடிப்படைப் பொருள்களை வரையறை வகையான் உணர்த்த எழுந்த அருள் ஞான நூல்களுக்கு மூலமாகவுந் தோன்றுகிறது.

கடவுள்நெறி நின்று ஒழுகி உயர்வற உயர்நலன் பெறக் கருதுவோர்க்கு இன்றியமையாது வேண்டப்படுவன - ஒழுக்க நெறி விதிவிலக்கு, இறைவன் பொருள் சேர் புகழுரைக்கும் போற்றருள் மாலைகள், அடிசார்ந்தார் வரலாறு, அடிப்படைப் பொருட்பெற்றி என்பவை. இவற்றுள் முதலும் முடிவுமாயுள்ளவற்றை விளங்கக்கூறி ஏனை இரண்டனையும் ஏற்ற பெற்றி அடங்கக்கொண்டு நிலவும் தனிப்பெரு வீட்டியல் நூல் இது; தந்திரம் எனப்படும் பெரும் பகுப்புக்கள் ஒன்பதும், தன்னை ஓதி உணரப்புகுவார் முதற்கண் அறியவேண்டிய பருப்பொருள்களை உணர்த்தும் பாயிர வியலும் உடையது. இவற்றுள் பாயிரவியலும் முதன் மூன்று தந்திரங்களும் இப்பதிப்பில் தெளிவுரை குறிப்புரைகளுடன் வெளிவருகின்றன.

இதனைச் சைவவுலகும் தமிழுலகும் பெற்றுப் பயன் கொள்ளுமாறு திருவுளம்பற்றி வெளியீடு செய்வது, சிவநெறியின் புண்ணியக்கண் இரண்டெனச் சோணாட்டில் இறைவன் திருவருளால் நிறுவப் பெற்று நிலவும் சைவ ஆதீனங்களுள் ஒன்றாகிய தருமை ஆதீனமாகும். இவ்வாறே இதற்குமுன் முதல் ஒன்பது சைவத் திருமுறைகளையும், வேறுபல அரிய உயரிய வெளியீடுகளையும் ஒழிவின்றிச் செய்து பொதுமக்களது போற்றுதலையும் பாராட்டினையும் பெற்று வருவது இத்தெய்வ ஆதீனம் என்பது நினைவு கூர்ந்து நன்றி தெரிவித்தற்கு உரியது.

உரையைத் தம் கல்வி, கேள்வி, ஆய்வு, நுண்ணுணர்வு

என்பவற்றின் பயனாக எழுதியுள்ளவர் இவ்வாதீனப் புலவர், மகாவித்துவான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் ஆவர். இவர்தம் நற்பண்புகளைத் தமிழ்உலகம் நன்கு அறியும். உரை நூலின் பெருமைக்குத் தக்கபடி செந்தமிழ்த் திறம் திட்பம் நுட்பம் செறிந்து பரிமேலழகர், மாதவச் சிவஞான சுவாமிகள் என்போரை நினைவூட்டும்வகையில் எண்ணி எழுதப்பட்டுள்ளது. இந்நலன்கள் படித்து இன்புறத்தக்கவை. ஆங்காங்கு வரும் இலக்கணக் குறிப்புக் களும், தமிழாக்கச் சொற்களும் பிறவும் தமிழ் ஆய்வார்க்கு நல் விருந்து ஆகும். எடுத்துக்காட்டாகச் சில உரைப்பகுதிகள் இங்கே தரப்படுகின்றன.

1. மூன்றாம் மந்திரம், 'நக்கனென் றேத்திடும் நம்பனைப் - புக்குநின்றுன்னியான் போற்றுகின்றேனே' (தி.10 பாயிரம் பா.3) என்பதன் குறிப்புரை ''திகம்பரன் என்னும் பொருட்டாகிய நக்கன் என்பது வியாபகனாதலைக் குறித்து ஏனையோரால் ஏத்தப்படுதற் குரிய இயைபுணர்த்தி நின்றது. நம்பன் - விரும்புதற்குரியவன், பழையோன் என்றும் ஆம்''

புக்கு நின்று என்றது அதீத நிலையையும், உன்னி என்றது துரிய நிலையையும் குறித்தவாறு. உன்னுதல் அன்றிப் புகாதே நிற்கும் துரிய நிலையிலே நிற்பின் சிவானந்தத்தை உணர்தல் கூடாமையால், புக்கு நின்று என்றும், புக்கு உன்னுதல் ஒழித்த அதீத நிலையிலே நிற்பின் மனவாக்கினால் போற்றுதல் கூடாமையால், உன்னி என்றும் கூறினார். இதனால், தமது அநுபவ நிலையை உணர்த்திய வாறாயிற்று.''

2. 'புரையற்ற பாலினுள் ... ... கலந்த சத்தாமே' (தி.10 பா.133) என்னும் மந்திரத்தின் உரை:

''குற்றமற்ற பாலில் உள்ள நெய் அப்பாலினுள் வேற்றுமை யின்றிக் கலந்து நிற்றல்போல, ஞானாசிரியன் அறிவுறுத்த சொல்லை அலைவற்ற உள்ளத்தில் வேற்றுமையற்றுக் கலந்து நிற்குமாறு உணர்ந்து அப்பொருளில் அழுந்தி நிற்பவர், தம் உடம்பு இங்கு வீழ்ந்த பின்னர் அவரது ஆன்மா, தன் இயற்கை வியாபகத்தைப் பெற்று என்றும் வேற்றுமையின்றிக் கலந்து நிற்கின்ற மெய்ப்பொருளேயாய் விடும்''

''குற்றம் என்றது வேற்றுப் பொருளாகிய பிரையை ... ... சத்து - மெய்ப்பொருள், சிவம். இக்கலப்பு முன்பே உள்ளதன்றிப் புதுவதன்றாகலின், அஃதியற்கையாய் விடும் என்றற்குக் 'கலந்த

சத்தாமே' என்றார். 'அன்னிய மின்மையின் அரன் கழல் செலுமே' என்றார் மெய்கண்ட தேவரும் (*சிவஞானபோதம்*). இவ்வாறு சிந்தித்து உரை எழுதப் பட்டமை பாராட்டிற்கு உரியது. 'தங்கிமிகாமை வைத்தான் தமிழ்ச் சாத்திரம்' (பா.26) என்றதன் தாற்பரியத்தைப் பின்வருமாறு கொள்வது ஆராயத்தக்கது. 'பலதலைப்பட்ட உணர்வுடையராய்ப் பரந்து சென்று ஆராயும் உலகர் பொருட்டு ஆரிய மொழியும், அவ்வாறு இன்றி ஒரு தலைப்பட அமைந்த உணர்வுடையராய் ஒழுக்கத்தில் நின்று பயன் பெற விரும்பும் நல்லோர் பொருட்டுத் தமிழ் மொழியுமாக இரு மொழியை இறைவன் சொல்லியருளினான்'' (பா 109இன் உரை)

இரண்டாந் தந்திரத்தில் புராண வரலாறுகள் கூறும் பகுதிக்கு உள்ள உரை அதன் அருமையைத் தெளிவிக்கும்.

இனி இவ்வெளியீட்டில் உள்ள திருமந்திரப் பகுதிகளின் பொருள் நிலையை முன்னர் உளங்கொள்ளுதல் பயன் உடைத்தாம்.

முதற்கண் காப்புச் செய்யுள் உள்ளது. சிலை முதலியவற்றில் செய்து மாடத்துள் வைத்து வழிபடுவதுபோல, உணர்வைக் கொண்டு ஐந்து கரமும் ஆனை முகமும் ஒற்றைக்கொம்பும் உடைய மூத்த பிள்ளையாருடைய திருவுருவத்தை அறிவில் பிரதிட்டை செய்து வழிபடச் செய்கிறது செய்யுள்.

பின்னர் வருவது கடவுள் வாழ்த்து. சமய ஒழுக்கம் ஞானநெறி எனவும், ஒழுக்கநெறி (கிரியை) எனவும் இரண்டாய் அடங்கும். ஞானநெறி தத்துவக்கொள்கை எனப்படும்; சமய ஒழுக்கமே கிரியை ஆகும். பிறபல சமயங்களில் தத்துவக் கொள்கையில் முடித்துக் கூறப்படும் பொருள் முதற்பொருள் (முழுமுதல்) எனவும், சமய ஒழுக்கத்திற்குரிய முதல்வன் தெய்வம் (கடவுள்) எனவும் வேறுவேறாகக் கருதப்படுதல் காணப்படுகின்றது. ஆயின் சித்தாந்த சைவத்தில் ஞானநெறியில் கொள்ளப்படும் முதற்பொருளும், ஞானம் கிடைத்தற்கு நிமித்தமாகிய சமயநெறியில் கொள்ளப்படும் வழிபடு தெய்வமும் ஒன்றேயன்றி வேறு வேறு அல்ல; இது கடவுள் வாழ்த்து என்னும் அதிகாரத்தின் கருப்பொருள் ஆகும். ஆதலால், பின்வருமாறு தொடங்குகின்றது இவ்வதிகாரம்:-

நம் அறிவிற்கு எட்டாத நிலையில் உள்ள சிவபிரான் வேதங்களால் ஒன்று எனக்குறிக்கப்படும் பரம்பொருளே; அவன்தன் அருளோடு கூடிநின்று சிவம், சத்தி (பதி, பத்நீ) என இரண்டும் ஆவன்; இலயம், போகம், அதிகாரம்

என்னும் நிலைகளில் (அயன், அரி, அரன் என்னும் மூர்த்திகளில்) மூன்றாய் நின்றனன்; அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களை உணர்ந்தான் (உணர்ந்து உணர்த்தினான்); அந்நிலையில் ஐம்பொறிகளை வென்ற அருந்தவத்தோனாய் விளங்கினன்; வன்னம், பதம், மந்திரம், தத்துவம், புவனம், கலை என்னும் ஆறு வகையாக விரிந்தவனும் அவனே; அண்டத்தில் ஏழுலகையும் பிண்டத்தில் மூலம் முதல் முடிவரை (ஆறு ஆதாரம் சகச்சிராரம்) உள்ள ஏழு நிலங்களையும் கடந்து மேற்சென்றவனும் அவனே; ஐம்பெரும்பூதம் ஞாயிறு, திங்கள் உயிர் என்னும் எட்டனையும் தன் வடிவாக உணர்ந்து இருந்தனன்; அவனை உணர்ந்து எட்டு.

தத்தமக்கு இனிய உயிரில் உயிர்க்கு உயிராய் நிலை பெற்றோனும், உலகிற்கும் உறுதி பயக்கும் அம்மைக்கும் நாதனும், தென்றிசைத் தலைவனாகிய கூற்றுவனைக் குமைத்தோனும் ஆகிய அம்முதல்வனைப் போற்றி செய்து அவன் பொருள்சேர் புகழ் கூறு கின்றேன். முதல்வன் தான் கெடுதலின்றி உலகுயிர்களின் வேற்றுமை தோன்றாதபடி கலந்து நின்றவன். தேவர்கள் நக்கன் (உலக உருவினன்) என்று ஏத்தப்படுபவன். அடுத்து நின்றோரும் இன்ன தன்மையன் என்று அறியவொண்ணாத மேலோன். இவனைத் திரு முன் புகுந்து நின்று நினைந்து போற்று கின்றேன். சிவனோடு ஒக்கும் தெய்வந் தேடினுமில்லை; அவனோடு ஒப்பார் இங்கு யாவருமில்லை; அவன் பொன்னார் மேனியும் அங்கியை ஒத்து மின்னும் சடை முடியும் உடையவனாய் நெஞ்சக் கமலத்தில் தியானிக்கப் படுபவன். அவனே எல்லாத் தேவருமாய் நின்று அருள் புரிபவன்; அவனை முதல்வனாகக் கொள்ளாத ஒரு தவமும் இல்லை; மூவர் செயலும் அவன் ஆணையின்வழி நடப்பனவே; அவன் துணையின்றி வீடு சேர்தல் இல்லை. அவன் தன் ஆணைவழி நில்லாதாரைத் தெறுதலினும் பாச மாகிய அழுக்கைப் போக்குவதிலும் தீயினும் வெய்யன். தன் ஆணை வழி நிற்போர்க்குக் கருணைசெய்யும் போது நீரினும் குளிர்ச்சியை உடையவன் (உருத்திரசிவன்). இங்ஙனம் ஆயினும் அவனை அறிந்து ஒழுகுவார் இலர். அவன்தன் அன்பர்க்குக் குழந்தைபோல் உடன் பழகுபவன்; தாய்போல நன்மையை விளைப்பவன். பின்

தாழ்சடையன்; எம்மால் தொழப்படும் அவன் அட்ட மூர்த்தியாய் உளன். அவனால் தொழப்படுவார் ஒருவரும் இல்லை.

கடவுள் வாழ்த்து இவ்வாறு சென்று, பின்வருமாறு முடிகின்றது.

அடியார்கள் துதிக்கும் தேவதேவனை முடியால் வணங்கி, அகத்தே நினைந்து, இம்மை மறுமை நலன்களைக் கொடுக்கும் மேலவர்க்கும் மேலோன், எனக்குத் தந்தை, ஒளிவளர் விளக்கு எனச் சொல்லி அவனையே விரும்பி நின்றேன். பதி பசு பாசங்கட்குத் தலைவனை எண்ணி, பசுத்துவத்தினும் பாசத்தினும் நீங்கித் திருவருளில் அடங்க வல்லார்க்குப் பசுத்துவ பாசங்களால் வரும் பிறவிக் கடலை நீந்தி, அக்குற்றங்களின் வாதனையைக் கடந்து, அவன் திருவடியாகிய கரையை அடைதல் கூடும். என் முடியிலும் சிந்தையிலும் முதல்வன் திருவடியை நிறுத்தி எம்பிரான் என்று பாடுவன்; பன்மலர்தூவிப் பணிந்து ஆனந்தக் கூத்தாடுவேன்; ஆடி தேவதேவன் என்று சிந்திப்பேன். செருக்கு நீங்கி அவனை யான் அறியும் நெறி இதுவே.

அடுத்து வருவது வேதச் சிறப்பு என்னும் அதிகாரம்.

வேதத்தை விட்ட அறம் இல்லை; வேதத்தில்
ஓதத் தகும் அறம் எல்லாம் உள தர்க்க
வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற
வேதத்தை ஓதியே வீடுபெற் றார்களே. -தி.10 பா.96

என வேதத்தின் சிறப்பை அறுதியிட்டுக் கூறுகிறார் திருமூலர். ஒருவன் வேதம் ஓதுதல் பற்றியே வேதியன் எனப்படான். அதன் பொருளை விளங்கிட உணர்ந்து ஒழுகின் அவன் வேதா ஆவன். வேதத்தை உரைத்தல் வேள்வி முதலியவற்றைச் செய்யும் முறையை அறியவும் மெய்ப்பொருளைக் காணவுமே ஆம். வேதம் இருக்கு வடிவ மந்திரங்களையும் உள்நின்று உருக்கும் உணர்வு வடிவச் சாமன் களையும், செய்முறையைச் சொல்லும் விதிகளையும் உடையது. அஃது உலகத்தை நீற்றும் இயல்புள்ள நெற்றிக்கண்ணன் இயல்பை விளக்குவதும் ஆகும். வேதியர்களுள் வேதத்துட் கூறிய விரதங்களை அநுட்டிக்க மாட்டாராய் வேறு பயன்களைப் பெருக்க முயன்று இகலுகின்றாரும் உளர்.

பின் ஆகமச் சிறப்புக் கூறப்படுகின்றது. நீலமேனி வாலிழை

பாகத்தன் உரைத்த ஆகமங்கள் இருபத்தெட்டு உள்ளன. அவற்றின் பொருள் நிச்சயம் உணர்தல் அரிது. அவற்றுள் ஒன்பது ஆகமங்களைத் திருநந்திதேவர் பெற்று எனக்கு நல்கினார். அவற்றின் பிழிவை இந்நூலில் உணர்த்துகிறேன். இஃது இப்பகுதியின் பொருட் சுருக்கம்.

இப்பிரிவில் மொழிகளைப் பற்றிய கருத்தும் வருகின்றது. பண்டிதர் எனப்படுவோர் பதினெண் நிலத்து மொழியும் கற்று அவ்வம் மொழியினர் கூறும் கருத்தை அறிய வல்லவரே ஆவர்; பதினெண் மொழியும் உலக முதல்வன் தன்னாற் படைக்கப்பட்ட உயிர்கள் அறத்தை உணர்தற்கு வாயிலாக அமைந்தனவேயாம். இம்மொழி களுள் இரண்டு மொழிகள் மிகப் பழையன. மழை, வெயில், பனி என்பவை மிக்குத் தோன்றும் பருவங்கள் முறையாக மாறிவருதல் நின்று, நீர்நிலைகளும் வற்றி எல்லாஞ் சுருங்கி நிற்கும் ஊழிக்காலத்தில் இறைவன் ஆரியத்தையும் தமிழையும் ஒருகாலத்து அம்மைக்குச் சொல்லி அருள் புரிந்தான்.

இம்மொழிகளில் உயிர்களை மாப்பேரூழியில் ஒடுக்கி நின்றவன் அவற்றை உலகமாகிய வனத்தில் அவிழ்த்து விடும் படைப் பும், அவற்றை மீளத்தன்கண் ஒடுங்கி இளைப்பாறச் செய்யும் ஒடுக் கமும், படைப்புக் காலத்தில் அவ்வுயிர்கள் சூக்கும உடலிற் கட்டுப் பட்டு இறந்தும் பிறந்தும் வருமாறும் உணர்த்தப்படுகின்றன; இங்ஙனம் உணர்த்தும் முதல்வன் இயல்பையும் அவற்றால் உணர்தல் கூடும்.

பின் திருமூலர் தமது குருபாரம்பரியம் திருக்கயிலையினின்று தொடங்கி உலகில் நிலவுதலையும் தம் வரலாற்றையும் கூறுகின்றார். தாம் திருவாவடுதுறையில் சிவபோதி நிழலில் எண்ணில் காலம் தவமிருந்து மறைப்பொருள் முற்றும் உணர்ந்து வெளிப்படுத்துகிறார். இந்நூலில் ‘‘நான் சிவயோகத்திலிருந்து பெற்ற இன்பத்தை உலக மக்கள் பெறுவார்களாக ’’ என வாழ்த்தித் தொடங்குகின்றார்.

நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்;
தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே. -தி.10 பாயி. பா.22

பரவெளியைச் சார்பாகக் கொண்டுள்ள மறைப்பொருளைச் சொற் செய்து வெளிப்படுப்பின், அஃது உடம்பைச் சார்ந்துள்ள உயிரின் உணர்விற் பொருந்தும் திருமந்திரமாம்; அதனை ஒருவன்தன் அறிவிற்குத் துணையாய்ப் பற்றிப் பயிலும்போது,

உணர்வில் ஒக்க நிற்கும் முதற்பொருள் அவ்வுணர்வில் தயிரில் நெய்போல விளங்கித் தோன்றும்; அதனால் அவன் முதற் பொருளைத் தலைப்படும்.

பிறப்பில் பெருமானைத் தேவர்கள் சிறப்பாகக் கைகூப்பித் தொழுது அவனை மறவாது இருக்கின்றனர்; மக்கள் தம் நெஞ்சத்து முதல்வனைக் கூடிநின்று இத்திருமந்திரமாலையை ஓதுதல் பொருத்தமே. உடம்பைப் படைத்தளித்த இறைவன் அஃது அழியா திருத்தற் பொருட்டு அதன்கண் அங்கியை மிகாதபடி அமைத்தான்; இவ்வாறே உலகேழையும் (ஐம்பூதங்கள் ஒன்றோடொன்று) இகலாத படி அமைத்தான். இத்தமிழ்ச் சாத்திரத்தையும் தங்கி மிகாதபடி வைத்தான். அதன் கண் பொருளும் வேண்டிய அளவிற்கு மேல் விஞ்சாதபடி அமைத்தான் முதல்வன். திருமாலும் அயனும் தேடிக் காணமாட்டாத கடவுள் விடை ஊர்தியும், கையில் மான் மழுவும் கொண்ட தற்பரன்; அவன் தன்னால் சித்திரிக்கப்பெற்ற சராசரமாகிய உலகினின்று நீங்குதலையும் அருளிக் குருவாக எழுந்தருளி என்முடிமேல் திருவடியினையும் சூட்டித் தலையளி செய்தான். அவ்வருளாற்றலால் இத்திருமந்திர நூலின் கண் ஞேயமாகிய முதற்பொருளையும், அதனைக் காட்டும் சிவஞானத்தையும், காட்டக் காணும் ஆன்மாவையும் மாயையினையும், சுத்த மாயையை அதிட்டிக்கும் பராசத்தியின் பேதங்களையும், அவற்றைப் பிரியாது நிற்கும் முதற்பொருளையும், மாற்றம் மனங்கடந்த மூலப் பொருளையும் முற்றாக விளக்கியிருக்கின்றேன். ஆனந்தக் கூத்தன் ஆணையால் திருக்கயிலை வழியில் வந்தேன்.

இவ்வாறு மேலும் சில சொல்லி முடிக்கின்றார் முனிவர் தம் வரலாற்றை.

நந்தி அருளாலே மூலனை நாடிப்பின்
நந்தி அருளாலே சதாசிவன் ஆயினேன்
நந்தி அருளால் மெய்ஞ் ஞானத்துள் நண்ணினேன்
நந்தி அருளாலே நானிருந் தேனே. -தி.10 பா.29

மூலனை நாடுதல் - பசுமேய்த்த மூலன் உடலிற்புகுதல்; சதாசிவன் ஆதல் - கலைஞானம் உணர்தல்; மெய்ஞ்ஞானத்துள் நண்ணுதல் - துரிய அருணிலையைப் பெறுதல்; இருத்தல் - அதீத வாழ்வில் தங்குதல்.

பின் அவையடக்கம் கூறப்படுகிறது:

யாரும் அறியாத பெருமையும், அகல நீளமும் கொண்ட அண்ணலாகிய பெருஞ்சுடரின் மூலத்தை யான் அறிந்தேன் என்று சொல்லக்கூடுமா? கூடாது. அவ்வறி வொண்ணா நிலையைத்தான் விளக்கிச் சொல்லுகிறேன். சிந்திப்பவர் அகத்தே வீணையில் எழும் இன்னிசை போல் எழும் ஈசனும் உலகம் படைத்த அயனால் தியானிக்கப் படுபவனுமாகிய முதல்வனை நிலைபெற்ற மெய்ம் மொழி எனப்படும் மறைமொழி வாயிலாகச் சிறிது உணர்தலும் கூடும். மெய்யுணர்வு உரைக்கப்பட்ட இடம் திருக்கயிலைத் தாழ்வரை. ஆங்கு வீடுபேறு கருதியிருந்த முனிவரும் தேவரும் தம்மிற் கூடியும் தனித்திருந்தும் அன்பொடு துதிசெய்வர். பிறர் இதன் பயனை அறியமாட்டார்கள்.

அடுத்து வரும் தலைப்புத் திருமந்திரத்தின் தொகைச் சிறப்பு:-

மூலன் சொன்ன மூவாயிரந் தமிழ்ச் செய்யுட்களும் திருநந்தி தேவர் அருளாணை பற்றி உலகம் மேலான உண்மையை அறிதற் பொருட்டு இயற்றப்பட்டவை; காலையில் எழுந்து பாட்டின் கருத்தை அறிந்துகொண்டு ஓதிவரின், ஓதுவோர் உலக முதல்வனை அணைவர். இம் மூவாயிரத்தில் முடிந்த நிலையாகிய வீடு பேற்றுக்குரிய சாதனம் கூறப்பட்டுள்ளது. இவற்றை அமைத்த முறையிலே பகுதிபகுதியாக ஓதுதல் வேண்டும்; முன்னர் உலக நலன் தருவனவாக, இம்மூவாயிரம் பொதுப் பொருள் வெளிப்படத் தோன்றும்; இவையே பயிலப் பயில இதன் முடிநிலைப் பயனாக வைக்கப்பட்ட சிறப்பை (வீடுபேற்றை)த் தரும்.

இதன்பின் உள்ள தலைப்புக் குருமட வரலாறு;-

திருவருளால் உலகில் ஏழு மடங்கள் ஞானநெறியை உணர்த்த உள்ளன. அவற்றுள் முற்படத் தோன்றியது திருமூலர் மடம்; அதற்கு உபதேசநூல் அழகிய ஆகமமாகிய ஒன்பது தந்திரங்களும் அவற்றின் உள்ளுறுப்புக்களாகிய மூவாயிரம் மந்திரங்களும் ஆகும். மேற்கூறிய மடங்களின் பிரதிட்டாச்சாரியர்களாய்ப் பசுத்துவம் நீங்கிச் சிவத்துவம் விளங்கப் பெற்றோர் இறைவனோடு ஒன்றிக் கலந்தருளிய காலாங்கர், அவர்பால் அருள்பெற்ற அகோரர், உறுதியைத் தரும் மாளிகைத் தேவர், நாதாந்தர், ஞானத்தைக் கொண்ட

பரமானந்தர், போகதேவர், உலகில் விளக்கம் உள்ள திருமூலர் என்போர் ஆவர்.

இறுதியாக உள்ள தலைப்புத் திரிமூர்த்திகளின் சேட்டகனிட்ட முறைமை:

இருவினைகளைக் கடந்தவனே முதல்வன்; அவன் பல அவதாரங்களாகவும் பலரை அவர்தம் புண்ணியப் பயனாய் அதிட்டித்தும் தன்தொழில் நடத்துவன். அதிட்டான பக்கமாகக் கொள்ளும்போது அயனும் மாலும் நமக்கு வேறானவர் அல்லர்; புராணங்களிற் கூறப்படும் மும்மூர்த்திகள் சமமானவரே; ஆயினும், அவருள் ஒருவரை உயர்த்தியும் பிறரைத் தாழ்த்தியும் பிணங்குதல் அறியாமையின் விளைவு. முதற்பொருள் மூவரையுங் கடந்த சக்தியோடு கூடிய சிவமேயாம் என்பது இப்பகுதியின் தாற்பரியம்.

இதுவரையில் பாயிரத்தின் பொருணிலை கருதப்பட்டது.

இனி நூலிற்குள் சென்று வெளியிடப்படும் மூன்று தந்திரங் களின் பொருணிலையைச் சுருங்கக் காண்போம்.

முதல் தந்திரத்தில் ஒழுக்கநெறி பற்றிய விதி விலக்குகள் கொடுக்கப்படுகின்றன. பாவங்களைச் செய்யாது நீங்கி அறங்களைச் செய்து வருவோரே மனத்தூய்மை பெற்றுச் சிவஞானம் விளங்கப் பெறுவர். முதற்கண் வருவது நூலின் முதன்மையான கருத்தாகிய உபதேசம் என்பது. இறைவனே ஒருவன் அறிவில் இருவினையொப்பு நிகழும்போது அருட்குருவாய்த் தோன்றித் திருவடிதீக்கைசெய்து, மாணாக்கன் உள்ளத்திற்புகுந்து அன்பை வளர்த்து இன்ப அறிவாகிய அகக்கண்ணைத் திறந்து, அவன் அறிவை மறைத்திருந்த களிம்புபோன்ற மூலமலத்தை நீக்கியருளுகின்றான்.

உயிர் பளிங்கு போன்றது. அதில் மூலமல அழுக்குப் படிந்துள்ளது. அந்த அழுக்கைப் போக்கினான் அருட்குரு. எப்படி யென்றால் திருவருட் கண்ணைத் திறப்பித்து, ஞாயிற்றின் ஒளி போன்ற தன் ஒளியைக் காட்டிக் களிம்பை அறுத்தான். அவ்வொளி நிலை பெறும்படி, பதியாகிய முதல்வன் பவளத்தைப் பளிங்கிற் பதிப்பது போல அச்செவ்வொளியைப் பதித்து வைத்து விட்டான். நூல்களாற் சொல்லப்படுவன பதி பசு பாசம் (இறை உயிர்தளை) என்னும் மூன்று பொருள்கள். இறை ஒரு காலத்துத் தோன்றாத,

என்றும் உள்ள முதற்பொருள் என்பது எல்லார்க்கும் உடன்பாடு; அதுபோல, மற்ற பசு பாசங்களும் அநாதியாக உள்ள நித்தியப் பொருள்களே ஆகும். ஆனால், பசு தன்னைப் பாசம் தடுத்து நிற்றலால் பதியை அணுகாது. அதன் பக்குவம் உணர்ந்து, பதி அதனை அணுகினால் அதைக் கட்டுப் படுத்தும் பாசம் நிற்கமாட்டா; பசுவும் பதியினை அணைந்துவிடும். பாசம் - ஆணவம், கன்மம், மாயை என மூன்று வகைப்படும். பலவகைக் கருத்துக்களை உதாரணங்களைக் கொண்டு விளக்கி, திருவடிப் பெருமை, சற்குருவை வழிபடுவதால் ஞானம் விளங்கி நிலைபெறும் என்னும் கருத்து முதலியவற்றைக் கூறி,

போதந் தருமெங்கள் புண்ணிப நந்தியைப்
போதந் தனில்வைத்துப் புண்ணிய ராயினார்
நாதன் நடத்தால் நயனங் களிகூர
வேதந் துதித்திடப் போயடைந் தார்விண்ணே. -தி.10 பா.141

என இப்பகுதியை முடிக்கின்றார் திருமூலர்.

உபதேசம் என்னும் அதிகாரத்திற்குப்பின் வரும் நான்கு அதிகாரங்கள், ஒழுக்க நெறியைப் பின்பற்றுவதற்குக் காரணமாக முன் உணர வேண்டிய உலகப் பொருள்களின் நிலையாமையைத் தெரிவிக்கின்றன. நிலையாமையை உணர்ந்தபோதுதான் ஒருவனது அறிவு அறநெறியை நாடும்.

நம் உடம்பு இருவினைக்கு ஏற்றபடி ஐம்பூதங்களால் ஆனது. காலம் வந்தவுடன் தீக்கு இரையாகும். இது பச்சை மண்ணாற் செய்யப்பட்ட குடம் மழை நீரால் கரைந்து சிதைவதை ஒக்கும்.

மண்ணொன்று கண்டீர் இருவினைப் பாத்திரம்
திண்ணென் றிருந்தது தீயினைச் சேர்ந்தது
விண்ணின்று நீர்விழின் மீண்டுமண் ஆனாற்போல்
எண்ணின்றி மாந்தர் இறக்கின்ற வாறே. -தி.10 பா.142

ஞாயிறு கிழக்கே தோன்றி விசும்பில் ஏறிப்பின் மறைந்து விடுகிறது; ஆன்கன்று தோன்றி வளர்ந்து மூத்து முடிவில் மாய்கின்றது: இவை போன்றதுதான் மக்கள் உடம்பும்; ஆதலால் உடம்பில் இளமைவலி உள்ளபோதே அதன்கண் உள்ள உத்தமனைக் காண முயலுதல் வேண்டும் என்கிறார் திருமூலர்.

கிழக்கெழுந் தோடிய ஞாயிறு மேற்கே
விழக்கண்டுந் தேறார் விழியிலா மாந்தர்

குழக்கன்று மூத்தெரு தாய்ச்சில நாளில்
விழக்கண்டுந் தேறார் வியனுல கோரே. -தி.10 பா.176

பின் செல்வம் நிலையாமை, உயிர்நிலையாமை (உயிருக்கும், உடம்பிற்கும் உள்ள தொடர்பு நிலையாமை) என்பவற்றை உணர்த்தி, இயல்பாக நிகழக்கூடிய பாவச்செயல்களை நீக்கி நடக்கவேண்டும் என்று பல அதி காரங்களால் உணர்த்துகின்றார். கொலை, களவு, கள், காமம், பொய் என்பன பெரும் பாவங்கள். அவற்றை முன்னர் ஒருவன் தன் கண் நிகழாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். புலால் உண்டலும் கொலையிற் சேரும். காமம் என்பது பிறர் மனை நயத்தலும் பரத்தை யரை நாடுதலும் ஆகும்.

கொலையே களவுகட் காமம்பொய் கூறல்
மலைவான பாதக மாம் அவை நீக்கித்
தலையாம் சிவனடி சார்ந்தின்பஞ் சார்ந்தோர்க்கு
இலையாம் இவை;ஞானா னந்தத் திருத்தலே. -தி.10 பா.207

திருமூலர் கூறும் அறவுரைகளை மூன்று வகைப்படக் கொள்ளல் ஆகும். ஒன்று பாவம் செய்யாதீர்கள் என்பது; இரண்டா வது, பாவஞ்செய்யாதிருந்து அறங்களைச் செய்யுங்கள் என்பது; இந்த இரண்டோடு மூன்றாவது உபதேசம், இறைவனுடைய பேரின்பத்தை உடம்போடு இருக்கும் போதே, அவ்வுடம்பு தன் வலிவை இழக்காத முன்பே, பெற்று நுகருங்கள் என்பது.

அவர் கூறும் அறம் ஈகையில் தொடங்குகிறது.

ஆர்க்கும் இடுமின் அவர் இவர் என்னன்மின்
பார்த்திருந்து உண்மின் பழம்பொருள் போற்றன்மின்
வேட்கை உடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே. -தி.10 பா.249

இது போசன விதி.

யாவர்க்கும் ஆம்இறை வற்குஒரு பச்சிலை
யாவர்க்கும் ஆம்பசு விற்கொரு வாயுறை
யாவர்க்கும் ஆம்உண்ணும் போதுஒரு கைப்பிடி
யாவர்க்கும் ஆம்பிறர்க்கு இன்னுரை தானே. -தி.10 பா.251

இவை அன்றாட வாழ்க்கையில் மறவாமல் கைக்கொள்ள வேண்டிய கடமைகள்.

அன்பின் சிறப்பைத் திருமூலர் கூறுவது தனித்தன்மை வாய்ந்தது. அன்புதான் கனிந்து கனிந்து நிறைவு நிலையில் சிவம் ஆகிறது என்கிறார்.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே. -தி.10 பா.269

இறைவனுடைய அருளைப்பெற விரதங்காத்து நோன்பிருப்பினும், உடம்பை வருத்தித்தவம் செய்யினும் அருளைப்பெற முடியாது; அன்பு ஒன்றினால்தான் என் ஐயனை அடையமுடியும் என்கிறார்.

என்பே விறகாய் இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போல் கனலில் பொரிய வறுப்பினும்
அன்போடு உருகி அகங்குழை வார்க்கன்றி
என்பொன் மணியை எய்தவொண் ணாதே. -தி.10 பா.271

ஈசன் அறிவன் ஒருவர் அகத்தே நிகழும் அன்பை; அதை அவர் வெளியே காட்டிக்கொள்ள வேண்டா.

ஈசன் அறியும் இராப்பக லுந்தன்னைப்
பாசத்துள் வைத்துப் பரிவுசெய் வார்களை
தேசுற்று அறிந்து செயலற்றி ருந்திடில்
ஈசன்வந் தெம்மிடை ஈட்டிநின் றானே. -தி.10 பா.287

கல்விக்குள் பெரிய கல்வி கடவுளைப் பற்றிய கல்வியே, இதைக் கற்றுத் தேறுங்கள் என்கிறார்.

நிற்கின்ற போதே நிலையுடை யான் கழல்
கற்கின்ற செய்மின் கழிந்தறும் பாவங்கள்
சொற்குன்றல் இன்றித் தொழுமின் தொழுதபின்
மற்றொன் றிலாத மணிவிளக் காமே. -தி.10 பா.291

மக்கள் படைப்பின் நோக்கத்தையும், உடம்பு அதற்காக வந்தது என்பதையும் இறைவன் எவ்வாறு உளம்புகுந்து நின்றான் என்பதையும் கல்வி கேள்விகளால் உணர்தல் வேண்டும். இவற்றைப் பற்றிச் சிந்திப்போர்க்கு உள்விளக்கம் உண்டாய், அன்னோர் தாம் உணர்ந்ததை வெளிப்படுத்துகிறார்கள். அவ்வெளிப்பாடு மற்றையோர்க்குத்

துணை ஆகின்றது. அறிஞர்கள் தம் உடம்பைப் பொருட்படுத்தாமல் இறைபணி செய்ய முந்துகிறார்கள், மற்றையோர் உடலைப்பெருக்கும் நோக்குடன் உண்டு துன்புறுகிறார்கள். இரவும் பகலும் இறைவனை வழிபட்டால் கடவுள்தன்மையை எய்துதல் ஆகும்.

மலரோடு கந்தம் பிரிப்பின்றி வருதல்போல, தூயகல்வியே உயிர்க்கு உறுதுணையாய் ஒளியாய் உடன்வரும் என்கின்றார்.

துணையது வாய்வரும் தூயநற் சோதி
துணையது வாய்வரும் தூயநற் சொல்லாம்
துணையது வாய்வரும் தூயநற் கந்தம்
துணையது வாய்வரும் தூயநற் கல்வியே. -தி.10 பா.293

கடற்கரை, மலை என்பவற்றில் கோயில் கொண்டவனும் ஐம்பூதத்தை யும் தனக்குத் திருமேனியாகக் கொண்டவனும் ஆகிய சிவபிரானை நம் நெஞ்சத்தில் இடம்பெறும் பழ ஒளியைத் தருவது கல்வியேயாகும்.

கடல்உடை யான்மலை யான்ஐந்து பூதத்து
உடல்உடை யான்பல ஊழிதோ றூழி
அடல்விடை ஏறும் அமரர்கள் நாதன்
இடமுடை யார்நெஞ்சத் தில்லிருந் தானே. -தி.10 பா.298

நற்கேள்வியாவது இது எனவும் அது சிவகதியைத் தருமாறும் கூறும் மந்திரம்,

அறங் கேட்டும் அந்தணர் வாய்மொழி கேட்டும்
மறங் கேட்டும் வானவர் மந்திரங் கேட்டும்
புறங் கேட்டும் பொன்னுரை மேனியெம் ஈசன்
திறங் கேட்டும் பெற்ற சிவகதி தானே. -தி.10 பா.299

மறம் - வல்வினை எனப்படும். வாகை - வெற்றி.

சிவம் முயன்று அடையும். தெய்வக்கலையைத் திருந்தக் கல்லாதாரை முனிவர் பெரிதும் கடிகின்றார்.

கல்லாத மூடரைக் காணவும் ஆகாது
கல்லாத மூடர்சொல் கேட்கக் கடனன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லராம்
கல்லாத மூடர் கருத்தறி யாரே. -தி.10 பா.316

பின்னர் நடுவு நிலைமையைப் போற்றி அந்நிலை நிற்குமாறு உபதேசிக்கின்றார்.

நடுவுநின் றார்க்கன்றி ஞானமும் இல்லை
நடுவுநின் றார்க்கு நரகமும் இல்லை
நடுவுநின் றார்நல்ல தேவரும் ஆவர்
நடுவுநின் றார்வழி நானும்நின் றேனே. -தி.10 பா.319

நடுவு நிலை ஏனைப் பல அறங்களையும் எய்துவிக்கும்

அடிப்படை அறம் என்பது திருமூலர் கருத்து. நடுவுநிலைமை ஏனைய அறங்களுக்கு வித்தாதல் போலவும் நல்குரவு இறைவனை எண்ணுவதைத் தடுப்பது போலவும், கள்ளுண்ணல் அறிவை மயக்கித் தீ நெறிக்கண் உய்க்கும் என வலியுறுத்துகின்றார் திருமூலர்.

''காமமுங் கள்ளுங் கலதிகட்கே உள;'' -தி.10 பா.324

உள்ளுண்மை ஓரா ர், உணரார் பசுபாசம்
வள்ளன்மை நாதன் அருளினில் வாழ்வுறார்,
தெள்ளுண்மை ஞானச் சிவயோகம் சேர்வுறார்
கள்ளுண்ணும் மாந்தர் கருத்தறி யாரே. -தி.10 பா.326

மயங்கும், தியங்கும், கள்வாய்மை அழிக்கும்,
இயங்கும் மடவார்தம் இன்பமே எய்தி,
முயங்கும் நயங்கொண்டஞ் ஞானத்து முந்தார்,
இயங்கும் இடையறா ஆனந்தம் எய்துமே. -தி.10 பா.328

சந்தோஷித்து அறியாமையால் தள்ளாடிக் களிக்கும் என்பது இறுதித் தொடரின் கருத்து.

ஆயின் - மற்றொரு தேறல் உண்டு; அஃது உண்ணத் தகுவதே. அது சிவானந்தத் தேறல். அதன் செயல் இவ்விழிந்த கள்ளோடு புடைபட வைத்துக் காணத்தக்கது. அது தத்துவ வடிவமாகிய மாயையினையும், அதனைக் கலந்து நின்று மயக்கஞ் செய்யும் இருள் மலத்தையும் நீக்கி ஆன்மாவைத் தன்னியல்பு உணரவைக்கும்; பொய்த்தவத்தைப் போக்கும், உண்மை அநுபவமாகிய சிவபோகத்துட் செலுத்தும்; சற்காரிய முறையால் தொழிற்படும் நிலையாத இந்த உலகை விழுங்கு மாற்றால் அதனால் பற்றப்படாமல் கடந்து, பரானந்த சித்தியைக் கொடுக்கும்.

தத்துவம் நீக்கி, மருள் நீக்கித் தானாகிப்
பொய்த்தவம் நீக்கி, மெய்ப் போகத்துட் போக்கியே,
மெய்த்த சகமுண்டு விட்டுப் பரானந்தச்
சித்திய தாக்கும் சிவானந்தத் தேறலே. -தி.10 பா.331

என்கிறார் சித்தர் தலைவர்.

வாமமதத்தினர் சத்தியை வேண்டிக் கள் உண்பர். ஆனால் அவர் அறியுஞ் சத்தியை இழந்து வருகின்றனர்; சத்தி வழிபாடு என ஒன்று தனித்து வேண்டுவது இன்று, அம்மையப்பரை வழிபடு வோர்க்கு என்கின்றார் முனிவர்.

சத்தியை வேண்டிச் சமயத்தோர் கள்ளுண்பர்,
சத்தி அழிந்தது, தம்மை மறத்தலால்,
சத்தி சிவஞானம் தன்னில் தலைப்பட்டுச்
சத்திய ஞானஆ னந்தத்திற் சார்தலே. -தி.10 பா.329

சத்தன் அருள்தரில் சத்தி அருளுண்டாம்,
சத்தி அருள்தரிற் சத்தன் அருளுண்டாம்,
சத்தி சிவமாம் இரண்டுந்தன் உள்வைக்கச்
சத்தியம் எண்சித்தித் தன்மையும் ஆமே. -தி.10 பா.330

இத்தந்திரத்தின் முடிவில் அவர் கூறுவது; ஞானகுருவின் மலர் அடிகளைத் தியானித்து வழிபடு, அவர்தம் அருளால் யோகப் பயிற்சியை மேற்கொள்; உயிர்ப்பை நெறிப்படுத்தி மூலத்தில் அங்கி மண்டலத்தினின்று எழுந்து, மதிமண்டலமாகிய முடிவில் அமுத ஊற்றைத் திறந்து அவ்வமுதை உண்டு சமாதியைக் கூடி நில்.

இங்ஙனம் விலக்கு விதிவடிவ ஒழுக்கநெறி உணர்த்தும் போது, அங்கி காரியம், அந்தணர் ஒழுக்கம், அரசாட்சி முறை, வானச்சிறப்பு, என்னும் நான்கு அதிகாரங்களை, உடன்பாட்டு முறையில் அறங்களைக் கூறுவதற்குமுன், ஆசிரியர் அமைத்துள்ளார். இது வாழ்க அந்தணர் என்னும் திருப்பாசுர முதற்பாட்டின் முன் இரண்டாவது கருத்தை விளக்குவதாய் அமைந்துள்ளது.

வேதத்தைத் தமக்கு முதனூலாகக் கொண்டு ஒழுகும் சோர் வில்லாத அந்தணர் அவி சொரிந்து வேள்வி செயின் குற்றமற்ற விழுப் பொருள்களாகிய அறம் முதற்பொருள்கள் உளவாகி வானவரும் மக்களும் எண்திசைக் காவலர்களும் மேம்பாடு உடையராவர்.

ஓமத்தீயில் எம் இறைவிளங்கி நிற்பன்; ஈம எரியைத் தனக்கு

மேற்செல்லும் விமானமாகக் கொள்ளும் ஒருவனும் (உயிர்) உளன்; முடிவில் வெந்து நீறாகும் உடம்பில் அங்கிபோன்ற காமம் வெகுளி என்பவற்றால் விளையும் வினையாகிய கடல் போன்ற பெரிய தீங்கு ஓமத்துள் உள்ள தீ அணைக்கும் பெருங்கடலாகும்.

என்றிவ்வாறு வேதவேள்வி உயர்த்துக் கூறப்படுகிறது.

அந்தணர் ஆவோர் அறுதொழில் பூண்டுள்ளோர்
செந்தழல் ஓம்பிமுப் போதும் நியமஞ் செய்
தந்தவ நற்கரு மத்துநின் றாங்கிட்டுச்
சந்தியும் ஓதி சடங்கறுப் போர்களே. -தி.10 பா.223

என்பது முதலாக அந்தணர் ஒழுக்கம் கூறுகின்றார்.

அந்தணர் உபநிடதங்களைக் கேட்க விரும்புவர்; ஓங்கார மகாவாக்கியம் என்பவற்றின் பொருளைச் சிந்திப்பர். இறைவனை அகத்தே கண்டு இன்புற விழைவர். காயத்திரி, சாவித்திரி என்னும் மனுக்களை எண்ணி இறைவனோடு இரண்டறக் கலந்து நிற்பர்.

இங்ஙனம் ஒழுக்கம் உடையோரைப் பாராட்டும் பெருமுனிவர் ஒழுக்கத்தின் இழிந்தோரைக் கண்டிக்கவும் தயங்கவில்லை.

சத்தியம் இன்றித் தனிஞானந் தானின்றி
ஒத்த விடயம்விட் டோரும் உணர்வின்றிப்
பத்தியும் இன்றிப் பரனுண்மையும் இன்றிப்
பித்தேறும் மூடர் பிராமணர் தாமன்றே. -தி.10 பா.230

என்கின்றார்.

அரசன் கல்வி உடையனாய் அறம் ஓர்ந்து முறைசெய்து எல்லோரையும் காத்தல் வேண்டும். கல்லாத அரசனால் மக்களுக்கு நன்மை இல்லை.

கல்லா அரசனும் காலனும் நேரொப்பர்
கல்லா அரசனிற் காலன் மிக நல்லன்
கல்லா அரசன் அறம்ஓரான் கொல்என்பான்
நல்லாரைக் காலன் நணுகிநில் லானே. -தி.10 பா.237

தத்தம் சமயத் தகுதிநில் லாதாரை
அத்தன் சிவன் சொன்ன ஆகம நூல்நெறி

அத்தண்டமுஞ் செயும் அம்மையில்; இம்மைக்கே
மெய்த்தண்டம் செய்வது அவ்வேந்தன் கடனே. -தி.10 பா.246

இக் கருத்துக்கள், இக்காலத்து அரசியல் தலைவுர்களுக்கும் குடும்பத் தலைவர் முதலாயினார்க்கும் பொருந்தும்.

இறை வழிபாட்டாலும் நல்ல ஆட்சியாலும் வளம் பெருக்கும் பருவ மழை குறித்த அளவில் பெய்யும். அவ்விரண்டும் குன்றின் பெய்யாமை, அதிக மழை என்பவற்றால் தீமை நாட்டில் மிகும்.

அமு தூறும் மாமழை நீரத னாலே
அமுதூறும் பன்மரம் பார்மிசை தோன்றும்
கமுகூறு தெங்கு கரும்போடு வாழை
அமுதூறுங் காஞ்சிரை ஆங்கது வாமே. -தி.10 பா.247

இரண்டாந் தந்திரம்: இங்ஙனம் ஒழுக்க நெறியைச் சிவநெறியோடு பொருந்துமாறு முதல் தந்திரத்தில் விளக்கியருளிய திருமூலதேவர் இனி இறைவன் தடத்தநிலையாகிய பொதுவியல்பைப் பழைய வரலாற்று முகத்தானும் இலக்கண வகையானும் சாதன முகத்தானும் இரண்டாம் தந்திரத்தில் உணர்த்துகின்றார்.

இப்பகுதியை மூன்று பிரிவுகளாக மனத்தில் கொண்டு உணர்தல் கூடும். முதற்கண் உணர்த்தப்படுவன புராண வரலாறுகள்; பின் உணர்த்தப்படுவன இறைவன் செயல்களாகிய ஐந்தொழில்கள் (பஞ்சகிருத்தியம்); மூன்றாவது கருவுற்பத்தியாகி வளரும் முறை, அன்பர் பெருமை, பெரியாரைத் துணைக்கொண்டு ஒழுகுதல் என்பவை.

இவற்றுள், தமிழ்முனிவராகிய அகத்தியமுனிவர் வரலாறும் பெருமையும் முதற்கண் உணர்த்தப்படுகின்றன.

ஒரு காலத்து உலகம் சமநிலை பெறாது சிதைவுறும் நிலையில் சாய்ந்தபோது தேவர்கள் சிவபிரானிடம் முறையிட்டார்கள். சிவபிரான் தவக்கனல் நடுவில் உள்ள (அகத்தே அழல் உருவச் சிவனைக்கொண்ட) அகத்தியரைத் தெரிந்து ''மேலோங்கிய தென் திசைக்கண் முற்பட்டு இரு'' என்று அருள்புரிந்தான்.

இத்துணைப் பெரியவர் அகத்திய முனிவர்; அவரையே உலகம் எல்லையாக உடையது.

ஞாயிறு தோன்றுங்கால் ஓம அங்கியை வளர்க்கும் அகத்தியர்

ஓமம், தியானம் என்பவற்றை அங்கமாகக் கொண்டு அங்கியாகிய சிவ பூசையை அதிகாலையில் செய்யும் மேல்பால்முனி (குடமுனி) ஆதலோடு, பலநாள் தன் ஒளி - வடக்கு ஒளியாக மங்கித் தோன்றி ஞாயிறு பின்னர்த் தோன்றும்.

வடதிசைக்கண் தவஞ்செய்த முனியும் ஆவர்; அவர் உலகெங்கும் வளங்கொள்ளுதற்கு உரிய விளக்கமான அருளொளியாய்த் திகழ்பவர்.

இங்ஙனம் அகத்தியர் போன்ற பெரியோர் மூலம் உலகிற்கு முதல்வன் நன்மை புரிதலை உணர்த்திப் பின் இறைவன் உயிர்களின் வினையை நீக்குதற்குக் கொள்ளும் வேக வடிவங்களை உணர்த்தப் புகுவாராய் அந்தகன், சலந்தரன் முதலியோரை வதஞ்செய்தும், நான்முகன் தலையைக் கிள்ளியும், மன்மதன் உருவை நீறாக்கியும் வீரத்தைப் புலப்படுத்திய எட்டு வீரச் செயல்களையும் அவற்றை நினைந்து மக்கள் வினைநீங்கி அவ்வப்பயன் பெறுதற்குரிய தலங்களையும் குறிப்பிட்டு அவ்வரலாறுகட்குத் தத்துவக் கருத்துக்களையும் உணர்த்துகிறார். அவை:

''முப்புர மாவது மும்மல காரியம்'' -தி.10 பா.339

என்பது முதலியன. செம்பு, வெள்ளி, பொன் என்பவற்றாலாகிய புரங்கள் ஆணவம் கன்மம் மாயை என்னும் தளைகளையே குறிக்கும். இவற்றின் வலியை மதித்து நிற்கும் ஆன்மாக்கள் பிறருக்குத் தீமையே விளைத்துப் பின் தாமும் துன்புறும் என்க.

பின், முதல்வனை யாதேனும் ஓர் ஆதாரத்தில் தெளியக் கண்டு தொழுதால் இறைவன் வெளிப்படுவான் என்னும் கருத்தை இலிங்க புராணம் என்னும் தலைப்பில் கூறுகிறார். இலிங்கம் - இறைவனுக்கு அடையாளமாக நிறுத்தப்படும் குறி; புராணம் - பழைய வரலாறு. இதில், முதற்கண் அம்மை, முதல்வனை அருச்சித்துக் காட்டினமையை எடுத்துக் கூறுகிறார்.

இறைவன் உயிர்கள் மாட்டுப் பரிவுடையன்; ஆயினும் அவரவர் தன்மையை அறிந்து அதற்கு ஏற்றபடி வேண்டுவார் வேண்டுவதே ஈவான் என்கிறார். மேலும் திருமாலுக்குத் திகிரியும் பிரமனுக்கு ஞானவாளும் கொடுத்தது, இராவணனுக்கு அருளியது, சண்டீசர்க்கு அருளியது, தேவர்கள் அஞ்சியபோது அமைதி அருளியது இவையெல்லாம் இலிங்க புராணத்தில் வருகின்றன.

பின் 4,5 அதிகாரங்களில் தக்கயாக அழிவு, திகிரியைத்

திருமாலுக்கு மீளக்கொடுத்தது, உலக ஒடுக்கம், தேவர்களை அழி யாது காத்தமை, எலும்பு கபாலம் தரித்தமை பேசப்படுகின்றது. ''இல யித்தது இலயித்தவாறு உளதாவேண்டும்'' என்னும் சாத்திரக் கருத்தை,

''எலும்பும் கபாலமும் ஏந்திலன் ஆகில்
எலும்பும் கபாலமும் இற்றுமண் ஆமே'' -தி.10 பா.367

என உணர்த்துகிறார் சித்தர். புனர் உற்பவம் (மீளத் தோன்றுதல்) என்பது உறங்கி விழிப்பது போன்றது உயிர்கள் அநாதி; அவற்றின் அறிவுமலர்ச்சி தொடர்ந்து ஏற்படுகிறது என்பதை இவ்வாறு குறிக் கின்றார் திருமூலர். இதனால் மூன்று உண்மைகள் தெளிவாகின்றன; ஒன்று சிவபிரான் ஒருவனே இறப்பும் பிறப்பும் இல்லாத முழுமுதல்; இரண்டாவது, உயிர்கள் இறக்கும்போது அவற்றின் கன்மங்கள் அழி யாமல் காக்கப்படுகின்றன கடவுளால்; மூன்றாவது சற்காரிய வாதம் (அறிவியல் நூலார் கூறும் பொருள் ஆற்றல்களின் அழிவின்மை)

எட்டாம் அதிகாரத்தில் மாயோனும் அயனும் அடிமுடி தேடி எய்த்த வரலாறும், இறைவனுக்கு உலகத்தோடுள்ள அத்துவித சம்பந்தமும் கூறப்படுகின்றன. உலகினை இறந்துநிற்றல் உலக காரணன் ஆதல், உலகுக்கு உயிராதல், உலக உருவினன் ஆதல் என்னும் நான்கு நிலைகளும் உணர்த்தப்படுகின்றன.

பின்னர் வரும் அதிகாரங்களால் ஐந்தொழில்கள் உணர்த்தப் படுகின்றன. முதலும் முடிவும் இல்லாத பரம்பொருள், அதன் போதரூபமாகப் பராபரை உள்ளது, சோதிபோல் உள்ள பரத்தின் முன்னிலையில் பரையின் பால் நாதம், நாதத்தில் விந்து தோன்றும். நாதம் - ஒலி, உணர்த்தும் தன்மை; விந்து - ஒளி, விளக்குந்தன்மை. நாதவிந்துக்களில் ஞானமும் கிரியையும் தோன்றும். ஞானகிரியை களின் அதிட்டானங்கள் சிவம் சத்தி எனப்படுகின்றன. இவ்வாறு தொடங்கித் தத்துவங்களின் தோற்றம் கூறப்படுகின்றது. இதனை,

''ஓராய மேஉல கேழும் படைப்பதும்'' -தி.10 பா.404

என்பதில் காணலாம். (ஓராயம் - சிவசத்தி சம்மேளனம்)

காத்தல் தொழிலை விளக்கும்போது,

உடலாய் உயிராய் உலகம தாகிக்
கடலாய்க் கார்முகில் நீர்பொழி வானாய்
இடையாய் உலப்பிலி எங்குந்தான் ஆகி
அடையார் பெருவழி அண்ணல்நின் றானே. -தி.10 பா.410

என்றாற் போலவும், அழித்தல் தொழிலைக் கூறும்போது,

''அங்கிசெய் தீசன் அகலிடஞ் சுட்டது'' -தி.10 பா.417

என்றாற் போலவும் சொல்லிப் போகிறார் திருமூலர்.

சங்காரம் - நித்தம், அவாந்தரம், சருவம், வீடு பேறு என நான்கு வகைப்படும். நித்த சங்காரம் - உறக்கம், அவாந்தர சங்காரம் - இறப்பு; சருவ சங்காரம் - முற்றழிப்பு; வீடு பேறு - மலம் நீங்கி உயிர் இறைவன் திருவடிபெற்று இன்புறுதல்.

உள்ளத் தொருவனை உள்ளுறு சோதியை
உள்ளம்விட் டோரடி நீங்கா ஒருவனை
உள்ளமும் தானும் உடனே இருக்கினும்
உள்ளம் அவனை உருவறி யாதே. -தி.10 பா.427

என்றாற்போல மறைத்தற்றொழில் விளக்கப்படுகிறது.

அருளலைத் தெரிவிக்கும்போது உயிரின் பக்குவத்திற்குத் தக்க தனுகரண புவன போகங்களைக் கூட்டி அதன் அறிவை வளர்ப்பது அருள்தான் என உணர்த்துகின்றார் நாயனார்.

ஆரும் அறியாத அண்டத் திருவுரு
பார்முத லாகப் பயிலுங் கடத்திலே
நீரினிற் பால்போல நிற்கின்ற நேர்மையைச்
சோராமற் காணும் சுகம் அறிந் தேனே. -தி.10 பா.441

நீரினிற் பால்போல நிற்கின்ற நேர்மை - அத்துவிதமாய் உயிரிற் கலந்து காட்டிக் கண்டுவரும் தன்மை; அதனைச் சோராமற் காணும் சுகமே - அயரா அன்பின் அரன் கழல் சேறல்.

அண்டத்திற் படைப்பை விளக்கிய முனிவர் பிண்டத்தின் உற்பத்தியையும் நாம் அறியும்படி கூறுகின்றார்.

எலும்புகளை நெருங்கவைத்து நரம்புகளால் இறுகக்கட்டி குருதி கலந்த இறைச்சிகளால் உருவஞ்செய்து உயிர் வாழ்ந்து உய்தியைப் பெறுவதற்கு ஒரு வீடு செய்தான் இறைவன்; அவனைத் தொழுது அணைகின்றேன்.

போகத்துள் ஆங்கே புகுந்த புனிதனும்
கோசத்துள் ஆகங் கொணர்ந்த கொடைத்தொழில்
ஏகத்துள் ஆங்கே இரண்டெட்டு மூன்றைந்தும்
மோகத்துள் ஆங்கொரு முட்டை செய்தானே. -தி.10 பா.459

இருவர் கொள்ளும் போகமாகிய இன்ப நுகர்ச்சியுள் உடன்நின்ற தூய முதல்வன் கருப்பையுள் உடம்பைக் கொடுத்த அருட் கொடையில் ஒருதுளி வெந்நீரில் மாயையின் காரியமாகிய முப்பத்தொரு தத்துவம் அமைந்த ஒரு முட்டையைச் செய்தான் என்கிறார்.

பிறந்த உயிர்க்கு வளர்ச்சியைத் தருகையில் அறிவு வளர்ச்சிக்குத் திரோதான சத்தியும், உடல் வளர்ச்சிக்குத் தாயும் ஆகிய இருசெவிலித் தாயர் மாட்டும் முதல்வன் அன்பை வைக்கின்றான் என்ற நயமும் காணத்தக்கது.

'தாய், தந்தையர் தாம், குழந்தையை வளர்ப்பதாக எண்ணிப் போற்றிவருவது குயிலின் முட்டையைக் காக்கை காத்துவருவது போன்றதுதான்; உண்மையில் அம்மையப்பர் தான் அதனை வளர்க்கின்றார்' என்றார் திருமூலர்.

பின் உயிர்கள் விஞ்ஞான கலர், பிரளயாகலர், சகலர் என மூவகைப்படுதலும் அவருட் பக்குவர் அபக்குவர் என்னும் பிரிவு களும் உணர்த்தப்படுகின்றன. மேலே ஒருவன் செய்ய வேண்டிய அறங்களும் நீக்கவேண்டிய குற்றங்களும் கூறிப் பெரியோரைத் துணையாகக் கொண்டு ஒழுகும்படி உபதேசிக்கின்றார் ஆசிரியர்.

முதல் தந்திரத்தில் ஆர்க்கும் இடுமின் என ஈகையை வற்புறுத்திய முனிவர் இங்கு, 'அறத்தால் ஈட்டிய பொருளைத் தக்காரைத் தேடி அன்புடன் வழிபட்டுக் கொடுக்க' எனத் தானத்தை வலியுறுத்திக் கூறுகின்றார்.

''திலமத் தனையே சிவஞானிக் கீந்தால்
பலமுத்தி சித்தி பரபோக முந்தரும்'' -தி.10 பா.493

உள்ளத்தில் அன்பு, உணர்வு முதலிய பண்புகள் ஊற்றெடுத்துத் தூய்மையைத் தரும்படி வாழவேண்டும். இங்ஙனம் அன்றி வெறுந்தல யாத்திரை, தீர்த்த யாத்திரையாற் பயனில்லை. திருக்கோயில்கள் நன்கு பாதுகாக்கப்பட வேண்டும். கோயில் பூசைகள் தக்காராற் செய்யப் பெறுதல் வேண்டும் என்றும் கூறுகிறார். இவையெல்லாம் நன்கு நடைபெறச் செய்வது அரசின் கடமை என்கிறார்.

அசுத்த மாயை அதோ மாயை எனப்படும். அதன்கீழ் உள்ள பிரகிருதி மாயையைச் சார்ந்த நம் நிலவுலகத்தைக் கண்காணிக்கும் முதல்வன் திருமுகம் அதோமுகம். அம்முகம் பல சக்திகளாக உலகத்தில் தங்கி நின்று உலகத்தார்க்குத் தீங்கு வராமல் காக்கும். இவ்வியல்பைக் கூறும் பகுதி அதோமுக தரிசனம் என்னும் தலைப்பை

உடையது. அறுமுகக் கடவுளாய் வந்து சூரனை அழித்ததும், கண்டம் கறுத்துத் தேவர் முதலாயினாரைக் காத்ததும், ஈண்டு உள்ளார்க்குப் பிரணவ பஞ்சாக்கர உபதேசங்களைச் செய்து வருவதும் அதோ முகத்தின் செயலே எனக் கூறுகிறார் இப்பகுதியில்.

அதோமுகம் கீழ்அண்ட மான புராணன்
அதோமுகந் தன்னொடும் எங்கும் முயலும்
சதோமுகத் தொண்மலர்க் கண்ணிப்பிரானும்
அதோமுகன் ஊழித் தலைவனும் ஆமே. -தி.10 பா.516

அடுத்துவரும் மூன்று அதிகாரங்களால் சிவநிந்தை, குருநிந்தை, அடியார் நிந்தை வேண்டா என அறிவுறுத்துகின்றார் திருமூலர்.

தெளிவும் அமைதியும் உள்ள மெய்யுணர்ந்தார் சிந்தையில் உள்ளவன் நக்கனாகிய நம்பிரான். அஃதறியாது அவனை இகழின் பூனை வாயில் அகப்பட்ட கிளிபோன்ற நிலைதான் ஏற்படும்.

தெளிவுறு ஞானத்துச் சிந்தையி னுள்ளே
அளிவுறு வார்அம ரர்பதி நாடி
எளியனென் றீசனை நீசர் இகழின்
கிளியொன்று பூஞையிற் கீழது வாகுமே. -தி.10 பா.518

அடுத்த அதிகாரம் 'பொறையுடைமை' என்பது. அவா, அழுக்காற்றைத் தோற்றுவிக்கும்; அவாவுடையான் பிறராக்கம் பொறான். அதற்கு மருந்து போதும் என்ற மனமும் பொறுமையுமே ஆகும். இப்பொறையைப் பயின்றால் ஆனந்தக் கூத்தனோடு இசைந்து இன்புறல் ஆகும் என்பது 'வல்வகையாலும்' என்னும் மந்திரத்தில் கூறப்படுகிறது. இறைவனை வழிபடுவோரே பெரியர்; அவர் கொள்ளும் தவம், சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு வகைப்படும்.

அந்நால்வரோடும் உடனிருந்து இறைவன் திருவருளில் நிலைபெற்றுள்ளேன். நீங்களும் அவ்வாறே செய்ம்மின் எனவும் இறைவன் திருவருள் கலைஞான வடிவிலும், மெய்யுணர்வு வடிவிலும் அபர தடத்தமாகவும், பரசொரூபமாகவும் இருக்கும். இவற்றுள் கலைஞானம் கேட்டுச் சிந்தித்தோர் பிற்காலத்து வீடுபேறு உறுவர்; மெய்யுணர்ந்தார்க்கு இம்மையும் அம்மையேயாம். இவ்விருவருமே பெரியாருள் வைத்துப் பெரியார். அவர்களொடு யானும் உடனிருந்து இன்புறுவேன் எனவும் கூறி இரண்டாந் தந்திரத்தை முடிக்கின்றார் திருமூலர்.

ஓடவல்லார் தமரோடு நடாவுவன்
பாடவல் லாரொலி பால்மிசை வாழ்குவன்
தேடவல் லார்க்கருள் தேவர் பிரானொடும்
கூடவல் லாரடி கூடுவன் யானே. -தி.10 பா.533

அருமைவல் லான்கலை ஞானத்துள் தோன்றும்
பெருமைவல் லோன் பிற விச்சுழி நீந்தும்
உரிமைவல் லோன்உணர்ந் தூழி இருக்கும்
திருமைவல் லாரொடு சேர்ந்தனன் யானே. -தி.10 பா.538

அருமை வல்லான் - சிவபிரான்.

மூன்றாந் தந்திரம்: உடம்பில் உறுபொருளாகிய முதல்வனைக் காண்டற்கு உடம்பு நீடுதலும் மன ஒருமையும் இன்றியமையாதவை. ஆதலால் அவற்றிற்குச் சிறந்த சாதனமாகிய வாசி யோகத்தை விரித்துக் கூறுகின்றது.

வேறு நெறிகளைத் தேடாமல் யோக நெறியை மேற்கொள்க. அது ஞானத்தைத் தரும்; பிறவியை நீக்கும் என்கிறார்.

அந்நெறி இந்நெறி என்னாது அட் டாங்கத்
தன்னெறி சென்று சமாதியி லேநின்மின்
நன்னெறி செல்வார்க்கு ஞானத்தில் ஏகல் ஆம்
புன்னெறி ஆகத்திற் போக்கில்லை ஆகுமே. -தி.10 பா.541

இவ் யோகம் எட்டு உறுப்புக்களை உடையது. அவை இயமம், நியமம், இருக்கைநிலை, பிராணாயாமம் (வளிநிலை), பிரத்தியாகாரம் (தொகைநிலை), தாரணை (பொறைநிலை), தியானம், சமாதி என்பவை. இவற்றுள் முதன் மூன்றும் அடிப்படையாய் அமைவன; ஏனை ஐந்தும் மேல் நிலைகள்.

மனத்தை அது சென்றபடி செல்லவிடாது அறிவினால் கட்டுப் படுத்தித் தீமையின் நீக்குவதே இயமம் ஆகும். அது கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, பேருண்டி நயவாமை, பொறையுடை யனாய் அடங்குதல், விருப்பு வெறுப்பின்றிச் சம நிலையனாதல், தனக்குக் கிடைத்ததைப் பகுத்து நுகர்தல், தூய்மை, கள்ளுண்ணாமை, காமங்கொள்ளாமை என்னும் பத்தில் அடங்கும்.

நியமமாவது அடங்கிய மனத்தை நன்றின்பால் உய்த்தல். அது தவம், செபம், உவகையோடிருத்தல், கடவுள் முதலிய பொருள்கள் உள்ளன என்னும் கொள்கை, தக்கார்க்குக் கொடுத்தல், சிவவிரதம்

(திருநீறணிதல்), சைவ நூற்கேள்வி, சிவவேள்வி, சிவபூசை, தெளிவறிவு என்னும் பத்தையும் போற்றிக் கொள்வதால் உளதாகும்.

ஆதனம் (இருக்கைநிலை) என்பது தலையும் கழுத்தும் முதுகெலும்பும் நேராக நிமிர்ந்திருத்தற் பொருட்டு மேற்கொள்ளப்படும். கால் கைகளின் அமைப்பு. அது பதுமாதனம், பத்திராதனம், சிங்காதனம் முதலாகப் பலவகைப்படும். இவற்றுள் பெரும்பாலோர் கொள்வது பதுமாசனம். அது, தாள்களை மாற்றுத் துடைகளின் மேல் இறுக ஏற்றி, உள்ளங்கால்கள் மேல் நோக்கும்படி நிமிர்ந்திருந்து, இரு கைகளை வளைக்காமல் முழந்தாள்களை ஆதாரமாகக் கொண்டு அகங்கைகள் வெளிப்பட்டுத் தோன்றவைத்தல். இவ்வாறு தனக்கு ஒத்தவொரு இருக்கை முறையைப் பழகி நீண்டநேரம் அசைவின்றியும் வருத்தமின்றியும் மனவொருமையுடன் உயிர்ப்பு ஒழுங்காக உள் புகுந் தும் புறம் போந்தும் இயங்கும்படி இருத்தல் மூன்றாவது உறுப்பாகும்.

நான்காவது உறுப்பாகிய வளிநிலை உயிர்ப்பை ஒழுங்காக இயங்கச்செய்து அதன் பயனை முற்றக்கொண்டு, இதயத்துடிப்பு, செந்நீர்ச்செலவு, விளக்கமான அறிவு மூன்றும் காரண காரியமாய் நிகழ்ந்து செம்மையுறப் பழகுதல் ஆகும்.

உயிர்ப்பு தன் விருப்பிற்செல்லும் குதிரைக்கு ஒப்பிட்டுக் கூறப்படுகிறது. குதிரைத் தலைவன் அதனைத் தன் விருப்பப்படி செலுத்தி நலன் உறுவதுபோல நாம் உயிர்ப்பு நெறியைப் பழகுதல் வேண்டும்; குதிரை ஏற்றம் பழகாத ஒருவனைக் குதிரை கீழே வீழ்த்துவதுபோல, உயிர்ப்பும் அதனை இயக்கும் முறை அறியாதானை வீழ்த்திவிடும்; விரைந்து இறந்துவிடச் செய்யும் என்கிறார் திருமூலர்.

ஐவர்க்கு நாயகன் அவ்வூர்த் தலைமகன்
உய்யக்கொண் டேறும் குதிரைமற் றொன்றுண்டு;
மெய்யர்க்குப் பற்றுக் கொடுக்கும்; கொடாதுபோய்
பொய்யரைத் தள்ளி விழுத்திடுந் தானே. -தி.10 பா.552

செலுத்தத் தெரிந்தால், பற்றுக்கொடுக்கும், ஏற இடங்கொடுக்கும், அவன் ஊர் காவலும் செய்யலாம், ஐவரையும் அடக்கி ஆளலாம். அதை அடக்கத் தெரியவில்லையோ, தான் கீழே வீழ்வன்; ஐவர் கலகம் செய்வர், ஊர் கெட்டுப் போகும். (ஐவர் - ஐம்பொறிகள், ஊர் - உடம்பு, தலைவன் - உயிர், மெய்யர் - உயிர்ப்பைப்பற்றி மெய்யாக அறிந்தவர், பொய்யர் - போலி அறிவினர்.

''சற்குரவன் அருளைப் பெற்றால் உயிர்ப்பு வசப்படும்''

இடத்துளையால் 16 மாத்திரைப் பொழுது உட்கொள்ளுதல் பூரகம்; உட்கொண்ட காற்றை 64 மாத்திரைப்பொழுது உள்ளே அடக்குதல் கும்பகம்; (வலத்தால்) 32 மாத்திரை அளவு வெளிவிடுதல் இரேசகம்; இதனை மீள வலத்தில் பூரித்தல் கும்பித்தல் இடத்தால் இரேசித்தல், என மாறி மாறிச் செய்தல் நாடி சோதனைக்கு உரிய மறைப் பொருளாம். பின் எப்போதும் இடத்தில் கொண்டு கும்பித்து வலத்தில் விடுதல் - பயிற்சிக்கு உரியது.

நாடி சோதனைக்கு நான்கு முறையும், பயிற்சிக்கு 16 முறையும் செய்யத் தக்கது என *சிவாக்கிர பத்ததி* கூறுகிறது. இங்ஙனம் செய்வார்க்கு உடலுக்கு வரக்கூடிய சில நோய்கள் வாரா; இருக்கும் சில நோய்கள் நீங்கும்; ஆயுள் நீடிக்கும். உடம்பு மந்திர வடிவாகவும் விளங்கும்.

அடுத்த உறுப்பு பிரத்தியாகாரம். இது கும்பகம் செய்யும் போது மனத்தை அவ்வுயிர்ப்புடன் குறிப்பிட்ட ஆதாரங்களிற் செலுத்துதல் தாரணை. அப்பழக்க முயற்சியால் ஆங்காங்கே மனத்தை நிறுத்துதல். இங்ஙனம் மூலாதாரம் முதலான ஆதாரங்களில் நிறுத்து தலால் வியக்கத்தக்க காட்சிகள் தோன்றும்.

மனத்தை ஒருக்குதலால் உபாதியாகிய தத்துவங்களையும், ஒளியுருவ இறையினையும் உணரும் ஆன்மாவினையும் எண்ணி, ஒன்றுகூடி அதில் அழுந்தல் பிரத்தியாகாரத்தால் கிடைக்கும் பெரும் பயன் என்பது திருமந்திரத்தில் விளக்கப்படுகிறது.

தியானம் சமாதி என்னும் உறுப்புக்கள் முறையே ஆதாரங்களில் உள்ள பொருள்களை உன்னுதலும், ஒன்றுபடுதலும் ஆகும். இங்கெல்லாம் உயிர்ப்பை ஒடுக்கிச் சுழு முனையைத் திறந்து ஒருக்குதல் மேற்செல்லல் என்பவை கூறப்படுகின்றன.

இவ் யோகத்தில் அகத்தே கேட்கப்படும் நாதங்களைத் திருமூலர் பின் வருமாறு கூறுகின்றார்.

மணிகடல் யானை வார்குழல் மேகம்
அணிவண்டு தும்பி வளைபே ரிகையாழ்
தணிந்தெழு நாதங்கள் தாமிவை பத்தும்
பணிந்தவர்க் கல்லது பார்க்க வொண்ணாதே. -தி.10 பா.593

இவ் யோகத்தின் பயன் தத்துவங்களினின்றும் பிரிந்து தன்னியல்பு உணர்தல் ஆகும்.

சுழுமுனை முடிவில் கண், காது, மூக்கு, நாக்கு என்பவற்றின் உணர்வு நரம்புகள் கூடும் இடம் உள்ளது. அங்கு நின்று தியானித்து அசைவற்றிருப்பின் முடிக்கு மேல் உள்ள வெளியில் அளவிறந்த மெய்யுணர்வைக் காண்குவீர், உமக்குக் காலன் என்னும் பேச்சு கனவிலும் வந்து அச்சம் தராது என்கிறார் திருமூலர். சமாதி நிலையில் இருப்போர்க்கு சமநிலை உண்டாகும்.

ஆதிசத்தி தன் சினந்தீர்ந்து கருணைச் சத்தியாக மாறும்; மெய்ப்பொருளைத் தலைப்படுதலும் கூடும்.

பின் அட்டாங்க யோகத்தினால் பெறும் பேறுகள் கூறி அவற்றில் வியக்கத்தக்கனவாக வரும் எண்சித்திகள் கூறப்படுகின்றன. அவை இத்தனை இத்தனை ஆண்டுகள் பயின்ற யோகப் பயிற்சியால் வரும் என்பதும் விவரிக்கப்படுகின்றன.

தானே அணுவும் சகத்துத்தன் நொய்ம்மையும்
மானாக் கனமும் பரகாயத் தேகலும்
தானாவ தும்பர காயஞ்சேர் தன்மையும்
ஆனாத உண்மையும் வியாபியு மாம் எட்டே. -தி.10 பா.634

என்பதனால் அணிமா முதலிய எண் பெருஞ்சித்தி இவை என்பது கூறப்படுகிறது.

உடல் அழியாமல் காக்க வேண்டிய அவசியமும், அதற்கு உரிய உபாயங்களும் பின் கூறப்படுகின்றன. இங்கு அசபையின் இயல்பும் கூறப்படுகிறது. காலச் சக்கரம் என்னும் பகுதியில், திதி, நாள் முதலிய வற்றை அறிந்து செயல் செய்க என்கிறார் முனிவர். ஆயுள் பரீக்ஷை வாரசரம், வார சூலம் என்பவை இப்பகுதியில் இடம் பெறுகின்றன.

இறைவன் படையாகிய முத்தலைவேல் (சூலம்) திங்கள் சனிகளில் கிழக்கில் நிற்கும். செவ்வாய் புதனில் வடக்கில் நிற்கும். ஞாயிறு வெள்ளியில் மேற்கில் நிற்கும். வியாழனில் தெற்கே நிற்கும். வழிச்செலவு மேற்கொள்ளும்போது சூலம் நிற்கும் திசை பின்னும் இடமும் ஆயின் துன்பம் இல்லை. முன்னும் வலமும் ஆயின் மேல்வினை மேன் மேல் விளையும்.

அடுத்துவரும் அதிகாரம் கேசரியோகம் எனப் பெயர் பெறுகிறது. கேசரி - சிம்மம். இதன் கருத்து பலவாறாக உரைக்கப் படுகிறது. கேசரயோகம் என்பாரும் உளர். இதில், முடியில் ஊற றெடுக்கும் அமுத ஆற்றைப் பிழைபடாமல் உடம்பில் நிரப்பினால் பாசம் நீங்கும் என்பது 'வண்ணான் ஒலிக்கும் சதுரப்பலகை மேல்''

என்னும் மந்திரத்தால் (தி.10 பா.784) கூறப்படுகிறது. 'செந்நீரைத் தூய்மை செய்யும் பிராணன், கண் மூக்கு செவி நா என்னும் நான்கும் கூடும் இடத்தில் ஒலிக்கின்றது; அங்கு வானீராறும் பாய்கிறது; அவ்வமுதநீர் வேற்று வழியால் நழுவிப் போகாதபடி நாவை மடித்து உள்துளையை அடைத்து அதனை, உடம்பிற் பாயச்செய்து மேல்நோக்கி இருந்தால் பாசம் நீங்கும் எனவும், விசிறிபோல் நாவை மடித்து அதன் நுனியால் மூச்சுத்துளையை அடைத்து அமுதநீரைத் தலையில் தேக்கினால், அது சீவனும், சிவனும் கூடி உறைவிடமாகிறது. மும்மூர்த்திகள் தேவர்கள் முப்பத்து மூவர் தன்மை விளங்கும். உடம்பு எல்லையின்றி நீளும். இங்குச் சிவாயநம என நினைக்க எனவும் சொல்கிறார்.

பின், இல்லாளோடு வாழ்வோர் தம்மைக் கட்டுப்படுத்தி வாழும் முறைகளைக் கூறும் பரியங்க யோகம் கூறப்படுகின்றது. அடுத்து வருவது அமுரிதாரணை. இதில் அமுத நீரை வீணாக்காமல் தேக்கிக் கொள்ளுதல் மீளவும் பேசப்படுகிறது. அமுரி என்பது சிறுநீர் எனக் கொள்ளப்படுகிறது. அது சுரப்பிகளில் இருந்து வரும் எல்லா நீரையும் குறித்தல் கூடும்.

உடலில் உள்ள குடிநீர் கடற்கரையில் உள்ள சிறுகிணற்றுத் தூய நீரை ஒக்கும். ஏற்றம் இட்டுப் பயிருக்கு இறைப்பது போல், உயிர்ப் படக்க முறையால் மேற்சென்று அதனை உடலிற்குப் பாய்ச்சினால், உயிர் தெளிவுணர்வு பெறும். முதல்வனை அகத்தே நாடிக் காணலும் ஆகும் என்கிறார் முனிவர்.

இந்நீரோடு நாள் ஒன்றுக்கு ஒரு மிளகு வீதம் நூறு மிளகு உண்டு வந்தால் உடல்வலி மிகும்; நரை மயிர்கறுக்கும்.

கரையரு கேநின்ற கானல் உவரி
வரைவரை என்பர் மதியிலா மாந்தர்
நுரைதிரை நீக்கி நுகரவல் லார்க்கு
நரைதிரை மாறும் நமனுமிங் கில்லையே. -தி.10 பா.832

என்னும் மந்திரப் பொருளுக்கேற்பச் சிறுநீரைத் தூய்மைப்படுத்தி சிலபல நோய்களை வடக்கே ஒரு மருத்துவர் நீக்கி வருவதாகச் செய்தித் தாளில் வந்துள்ளது. விண்வெளி வீரர்க்கு ரஷ்யாவில் இம்முறை பயன் படுத்தப்படுகிறது எனவும் கூறுகிறார்கள்.

இத்தந்திரத்தின் இறுதி அதிகாரம் சந்திரயோகம்.

மூன்றாந் தந்திரம் சந்திர யோகம் என்னும் அதிகாரத்தோடு

முற்றுப் பெறுகிறது. சுழுமுனையை மூன்று கண்டமாகக் கருதி மூலா தாரம் தொடங்கி முதற் கண்டத்தில் அங்கி மண்டலமும் (உண்ட ஊனைச் சரிக்கச் செய்யும் நெருப்பு உள்ள இடம்) நெஞ்சக் கமலத்தை ஒட்டிய கண்டத்தில் சூரிய மண்டலமும், முடியில் மதி மண்டலமும் உள்ளன என யோகநூல்கள் கூறுகின்றன. இவற்றில் முடியாகிய சந்திர மண்டலத்தில் அறிவை நிறுத்தி அமுதப்பெருக்கை நுகருமாற்றை மிகுத்துக் கூறுதல் பற்றி இப்பிரிவு இப்பெயர் பெற்றுள்ளது.

எய்து மதிக்கலை சூக்கத்தில் ஏறியே
எய்துவ தூலம் இருவகைப் பக்கத்துள்
எய்துங் கலைபோல ஏறி இறங்குமாம்
துய்யது சூக்கத்துத் தூலத்த காயமே. -தி.10 பா.834

பருநிலையில் அண்டத்தில் உள்ள மதி தன் கலை வளர்ந்தும் தேய்ந்தும் வருதல்போல, நுண்ணிதாய உடம்பினும் மதி மண்டலத்தின் அமுதக் கலைகள் வளர்ந்தும் தேய்ந்தும் வ்ரும் எனத் தொடங்குகிறார்.

புறத்தே ஞாயிறு, மதி, அங்கி, மீன்கள் உள்ளவாறு போல் அகத்தேயும் உள்ளன; அவை அறியற்பாலன. அவற்றின் கலைகள் அனைத்தையும் இடை பிங்கலை சுழுமுனை என்பவற்றின் மூலம் தலைக்கு ஏற்றி மூலத்திற்கு இறங்காதபடி காணும் யோகிகள் இறைவன் திருவடி கூடுவர்.

வலத்தால் பூரித்ததைக் கும்பித்து இடத்தால் இரேசித்தும், இடத்தால் பூரித்ததைக் கும்பித்து வலத்தால் இரேசித்தும் இவ்வாறு மாறி செய்துவரின் அச்சாணி போன்ற உடல் தன்னிலையில் தளராமல் பல்லாண்டுகள் இருக்கும்.

கொப்பூழ்த் தாமரையில் அங்கி வடிவாயுள்ள முதல்வனைப் பெறுவதற்குச் சாதனமாகிய சிவபீஜ மந்திரத்தை அல்லது அஞ்செழுத்தை அறியின், அவ்வழி நின்று எண்ணிவரின், மகனாகிய உயிரின்முன் தந்தையாகிய சிவன் தோன்றுவன் என்பவற்றைக் கூறி இச் சந்திரயோகம் வல்லவர் (சசிவன்னர்) ஊழையும் இறப்பையும் கடப்பர்; அவரே கால முதல்வர் ஆவர்.

மாறிவரும் இடைகலை பிங்கலை உயிர்ப்புக்கள் மாறுத லின்றித் தவறின்றிச் சுழுனையிற் செலுத்தப்பட்டால் உடம்பு தேயாது; இவ்வுலகிலேயே நீங்காத இன்பம் பெருகி வளரும். இதுவே வீடு பேற்றிற்கு வேண்டிய சாதனமும் ஆகும் என்பதனோடு சந்திர யோகம் முடிகிறது.

இங்ஙனம் ஒருவாறு பொருள்நிலை காட்டப்பட்டது. இவற்றுள் ஒரு பிரிவின் கருத்து ஏனைய பிரிவிலும் விளக்கத்தின் பொருட்டும் அதன் முதன்மை பற்றியும் திரும்பக் கூறப்படுதலைக் காணலாம். பலவற்றின் பொருள் துணியப்படாதவை என்பதும் எண்ணத்தக்கது.

இந்நூல் மிகப் பழமையையுடையது. ஆயினும் நூறு ஆண்டுகளாகத்தான் அச்சிடப்பெற்று வழங்குவது. அதனினும் குறைந்த கால அளவில்தான் ஆராயப்பட்டு வருகிறது. இதில் கருத்து வேறுபாடுகள் இருத்தல் இயல்பு. இங்குத் தருமை ஆதீனத்தால் வெளியிடப்படும் இவ்வுரையோடு கூடிய நூல் மேலும் உண்மையை நெருங்கி அணுகப் பெரிதும் துணை நிற்கும் என்பதில் ஐயம் இல்லை. ஆகவே, இவ்வுரையின் உரையாசிரியர் அனைவர்தம் மகிழ்ச்சிப் பாராட்டிற்கும் உரியவர்.

இத்தகைய வெளியீடுகளை எண்ணி ஒழிவின்றிச் செய்து வரும் தருமை ஆதீனக் குருமுதல்வர் அவர்களுக்குத் தமிழ் உலகும், சைவ உலகும், அவற்றிலும் அறிஞர் உலகும் நன்றிக் கடன் பூண்டு போற்றிப் பயன்கொள்ளுதற்கு உரியன. அங்ஙனம் கொள்வனவாக.

திருவாவடுதுறை,
03-06-74.

க. வச்சிரவேல் முதலியார்,
திருவாவடுதுறை ஆதீன வித்துவான்.

உ

சிவமயம்

முதல் பதிப்பின் மதிப்புரை

முனைவர் பா. நடராசன், எம். ஏ., டி லிட்.,
தமிழ்நாடு அரசுத் திட்டக்குழுவின் பொருளாதார ஆலோசகர்,
சென்னை.

இந்து சமயத்தின் இருகண்களாகக் கருதப்படுவன வேதமும் ஆகமமுமாகும். இவையிரண்டும் மிகத் தொன்மை வாய்ந்தவை. மொகஞ்சதாரோ, ஹரப்பா நகரங்களில் நிலவிய சமயம் ஆகமத்தை அடிப்படையாகக் கொண்டது. அந்நகர மக்கள் ஆலய வழிபாட்டையும் உருவ வணக்கத்தையும் மேற்கொண்டிருந்தனர் என்பதை அங்கே கிடைத்த அகழ்பொருட்கள் விளக்குகின்றன.

ஆகமக் கருத்துக்கள் பாரதநாட்டு மக்களிடையே வழங்கி வந்த பதினெண் மொழிகளிலும் பொதுவாகப் பரவியிருந்தன. எனினும், சிறப்பாக வடமொழி, தென்மொழி இரண்டிலும் பலப்பல நூல்களாக எழுதப்பட்டன. வேதங்கள் பன்னெடுங் காலமாக எழுதப்படாது வழங்கி வந்தமை போல, ஆகமங்களும் எழுதப் படாது குருசீட பரம்பரையாக நிலவி வந்தன. சமய தத்துவங்கள் வடமொழி, தமிழாகிய இரண்டிலுமே சிறப்பாக இந்நாட்டில் இருந்தன என்பதைத்,

''தமிழ்ச்சொல் வடசொல் எனுமிவ்விரண்டும்
உணர்த்தும் அவனை உணரலு மாமே'' -தி.10 பா.110

என்றும்,

''ஆரிய மும்தமி ழும்உட னேசொல்லிக்
காரிகை யார்க்குக் கருணைசெய் தானே'' -தி.10 பா.109

என்றும் வரும் திருமந்திரச் செய்யுட்களால் உணரலாம்.

மந்திரம் என்பது மனத்தின் நிலைத்த உறுதியான பேராற்றலின் விளைவைக் குறிக்கும். மண் - திரம் எனும் சொற்களின் புணர்ச்சியே மந்திரம் எனலாயிற்று எனல் பொருந்தும். இச்சொல்

மிகத்தொன்மை வாய்ந்த இலக்கணமாகிய *தொல்காப்பியத்தில்,*

''நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரமென்ப'' *-தொல். செய். நூற்பா 176*

என்ற நூற்பாவில் பயிலக் காண்கின்றோம். திருமூலரும்,

''ஆகும் அனுதி உடலல்லா மந்திரம்' -தி.10

என்ற அடியில் இதனை விளக்குகிறார்.

பசு பதி பாசம் பற்றிப் பேசும் இந்நூலில் ஒன்பது தந்திரங்கள் உள்ளன, முதல் நான்கும் சிவஞானத்தை அடைதற்கு விழைவார், அதற்குத் தம்மை உடலாலும் உளத்தாலும் செம்மைப்படுத்திக் கொள் ளுதற்குரிய வழிமுறைகளைக் கூறுகின்றன. சைவசித்தாந்தத் தத்து வங்களை ஐந்தாம் தந்திரம் உரைக்கின்றது. பின்னர் உள்ள ஆறுமுதல் ஒன்பது வரையுள்ளன ஞானத்தால் பெறும் நலங்களைக் கூறுகின்றன.

சைவத்தின் சமரசத்தை மலையிலக்காக எடுத்தோத வந்த நூல் திருமந்திரம். மூவரையும் ஒருவனாய்க் காட்டும் முதல் நூல்; இம்மூவரையும் பேதித்துப் பிளவு செய்வார் உண்மை உணராதவர் எனச் சாற்றும் நூல்.

ஆதிப் பிரானும் அணிமணி வண்ணனும்
ஆதிக் கமலத்து அலர்மிசையானும்
சோதிக்கில் மூன்றும் தொடர்ச்சியில் ஒன்றெனார்
பேதித்து உலகம் பிணங்குகின் றாரே. -தி.10 பா.87

என்பார் திருமூலர்.

கங்கையும் யமுனையும் கலந்து பேரியாறாய் வளஞ்செய்து பாய்வதொப்ப வேதமும் ஆகமமும் கலந்து சிவஞானச் செல்வத்தை வழங்கும் தன்மையது.

வேதமோடு ஆகமம் மெய்யாம் இறைவன்நூல்
ஓதும் பொதுவும் சிறப்புமென் றுள்ளன
நாதன் உரையவை நாடில் இரண்டந்தம்
பேதமது என்பர்; பெரியோர்க்கு அபேதமே. -தி.10 பா.2362

என்னும் அரிய மந்திரம் இருபெரும் ஞானக் கருவூலங்களையும் இணைத்து நிற்கக் காண்கிறோம்.

முழுமுதற் பரம்பொருளை அடைவதற்குக் குருவின் திருவருள் இன்றியமையாதது என்பதை வற்புறுத்திக் கூறுவது இந்நூல்; குருவே இறைவன்; இறைவனே குரு என உணர்த்துவது.

குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென்பது குறித்து ஓரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே உரையுணர்வு அற்றதோர் கோவே. -தி.10 பா.1561

உலக வாழ்வை வெறுத்தவரன்று திருமூலர். ஐம்புலன் களையும், புவன போகங்களையும் செம்மை நெறியிலே நின்று துய்த்துத் திருவருளைப் பெறல் வேண்டும் என்று கருதுவாராய், உடம்பை ஒறுக்காது பேணல்வேண்டும் என்று வற்புறுத்துவார்.

உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே. -தி.10 பா.708

என்றும்,

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானுக்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே. -தி.10 பா.1799

திருமந்திரத்தில் மெய்ஞ்ஞானமும் விஞ்ஞானமும் பேசப் படுகின்றன. இன்றைய விஞ்ஞானிகள் கண்ட அணுவும், அணுவினுள் அணுவும் அன்றே அவர்கண்ட உண்மைகள். விஞ்ஞானிகளால் இன்னும் அறிதற்கரிய பல உண்மைகள் திருமந்திரத்தில் உள்ளன. 'அமுரிதாரணை' என்பது திருமந்திரத்தில் ஒரு பகுதியாகும். சிறுநீர் கொள்ளும் இம்முறையை எள்ளியவர்களும் உண்டு. ஆயின், அண்மையிலே சிறுநீர் மருத்துவ முறையிலே இதயநோய் முதலிய பல்வகைப் பிணிகளை மாற்றுவதற்கு அருமருந்தாய் உதவுகிற தெனக் கண்டுள்ளனர். இங்ஙனம் எத்தனை உண்மைகளை இந்நூல் விளக்குமோ! காலம் காட்டும்; யாரறிவார் இதன் பெருமை.

இந்நூல் தோத்திர நூல்; சாத்திர நூல்; மந்திர நூல்; தந்திர நூல்; மெய்ஞ்ஞான நூல்; விஞ்ஞான நூல். இம்மையும் மறுமையும் காட்டும் செம்மை வாய்ந்த நூல்; யோக நூல்; போக நூல்; மருத்துவ நூல்; சித்த நூல்; இன்னும் வியத்தகும் கருத்துக்கள் பலவற்றை விளக்கும் அரிய நூல்.

இத்தகைய அரிய ஞானக் கருவூலம் தந்தருளிய திருமூலர் மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்த முனிவரெனக் கூறுவர்; ஆனால் அவர் எழுதிய திருமந்திரம் மூவாத மெய்ஞ்ஞான நூலாய் உலகம் உள்ள வரை நிலவும். இத்தகைய மெய்ஞ்ஞானி வாழ்ந்த காலத்தைப் பல்வேறு கோணங்களிலே இருந்து ஆய்வார் உண்டு. கடைச்சங்க காலத்திலே இருந்து சுந்தரமூர்த்தி நாயனார் காலம் வரை முன்னும் பின்னுமாகக் கூறுவர். இலக்கியமும் வரலாறும் இவர் ஐந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தாரென்பதைத் தெளிவுறக் காட்டுகின்றன. எக்காலத்தில் இருந்தவராயினும் முக்காலமும் உணர்ந்த இம்முனிவர் பெருமான் ''எண்ணிலி கோடியும்'' வாழ்பவர் என்பதில் ஐயமில்லை.

திருமந்திரம் பலபதிப்புக்களாக முன்னர் வெளிவந்து உள்ளது.

சைவத்தையும், தமிழையும் வளர்ப்பதையே தம்பிறவிப் பெரும்பயனாகக் கருதும் தருமை ஆதீன 26ஆவது குருமகா சந்நிதானமாகிய ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் திருவருளால் திருமந்திரத்தில் மூன்று தந்திரங்கள் தெளிவுரை, குறிப்புரை தாங்கி வெளிவருதல் பெரு மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். முன்னைய பதிப்புக்களிலும், இப்பதிப்பில் சிற்சில மாற்றங்கள் காணப்படுகின்றன. வேறு பதிப்புக்களில் காணப்பட்ட பாயிரச் செய்யுட்களில் சில முதல் தந்திரத்திலே சேர்க்கப் பட்டிருக்கின்றன. உரையிலே திருவாசகம் போன்ற சமய நூற்பகுதிகள் மேற்கோள் செய்யப்பட்டுள்ளன. திருமந்திரச் சாயல் தாங்கிய சமய நூல்கள் ஆங்காங்குக் குறிக்கப்பட்டிருக்கின்றன. இங்ஙனம் பல வகையானும் விளக்கமும் திருத்தமும் பெற்று வெளிவரும் தருமை ஆதீனத் திருமந்திர இவ்வெளியீடு சைவத்துறை நிற்பார்க்குப் பேருதவியாக விளங்கும். இதனை வெளியிட்ட தருமை ஆதீனத்திற்கு அறிவுலகும் ஆன்ம உலகும் என்றும் கடப்பாடுடையதாகும்.

உ

சிவமயம்

திருமூல நாயனார் வரலாறு

திருமுறை ஆராய்ச்சிக் கலைஞர்
வித்துவான் க. வெள்ளைவாரணம் அவர்கள்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்.

செந்தமிழ்ச் சிவாகமம்:

'சிவபூமி' எனப் போற்றப் பெறுஞ் சிறப்புவாய்ந்த நம் நாட்டின் தொன்மை வாய்ந்த சமயமாகத் திகழ்வது; சைவ சமயமாகும். உலகமக்கள் உள்ளத்திலே தெய்வம் உண்டு என்னும் தெளிவினை நல்கி அன்பு நெறியில் ஒழுகப்பணித்து அறிவு நெறியை வளர்ப்பன தெய்வநெறிச் சிவம் பெருக்கும் சைவ சமய அருளாசிரியர்கள் அருளிய பன்னிரு திருமுறைகளாகும். திருமுறைப் பனுவலாகிய அருள் நூல்களுள் பத்தாம் திருமுறையாகத் திகழ்வது, தமிழ் மூவாயிரமாகிய திருமந்திரமாகும். திருமந்திரமாலை என்னும் இத்திருமுறை, சைவசித்தாந்த சாத்திரமாகவும் இறைவன் திருவருளைப் போற்றிப் பரவும் தோத்திர மாகவும் விளங்குந் தனிச் சிறப்புடையது; வேத நெறியாகிய உலகியலொழுக்கத்தையும் மிகு சைவத் துறையாகிய சிவாகமவுண்மைகளையும் இனிய தமிழால் விரித்து விளக்குவது. உலக மக்கள் எல்லோரும் பொதுவாக மேற்கொள்ளுதற்குரிய நல் வாழ்க்கை முறையினையும் சிவநெறிச் செல்வர்களாற் சிறப்பாக மேற் கொள்ளத்தக்க ஞானயோக நுண்பொருள்களையும் ஒருங்கே விளக்குவதாய்ச் சைவசித்தாந்த மெய்ந்நூற் பொருளை அறிவுறுத்தும் செந்தமிழ்ச் சிவாகமமாகத் திகழ்வது இத்திருமந்திரமேயாகும்.

திருத்தொண்டர் திருவந்தாதியில்:

திருமந்திர மாலையாகிய இத்திருவருட் பனுவலை அருளிச் செய்தவர், இறைவனருளால் எண்வகைச் சித்திகளும் பெற்றுச் சிவமே பெறுந்திருவினராய் எல்லாவுயிர்களிடத்தும் அருளுடையராய்ப் பன்னெடுங்காலம் சிவயோக நிலையில் அமர்ந்திருந்து 'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் நல்ல குறிக்கோளுடைய ராய்த் தாமுணர்ந்த ஞானப்பொருளைத் தண்ணார் தமிழால்

உலகத்தார்க்கு வழங்கியருளிய திருமூல நாயனாராவர். இவ்வாசிரியரை.

''நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்'
-தி.7 ப.35 பா.5

என நம்பியாரூரராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத் தொகையிற் பரவிப் போற்றியுள்ளார். செந்தமிழ் நாட்டின் சிறந்த சிவயோகியாய் முக்காலமுணர்ந்த அறிவராகிய திருமூலநாயனாரது வரலாறு, திருத்தொண்டத் தொகையின் வகையாகிய (தி.11) திருத்தொண்டர் திருவந்தாதியிற் சுருக்கமாகவும் விரிநூலாகிய திருத்தொண்டர் புராணத்தில் விரிவாகவும் விளக்கப் பெற்றுள்ளது. நம்பியாண்டார் நம்பிகள் தாம் இயற்றிய (தி.11) திருத்தொண்டர் திருவந்தாதியில்,

குடிமன்னு சாத்தனூர்க் கோக்குல
மேய்ப்போன் குரம்பைபுக்கு
முடிமன்னு கூனற் பிறையாளன்
றன்னை முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படி
யேபர விட்டெ னுச்சி
அடிமன்ன வைத்த பிரான் மூல
னாகிய அங்கணனே. -தி.11 ப.33 பா.36

எனவரும் திருப்பாடலில் திருமூல நாயனாரது வரலாற்றை வகுத்துக் கூறியுள்ளார். ''நற்குடிகள் நிலைபெற்று வாழும் சாத்தனூரிலே பசுக் கூட்டத்தை மேய்ப்போனாகிய இடையனது உடம்பிற் புகுந்து, சென்னியிலே நிலைபெற்ற வளைந்த பிறைச் சந்திரனை யணிந்த சிவபெருமானை முழுமை வாய்ந்த தமிழிற் கூறியவண்ணமே நிலைத்த வேதங்கள் சொல்லியபடியே பரவிப் போற்றி எனது தலையிலே தன் திருவடியினை நிலைபெறச் செய்தருளிய பெரியோன் திருமூலன் என்னும் பெயரையுடைய அருளாளனாவன்'' என்பது இத் திருப்பாடலின் பொருளாகும். சிவயோகியராகிய சித்தர் புகுந்திருந்த உடம்பு சாத்தனூரில் ஆநிரை மேய்க்கும் மூலன் என்னும் இடைய னுடைய உடம்பு என்பதும், இறைவன் அருள்வழி அவ்வுடம்பிற் புகுந்த சிவயோகியார் ஞான நிறைவுடைய முழுத் தமிழின்படியும் வேதத்தின் சொற்படியும் பிறைமுடிப் பெருமானாகிய சிவபெரு மானைப் பரவிப் போற்றிச் சிவாகம வேதப் பொருளைச் செந்தமிழால் அருளிச் செய் தார் என்பதும் இத் திருவந்தாதியால் இனிது புலனாதல் காணலாம்.

திருத்தொண்டர் புராணத்தில்:

அருண்மொழித் தேவராகிய சேக்கிழாரடிகள், திருத் தொண்டத் தொகையின் விரியாகத் தாம் இயற்றிய திருத்தொண்டர் புராணத்திலே திருமூல நாயனாரது வரலாற்றினை இருபத்தெட்டுப் பாடல்களால் விரித்துக் கூறியுள்ளார்.

தென்னாடு வருகை:

திருக்கயிலாயத்திலே சிவபிரானது திருக்கோயிலில் முதற் பெருங் காவல் பூண்டவர் திருநந்திதேவர். அவரது திருவருள் பெற்ற மாணாக்கராகிய சிவயோகியார் ஒருவர். அவர் அணிமா முதலிய எண்வகைச் சித்திகளும் வாய்க்கப் பெற்றவர்; அகத்திய முனிவர்க்கு நண்பர். அம் முனிவருடன் சில நாள் தங்குதற்கு எண்ணிய சிவ யோகியார், பொதியமலையை அடைதற்கு எண்ணித் திருக்கயிலாயத் தினின்றும் புறப்பட்டுத் தென்திசை நோக்கி வந்தார். வரும் வழியில் திருக்கேதாரம், பசுபதிநாதம் (நேபாளம்), அவிமுத்தம் (காசி), விந்தமலை, திருப்பருப்பதம், திருக்காளத்தி, திருவாலங்காடு ஆகிய திருத் தலங்களைப் பணிந்து காஞ்சி நகரையடைந்தார். அங்குத் திருவேகம் பத்தில் எழுந்தருளிய பெருமானை இறைஞ்சிப் போற்றினார். கல்வியிற் கரையிலாத காஞ்சி நகரில் வாழும் சிவயோகியர்களாகிய தவமுனிவர் பலருடனும் அளவளாவி மகிழ்ந்தார். பின்னர்த் திருவதி கையை யடைந்து திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளை வழிபட்டுப் போற்றினார். இறைவன் அற்புதத் திருக்கூத்தாடியருளும் திருச்சிற்றம் பலத்தினைத் தன்னகத்தே கொண்டு திகழும் பொற்பதியாகிய பெரும் பற்றப் புலியூரை வந்தடைந்தார். அங்குக் கூத்தப் பெருமானைப் போற்றித் தம் உள்ளத்தே பொங்கியெழுந்த சிவஞானமாகிய மெய் யுணர்வினால் சிவானந்தத் திருக்கூத்தினைக் கண்டுகளித்து ஆராத பெருவேட்கையினால் தில்லைப் பதியில் சிலகாலம் தங்கியிருந்தார்.

சாத்தனூரில்:

தில்லைத் திருநடங்கண்டு மகிழ்ந்த சிவயோகியார், அங்கிருந்து புறப்பட்டுக் காவிரியில் நீராடி அதன் தென்கரையினை அடைந்தார். உமையம்மையார் பசுவின் கன்றாக இருந்து இறைவனை வழிபாடு செய்து அம்முதல்வனுடன் எழுந்தருளியிருந்து மன்னுயிர்க்கு அருள் புரியுந் திருத்தலமாகிய திருவாவடுதுறையை அணுகித் திருக்கோயிலை வலம் வந்து வழித்துணை மருந்தாகிய மாசிலா

மணியீசரை வழிபட்டு மகிழ்ந்தார். அந்நிலையிலே அத் தலத்தை விட்டு நீங்காததொரு கருத்து அவருள்ளத்தே தோன்றியது. அதனால் அத்தலத்திலே தங்கியிருந்தார். ஆவடுதுறையீசர்பால் ஆராத காதலையுடைய சிவயோகியார், அத்தலத்தை அரிதின் நீங்கிச் செல்லத் தொடங்கினார். அவர் செல்லும் வழியிற் காவிரிக் கரையிலுள்ள சோலையிலே மேய்ந்துகொண்டிருந்த பசுக்கள் கதறி யழுவதனை எதிரே கண்டார். அந்தணர்கள் வாழும் சாத்தனூரிலே ஆநிரை மேய்க்குங் குடியிற் பிறந்த ஆயனாகிய மூலன் என்பான் அவ் விடத்தே தனியே வந்து பசு நிரையை மேய்க்குந் தொழிலில் ஈடு பட்டவன், தான் எடுத்த பிறவிக்குக் காரணமாகிய வினைகள் நுகர்ந்து தீர்ந்தமையால் அவனது வாழ்நாளைக் கூற்றுவன் கவர்ந்துகொள்ள உயிர்நீங்க அங்கு நிலத்தில் வீழ்ந்து இறந்து வெற்றுடலாய்க் கிடந்தான். அவனது உயிர்பிரியவே அவனால் அன்புடன் மேய்க்கப்பெற்ற பசுக்கள் அவனது உடம்பினைச் சுற்றி நெருங்கிநின்று மோப்பனவும் கதறுவனவுமாகி வருந்தின.

திருமூலராதல்:

ஆக்களின் பெருந்துயரத்தைச் சிவயோகியார் கண்டார். அருளாளராகிய அவருள்ளத்திலே 'பசுக்கள் உற்ற துயரத்தை நீக்குதல் வேண்டும்' என்னும் எண்ணம் இறைவன் திருவருளால் தோன்றியது, 'இந்த ஆயன் உயிர் பெற்றெழுந்தாலன்றி இப்பசுக்கள் துயரம் நீங்கா'' எனத் தெளிந்த சிவயோகியார், தம்முடைய உடம்பினைப் பாதுகாப்புடைய ஓரிடத்தில் மறைத்து வைத்துவிட்டுத் தாம் பயின்றுணர்ந்த பரகாயப் பிரவேசம் (கூடுவிட்டுக் கூடுபாய்தல்) என்னும் பவன வழியினாலே தமது உயிரை ஆயனாகிய மூலனது உடம்பிற் புகும்படி செலுத்தித் திருமூலர் என்னும் பெயருடையராய் எழுந்தார். அவர் ஆயனுடம்புடன் எழுதலும், சுற்றி நின்ற பசுக்கள் யாவும் தம் துயரம் நீங்கி அன்பின் மிகுதியால் அவரது உடம்பினை நாத்தழும்ப நக்கிமோந்து கனைத்து மிகுந்த களிப்புடன் துள்ளியோடித் தாம் விரும்பிய இடங்களிற் சென்று புல்லை மேய்ந்தன. அதுகண்டு மகிழ்ந்த திருமூலர் பசுக்கள் விரும்பிப் புல்மேயும் இடங்களில் உடன் சென்று நன்றாக மேய்த்தருளினார். வயிறார மேய்ந்த பசுக்கள் கூட்டமாகச் சென்று காவிரியாற்றின் துறையில் இறங்கி நல்நீர் பருகிக் கரையேறின. திருமூலர் அப்பசுக்களைக் குளிர்ந்த நிழலிலே தங்கி இளைப்பாறச் செய்து பாதுகாத்தருளினார்.

ஊரவர் உண்மை உணர்தல்:

அந்நிலையில் கதிரவன் மேற்குத் திசையை யணுக, மாலைப்

பொழுது வந்தது. பசுக்கள் தத்தம் கன்றுகளை நினைந்து தாமே மெல்ல நடந்து சாத்தனூரை அடைந்தன. அவை செல்லும் வழியிலே தொடர்ந்து பின் சென்ற திருமூலர், பசுக்கள் தத்தமக்குரிய வீடுகளிற் சென்று சேர்ந்த பின்னர் அவ்வூர் வழியில் தனித்து நின்றார். அப்பொழுது ஆயனாகிய மூலனுடைய மனைவி ''என் கணவர் பொழுது சென்றும் வரவில்லையே, அவர்க்கு என்ன நேர்ந்ததோ'' என்று அஞ்சியவளாய்த் தன் கணவனைத் தேடிக் கொண்டு வழியெதிரே செல்பவள் திருமூலராகிய சிவயோகியார் நின்ற இடத்தை அடைந்தாள். தன் கணவனது உடம்பிற்றோன்றிய உணர்வு மாற்றத்தைக் கண்டாள். 'இவர்க்கு ஏதோ தீங்கு நேர்ந்திருத்தல் வேண்டும்' என எண்ணினாள்; அவரைத் தளர்ச்சியின்றித் தன் வீட்டுக்கு அழைத்துச் செல்லும் கருத்துடன் அவருடம்பைத் தொடு தற்கு நெருங்கினாள். அதுகண்ட திருமூலராகிய சிவயோகியார் அவர் தம்மைத் தீண்டாதபடி தடுத்து நிறுத்தினார். நெருங்கிய சுற்றத்தார் எவருமின்றித் தனியளாகிய அவள் திருமூலரது தொடர்பற்ற தனி நிலையைக் கண்டு அஞ்சிக் கலக்கமுற்றாள். ''நும்பால் அன்புடைய மனைவியாகிய எளியேனை வெறுத்து நீங்குதலாகிய இதனால் எனக்குப் பெருந்துன்பத்தைச் செய்துவிட்டீர்'' என்று புலம்பி வாட்ட முற்றாள். நிறைதவச் செல்வராகிய திருமூலர் அவளைப்பார்த்து, ''நீ எண்ணியபடி உனக்கு என்னுடன் எத்தகைய உறவும் இல்லை' என்று சொல்லிவிட்டு அவ்வூரிலுள்ள பொது மடத்திற் புகுந்து சிவ யோகத்தில் அமர்ந்திருந்தார்.

தன் கணவனது தன்மை வேறுபட்டதனைக் கண்ணுற்ற மூலன் மனைவி, அது பற்றி யாரிடமும் சொல்லாமலும் தவநிலையினராகிய அவர்பால் அணையாமலும் அன்றிரவு முழுதும் உறங்காதவளாய்த் துயருற்றாள். பொழுது விடிந்தபின் அவ்வூரிலுள்ள நல்லோரை யடைந்து தன் கணவனது நிலைமையை எடுத்துரைத்தாள்..அதனைக் கேட்ட பெரியோர்கள் திருமூலரை அணுகி அவரது நிலையை நாடி உற்று நோக்கினார்கள். 'இது பித்தினால் விளைந்த மயக்கம் அன்று; சித்த விகாரக் கலக்கங்களை யெல்லாம் அறவே களைந்து தெளிவுபெற்ற நிலையில் சிவயோகத்தில் அழுந்திய கருத்தினராய் இவர் அமர்ந்திருக்கின்றார். இந்நிலைமை யாவராலும் அளந்தறிதற்கு அரியதாகும்' எனத் தெளிந்தார்கள். 'இவர் இருவகைப் பற்றுக்களையும் அறுத்து ஞானோபதேசத்தால் பரமர் திருவடியைப் பெற்ற சீவன் முத்தர்களைப் போன்று எல்லாவற்றையும் ஒருங்கே அறியவல்ல முற்றுணர்வுடைய முனிவராக விளங்குகின்றார். எனவே முன்னை நிலைமைப்படி உங்கள் சுற்றத் தொடர்பாகிய குடும்ப

வாழ்க்கையில் ஈடுபடமாட்டார்' என மூலனுடைய மனைவிக்கு எடுத்துரைத்தார்கள். அதுகேட்டு அவள் அளவிலாத் துயரத்தால் மயக்கமுற்றாள். அருகேயுள்ளவர்கள் அவளுக்குத் தேறுதல்கூறி வீட்டுக்கு அழைத்துச் சென்றனர்.

திருவாவடுதுறையில் சிவயோகம்:

சாத்தனூர்ப் பொதுமடத்தில் சிவயோகத்தில் அமர்ந்திருந்த திருமூலர். யோகுகலைந்து எழுந்து முதல்நாளில் பசுக்கள் வந்த வழியினையே நோக்கிச் சென்று தமது உடம்பினை மறைத்து வைத்த இடத்தை அடைந்து தம் உடம்பைத் தேடிப்பார்த்தார். வைத்த இடத்தில் அவ்வுடம்பு காணப்படவில்லை. அது மறைந்து போன செயலை மெய்யுணர்வுடைய சிந்தையில் ஆராய்ந்து தெளிந்தார்.

'சிவபெருமான் உயிர்கள் பால்வைத்த பெருங்கருணை யினாலே அருளிச் செய்த சிவாகமங்களின் அரும்பொருள்களை இந் நிலவுலகில் திருமூலரது வாக்கினால் தமிழிலே வகுத்துரைக்கக் கருதிய திருவருட்டிறத்தால் சிவயோகியாரது முன்னைய உடம்பினை இறைவர் மறைப்பித்தருளினார்' என்ற உண்மையினைத் திருமூலர் தமது முற்றுணர்வினால் தெளிய வுணர்ந்தார். சாத்தனூரிலிருந்து தம்மைப் பின்தொடர்ந்து வந்த ஆயர் குலத்தவர்க்கும் தமக்கும் எத்தகைய உறவும் இல்லை என்று அவர்களுக்குத் தெளிவாக எடுத்துரைத்தார், அவர்களெல்லோரும் தம்மை விட்டு நீங்கியபின் சிவபெருமான் திருவடிகளைச் சிந்தித்து அவ்விடத்தை விட்டு நீங்கித் திருவாவடுதுறைத் திருக்கோயிலை அடைந்தார்; அங்கு எழுந்தருளிய அம்மையப்பரை வணங்கி அத் திருக்கோயிலின் மேற்றிசையிலுள்ள அரசமரத்தின் கீழ்த் தேவாசனத்தில் சிவயோகத்தில் அமர்ந்து, நெஞ்சத் தாமரையில் வீற்றிருந்தருளும் செம்பொருளாம் சிவபரம் பொருளுடன் உணர்வினால் ஒன்றியிருந்தார்.

திருமந்திரம் அருளிச் செய்தல்

இங்ஙனம் சிவயோக நிலையில் அமர்ந்திருந்த திருமூல நாயனார். ஊனொடு தொடர்ந்த பிறவியாகிய தீய நஞ்சினாலுளவாம் துயரம் நீங்கி உலகத்தார் உய்யும் பொருட்டு ஞானம் யோகம் சரியை கிரியை என்னும் நால்வகை நன்னெறிகளும் நால்வகை மலர்களாக விரிந்து ஞானமணம் பரப்பிச் சிவானந்தத் தேன் பிலிற்றும் திருமந்திர மாலையாகிய செந்தமிழ்ப் பனுவலை இறைவன் திருவடிக்கு அணிந்து

போற்றும் நிலையில்,

ஒன்றவன் தானே, இரண்டவன் இன்னருள்,
நின்றனன் மூன்றினுள், நான்குணர்ந்தான், ஐந்து
வென்றனன், ஆறு விரிந்தனன், ஏழும்பர்ச்
சென்றனன், தானிருந் தானுணர்ந் தெட்டே. -தி.10 பாயி. பா.2

என்னும் திருப்பாடலைத் தொடங்கி, ஓராண்டுக்கு ஒரு திருப்பாடலாக மூவாயிரம் ஆண்டுகள் சிவயோகத் தமர்ந்திருந்து மூவாயிரம் திருப் பாடல்களைத் திருவாய் மலர்ந்தருளினார்.

இவ்வாறு தமிழ் மூவாயிரமாகிய திருமந்திர மாலையை நிறைவு செய்தருளிய திருமூல நாயனார் சிவபெருமானது திரு வருளாலே திருக்கயிலையை யடைந்து இறைவன் திருவடி நீழலில் என்றும் பிரியாதுறையும் பேரின்ப வாழ்வினைப் பெற்று இனி திருந்தார். திருமூலர் அருளிய திருமந்திர மாலை 'நலஞ் சிறந்த ஞான யோகக் கிரியா சரியையெலாம் மலர்ந்த மொழிமாலையாகத் திகழ் கின்றது' எனச் சேக்கிழார் பெருமான் திருமூலநாயனார் வரலாற் றினைப் பெரிய புராணத்தில் விரித்துக் கூறியுள்ளார்.

திருமூலரது முன்னை நிலை:

இங்ஙனம் திருமூல நாயனார் வரலாறாகச் சேக்கிழார் நாயனார் விரித்துரைத்த நிகழ்ச்சிகள் பலவற்றுக்குத் திருமந்திரத்தில் திருமூலர் தம் வரலாறு கூறும் முறையில் அருளிச் செய்த திருமந்திரப் பாடல்கள் அகச்சான்றுகளாக அமைந்துள்ளன.

மூலன் என்னும் ஆயனது உடம்பிற் புகுந்து திருமந்திர மாலையை அருளிச் செய்த முனிவர்பிரான் திருக்கயிலையில் நந்தி தேவர்பால் ஞானோபதேசம் பெற்ற நான்மறையோகிகளுள் ஒருவர் எனவும் அருளாளராகிய அவர் சாத்தனூரை அடைந்த பொழுது மூலனால் மேய்க்கப்பெற்ற பசுக்களின் துயரம் நீங்கத் தமது சித்தித் திறத்தால் தமது உயிரை மூலனது உடம்பிலே புகச் செய்து, திருமூலர் என்னும் பெயர் பெற்றுத் திருமந்திர மாகிய செந்தமிழ் ஆகமத்தை அருளிச் செய்தார் எனவும் நம்பியாண்டார் நம்பியும் சேக்கிழா ரடிகளும் தெளிவாகக் கூறியிருத்தலால், திருமந்திர நூலாசிரியர்க்கு வழங்கும் திருமூலர் என்னும் இப்பெயர் அவர் மூலன் என்னும் ஆயனது உடம்பிற் புகுந்த பின்னரே உளதாயிற்று என்பது நன்கு புலனாகும். நந்தி தேவர் பால் அருளுபதேசம் பெற்ற நான்மறை யோகியராகிய அவர், தம்முன்னை நிலையில் அவர் பிறந்த ஊர், குடி,

பேர் முதலியவற்றை அறிந்து கொள்ளுதற்குரிய வரலாற்றுச் சான்றுகள் தெளிவாகக் கிடைக்காமையால், அவரது வரலாறு கூற வந்த சேக்கிழாரடிகள், சிவயோகியார் மூலனுடம்பிற் புகுந்து திருமூலர் என்னும் பெயர் பெறுவதற்கு முன்னுள்ள அவர்தம் ஊர், பேர், குலம், முதலிய வரலாற்றுச் செய்திகளைக் குறித்து எதுவும் கூறாது விட்டார் எனக் கருதவேண்டியுள்ளது.

திருமந்திரத்தில் அகச்சான்று - நந்திதேவர் அருள்:

திருமூலராகிய சிவயோகியார் திருக்கயிலையில் நந்திதேவர் பால் ஞான நூற் பொருள்களை ஓதியுணர்ந்த நான்மறை யோகிகளுள் ஒருவர் என்பது,

நந்தி யருள்பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரர்
என்றிவர் என்னோ டெண்மரு மாமே. -தி.10 பா.6

எனவரும் திருமூலர் வாய்மொழியால் நன்கு தெளியப்படும்.

சிவயோக சித்தர்:

சிவயோகியார் திருமூலராவதற்கு முன் அட்டமாசித்திகளும் கைவரப்பெற்றவர் என்பதும், பசுக்களின் துயரத்தினை நீக்கும் பொருட்டே இறைவன் அருளின்வழி தம் உடம்பினை ஓரிடத்தில் மறைத்து வைத்துவிட்டு மூலன் என்னும் ஆயனது உடம்பிற் புகுந்து பசுக்களைச் சாத்தனூரிற் செலுத்தி மீண்டுவந்து தம் பழையவுடம் பினைத் தேடிப் பார்த்து இறைவனருளால் அவ்வுடம்பு மறைந்தொழிய அதனைக் காணாதவராய், தமது முன்னைய உடம்பினாற் பயனில்லை யெனவுணர்ந்து இறைவன் திருக்குறிப்பின் வண்ணம் மூலன் உடம்பிலேயே நெடுங்காலம் விரும்பித் தங்கியிருந்தனர் என்பதும்,

''அரிய தெனக்கில்லை அட்டமாசித்தி
பெரிதருள் செய்து பிறப்பறுத்தானே'' -தி.10 பா.626

எனவும்

நந்தியருளாலே நாதனாம் பேர்பெற்றோம்
நந்தியருளாலே மூலனை நாடினோம்
நந்தி அருளாஅது என்செயும் நாட்டினில்
நந்திவழிகாட்ட நானிருந் தேனே. -தி.10 பா.7

எனவரும் திருமூலர் வாய்மொழிகளால் நன்கு விளங்கும். மேற்குறித்த திருமந்திரம் 7ஆம் பாடலில் 'நந்தி அருளா அது' எனத் திருமூலர் சுட்டியது, இறைவனால் மறைக்கப்பட்ட தமது பழைய உடம்பினை. நந்தியால் அருளப்படாத அப்பழைய உடம்பு நாட்டிலுள்ளோர்க்கு என்ன பயனைத் தரவல்லது? ஒரு பயனையுந் தாராது என அதனை, வெறுத்து விடும் நிலையில் 'நந்தி அருளா அது என்செயும் நாட்டினில்' (தி.10 பா.7) என வினவிய குறிப்பு ஆழ்ந்துணரத் தகுவதாகும்.

திருவருட் செயல்:

இவ்வாறு இறைவன் தமது பழைய உடம்பினை மறைத்து மூலன் என்னும் ஆயனுடம்பிற் புகச்செய்தருளிய இப்படைப்புத் தொழில், அம்முதல்வனது பொருள்சேர் புகழ்த்திறங்களைத் தமிழ்ப் பாக்களால் நன்றாகப் புனைந்து போற்றுதற்கேற்ற நலந்தரும் வாழ் வினை நல்கியதென வுணர்ந்த சிவயோகியார், பரகாயப் பிரவேசம் என்னும் சித்தித் திறத்தால் தாம் புகுந்திருந்த மூலனுடம்பினை ''எனது முன்னைத் தவத்தின் பயனாக எனக்கு இறைவனால் நன்றாகத் திருத்தமுறச் செய்தளிக்கப்பட்ட நல்ல படைப்பு இதுவாகும்'' எனக் கொண்டு போற்றி மகிழ்ந்தனர் என்பது,

பின்னை நின்றென்னே பிறவி பெறுவது
முன்னை நன்றாக முயல்தவஞ் செய்திலர்
என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்ச் செய்யுமாறே. -தி.10 பா.20

எனவரும் அவரது வாய்மொழியால் இனிது விளங்கும்.

ஆவடுதுறையில் அருள்யோகம்:

மூலனுடம்பிற் புக்க சிவயோகியார், திருவாவடுதுறைத் திருக்கோயிலை வழிபட்டு அங்குள்ள சிவபோதியாகிய அரசமரத்தின் நீழலில் எண்ணில்லாத பல்லாண்டுகள் இறைவனை ஞானத்தால் தொழுது சிவயோகத்தில் அமர்ந்திருந்தார் என்பது,

சேர்ந்திருந் தேன்சிவ மங்கைதன் பங்கனைச்
சேர்ந்திருந் தேன்சிவ னாவடு தண்டுறை
சேர்ந்திருந் தேன்சிவ போதியின் நீழலிற்
சேர்ந்திருந் தேன்சிவன் நாமங்கள் ஓதியே. -தி.10 பா.18

எனவும்,

இருந்தேன் இக்காயத்தே எண்ணிலி கோடி
இருந்தேன் இராப்பகல் அற்ற இடத்தே
இருந்தேன் இமையவர் ஏத்தும் பதத்தே
இருந்தேன் என்நந்தி இணையடிக் கீழே. -தி.10 பா.19

எனவும்,

ஞானத் தலைவிதன் நந்தி நகர்புக்கு
ஊனமில் ஒன்பது கோடி யுகந்தனுள்
ஞானப்பா லாட்டி நாதனை அர்ச்சித்து
நானு மிருந்தேன்நற் போதியின் கீழே. -தி.10 பா.21

எனவும் வரும் திருமூலர் வாய்மொழிகளால் இனிது புலனாம்.

இத்திருப்பாடலில் 'நந்திநகர்' என்றது திருவாவடு துறையினை.

திருமந்திரமாலை என்னும் பெயர்:

சிவபெருமான் திருவடிகளைச் சென்னியிற் கொண்டு அம்முதல்வன் அருளிய சிவாகமப் பொருளை விரித்துரைக்க எண்ணிய திருமூலநாயனார் சிவனருளைச் சிந்தித்திருந்து தமிழ் மூவாயிரமாகிய மந்திரப்பனுவலை அருளிச் செய்தார் என்பதும், இவ்வருள் நூலுக்குத் திருமூலர் இட்ட பெயர் திருமந்திர மாலை என்பதும்,

நந்தி யிணையடி நான் தலை மேற்கொண்டு
புந்தியி னுள்ளே புகப்பெய்து போற்றி செய்
அந்தி மதிபுனை அரனடி நாள்தோறும்
சிந்தைசெய் தாகமம் செப்பலுற் றேனே. -தி.10 பா.12

எனவும்,

பிறப்பிலி நாதனைப் பேர்நந்தி தன்னைச்
சிறப்பொடு வானவர் சென்றுகை கூப்பி
மறப்பிலர் நெஞ்சினுள் மந்திர மாலை
உறைப்பொடுங் கூடிநின் றோதலு மாமே. -தி.10 பா.25

எனவும் வரும் திருமூலர் வாய்மொழிகளால் நன்கு புலனாம்.

திருக்கூத்துத் தரிசனம்:

திருமூலர் தம்முடன் இருந்து நந்தி தேவர் பால் உபதேசம் பெற்றவர்களாகச் (சனகர், சனந்தனர், சனாதனர், சனற் குமாரர் என்னும்) நந்திகள் நால்வரையும், சிவயோகமாமுனி, தில்லையில் திருக்கூத்துத் தரிசனம் கண்ட பதஞ்சலி முனிவர், வியாக்கிர பாத முனிவர் ஆகியவர்களையும் சேர்த்து எண்மராகக் குறித்துள்ளார் (தி.10 பா.6).

இதனை நோக்குங்கால் இவர் சிவயோக மாமுனி, பதஞ்சலி, வியாக்கிர பாதர் ஆகிய முனிவர்கள் காலத்தில் உடன் வாழ்ந்த சிவாகமச் செல்வர் என்பது உய்த்துணரப்படும். திருமூலர் தில்லையில் திருக்கூத்துத் தரிசனங்கண்டு இவ்வுலகில் நெடுங்காலம் இருந்தவர். இச்செய்தி,

செப்புஞ் சிவாகமம் என்னும்அப் பேர்பெற்றும்
அப்படி நல்கும் அருள்நந்தி தாள்பெற்றும்
தப்பிலா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின்
ஒப்பில் எழுகோடி யுகமிருந் தேனே. -தி.10 பா.13

எனத் திருமூலரே தமது வரலாற்றைக் குறிப்பிடுதலால் இனிது விளங்கும்.

திருமூலர் மரபு:

இவ்வாறு நெடுங்காலம் இந்நிலவுலகில் தங்கியிருந்ததன் காரணம், இறைவனுடன் பிறப்பின்றி விளங்கும் அருட் சத்தியாகிய புவனபதியென்னும் அருந்தவச் செல்வியை வழிபட்டு அவ் வன்னையின் அருளால் இவ்வுலகிற் பத்திநெறியையும் யோக நெறியையும் ஞான நெறியையும் நிலைபெறச் செய்து இறைவனது அருட்கூத்தினை விளக்கும் தமிழ் வேதமாகிய திருமந்திரப் பனுவலை அருளிச் செய்தற்பொருட்டே என்பதனைத் தம் மாணாக்கர்களாகிய இந்திரன், மாலாங்கன் ஆகியவர்களை நோக்கி அறிவுறுத்தும் முறையில் அமைந்தன,

இருந்தவக் காரணங் கேளிந் திரனே
பொருந்திய செல்வப் புவனாபதியாம்
அருந்தவச் செல்வியைச் சேவித் தடியேன்
பரிந்துடன் வந்தனன் பத்தியி னாலே. -தி.10 பா.14

எனவும்,

மாலாங்க னேயிங்கு யான்வந்த காரணம்
நீலாங்க மேனியள் நேரிழை யாளொடு
மூலாங்க மாக மொழிந்த திருக்கூத்தின்
சீலாங்க வேதத்தைச் செப்ப வந்தேனே. -தி.10 பா.16

எனவும் வரும் திருமந்திரத் திருப்பாடல்களாகும்.

தேவர்க்கெல்லாம் முதன்மை:

திருமூலரால் ஆதரிக்கப்பெற்று அவர் அருளிய திருமந்திரப் பனுவற்பொருளை அவர்பாற் கேட்டுணர்ந்த மாணாக்கர்கள் மாலாங்கன், இந்திரன், சோமன், பிரமன், உருத்திரன், கந்துரு, காலாங்கி, கஞ்சமலையன் என்னும் பெயரினராகிய எழுவர் எனத் தெரிகிறது. இச்செய்தி,

மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்
இந்திரன் சோமன் பிரமன் உருத்திரன்
கந்துருக் காலாங்கி கஞ்ச மலையனோடு
இந்த எழுவரும் என்வழி யாமே. -தி.10 பா.8

எனவரும் திருமந்திரத்தால் அறியப்படும்.

திருமூலர் பெருமை:

மூலனுடம்பிற் புக்குத் திருமூலராய் எழுந்த சிவயோகியார், இறைவனருளால் சதாசிவமூர்த்தியை ஒத்துச் சிவாகமப் பொருளை அறிவுறுத்தும் முற்றுணர்வும் தேவர்க்கெல்லாம் முதன்மையும் உடையவராகத் தாம் விளங்கிய திறத்தினை,

நந்தி யருளாலே மூலனை நாடிப்பின்
நந்தி யருளாலே சதாசிவ னாயினேன்
நந்தி யருளால்மெய்ஞ் ஞானத்துள் நண்ணினேன்
நந்தி யருளாலே நானிருந் தேனே. -தி.10 பா.29

என வரும் திருப்பாடலிற் குறித்துள்ளார்.

தமிழ் முனிவர்:

தமிழ் முனிவராகிய அகத்தியரைக் காண விரும்பித் திருக் கயிலாயத்தினின்றும் தென்றிசை நோக்கிவந்த சிவயோகியார், வட நாட்டிற் சிவத்தலங்கள் பலவற்றையும் வழிபட்டு வருபவர், தென்

னாட்டிற் காஞ்சி நகரத்தையடைந்து அங்கு வாழும் சிவயோகியர் பலரொடும் அளவளாவினார் எனச் சேக்கிழாரடிகள் குறித்தலாலும், தமிழ் நாட்டிற் பொதிய மலையில் தங்கிய அகத்திய முனிவரொடு பழகிய நட்பினால் அவரைக் காணப் புறப்பட்டு வந்தமையாலும், தமிழகத்தின் தெற்கெல்லையாகிய குமரித்துறையில் அருட்சத்தியாகிய அம்மையார் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருத்தலையும், தம் காலத்தில் தமிழ்நாடு ஐந்து மண்டலங்களாகப் பகுக்கப்பட்டிருத் தலையும், வழிப்போவார் அச்சமின்றிச் செல்லவொண்ணாதபடி கொங்கு நாட்டில் வழிப்பறித் தொழில் நிகழ்தலையும் இந்நூலிற் குறித்துள்ளமையாலும் இந்நூலாசிரியராகிய சிவயோகியார் மூல னுடம்பிற் புகுந்து திருமூலர் என்னும் பெயரைப் பெறுவதற்கு முன்னரும் தமிழ் நாட்டிற் பல்லாண்டுகள் வாழ்ந்த பயிற்சியுடையார் என்பது நன்கு தெளியப்படும். சிவாகமப் பொருளை நன்றாகத் தமிழிற் செய்யும்படி இறைவன் தம்மை நன்றாகப் படைத்தனன் எனத் தம்மைத் தமிழொடு தொடர்பு படுத்திக் கூறுதலால் அவர் தமிழ்க்குலத் தொடர் புடையவர் என்பதும், எனவே தென்தமிழ் நாட்டிலிருந்து வட கயிலையை அடைந்து மீண்டு தென்னாடுபோந்து திருவாவடு துறையிற் சிவயோகத் தமர்ந்து செந்தமிழாகமத்தை அருளிச்செய்து சிவபரம்பொருளுடன் இரண்டறக் கலந்த தமிழ்முனிவர் திருமூல நாயனாரென்பதும் நன்கு துணியப்படும்.

திருமந்திரம் அருளிய காலம்:

இனி, திருமூல நாயனார் இத் திருமந்திரப் பனுவலை அருளிச் செய்த காலம் எது என்பது இங்கு ஆராய்தற்குரியதாகும்.

கி.பி. எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் 'நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்' (தி.7 ப.35. பா.5) எனப் போற்றியிருத்தலாலும், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் ஆகிய தேவார ஆசிரியர் பாடியருளிய திருப்பதிகங்களில், திருமூலர் அருளிய திருமந்திரப் பாடல்களின் சொற்றொடர்களும் பொருள் களும் எடுத்தாளப்பட்டிருத்தலாலும், திருமூல நாயனார் காலம் கி. பி. ஏழாம் நூற்றாண்டிற்கு முற்பட்டதென்பது தெளிவு.

திருமூலர் மூவாயிரம் ஆண்டுகள் சிவயோகத்தமர்ந்து ஆண்டுக் கொரு திருப்பாடலாக மூவாயிரந் திருப்பாடல்களை அருளிச் செய்தார் எனப் பெரிய புராணம் கூறும். சேக்கிழாரடிகள் கூறுமாறு திருமூலர் இந்நிலவுலகில் நெடுங்காலம் சிவ யோகத்தில் அமர்ந்திருந்தார் என்பது,

''ஒப்பில் எழு கோடி யுகமிருந்தேனே' -தி.10 பா.13

எனவும்

''இருந்தேன் இக்காயத்தே எண்ணிலி கோடி'' -தி.10 பா.19

எனவும் வரும் திருமூலர் வாய்மொழிகளால் நன்கு துணியப்படும். திருமூலரால் 'இக்காயம்' எனச் சுட்டப் பட்டது. மூலனுடைய உடம்பெனக் கொள்ளுதல் பொருந்தும்

பதினெண் மொழிகள்:

திருமூலர் திருமந்திரத்தை அருளிச்செய்த காலத்து இந் நாட்டின் தாய்மொழியாகிய தமிழும், தமிழ் நாட்டைச் சூழவுள்ள புற்நாடுகளின் தாய்மொழிகளாகிய பதினேழு மொழிகளும் ஆகப் பதினெட்டு மொழிகள் சிறந்து விளங்கின. இப்பதினெண் மொழிகளில் வெளிவந்த மெய்ந்நூற் பொருள்களை உணர்ந்து கொள்வதில் அக் காலச் சான்றோர் பலரும் ஆர்வமுடன் ஈடுபட்டார்கள். இம்மொழிகள் யாவும் உலகமக்கள் நலன்கருதி அறமுதற் பொருள்களையுணர்ந்து கொள்ளுதற்குரிய சாதனமாக இறைவனாற் படைத்தளிக்கப்பெற்றன. இப்பதினெண் மொழிகளிற் கூறப்படும் அறமுதற் பொருள்களை உணர்ந்தவர்களே பண்டிதர் எனச் சிறப்பாக மதித்துப் பாராட்டப் பெற்றனர் என்பது,

பண்டித ராவார் பதினெட்டுப் பாடையுங்
கண்டவர் கூறுங் கருத்தறிவா ரென்க
பண்டிதர் தங்கள் பதினெட்டுப் பாடையும்
அண்ட முதலான் அறஞ்சொன்ன வாறே. -தி.10 பா.111

எனவரும் திருமந்திரத்தால் இனிது விளங்கும்.

ஐந்து தமிழ் மண்டலம்:

இவ்வாறு தமிழுடன் திசைமொழிகள் பதினேழினையும் சேர்த்துப் பதினெண்மொழிகள் என வழங்கும் வழக்கம் சங்க நூல்களிற் காணப்படவில்லை. தொல்காப்பியர் காலத்தில் 'வண்புகழ் மூவர் தண் பொழில் வரைப்பு' எனவும் சங்க காலத்தில் குணபுலம், குடபுலம், தென்புலம் எனவும் தமிழ்நாடு மூன்று மண்டலங்களாகப் பகுக்கப் பெற்றிருந்தது.

சங்க காலத்திற்குப் பின் தமிழ்நாடு சேர மண்டலம், பாண்டி

மண்டலம், கொங்கு மண்டலம், சோழ மண்டலம், தொண்டை மண்டலம் என ஐந்து மண்டலங்களாகப் பகுக்கப்பெற்றது. இப்பகுப்பினை, ''தமிழ் மண்டலம் ஐந்துந் தாவிய ஞானம்'' (தி.10 பா.1646) என வரும் திருமந்திரத்தில் திருமூலர் குறித்துள்ளார்.

தமிழ் நாடு மேற்குறித்த ஐந்து மண்டலங்களாகப் பிரிந்து தனித் தனியாட்சியில் நிலைபெற்ற காலம் கடைச் சங்க காலத்திற்குப்பின் கி.பி. மூன்றாம் நூற்றாண்டினை யொட்டியதாகும்.

தில்லையிற் கூத்தப் பெருமான் அருட்கூத்தியற்றும் திருவம்பலத்திற்குப் பொன்வேய்ந்து அதனைப் பொன்னம்பலமாகத் திருப்பணி செய்தவன்; கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த பல்லவ மன்னனாகிய சிம்மவர்மன் என்பர் வரலாற்றாராய்ச்சியாளர்.

எனவே அவ் வேந்தனாற் பொன் வேயப்பெற்ற திருச்சிற்றம்பலத்தைப் பொன்னம்பலம் என்ற பெயரால் போற்றிய திருமூல நாயனார் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியிலோ அன்றி ஆறாம் நூற்றாண்டின் முற்பகுதியிலோ திருமந்திர மாலையை நிறைவு செய்திருத்தல் வேண்டும் எனக் கருதுதல் வரலாற்றாராய்ச்சிக்கு ஏற்புடையதாகும்.

திருமூல நாயனார் இந்நிலவுலகில் மூவாயிரம் ஆண்டு சிவயோகத்து அமர்ந்திருந்து தமிழ் மூவாயிரமாகிய திருமந்திர மாலையைப் பாடியருளினார் எனச் சேக்கிழார் நாயனார் கூறுதலால் திருமூலர் திருவாவடுதுறையிற் சிவபோதியாகிய அரசின் கீழ்ச் சிவ யோகத்தமர்ந்த காலம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுக்குப் பன்னூ றாண்டுகள் முற்பட்டதாகும். எண்ணிலிகாலம் சிவயோக நிலையில் அமர்ந்திருந்த அத்தவமுனிவர் கடைச்சங்கம் நிலவிய காலப் பகுதியிலும் அதற்குப் பின்னரும் தமிழ் நாட்டில் சிவயோக நிலையில் இருந்திருத்தல் வேண்டும் எனக் கொள்ள வேண்டியுளது.

தொல்காப்பிய உரைக் குறிப்பு:

தொல்காப்பியம் புறத்திணையியல் 20 - ஆம் சூத்திர உரையில், ''யோகிகளாய் உபாயங்களான் முக்காலமும் உணர்ந்த மாமூலர் முதலியோர் அறிவன் தேய்த்து அனைநிலை வகையோர் ஆவர். அவர்க்கு மாணாக்கராகத் தவஞ் செய்வோர் தாபதப் பக்கத் தராவர்'' என நச்சினார்க்கினியர் கூறும் விளக்கம் பெருமை வாய்ந்த சிவயோகியராகிய திருமூல நாயனாரையும் அவர்தம் மாணாக்கர் களையும் குறித்தமைந்துள்ளமை இங்கு ஒப்பு நோக்கியுணரத்

தகுவதாகும்.

திருமந்திரச் சொல்லாட்சிகள்:

வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும் தெளிந் துணர்ந்த சிவஞானச் செல்வராகிய திருமூலர், தாம் சிவயோக நிலையி லிருந்து சிந்தித்துணர்ந்த சிவாகம உண்மைகளை இந்நாட்டவர் யாவரும் ஓதியுணர்ந்து உய்தல் வேண்டும் என்னும் அருள்நோக்குடன் திருமந்திரப் பனுவலை அருளிச் செய்தமையால், அவரருளிய பாடல்களில் சமய சாத்திரக் குறியீடுகளாகிய பதி, பசு, பாசம்; ஆணவம், கன்மம், மாயை; சித்து, அசித்து; சரியை, கிரியை, யோகம், ஞானம்; சத்து, அசத்து, சதசத்து; வேதாந்தம், சித்தாந்தம், நாதாந்தம், போதாந்தம், யோகாந்தம், கலாந்தம்; நாதம், விந்து, சத்தி, சாத்துமான், வயிந்தவம்; சத்தாதி வாக்கு மனாதிகள், சாக்கிராதீதம், சுத்தம், துரியம் விஞ்ஞானர், பிரளயாகலத்து அஞ்ஞானர்; இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி; கவச நியாசங்கள் முத்திரை; பத்மாசனம், பத்திராசனம், சிங்காதனம்; பூரகம், கும்பகம், ரேசகம் என்பன முதலாகவுள்ள வடசொற்களும் சொற்றொடர்களும் அக்காலத்துப் பொது மக்களிடையே வழங்கிய வழக்குச் சொற்கள் சிலவும் இடம் பெற்றுள்ளன. தமிழ் வடமொழி என்னும் இருமொழிகளையும் கலந்து திருமூலர் தாமே படைத்து வழங்கிய அணுவன் (தி.10 பா.2501), மாயாள் (தி.10 பா.399), என்றாற்போலும் புதுச் சொற்களும் திருமந்திரத்தில் இடம் பெற்றுள்ளன. வேத ஆகமங்களின் முடிந்த முடிபாகிய சைவசமயத் தத்துவம் என்ற பொருளில் சித்தாந்தம் என்ற சொற்றொடரை முதன் முதல் வழங்கியவர் திருமூல நாயனா ரேயாவர். சுந்தரர் காலத்துப் பல்லவ மன்னனாகிய இரண்டாம் நரசிங்க வர்மன், தான் காஞ்சியில் அமைத்த கைலாசநாதர் கோயிலிற் பொறித்துள்ள வடமொழிக் கல்வெட்டில், சைவ சித்தாந்த மார்க்கத்தைப் பின் பற்றியவன் எனத் தன்னைக் குறித்திருப்பது இங்கு நோக்கத்தகுவதாகும்.

ஆரியம் தமிழ் என்னும் இருமொழிகளையும் உணர்ந்து இமயம் முதல் குமரிவரையுள்ள எல்லாத் தலங்களிலும் போக்கு வரவு புரிந்த தவமுனிவராகிய திருமூலர் அருளிய திருமந்திரப் பாடல்களில் சமய சாத்திரக் குறியீடுகளாகிய வட சொற்களும் சேரி வழக்குச் சொற்களும் விரவிக் காணப்படுதல் இயல்பே; திருமந்திரத்தின் மொழிக்கலப்பு ஒன்றே பற்றித் திருமூலர் காலத்தின் தொன்மை யினைக் குறித்து ஐயுறுதற்குச் சிறிதும் இடமில்லை.

பிற சமயத்தைப் பற்றிய குறிப்புக்கள்

திருமூலர், தம் நூலில் ஆறுசமயங்கள் எனவும் அவற்றிற் பல வாகிய நூறு சமயங்கள் எனவும் இந்நாட்டில் வழங்கும் சமயங்களைக் குறிப்பிட்டுள்ளார். ஆயினும் வேத வழக்கொடு மாறுபட்ட புறச் சமயங்களாகிய புத்த, சமண மதங்களைப் பற்றிய குறிப்பெதுவும் புறச் சமய தூடணம் பற்றிய திருமந்திரப் பாடல்களில் இடம் பெறவில்லை. இதனைக் கூர்ந்து நோக்குங்கால், புத்த சமண மதங்கள் தமிழ் நாட்டிற் புகுந்து யாண்டும் பரவித் தமிழ் மக்களது வாழ்க்கையில் வேரூன்றி நிலைபெறுதற்கு முன்னரேயே சிவயோகியராகிய திருமூலர், சிவாகமப் பொருள் குறித்த இத்திருமந்திரப் பனுவலை இயற்றி யருளினார் என்பது இனிது விளங்கும்.

உ

சிவமயம்


திருமந்திரம்


விநாயகர் வணக்கம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

தெளிவுரை: ஐந்து கைகளையும், யானை முகத்தையும், சந்திரனது இளமை நிலையாகிய பிறைபோலும் தந்தத்தையும் உடையவரும், சிவபிரானுக்குப் புதல்வரும், ஞானத்தின் முடி நிலையாய் உள்ளவரும் ஆகிய விநாயகப் பெருமானை உள்ளத்தில் வைத்து, அவரது திருவடிகளைத் துதிக்கின்றேன்.

குறிப்புரை: 'இந்து' என்பது வடசொல்லாதலின் இன்பெறாது என்று, 'இந்து விளம்பிறை' எனப்பாடம் ஓதுவாரும் உளர். 'நந்தி' என்பது சிவபெருமானுக்கே பெயராதல் அறிக. திருமூலர் தமது நூலை ''ஒன்றவன்முன்'' எனத் தொடங்கினார் என்பது சேக்கிழார் திருமொழி யாதலின், இது, பிற்காலத்தில் இந்நூலை ஓதுவோர் தாம்முதற்கண் ஓதுதற்குச் செய்து கொண்டது என்க. திருமுறைகளுள் ஒன்றிலும் முதற்கண் விநாயகர் காப்பு இல்லாமையும், சாத்திரங்களிலும் உந்தி, களிறு முதலிய சிலவற்றில் இல்லாமையும் நோக்கத்தக்கன. ''ஒன்றவன்றான் எனஎடுத்து முன்னிய அப்பொருள்மாலைத் தமிழ் மூவாயிரம் சாத்தி'' என்பதே சேக்கிழார் திருமொழியாகலின், இந் நூலின் தொடக்கப்பாடல் ''ஒன்றவன்றானே'' என்னும் பாடலே என்பது இனிது விளங்கும்.





திருமூலதேவ நாயனார்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருமூலதேவ நாயனார்

அருளிச்செய்த

திருமந்திரம்

பத்தாம் திருமுறை

பாயிரம்

கடவுள் வாழ்த்து

திருச்சிற்றம்பலம்

1. ஒன்றவன் றானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந் தான்ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்
சென்றனன் தான்இருந் தான்உணர்ந் தெட்டே. 1

'திருமந்திரம்' என்னும் பெயர்க்காரணம் இதன் பாயிரத்துள் பெறப்படும். இந்நூல் முழுதும் பெரும்பான்மையும் வெண்டளை தழுவிய நாற்சீரடி நான்கு கொண்டயாப்பினால் ஆயது. பிற்கால நூல் வழி நோக்கின் இவ்யாப்பு , கலிவிருத்தமாம். ஆயினும், *தொல் காப்பியத்தின்*படி தரவுக் கொச்சகக் கலிப்பாவாம். சில விடத்து யாப்புக்கள் அந்தாதியாய் வருவன.

'கடவுள் வாழ்த்து, குரு பாரம்பரியம்' என்பன முதலாக இந்நூலுட் காணப்படும் அதிகாரப் பெயர்களை, 'பிறரால் கொடுக்கப் பட்டன' என்பர் சிலர். அங்ஙனமாயின், பல பொருள்கள் ஒரு தந்திரத்திலே சொல்லப்பட்டிருத்தலை நாயனார் விளங்க வைத்திலர்

ஆவர். தேவாரப் பாடல்கள் 'பதிகம்' என்ற பெயர்வகை, திருக்கடைக் காப்பு என்பவற்றாலன்றிப் பொருள் வகையாலும் இத்துணைப் பாடல்கள் தொகுப்பு' என்பது இனிது விளங்க நிற்பன. திருவாசகம் முதலியவும் அன்ன. இத்திருமந்திரத்துள் அதிகாரப்பெயர் இல்லையேல், ஒருதந்திரம் முழுவதும் ஒருபொருள் நுதலியதாகவே தோன்றிப் பாடல்கள் இனிது பொருள் விளங்காதொழியும். அதனால், அவை நாயனாரால் கொடுக்கப்பட்டனவாகவே கொள்ளற்பாலன. சில பெயர்களைப் பின்வந்தோர் சொல்லளவில் சிறிது மாற்றி யிருத்தலும் சிலவற்றைக் குறைத்தல் கூட்டல்களைச் செய்திருத்தலும் கூடுவனவே. அவ்வகையில் இப்பாயிரத்துள் முதற்றொட்டு வரும் ஐம்பது பாடல்கள் 'கடவுள் வாழ்த்து' என்னும் அதிகாரத்தனவாகவே பதிப்புக்களில் காணப்படுகின்றன. அஃது ஏடெழுதினோரால் நேர்ந்ததாகல் வேண்டும். ஆகவே, 'இம்முதற் பாட்டு ஒன்றே கடவுள் வாழ்த்து' எனக் கொள்க.

இனிக் கடவுள் வாழ்த்து என்பதின்றி மேற் குறித்த பாட்டுக்கள் ஐம்பதையும், 'பரமசிவப் பிரபாவம்' எனவும், 'சிறப்புப்பாயிரம்' என வும் பதித்த பதிப்புக்களும் உள. பரமசிவப் பிரபாவமாயின், அது நூற் பொருளாவதன்றிப் பாயிரப்பொருளாகாது. 'தொடக்கத்தில் உள்ள சில பாட்டுக்கள் பாயிரமே' என்பது அப் பதிப்பிற்கும் உடன் பாடு. அதனால், அவற்றைப் பரமசிவப் பிரபாவம் கூற எழுந்தனவாகக் கொள்ளுதல் பொருந்தாது. 'சிறப்புப் பாயிரம்' என்பது, தற்சிறப்புப் பாயிரம். அது பொதுத் தொகைப்பெயரேயன்றி உள்தொகைப் பெயரன்று. அதனால் இப்பாயிரத்துள் வரும் பிற உள்தொகைப் பெயர்கள் பலவற்றுள், இம் முதற்பாட்டு, 'கடவுள்வாழ்த்து' என்னும் அதிகாரத்ததேயாம். ஒருபாட்டு ஓர் அதிகாரமாதலில் தவறில்லை.

1. தெளிவுரை: ஒருபொருளாய் உள்ளவன் முதற்கடவுளே; வேறில்லை. அவனது அருள், 'அறக்கருணை, மறக்கருணை' என இரண்டாய் இருக்கும். அவ் அருள்காரணமாக அவன், 'இலயம், போகம், அதிகாரம்' என்னும் மூன்று நிலைகளில் நிற்பான். நின்று, 'அறம், பொருள், இன்பம், வீடு' என்னும் உறுதிப் பொருள் நான் கனையும் தானே உணர்ந்து உலகிற்கு உணர்த்தினான். செவிமுதலிய ஐம்பொறிகளின் வழி நுகரப்படும் ஓசை முதலிய ஐம்புலன்களின் மேல் எழுகின்ற ஐந்து அவாவினையும் வென்றான். 'மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை' என்னும் ஆறு அத்துவாக்களாக விரிந்தான். 'பிரம லோகம், விட்டு ணுலோகம், உருத்திர லோகம், மகேசுர லோகம், சதாசிவ லோகம், சத்தி லோகம், சிவ லோகம்' என்னும் ஏழுலகங்களுக்கும் மேற்சென்று தானேயாய் இருந்தான். அவனை, நெஞ்சே, நீ அறிந்து அடை.

குறிப்புரை: முதற்கடவுளை, 'அவன்' எனப் பண்டறிசுட்டாற் கூறுதல் வழக்கு. ''அவன்தானே'' என்றதில் தான் அசைநிலை; ஏகாரம் பிரிநிலை.

''பிரமம் ஒன்றே இரண்டாவதில்லை''[1] எனவும், ''மெய்ப் பொருள் ஒன்றே''[2] எனவும், வேதமும் கூறுதல் காண்க. ''தனக் குவமை இல்லாதான்'' என்றதும் இப்பொருட்டு. அறக்கருணை அருட் சத்தியும், மறக்கருணை திரோதான சத்தியுமாம். இலயம் முதலிய வற்றின் இயல்பையும் ஆறத்துவாக்களின் இயல்பையும் சிவாகமங் களிலும், மெய்கண்ட நூல்களிலும் கண்டுகொள்க.

''அழிந்த சிந்தை அந்தணாளர்க் கறம்பொருளின்பம் வீடு - மொழிந்த வாயான்''[3] எனவும், ''விரித்தானை நால்வர்க்கு வெவ் வேறு வேதங்கள்''[4] எனவும், போந்த அருட்டிரு மொழிகளால், அறம் முதலிய நான்கு உறுதிப் பொருள்களையே முனிவர் நால்வர்க்கு நான்கு வேதங்களால் உணர்த்தியருளினான்' என்பது இனிது விளங்கிக் கிடத்தலின், 'நான்கு உணர்ந்தான்' என்பதற்கு இதுவே பொருளாதல் அறிக. ''உணர்ந்தான்'' என்னுமிடத்து, 'தானே' என்பது இசையெச்சம். அவ்வினைச் சொல் உணர்ந்து உணர்த்துதலாகிய தன் காரியம் தோன்ற நின்றது.

''வென்றனன்'' என்றது, 'அவற்றொடு பொருந்திநின்றே அவற்றால் திரிபின்றி நின்றான்' என்றவாறு. ''வினையின்நீங்கி''[5] என்றும், ''பற்றற்றான்''[6] என்றும் ஓதியவற்றிற்கும் இவ்வாறே உரைக்கப்படுதல் காண்க. இவற்றானே, ''பொறிவாயில் ஐந்த வித்தான்''[7] என்றதும் இப்பொருட்டாயிற்று. ''நேரிழையைக் கலந்திருந்தே புலன்கள் ஐந்தும் - வென்றானை''[8] ''மங்கை யோடிருந்தே யோகுசெய்வானை''[9] என்பனவும் இக்கருத்தே பற்றி வந்தன. மனைவியோடிருந்த முனிவரைத் திருவள்ளுவர், ''ஐந்த வித்தான்''[10] என்றதும் இங்கு நினைக்கத்தக்கது.

நிவிர்த்தி முதலிய ஐந்து கலைகட்கு உட்பட்ட புவனங்களை அவற்றிற்கு முதல்வராகிய கடவுளரது உலகங்களாகவும், இறுதிக்

---

[1] *ஏகமேவாத் திதீயம் ப்ரஹ்ம*
[2] *ஏகம் ஸத்*
[3] *தி.4 ப.53 பா.6*
[4] *தி.4 ப.7 பா.8*
[5] *தொல். பொருள் - இளம் 940*
[6] *குறள் - 350.*
[7] *குறள் - 6*
[8] *தி.6 ப.50 பா.3*
[9] *திருமுறை தி.9 ப.13 பா.11*
[10] *குறள் - 25.*

கண்ணதாகிய சாந்தியதீத கலையில் இலய புவனங்களை வேறிரண்டாகவும் வைத்து 'ஏழுலகம்' என்றலே ஆகம முறை. 'பூலோகம், புவலோகம், சுவலோகம், மகலோகம், தவலோகம், சத்தியலோகம்' என வேதமுறையிற் கூறப்படும் ஏழுலகங்களில் ஏழாவதாகிய உலகம் புவனபதி உலகமாகவும், ஏனைய ஆறும் கீழ்க்கீழ் நோக்க ஒன்றின் ஒன்று தாழ்ந்தோர்க்குரிய உலகமாகவும் மேல் ஆகம முறையிற் கூறிய ஒவ்வோர் உலகத்திலும் உட்கூறுகளாய் அவ்வவ்வுலகங்கட்கு ஏற்ற பெற்றியில் அமைந்துள்ளவை என்பது சிவாகம நூல் துணிவு. கீழ்க்கீழ் உள்ள உலகங்களில் மேன்மேல் உள்ள புவனபதிகட்குரிய இடங்களும் உள; மேன்மேல் உள்ள உலகங்களில் கீழ்க்கீழ் உள்ள புவன பதிகட்குரிய இடங்கள் இல்லை என உணர்க. ''சென்றனன்'' என்றது முற்றெச்சம்.

''தான் இருந்தான்'' என்பதில் பிரிநிலை ஏகாரமும், ஆக்கச் சொல்லும் தொகுத்தல் பெற்றன. தானேயாய் இருத்தலாவது சத்தியோடு கூடிச் செயற்படுத்தலைத் தவிர்ந்திருத்தல். இதுவும், முதற்கண் ''ஒன்றவன்றானே'' என்றதும் இறைவனது, 'சொரூபம்' எனப்படும் உண்மை நிலை. ஏனைய, 'தடத்தம்' எனப்படும் பொது நிலை. ஒன்று முதலாகத் தொடங்கி ஆறு ஈறாகக் கூறியது, 'ஒருவனே பலவாய் விரிந்து நிற்கின்றான்' என்பது உணர்த்துதற்கு. ''ஏழும்பர்ச் சென்றனன்'' என்றது, 'அவ்வாறு விரிந்து நிற்பினும் அவன் மன வாக்கிற்கு எட்டாதவனே'' என்றற் பொருட்டு.

''எட்டு'' என்றது, சொல் ஒப்புமையால் எண்ணலங்காரத்தை நிரப்பிற்று, ''நால்வாய் ஐங்கரத்தன்''[1] என்பதிற்போல. எட்டுதல் - முயன்று பற்றுதல். அம் முயற்சிகள் பலவும் நூலுட் கூறப்படும். ''உணர்ந்து எட்டு'' என்றது, 'மேற்கூறியவாற்றால் அவன் ஒருவனே உணரப்படுதற்கும், அடையப் படுதற்கும் உரியவன்' என்பது அறிவித்தவாறு.

'வாழ்த்து, வணக்கம், பொருளியல்புரைத்தல்' என்னும் மூவகை வாழ்த்துள் இது பொருளியல்புரைத்தல். இதனானே இந்நூல் நுதலிய பொருள் தொகுப்புக் குறிப்பாற் கூறப்பட்டது. அஃது ஆமாறு, 'முதற்கடவுள் உளன்; அவன் ஒருவனேயன்றிப் பலர் இல்லை. ஆயினும் அவன் தன்னின் வேறாகாத சத்தியால் 'அருளல், மறைத்தல்' என்னும் இரண்டனையும் செய்தற் பொருட்டு, 'இலயம், போகம், அதிகாரம்' என்னும் மூவகை நிலைகளில் நின்று, 'அறம்,' பொருள்,

[1] சிவஞான சித்தி - காப்பு.

நுதலிய பொருள்

2. போற்றிசைத் தின்னுயிர் மன்னும் புனிதனை
நாற்றிசைக் கும்நல்ல மாதுக்கு நாதனை
மேற்றிசைக் குள்தென் திசைக்கொரு வேந்தனாம்
கூற்றுதைத் தானையான் கூறுகின் றேனே. 2

இன்பம், வீடு, என்பவற்றை அடையும் நெறிகளை உலகிற்கு உணர்த்தித் தான் ஒன்றிலும் தோய்விலனாய் நின்றே எப்பொருளுமாக விரிந்து, அங்ஙனம் விரிந்தவிடத்தும், மன வாக்குக்களைக் கடந்த தனது நிலைமையில் மாறுபடாதே நிற்கின்றான். ஆதலின், அவனை அறிந்து அடைதலே உயிர்கள் செயற்பாலன' எனக் கண்டு கொள்க. நூல்நுதல் பொருள் இங்ஙனம் குறிப்பால் தோன்றவருதல் நூன்முகத்து வரும் கடவுள் வாழ்த்திற்கு இயல்பு என்க.

இப்பாட்டு இந்நூல் நுதலிய பொருள் இது என்கின்றது.

2. தெ-ரை: மலமாசகன்ற தூய உயிரிடத்து நிலைபெற்று விளங்கும் தூயவனும், உலகம் முழுவதற்கும் நலந் தருபவளாகிய அம்மைக்குக் கணவனும், தென்திசைக்குத் தலைவனாம் கூற்றுவனை உதைத்தவனும் ஆகிய சிவபெருமானது பெருமையை யான் துதிமுறையால் கூறுவேன்!

கு-ரை: போற்று, முதனிலைத் தொழிற்பெயர். போற்றுதல் - துதித்தல். 'போற்றி' என்பதன் ஈற்று இகரம் தொகுத்தல் பெற்றது எனக் கொண்டு, 'வணக்கம்' எனப்பொருள் கொள்ளலும் பொருந்தும். ''போற்றிசைத்து'' என்றதனை, ''கூறுகின்றேன்'' என்பதற்கு முன்னே வைத்து உரைக்க. 'தூய உயிர்' என்றதற்கு, ''இன்னுயிர்'' என்றார். தயிரில் நெய்போல இறைவன் இனிது விளங்கி நிற்றல் சுத்தான்ம சைதன்னியத்திலே யாதல் அறிக. ''நாற்றிசைக்கும்'' என்றது, 'உலகம் முழுவதற்கும்' என்றவாறாம். நன்மை, அருள். உலகத்தோடு இறைவ னுக்கு உளதாய தொடர்பு அவனது சத்தி வழியே ஆதலின், 'நாற்றி சைக்கு நாதன்' என்னாது, ''நாற்றிசைக்கும் நல்ல மாதுக்கு நாதன்'' என்றார் 'அளி யன்றித் தெறலும் அருளே' என்றற்கு ''நல்ல'' என்றும், 'அவ்விரண் டனையும் செய்வது சத்தியே' என்றற்கு, ''மாது'' என்றும், 'சத்தி, முதலன்று; முதலது பண்பே' என்றற்கு, ''நாதன்'' என்றும் கூறினார். 'மாது' உயர்திணை ஆதலின், சாரியை வேண்டாதாயிற்று. மேல் திசை - மேற்சுட்டிய நான்கு திசைகள். ''ஒரு வேந்தன்'' என்றது, 'திசைக்காவலர் எண்மருள் ஒருவன் என அவனது சிறப்பின்மை

நூற் சிறப்பு

3. ஒக்கநின் றானை உலப்பிலி தேவர்கள்
நக்கன்என் றேத்திடும் நம்பனை நாள்தொறும்

கூறியவாறு. கூற்றுதைத்தமையைக் கூறியது, மேல், 'அவன்' எனப் பொதுப்படக் குறித்த முதற்கடவுளை, 'சிவபெருமான்' எனச் சிறப்பு வகையால் விளக்குதற் பொருட்டு, சிறப்பாதற்கு ''மாதுக்கு நாதன்'' என்றதினும் இது வலி யுடைத்து என்க. முதற் கடவுளை முதற் கண்ணே சிறப்புப் பெயராற் கூறாது இலக்கணத்தாற் பொதுப்படக் கூறியது, 'முதற்கடவுளாவான் இத்தன்மையனே, என்பது உணர்த்து முகத்தால், தாம் கூறும் சிவபெருமானையன்றி ஏனையோர் கூறும் கடவுளரை முதற்கடவுள் என்றல் ஒவ்வாமையை நிறுவுதற் பொருட்டாம். ''புனிதன்'' முதலியன ஆகுபெயராய் அவனது பெருமைமேல் நின்றன. எனவே, 'இந்நூல் சிவபெருமானது பெருமையை உணர்த் தற்கு எழுந்தது' என்பது பெறப்பட்டது. 'சிவபெருமானது பெருமையே யன்றி உயிர்களின் இயல்பு, அவைகளைப் பற்றியுள்ள பாசங்களின் இயல்பு என்பனவும் இதனுட் கூறப்படுகின்றன அல்லவோ, எனின், அவை அவனது அடிமையும், உடைமையுமே ஆதலின்' அவற்றது இயல்புகளும் அவனது பெருமையாய் அடங்கும் என்க.

''போற்றிசைத்துக் கூறுகின்றேன்'' என்றதனால். வரையறை வகையால் கூறாமை பெறப்பட்டது. வரையறை வகையாற்கூறின், அளவு படாமையின் குன்றக் கூறலாய் முடியும்' என்பது கருத்து. ''யானறி அளவையின் ஏத்தி ஆனாது - நின்னளந்தறிதல் மன்னுயிர்க் கருமையின் நின்னடி உள்ளி வந்தனென்''[1] எனப் பிறிதோரிடத்தும் கூறப்பட்டமை காண்க. இதனானே இந்நூல் தோத்திர வகையாகிய திருமுறைகளுள் ஒன்றாயிற்று.

''கூறுகின்றேன்'' என வாளா கூறின், 'வரையறை வகையாற் கூறுகின்றார்' என்பதே படும் ஆதலின், அது படாமைப் பொருட்டு, ''போற்றிசைத்து'' என்றதனையும் உடன் கூறினார். ஆகவே, நுதலிய பொருளோடு அதனைக் கூறும் முறைமையும் இதனுள் பெறப்பட்டது. ''கூறுகின்றேன்'' எனத் துணிவுபற்றி எதிர்காலம் நிகழ்காலமாகச் சொல்லப்பட்டது.

இதுவும், அடுத்த பாட்டும் நூற்சிறப்புக் கூறுகின்றன.

---

1 திருமுருகாற்றுப்படை 276 - 278

பக்கம்நின் றார்அறி யாத பரமனைப்
புக்குநின் றுன்னியான் போற்றுகின் றேனே. 3

தெ-ரை: எண்ணில்லாத தேவர்களில் ஒருவனாய் அவர்களோடொப்ப நிற்பவனும், அவ்வாறு நிற்பினும் அவர் அனைவராலும் என்றும் வணங்கப்படுபவனும், தன்னை அடைந்தவர்களாலும் தன் தன்மை முழுதும் அறியப்படாத மேலானவனும், ஆகிய சிவபெருமானது பெருமையை யான் அவனுள் அடங்கிநின்று உணர்ந்து துதிக்கின்றேன்.

கு-ரை: ''உலப்பிலி தேவர்கள்'' என்றது தாப்பிசையாய், முன்னும் சென்று தொகைநிலை வகையான் இயைந்தது. இலி என்பது இன்மையென்னும் பொருட்டாய் அதனையுடைய பொருண்மேல் இந் நூலுட் பயின்றுவரும். திகம்பரன் என்னும் பொருட்டாகிய 'நக்கன்' என்பது வியாபகனாதலைக் குறித்து, ஏனையோரால் ஏத்தப்படுதற்குரிய இயைபு உணர்த்தி நின்றது. நம்பன் - விரும்புதற்குரியவன். 'பழையோன்' என்றும் ஆம். 'நாள்தொறும் ஏத்திடும்' என முன்னே கூட்டுக.

''பக்கம் நின்றார்'' என்றது சீவன் முத்தரையும், பரமுத்தரையும். 'பக்கம் நின்றாரும்' என்னும், சிறப்பும்மை தொகுத்தலாயிற்று. நாதன், பரமன் என்பனவும் மேலனபோல ஆகுபெயர்கள். இறைவனது பெருமை முத்தராலும் முற்றும் அறியப்படாது என்பதனை,

கடல்அலைத்தே ஆடுதற்குக் கைவந்து நின்றும்
கடல்அளக்க வாராதாற் போலப் - படியில்
அருத்திசெய்த அன்பரைவந் தாண்டதுவும் எல்லாம்
கருத்திற்குச் சேயனாய்க் காண். *-திருக்களிற்றுப்படியார். 90*

என்பதனான் அறிக.

புக்கு நின்று என்றது அதீத நிலையையும், உன்னி என்றது துரியநிலையையும் குறித்தவாறு. உன்னுதலன்றிப் புகாதே நிற்கும் துரிய நிலையிலே நிற்பின் சிவானந்தத்தை உணர்தல் கூடாமையால், ''புக்குநின்று'' என்றும், புக்கு உன்னுதலொழித்த அதீத நிலையிலே நிற்பின் மனவாக்கினால் போற்றுதல் கூடாமையால், 'உன்னி' என்றும் கூறினார். இந்நிலைகளின் இயல்புகளை நூலுள் அறிக. இதனால் தமது அநுபவ நிலையை உணர்த்தியவாறாயிற்று.

4. அகலிடத் தார்மெய்யை அண்டத்து வித்தைப்
புகலிடத் தென்மெய்யைப் போதவிட் டானைப்
பகலிடத் தும்இர வும்பணிந் தேத்தி
இகலிடத் தேஇருள் நீங்கிநின் றேனே. 4

4. தெ-ரை: மண்ணுலகத்தவராகிய மக்கட்கும், விண்ணுலகத்தவராகிய தேவர்கட்கும் முதலாய் நிற்பவனும், வந்த இடத்திலே எனது உடம்பை விழச்செய்தவனும் ஆகிய சிவபெருமானை நான் பகலும், இரவும் வணங்கியும், துதித்தும் மயக்கத்தைச் செய்யும் இவ்வுலகத் திற்றானே மயக்கமின்றி இருக்கின்றேன்.

கு-ரை: சிறப்புப்பற்றி, ''அகலிடத்தார்'' என மக்களையே கூறி னாராயினும், இனம்பற்றிப் பிற உயிர்களும் கொள்ளப்படும். நிலை பேறு உடைமைபற்றிக் காரணத்தை, ''மெய்'' என்றார். காரணம் இங்கு வினைமுதல். அகலிடத்தார் என்றதனோடு இயைய 'அண்டத்தார்' என நின்றதன் இறுதிநிலை தொகுத்தலாயிற்று. அனைத்துயிர்க்கும் முதல்வனாதலை வலியுறுத்தற்பொருட்டு இரு தொடராக வகுத்தருளிச் செய்தார். ''விட்டான்'' என்பது 'விடு வித்தான்' என்னும் பொருளது. 'போத இட்டார்' எனப் பிரித்து, 'மிக இருத்தினான்' என்றலும் ஆம். நாயனாரது உடம்பை நீக்கி அவரை மூலன் உடம்பில் இருக்குமாறு இறைவன் செய்த வரலாறு பெரிய புராணத்துள் விரித்துரைக்கப் பட்டது. 'எம்மெய்யை, என்றனை' என்பனவும் பாடங்கள். ஐம்புலன் கள் உயிர்செல்லும் வழிக்கு மாறாய் நின்று மறித்தலின், அவற்றின் வடிவாகிய உலகத்தை ''இக லிடம்'' என்றும், அஃது அன்னதாயினும், மேற்கூறியவாறு நான் இறை நிறைவில் நீங்காது நிற்குமாற்றால் மயக்க மின்றி இருக்கின்றேன் என்பார், ''இருள் நீங்கி நின்றேன்'' என்றும் கூறினார். இவை இரண்டு பாட்டாலும், 'இந்நூல் அருள்வழி நின்று செய்யப்படுவதன்றி, ஆன்ம போதத்தின் வழிநின்று செய்யப்படுவ தன்று எனவும், அன்ன தாயினும். பதி போதமும் ஒரோவழி உள தாங்கொல்லோ' என ஐயுறல் வேண்டா எனவும் கூறி, நூலது சிறப்பு உணர்த்தப்பட்டது.

இவற்றின் பின்னவாகப் பதிப்புக்களில் காணப்படும் ''சிவனோ டொக்கும் தெய்வம்'' என்பது முதலிய பாட்டுக்களும், வேதச்சிறப்பு, ஆகமச்சிறப்பு, திரிமூர்த்திகளின் சேட்டகனிட்ட முறை என்னும் அதிகாரப் பாட்டுக்களும் எடுத்துக்கொண்ட பொருளையே கூறலின், அவை நூற்பாட்டுக்களன்றிப் பாயிரப் பாட்டுக்களல்லவாதல் இனிது விளங்கும். அதனால், ஏடுசேர்த்தோர் அவற்றை முறைபிறழக் கோத்தார் எனவே கொள்க.

குரு பாரம்பரியம்

5. பெற்றமும் மானும் மழுவும் பிரிவற்ற
தற்பரன் கற்பனை யாகும் சராசரத்
தற்றமும் நல்கி அடியேன் சிரத்தினில்
நற்பத மும்அளித் தான்எங்கள் நந்தியே. 5

6. நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரமர்
என்றிவர் என்னோ டெண்மரு மாமே. 6

இந்நூல் பொருள் வரலாற்றுமுறையாற் கேட்டுச் சொல்லப் பட்டதன்றித் தாமே தம் மனவழிப்பட்டுச் சொல்லியதன்று என்றற்கு இது முதல் ஏழு பாட்டுக்களால் தமது அருட்குடி வரவு கூறுகின்றார். குரு பாரம்பரியம் - ஆசிரியத் தலைமுறை.

5. தெ-ரை: எங்கள் நந்தி பெருமான், ஆனேறு, மான், மழு என்ப வற்றை விடாது கொண்டுள்ள சீகண்ட பரமேசுரனது உபதேசப் பொரு ளாகிய பொருட் பெற்றியாம் மறைபொருளையும் எனக்கு விளக்கி, தமது ஞானத்தைத் தரும் திருவடிகளையும் அடியேனது தலைமேல் சூட்டியருளினார்.

கு-ரை: சீகண்ட வுருத்திரர் என்பது விளங்குதற் பொருட்டே வாளா, 'தற்பரன்' என்னாது, பெற்றம் முதலிய அடையாளங்களைக் கூறினார். கற்பனை - உபதேசம். சராசரம் என்பது, 'சித்து, அசித்து' என்னும் பொருட்டாய், அனைத்துப் பொருள்களையும் குறித்தது. அற்றம் - மறை பொருள்; இரகசியம். நன்மை - ஞானம். இதனால், சீகண்ட பரமேச்சுரன்பால் நந்திபெருமானும், நந்திபெருமான்பால் இவ்வாசிரியரும் ஞானம் பெற்றமை கூறப்பட்டன. இப்பாட்டும் பதிப்புக்களில் இடம் மாறி உள்ளது.

6. தெ-ரை: நந்திபெருமானது அருளைப்பெற்ற ஆசிரியன்மார் யாவர் என்று ஆராயுமிடத்து, அவரோடு ஒத்த நால்வரும், சிவயோக முனிவரும், தில்லை அம்பலத்தை வணங்கிய பதஞ்சலி, வியாக்கிர பாதரும் என்ற இவர் என்னொடு கூட எண்மருமாவர் என்பதாம்.

கு-ரை: ஆசிரியரை, நாயனார் 'நாதர்' என்கின்றார். ''நமச்

சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க'' என்ற திருவாசகம் இங்கு நினைக்கத் தக்கது. நந்தி பெருமானோடு ஒத்தமை, சீகண்ட பரமேசுரன் பால் அறம் முதலிய நான்கையும் கேட்டமையாலாம். 'அந்நான்கையும் உணர்த்துவன வேதங்கள்' என்பது முதல் திருப்பாட்டின் உரையுட் காட்டப்பட்டது. அறமுதலியவற்றோடு ஒருங்கோதிய வீட்டுநெறி பொதுவகையானன்றிச் சிறப்பு வகையான் அன்மையின், அதனைச் சிறப்பு வகையான் இனிதுணர்ந்து அடைய அப்பெருமான் அவர் களை, நந்தி பெருமான்பால் கேட்க என விடுத்தவண்ணம் அவர்களும் நந்தி பெருமான்பால் ஆகமவழியாக வீட்டு நெறியைச் சிறப்பு வகையாற் கேட்டுணர்ந்தார். ஆகவே, அவர்கள் நந்தி பெருமானோடு ஒருங்கொத்த மாணவராய், முதிய மாணாக்கரிடம் இளைய மாணாக்கர் கேட்கும் முறையிற் கேட்டனர் என்றற்கு, ''நந்திகள் நால்வர்'' என்றார். அவர்களை 'சனகர், சனந்தனர், சனாதனர், சனற் குமாரர்' என்ப. சிவயோகமுனி என்பவரைப் பற்றிப் பிற நூல்களில் ஓரிடத்தும், ஒன்றும் கூறப்படவில்லை. அதனால் அவரைப்பற்றி யாதும் அறிதற்கில்லை. சிலர் இவரை 'அகத்தியர்' என்றும், 'துருவாசர்' என்றும் கூறுவர். அவ்வாறாயின், நாயனார் அப்பெயரால் கூறுதலல்லது பிறவாறு கூறார் என்க. எனவே, சிவயோக முனி என்பது பெயரேயன்றித் தன்மை கூறுவதன்று என்க.

பதஞ்சலியாரும், வியாக்கிரரும் தமிழ்நாட்டோடு தொடர் புடையவர் என்பதற்கு, ''மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரர்'' என்றார். எனவே, மன்று தொழுத என்னும் அடைமொழியைப் பதஞ்சலிக்கு மட்டுமே உரியதாக வைத்து அஃது யோகநூல் பதஞ்சலி யாரினை வேறு படுத்தற்குக் கூறப்பட்டது என்றல் பொருந்தாதாம். ஆகமத்துள் யோக பாதமும் உளதாதலின், அதனையே இப் பதஞ்சலியார் செய்யப் பின் வந்தோர் அதனை நன்குணராது வேறு கூறினமையின் அது, 'பாதஞ் சலம்' என வேறு மதமாயிற்று எனக் கொள்ளுதலில் தவறில்லை. பொருட்பெற்றியை இனிதுணர்த்துவது ஞானபாதமேயாதலின், யோக பாதத்துட் கூறப்பட்ட தத்துவங்கள் சிறிது சுருங்கியிருத்தல் கூடும். மன்று தொழுது நின்றமையால் நூல்செய்தல் கூடாதென்பது இல்லை யன்றோ! நாயனாரும் மன்று தொழுதவராதல் பின்னர்க் காணப்படும்.

இங்குக் கூறப்பட்ட எண்மரும் ஒருகாலத்தே நந்தி பெரு மானிடம் ஞானம்பெற்றனர் என எண்ணுதல் கூடாது. நந்திகள் நால் வரும் முதற்கண் பெற்றனர் என்றும், சிவயோக மாமுனி அதற்குப்பின் ஒருகாலத்திற் பெற்றனர் என்றும், அவருக்குப்பின் பதஞ்சலி வியாக் கிரர் இரு வரும் ஒருகாலத்திற் பெற்றனர் என்றும் இறுதியாக

7. நந்தி அருளாலே நாதனாம் பேர்பெற்றேன்
நந்தி அருளாலே மூலனை நாடினேன்
நந்தி அருளாவ தென்செயும் நாட்டினில்
நந்தி வழிகாட்ட நான்இருந் தேனே. 7

8. மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்
இந்திரன் சோமன் பிரமன் உருத்திரன்

இவ்வாசிரியர் பெற்றனர் என்றும் கொள்ளற்பாலன. ''மன்று தொழுத'' என இறந்த காலத்தால் கூறினமையின், முன்னே மன்று தொழுது பின்னர் அதன் பயனாக நந்தி பெருமானை அடைந்து ஞானம் பெற்று மீண்டனர் என்பது பெறப்படும். வியாக்கிரர் மூத்தோராகவும், வழி பாட்டில் பெரும்பற்றுடையராகவும் சொல்லப்படுதலால், தில்லை, 'பெரும்பற்றப்புலியூர்' என அவர்பெயராலே வழங்கப்பட்டது. பதஞ் சலியாரும் அத்தலத்திலே தங்கி யோகநூல் செய்தார் என்க. வியாக் கிரர் நூல் செய்திலர். வியாக்கிரர் வசிட்ட முனிவர்தம் தங்கையை மணந்து பெற்ற உபமன்னிய முனிவர் இமயத் தாழ்வரையிலே பிறந்து சிறிது வளர்ந்து, பின்னர்ச் சில்லாண் டுகள் தில்லையில் தந்தையார்பால் வளர்ந்து பின்னர்த் தவத்திற்கு உரியராய காலத்து மீளவும் அத்தாழ் வரைக்கண்ணே சென்று தங்கினார் என்க. உபமன்னியரை யாதவன் - துவரைக் கிறையாகிய மாதவன் முடிமேல் அடி வைத்தான் என்று சேக்கிழார் அருளிச் செய்தமையால் இம் முனிவர் பாரத காலத்தவர் என்பது பெறப்படும். இருக்கு என வழங்கப்பட்ட ஆரிய மந்திரப் பாடல்களை, இருக்கு, எசுர், சாமம், அதர்வணம் என வியாச முனிவர் முறைப்படுத்து நான்காக வகுத்து பிராமணம், உபநிடதம் என்ப வற்றையும் அவற்றுக்கு உரிமை செய்து அனைத்திற்கும் வேதம் எனப் பெயரிட்டதும் பாரத காலத்திலேயாம். அதன் பின்னரும் உப நிடதங்கள் தோன்றின என்க.

7. தெ-ரை: நந்தி பெருமானது அருளால் நான், ஆசிரியன் எனப் பெயர்பெற்றேன். பின்பு மூலன் உடலைப் பற்றுக்கோடாகக் கொண்டேன். அவரது அருள் இவ்வுலகில், நேரே எதனைச் செய்யும்? ஒன்றையும் செய்யாது. அதனால், அவரது அருள் வழியை உலகிற்கு உணர்த்த நான் இங்கிருக்கின்றேன்.

கு-ரை: பெற்றோம், நாடினோம் என்பன பாடமாயின் அவற்றை ஒருமைப் பன்மை மயக்கமாகக் கொள்க,

8. தெ-ரை: எனது நூலாகிய இத்திருமந்திரத்தைப் பெற்று வழி

கந்துருக் காலாங்கி கஞ்ச மலையனோ
டிந்த எழுவரும் என்வழி யாமே. 8

9. நால்வரும் நாலு திசைக்கொன்றும் நாதர்கள்
நால்வரும் நானா விதப்பொருள் கைக்கொண்டு
நால்வரும் நான்பெற்ற தெல்லாம் பெறுகென
நால்வரும் தேவராய் நாதரா னார்களே. 9

வழியாக உணர்த்த இருப்பவர், மாலாங்கன், இந்திரன், சோமன், பிரமன், உருத்திரன், தறிபோன்ற உருவத்துடன் யோகத்தில் இருக்கும் காலாக்கினி, கஞ்சமலையன் என்னும் எழுவருமாவர். இவரே என்வழியினர்.

கு-ரை: மந்திரம் எனப்பின்னர்க் கூறப்படும் பெயரை இங்கு எதிரது போற்றிக் கூறினார். இந்திரன் முதலியோர் கடவுளரல்லர், அப்பெயர்பெற்ற மாணாக்கர் என்க. இவர்களை ஓரோரிடத்தில் நாயனார் பின்னர்க் குறித்தல் காண்க. இவர் என்வழியாம் என வேறு தொடராக்குக. இங்ஙனமாகவே, இவர் எழுவரும் திருமூலர்தம் நேர் மாணாக்கராய்ப் பின்பு அவரது மரபினை வேறுவேறிடத்தில் இருந்து வளர்த்தனர் என்பது பெறப்படும். அண்மையில் வாழ்ந்த தாயுமான அடிகள் தம் ஆசிரியராகிய மௌன குருவை, மூலன் மரபில்வரு மௌன குருவே என விளித்தமை காணப்படுகின்றது.

9. தெ-ரை: நந்தி பெருமானுக்கு மாணாக்கராகிய எண்மருள், நந்திகள் எனப்பட்ட நால்வரும் எல்லா உலகங்கட்கும் பொருந்திய ஆசிரியர்களாய், அறம் முதலாக நால்வகைப்பட்டுப் பற்பல வகையாக விரிந்த உறுதிப்பொருள் அனைத்தையும் உணர்ந்து, நான் பெற்ற பேற்றினை உலகம் பெறுவதாக என்னும் பேரருள் உடையராய், அதனால் சிவகணத்துள்ளே ஆசிரியராயினர்.

கு-ரை: அதனால், அவர் இந்நிலவுலகத்திற்கு வந்திலர் என்ற வாறு. அந்நால்வருள் சனற்குமாரர்க்குச் சத்தியஞான தரிசினிகளும், அவர்க்குப் பரஞ்சோதி மாமுனிகளும் மாணாக்கராக, பரஞ்சோதி மாமுனிகள் வான்வழிச் செலவின் இடையே தமிழ்நாட்டில் திரு வெண்ணெய்நல்லூரில் கருவிலே திருவுடையவராய் (சாமுசித் தராய்)த் தோன்றி, சுவேதவனப்பெருமாள் என்னும் பிள்ளைத் திருப் பெயர் உடையாராய் இருந்தவர்க்குச் சிவஞானத்தை உபதேசித்து, மெய் கண்டார் எனத் தீக்கைத் திருப்பெயரும் இட்டுச் செல்ல, அவரது

10. மொழிந்தது மூவர்க்கும் நால்வர்க்கும் ஈசன்
ஒழிந்த பெருமை இறப்பும் பிறப்பும்
செழுஞ்சுடர் மூன்றொளி யாகிய தேவன்
கழிந்த பெருமையைக் காட்டகி லானே. 10

11. எழுந்துநீர் பெய்யினும் எட்டுத் திசையும்
செழுந்தண் நியமங்கள் செய்மின் என் றண்ணல்
கொழுந்தண் பவளக் குளிர்சடை யோடே
அழுந்திய நால்வர்க் கருள்புரிந் தானே. 11

மரபு இன்றும் தமிழ் நாட்டில் நின்று நிலவுதல் அனைவராலும் அறியப் பட்டது. நான் என்றது, பன்மை ஒருமை மயக்கம். மெய்கண்டாரது தோற்றம் நாயனார்க்குப் பன்னூறாண்டுகட்குப் பிறபட்டது என்பதைப் பலர் அறிவர்.

10. தெ-ரை: பிறப்பு இறப்புகள் இல்லாத பெருமையை உடைய முக்கட் கடவுள் தனது எல்லையில்லாத பெருமையைப் பிறர்க்குக் காட்டமாட்டானாயினும், அதனை அவன் ஆசான்மூர்த்தி வாயிலாகக் காட்டியது மேற்குறித்த நால்வரோடு, சிவயோகமாமுனி முதலிய மூவர்க்குமேயாம்.

கு-ரை: அவர்களோடு அப்பேறு எனக்கும் கிடைத்தது என்பது குறிப்பெச்சம். பணிவினால் இதனை எடுத்தோதாது குறிப்பாற் பெறவைத்தார். நாங்கள் பெற்ற பேறு பிறர் பெறுதற்கரியது என அதன் அருமை கூறியவாறு. இரண்டாம் அடிமுதலாகத் தொடங்கிப் பொருள் கூறுக. மூன்று, நான்கு என்னும் முறைமையால் உளதாகும் செய்யுளின்பம் நோக்கி மூவரை முன் வைத்தார். இறப்பும், பிறப்பும் ஒழிந்த பெருமையை உடைய தேவன் என்க. ஒழிந்த அதனையே பெருமை எனக் கூறலால், பெயரெச்சம் வினைப்பெயர் கொண்டதாம். மூன்றன் என்னும் சாரியை தொகுத்தலாயிற்று. முச்சுடர்களின் ஒளியும் சிவபெருமானது முக்கண்ணின் ஒளியாதல்பற்றி, செழுஞ்சுடர் மூன்றன் ஒளியாகிய தேவன் என்றார்.

11. தெ-ரை: தன்னைவிட்டு இமையளவும் பிரிய விரும்பாத நந்திகள் நால்வர்க்கும் சிவபெருமான் எதிர்ப்படத்தோன்றி, உலகம் அழிகின்ற ஊழிக் காலத்திலும் நீங்கள் நம்மை வழிபட்டிருப்பீராக என்று அருள்புரிந்தான்.

தம் வரலாறு

12. நந்தி இணையடி நான்தலை மேற்கொண்டு
புத்தியி னுள்ளே புகப்பெய்து போற்றிசெய்
நந்தி மதிபுனை அரனடி நாள்தொறுஞ்
சிந்தைசெய் தாகமம் செப்பலுற் றேனே. 12

கு-ரை: அதனால் அவர்கள் என்றும் அவனோடு இருப்பர் என்றவாறு. எழுந்து நீர் பெய்வன ஏழுமேகங்களும். அவைவிடாது பெய்யினும் என்றது, ஊழிக் காலத்தும் என்றவாறு. எட்டுத் திசையும் பெய்யினும் என முன்னே கூட்டுக. மூன்றாம் அடி சிவபெருமான் காட்சி வழங்கினமையைக் குறித்தது. ஆசான் மூர்த்தி வாயிலாக அருள்செய்தபின்னர் நேர்நின்று அருள்புரிந்தார் என்பதாம்.

நந்திகள் நால்வரும் நிலவுலகத் தொடர்பிலராயினார் எனக் கூறி, 'இந்த எழுவரும் என்வழியாமே' எனத் தமது மரபினை எடுத்துக் கூறிப்போந்தமையால், ஏனை மூவரும் இவ்வாறே தம் தம் மாணாக்கர் சிலரால் நந்திமரபினை நிலைபெறுத்தினர் என்பது கொள்ளக் கிடக்கின்றது. எனினும், இன்று சனற்குமாரர் மரபாகிய மெய்கண்ட மரபு ஒன்றுமே நிலைபெற்றுளது என்க.

மேல் ஆசிரியமரபுவகை பலவற்றையும் கூறிய நாயனார் இனி அவற்றுள் ஒன்றன் முதல்வராகிய தாம் தமது நெறிப்பொருளை உலகிற்கு உணர்த்தற்பொருட்டுச் செய்யும் இந்நூலாசிரியர் வரலாறு விளங்குதற் பொருட்டுத் தம் வரலாற்றைக் கூறுகின்றார்.

12. தெ-ரை: என் ஆசிரியராகிய நந்தி பெருமானது இரு திருவடிகளையும் என் சென்னியிலும், சிந்தையிலும் கொண்டு, வாயினாலும் துதித்து, அவ்வாற்றானே சிவபெருமானது திருவருட் பெருமையை இடைவிடாது சிந்தித்து உணர்ந்து, அங்ஙனம் உணர்ந்த வாற்றால், சிவாகமப் பொருளைக் கூறத்தொடங்கினேன்.

கு-ரை: முதலிரண்டு அடிகளும் ஆசிரிய வணக்கங்கூறும் கருத்துடையன. 'மந்திரம்' என்பது 'மனத்தில் நிலைத்து நிற்பது' எனவும் பொருள்தருமாதலின், பின்னிரண்டடிகளால் நூற்பெயர்க் காரணமும் புலப்படுத்தவாறாயிற்று, இதனானே நாயனார் சிவாக மங்களை மொழிபெயர்த்துச் செய்யாது, அவற்றது தெளிந்த பொருளையே திரட்டி இந்நூலால் அருளிச் செய்கின்றார் என்பது

13. செப்பும் சிவாகமம் என்னுமப் பேர்பெற்றும்
அப்படி நல்கும் அருள்நந்தி தாள்பெற்றுத்
தப்பிலா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின்
ஒப்பில்ஒரு கோடி யுகமிருந் தேனே. 13

பெறப்பட்டது. படவே, ''ஆகமம்'' என்றது அவற்றின் தெளிந்த பொருளையாயிற்று. சிவாகம நெறியே 'சைவம்' எனப்படும் சிவநெறி யாதலின், நாயனார் தமிழ்நாடு செய்த தவப்பயனானே இங்கு எழுந் தருளியிருந்து, அந்நெறியின் முறைமையை இந்நூலால் அறியச் செய்தார் என்க.

13. தெ-ரை: உயர்த்துச் சொல்லப்படுகின்ற 'சிவாகமம் என்னும் பெயரையுடைய நூலைப் பெற்றபின்பும், அவற்றின் பொருளை உள்ளவாறு உணர்த்துகின்ற நந்திபெருமானது ஆணை வழி, அழிவில்லாத தில்லையம்பலத்தை அடைந்து அங்குச் சிவபெருமான் செய்யும் ஒப்பற்ற நடனத்தைக் கண்டு மீண்டபின், உடம்போடிருக்க உடன்படாத நிலையிலே பலகாலம் உடம்போடு இருந்தேன்.

கு-ரை: இருந்தது கயிலைத் தாழ்வரையிலாம். இவ் வரலாற்றைத் தமக்கு இயைபில்லாமைபற்றிச் சேக்கிழார் கூறிற்றிலர் என்க. மண்ணுலகத்தார் மன்றின்கட்சென்று திருக்கூத்துக் காண்டல் இன்றியமையாதது என்னும் மரபு நிலைபெறுதற்கு நந்திதேவர் நாயனாரை அது செய்யுமாறு பணித்தருளினார் எனக் கொள்க. அநுபவ ஞானம் கைவரப்பெற்றோர் உடம்பொடு நிற்க விரும் பாமையை வாதவூரடிகளது நிலைபற்றி உணர்க. ஞானம் கைவந்தபின் நாயனாரது நிலை இதுவாயினும், அதற்கு முன்னர் அவர் நெடுங்காலம் இருக்க விரும்பிச் செய்த பெருந்தவம் தனது பயனைத் தந்து நின்றமை யின், அவர் அவ்வாறே இருத்தல் வேண்டுவதாயிற்று என்பதை அவர் அடுத்தபாட்டிற் கூறுதல் காண்க. இவ்வாற்றானே இவரைச் சேக்கிழார், 'அணிமாதி சித்திபெற்றவர்' எனக் குறித்தல் காண்க. ஒப்பு - உடன்பாடு. இவ்வாறு உடன்பாடின்றி இருந்தமையால், ஒவ்வொரு நாளும் ஒவ்வோர் யுகம்போலத் தமக்குத் தோன்றின என்பது தோன்ற, ''எழுகோடியுகம் இருந்தேன்'' என்றார். பலவற்றைக் குறித்தற்கு, 'கோடி' எனக்கூறலும், பலவற்றைக் குறிக்கு மிடத்து ஏழென்னும் எண்ணோடு தொடர்புபடுத்தலும் வழக்கு. எனவே இன்னோரன்ன வாக நாயனார் கூறுவனவற்றிற்கு, 'பன்னெடு நாள் இருந்தார்' என்னும் பொதுப்பொருளே கொள்ளலாவது அறிக. இது பற்றியே நாயனாரது வாழ்நாளைச் சேக்கிழார் அவரது நூலின் பாடற்கணக்கொடு தொடர்பு

14. இருந்தஅக் காரணம் கேள்இந் திரனே
பொருந்திய செல்வப் புவனா பதியாம்
அருந்தவச் செல்வியைச் சேவித் தடியேன்
பரிந்துடன் வந்தனன் பத்தியி னாலே. 14

15. சதாசிவம் தத்துவம் முத்தமிழ் வேதம்
மிதாசனி யாதிருந் தேன்நின்ற காலம்
இதாசனி யாதிருந் தேன்மனம் நீங்கி
உதாசனி யாதுட னேஉணர்ந் தோமால். 15

படுத்தி, 'மூவாயிரம் ஆண்டு' என வரையறுத்து, 'பாடலும் மூவாயிரம், நாயனார் வாழ்ந்த ஆண்டும் மூவாயிரம்' என்னும் நயம்பற்றி, 'ஓராண்டுக்கு ஒன்றாக ஒன்றவன்றான் என எடுத்து இந் நூலை அருளிச் செய்தார்' எனக்குறித்தருளினார். நாயனார் தாம் வாழ்ந்த காலத்தை 'மூவாயிரம் ஆண்டு' என ஓரிடத்தும் குறியாமையை நோக்குக.

14. தெ-ரை: இந்திரனே, உடன்பாடின்றியும் நான் அவ்வாறு நெடுநாள் உடம்போடிருந்த காரணத்தைக் கூறுகின்றேன்; கேள். எல்லா உலகங்கட்கும் தலைவியாம் அருந்தவமாகிய செல்வியை அடியேன் அன்பினால் விரும்பி உடன் நின்று பணிந்துவந்தேன்.

கு-ரை: 'அதனால் அவள் என்னை அவ்வாறு இருக்கச் செய்தாள்' என்றவாறு. அருந்தவச் செல்வி, உருவகம். ஒன்னார்த் தெறலும், உவந்தாரை ஆக்கலும் செய்ய வல்லது தவமாகலின், அதனை உலகத்தின் தலைவியாகக் கூறினார். கல்வி செல்வங்களைக் 'கலை மகள், திருமகள்' என்றல்போலத் தவத்தை, 'புவனாபதி' என்றார். 'புவனா' என்பது உலகமாகிய பெண்பாலை உணர்த்தி நின்றது. 'பதி' என்பது, 'அவனைப் பதமாக உடையவள்' என்னும் ஈகார ஈற்று ஆரியச்சொல். 'இந்திரனே' என்றது, அப்பெயருடைய மாணாக்கரை முன்னிலைப் படுத்ததாம்.

15. தெ-ரை: இறப்புத் தோன்றாதவனாய் இருந்து வாழ்ந்த அக் காலம் முழுதும் உலகத்தில் விருப்பம் தோன்றாது மனஒடுக்கம் உடையவனாயே இருந்தேன். அவ்வாறிருக்கும் பொழுது, சிவபெருமானது ஐந்தொழில்நிலை, பொருட்பெற்றி, தமிழ்மொழி, வேதம் என்னும் இவைகளைப் புறக்கணியாது விருப்பத்துடன் கற்று உணர்ந்தேன்.

16. மாலாங்க னேஇங் கியான்வந்த காரணம்
நீலாங்க மேனியள் நேரிழை யாளொடு
மூலாங்க மாக மொழிந்த திருக்கூத்தின்
சீலாங்க வேதத்தைச் செப்பவந் தேனே. 16

கு-ரை: கீழுள்ள மகேசுரர் முதலியவர்க்கும் தலைவர் சதா சிவரேயாதலின், அவரே ஐந்தொழிற்கும் தலைவராதல் வெளிப்படை. அதனால், ஐந்தொழில் நிலையை, 'சதாசிவம்' என்ற ஒன்றினாலே குறித்தார். இனி அதனை 'உபலக்கணம்' என்றலும் ஆம். 'முத்தமிழ்' என்ற இதனால், கயிலைத் தாழ்வரையிடத்தும் அக்காலத்தில் தமிழ் போற்றிக் கற்கப்பட்டது என்பது தெளிவாகும். அதனாலன்றோ பிற் காலத்திற் சேரமான் பெருமாள் நாயனார் தமது 'திருக்கயிலாய உலா' என்னும் ஞானத் தமிழ்ப்பாடலைத் திருக்கயிலையில் யாவரும் கேட்க அரங்கேற்றினார்! இதனால், நாயனார் தாம் பலகலை வல்லுநராயி னமையைக் குறித்தவாறு காண்க. இவற்றையெல்லாம் இவர் நந்தி பெருமானது அருள்பெற்ற பின்னர் அதனையே துணையாகப் பற்றி நன்குணர்ந்தார் என அறிக. எனவே, இறைவன் திருவருள் உலகர் உய்தற்பொருட்டு இவரை இந்நிலையினராக்கியது என்பதும் உணரற் பாற்று. 'மிருதம், இதம்' என்பன செய்யுள் நோக்கி; 'மிதா, இதா' என நின்றன. சனித்தல் - தோன்றுதல். உதா சனித்தல் - புறக்கணித்தல். இரண்டாம் அடியில் 'நிதாசனி' என்பதும் பாடம்.

16. தெ-ரை: மாலாங்கனே, திருக்கயிலையை விட்டு இத்தமிழ்நாட்டிற்கு நான் வந்தகாரணம் கேள். சிவபெருமான் முதற்கண் உமை அம்மைக்கு முதல் நூலாகச் சொல்லிய சிவாகமத்தின் பொருளைச் சொல்லுதற்காகவே வந்தேன்.

கு-ரை: 'மாலாங்கன்' என்பவர் நாயனார்தம் மாணாக்கருள் ஒருவர் என்பது மேலே சொல்லப்பட்டது. 'மொழிந்த வேதம்' என இயையும். பல தேவர்களையும் பொதுப்பட வைத்துக்கூறிய வேதமும், தான் ஒருவனையே முதல்வனாக வைத்துக் கூறிய வேதமும் எனச் சிவ பெருமான் கூறிய வேதங்கள் இரண்டு எனவும், அவற்றுள் முன்னதை முனிவர் நால்வர்க்கும், பின்னதை உமையம்மைக்கும் கூறினான் எனவும் கூறப்படுவனவற்றுள், பின்னதாகிய வேதம் என்பார், திருக் கூத்தின் சீலாங்கவேதம் என்றார். அது சிவாகமம் என்பது வெளிப் படை. ஆகமமும், முதல்நூல் என்னும் பொருளில் வேதம் எனப்படுதல் அறிந்து கொள்க. சீலம் - இயல்பு. அங்கம் - வகை. நாயனார் வந்தது அகத்தியரைக் காணுதற்பொருட்டேயாயினும், திருவருட் செயல் இவ்வாறு இருந்தது என்பது இப் பாட்டின் கருத்து என்க.

17. நேரிழை யாவாள் நிரதி சயானந்தப்
பேருடை யாள்என் பிறப்பறுத் தாண்டவள்
சீருடை யாள்சிவன் ஆவடு தண்டுறை
சீருடை யாள்பதம் சேர்ந்திருந் தேனே. 17

18. சேர்ந்திருந் தேன்சிவ மங்கைதன் பங்கனைச்
சேர்ந்திருந் தேன்சிவன் ஆவடு தண்டுறை
சேர்ந்திருந் தேன்சிவ போதியின் நீழலில்
சேர்ந்திருந் தேன்சிவன் நாமங்கள் ஓதியே. 18

17. தெ-ரை: 'உமையம்மை' என்று சொல்லப்படுபவள் வரம்பில் இன்பமாகின்ற பெருமையை உடையவள். அவள் எனது பிறப்பை அறுத்து வீடு தந்து என்னை ஆட்கொண்டவள்; மிக்க புகழை உடையவள்; சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருவாவடுதுறை யாகிய இச் சிறந்த திருத்தலத்தைத் தனதாக உடையவள். அவள் திருவடி நிழலில் இதுபொழுது இருக்கின்றேன்.

கு-ரை: 'தேவியாவாள் சிவனது சத்தியே' என்பது பற்றி இவ்வாறு அருளிச்செய்தார், ''பேரின்பமான பிரமக்கிழத்தி'' என்றார் *திருவுந்தியாரி*லும் (பா.34). இதனால், தாம் திருவாவடுதுறையில் நிரதி சயானந்தம் உற்று இருந்த நிலையைக் கூறினார் என்க சீர் - செல்வம். 'சீராக' என ஆக்கம் வருவிக்க. ஆவடுதுறை அம்மை ஆவாய் நின்று பூசித்த தலமாதல் அறிக,

18. தெ-ரை: சீருடையாள் பதம் சேர்ந்தமையால் அவளை ஒருபாகத்தில் உடைய சிவனையும் சேர்ந்திருக்கின்றேன். இத் திருவா வடுதுறை அவளுடையது மட்டுமன்று; அவனுடையதுந்தான். இங்குச் சிவஞானத் திருவின்கீழ் அவனது திருப்பெயர் பலவற்றையும் ஓதித் துதித்துக்கொண்டிருக்கின்றேன்.

கு-ரை: போதம் - ஞானம். போதத்தை உடையது போதி. 'புத்தருக்குப்பின் அரசமரத்திற்கு இப்பெயர் உண்டாயிற்று எனினும், இதன் கீழ்ப் புத்தர்பெற்றது சூனியஞானம்; நான் பெற்றது சிவஞானம்' என்பார், 'அரச மரம்' என்னாது ''சிவபோதி'' என்றார்.

19. இருந்தேன்இக் காயத்தே எண்ணிலி கோடி
இருந்தேன் இராப்பகல் அற்ற இடத்தே
இருந்தேன் இமையவர் ஏத்தும் பதத்தே
இருந்தேன்என் நந்தி இணையடிக் கீழே. 19

20. பின்னைநின் றென்னே பிறவி பெறுவது
முன்னைநன் றாக முயல்தவம் செய்திலர்
என்னைநன் றாக இறைவன் படைத்தனன்
தன்னைநன் றாகத் தமிழ்செய்யு மாறே. 20

---

19. தெ-ரை: இங்கும் இவ்வுடம்பிலே பல்லாண்டுகள் இருந்தேன். அங்ஙனம் இருந்த காலம் முழுவதும் சிவஞானப் பேரொளியில்தான் இருந்தேன். அது தேவராலும் வணங்கப்படும் எங்கள் நந்தி பெருமானது திருவடி நிழலேயன்றி வேறில்லை.

கு-ரை: ஆசிரியர் சிவமேயாதல்பற்றி, நந்தி இணையடி சிவனடியேயாதல் அறிக. 'இரவு, பகல்' என்பன அறியாமையும், அறிவுமாம். இவை கருவி கரணங்களின் நீக்கத்தாலும், தொடக்கினாலும் வருவன. இவை அற்றஇடம், என்றும் ஒரு பெற்றியாய் விளங்கும் பேரறிவாம். அதனால் அங்குத் துன்பம் என்பதின்றி, இன்பமே உளது என்க.

20. தெ-ரை: முற்பிறப்பில் நன்கு முயல்கின்ற தவத்தைச் செய்யாதவர், பின்னை நற்பிறவியைப் பெறுதல் எவ்வாறு கூடும்! கூடாது. ஆகவே நான்செய்த தவம் காரணமாக இறைவன் என்னைத் தன்னைத் தமிழ்மொழியால் நன்றாகப் பாடும் வண்ணம் செவ்விய முறையால் படைத்தான்.

கு-ரை: 'ஆதலால் இதனைச் செய்கின்றேன்' என்பது குறிப்பெச்சம். மூலன் உடம்பில் புகுதற்குமுன்னே இருந்தநிலையை முற்பிறப்பாகவும், அதற்குப்பின் இருந்த நிலையைப் பிற்பிறப்பாகவும் வைத்து, இதில் நாயனார் அருளிச் செய்தார். ஆகவே, 'படைத்தனன்' என்றது, மூலன் உடம்பில் இருக்கச் செய்ததையேயாயிற்று. தவம் இன்றியாதொன்றும் ஆகாது என்பதே முதல் இரண்டு அடிகளால் உணர்த்தப் பட்டது. 'தமிழ்செய்தல்' என்னும் இரண்டாவதன் தொகை

21. ஞானத் தலைவிதன் நந்தி நகர்புக்கு
ஊனமில் ஒன்பது கோடி யுகந்தன்னுள்
ஞானப்பா லாட்டி நாதனை அர்ச்சித்து
நானும் இருந்தேன்நற் போதியின் கீழே.

22. செய்கின்ற வாறறி சிவமுனி சித்தசன்
வெல்கின்ற ஞானத்து மிக்கோர் முனிவராய்ப்
பல்கின்ற தேவர் அசுரர் நரர்தம்பால்
ஒல்கின்ற வான்வழி யூடுவந் தேனே.

23. சித்தத்தின் உள்ளே சிறக்கின்ற நூல்களில்
உத்தம மாகவே ஓதிய வேதத்தின்
ஒத்த உடலையும் உள்நின்ற உற்பத்தி
அத்தன் எனக்கிங் கருளால் அளித்ததே. 21

ஒருசொல் நீர்மைத்தாய்ப் பாடுதல் எனப் பொருள்தந்து, ''தன்னை'' என்றதற்கு முடிபாயிற்று. 'தமிழ்ச்செய்யுமாறே' என்பதும் பாடம். இரண்டாம் அடியை முதலில் வைத்துரைக்க.

21, 22. இப் பாடல்கள் மேற்கூறியவற்றை மிகப் பின்வந்து கூறுதலாலும், இவர் மாணாக்கரல்லாத ஒருவரை நோக்கிக் கூறுதலாலும், 'நாயனார் தரைவழியாகவே பல தலங்களைத் தரிசித்துத் திருவாவடுதுறையை அடைந்தார்' என்ற சேக்கிழார் திருமொழிக்கு மாறாக. வான் வழி வந்ததாகக் கூறுதலாலும் 'இவைநாயனார் அருளிச் செய்தன அல்ல' என்க.

23. தெ-ரை: மக்களுடைய உள்ளத்தில் சிறந்து நிற்கின்ற நூல்கள் பலவற்றிலும் தலையானதாகச் சொல்லப்படுகின்ற வேதத்தைச் சொல்லுதற்கு ஏற்ற உடம்பையும், உள்ளக்கருத்தையும் எனக்கு இங்கு இறைவன் அளித்தது, தனது அருள் காரணமாகவாம்.

கு-ரை: 'தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறு நியமித்து அதற் கேற்ற உடம்பைக் கொடுத்துக் கருத்துக்களையும் தோற்றுவித்தான்' என்றபடி. 'உற்பத்தியும்' என்ற உம்மை தொகுத்தல் பெற்றது.

24. நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறும் மந்திரம்
தான்பற்றப் பற்றத் தலைபபடுந் தானே. 22

25. பிறப்பிலி நாதனைப் பேர்நந்தி தன்னைச்
சிறப்பொடு வானவர் சென்றுகை கூப்பி
மறப்பிலர் நெஞ்சினுள் மந்திர மாலை
உறைப்பொடுங் கூடிநின் றோதலு மாமே. 23

24. தெ-ர: பரவெளியைப் பற்றிநிற்கின்ற வேதப் பொருளை உள்ளவாறு உணர்ந்து சொன்னால் அதுவே, 'உடம்பைப் பற்றி நிற்கின்ற உயிருணர்வில் நிலைத்துநிற்கும் மந்திரம்' எனப்படும். அம்மந்திரத்தை இடையறாது உணர உணரப்பேரின்பம் கிடைப்பதாம். அவ்வாற்றால் நான்பெற்ற இன்பத்தை, இவ்வுலகமும் பெறுவதாக.

கு-ரை: உயிர்களின் உணர்வில் தோன்றும் கருத்துக்களே சுத்தமாயையின் காரியமாகிய நாதத்தைப்பற்றி நிற்பனவாக, இறைவன் உலகிற்கு உணர்த்தும் பொருள்கள் அவனது அருள் வெளியைப் பற்றுக்கோடாகக் கொண்டுநிற்றல் பற்றி ''வான் பற்றி நின்ற மறைப்பொருள்'' என்றார். இதனால், மந்திரங்களின் இயல்பும், அவற்றின் பயனும் இவை எனக் கூறுவார்போன்று, தாம் செய்யும் நூல் மந்திரமாதலையும், அதன் பயனையும் கூறினார் என்க.

25. தெ-ரை: தேவர் பலரும், பிறப்பில்லாத முதல்வனும், 'நந்தி' என்னும் பெயருடையவனும் ஆகிய சிவபெருமானைத் தூய்மையுடன் சென்று கைதொழுது இம் 'மந்திரமாலை' நூலை மறவாது மனத்துட் கொள்வர். ஆகவே, நீவிரும் இதனை உறுதியாக நின்று ஓதுதல் வேண்டும்.

கு-ரை: 'உண்மைச் சிவநூல் எங்கு உளதாயினும் அதனைத் தேவர் மகிழ்ச்சியோடும் கைக்கொண்டு போற்றுவர்' என்னும் துணிவு பற்றி; ''வானவர் மறப்பிலர் நெஞ்சினுள் மந்திரமாலை'' என்றார். இக்கருத்தே பற்றிச் சேக்கிழாரும், 'ஞானசம்பந்தர் நமச்சிவாயத் திருப்பதிகத்தை வானமும் நிலனுங்கேட்க அருளிச்செய்தார்' என்றும், 'நாவுக்கரசரது திருப்பெயரை உலகேழினும் மன்னுக என்று இறைவன் அருளிச்செய்தான்' என்றும் கூறினார். ''மந்திர மாலை'' என்றது நூற்

26. அங்கி மிகாமைவைத் தான்உடல் வைத்தான்
எங்கும் மிகாமைவைத் தான்உல கேழையும்
தங்கி மிகாமைவைத் தான்தமிழ்ச் சாத்திரம்
பொங்கி மிகாமைவைத் தான்பொருள் தானுமே. 24

பெயர் குறித்தவாறு. எனவே, இவை இரண்டுபாட்டாலும் நூற் பெயரும், நூலது பெருமையும் கூறப்பட்டனவாம்.

26. நெ-ரை: உடம்பைப் படைத்த இறைவன், அதனுள் வேண்டும் அளவிற்கே நெருப்பை அமைத்துள்ளான். நிலவுலகைப் படைத்த அவன் அளவின்றி எங்கும் பரந்து கிடபப்படையாது, ஏழென்னும் அளவிற்படவே படைத்தான். அவ்வாறே தமிழ் நூல் களையும் கற்பாரின்றி வீணேகிடக்கவையாது, அளவாக வைத்தான். பொருளையும் அவற்றால் மிகைபடாது இன்றியமையாத அளவிலே புலப்பட வைத்தான்.

கு-ரை: 'ஆகவே, தமிழாலாய இந்நூலும் மூவாயிரம் பாடலுள் இன்றியமையாப் பொருள்களைக் கூறுவதாய் அமையும்' என்பதாம். 'இலட்சம் கிரந்தம், கோடி கிரந்தம் என்றாற்போல் வனவற்றை நோக்க, இம்மூவாயிரம் பாடல் எம்மட்டாய் எல்லா ஆகமங்களுமாகும் என்று இகழற்க' என்றவாறு. இதனானே, 'சில்வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவினராய்ச் சுருங்கிய நில வுலகத்தின் கண் வாழும் சகலராய மக்கட்கு ஏற்புடையன தமிழ் நூல்களே' என்பதும் குறித்தவாறு காண்க. ''உலகேழ்'' என்றது நாவலந்தீவு முதலிய ஏழு தீவுகளை. நாயனார் இந்நூல்செய்த காலத்தில், '*தொல்காப்பியம், திருக்குறள், பத்துப்பாட்டு, எட்டுத் தொகை*, திருவாசகம், திருக்கோவையார்' என்னும் இவையே தமிழ்மொழியில் சிறந்த நூல்களாய் விளங்கிப் பயனைக் குறை வின்றித் தந்தமையின்; ''தங்கி மிகாமை வைத்தான் தமிழ்ச்சாத்திரம் - பொங்கி மிகாமை வைத்தான் பொருள் தானுமே'' என்றார். காரைக்காலம்மையார் பாட்டு முதலாக இன்று பதினொன்றாந் திருமுறையில் உள்ளனவற்றுள் சில, நாயனார் காலத்து இருந்தனவா என்பது ஆராய்ந்துணரத் தக்கது. மாணிக்கவாசகர் தாம் கூறும் தலங்களுள் திருவிடைமருதூரைக் குறித்துத் திருவா வடுதுறையைக் குறியாமையால், இந்நாயனாராலே அத்தலம் 'நவகோடி சித்தபுரம்' என்பது முதலிய பல சிறப்புக்களைப் பெற்றது, அவர் காலத்திற்குப் பின்னரே என்பது துணியப்படும். நாயனாரது காலத்தில் திருவாவடுதுறை பொதுவான ஒரு சிவதலமாய் இருந்தது எனவும், எக்காரணத்தாலோ இறைவன் திருவருள் இவரை

27. ஞேயத்தை ஞானத்தை ஞாதுரு வத்தினை
மாயத்தை மாமாயை தன்னில் வரும்பரை
ஆயத்தை அச்சிவன் றன்னை அகோசர
வீயத்தை முற்றும் விளக்கியிட் டேனே. 25

அத்தலத்தில் இருத்தியது எனவும் கொள்க. 'கோகழி' என்பதைத் 'திருவாவடு துறை' எனச் சிலர் கருதுதல் பொருந்துவதாய் இல்லை.

இப்பாட்டின் பின்பதிப்புக்களில் காணப்படும் ''அடிமுடி காண்பார்'' என்னும் பாட்டுச் சிவபரத்துவத்தில் இருத்தற்குரியது.

27. தெ-ரை: இம்மூவாயிரம் பாட்டுக்களிலே, 'அறியப்படும் பொருள், அறிவு, அறிபவன், அசுத்தமாயா காரியம், சுத்தமாயா காரியம், அனைத்திற்கும் மேலான பரம்பொருளாகிய சிவன் என்று சொல்லப்படுகின்ற வாக்கு மனங்கட்கு எட்டாத முதல்கள் ஆகிய அனைத்தின் இயல்பையும் முற்றக் கூறுவேன்.

கு-ரை: சுத்த தத்துவம் காலம் கடந்தன ஆதல்பற்றி, 'நித்தப்பொருள்' என்று சொல்லப்படுதலால், காலத்திற்கு உட்பட்ட ஏனைத் தத்துவங்களை, 'மாயம்' என்றார். மாயம் - மாய்தலுடையது. 'பரை' என்றது பரநாதத்தை. ஆயம் - கூட்டம்; தொகுதி. 'பரை முதலாகிய தொகுதி' எனச் சுத்ததத்துவங்களைக் குறித்தவாறு. மாயையைக் கூறவே, ஏனைய கன்ம ஆணவ மலங்களும் பெறப் படும். 'அறிபவன்' எனப்பட்டது பசுவாகிய ஆன்மாவே என்பது வெளிப்படை. 'ஞாதுருவத்தை' என்பதில் அத்து, வேண்டாவழிச் சாரியை. பதியாகிய இறைவன் அறியப்படும் பொருளாய் நிற்றல் தடத்தநிலையிலாதலின், ''ஞேயம்'' என்றது தடத்த சிவனையாம். ஞானம், அவனது சத்தி. 'சொரூப சிவன்' என்பது உணர்த்துதற்கு, ''அச்சிவன்'' எனச் சேயனாகச் சுட்டிக் கூறினார். அகோசரம் - அகப் படாமை. பசு பாசங்களின் உண்மை இயல்புகளும் வாக்கு மனங்கட்கு அகப்படுவன அல்லவாதல் பற்றி அனைத்தையும் 'அகோசரம்' என்றார். 'பீசம்' என்னும் ஆரியச்சொல். 'வீசம்' என்று ஆகிப் பின் எதுகை நோக்கி, 'வீயம்' எனத் திரிந்தது. பீசம் - வித்து. 'சிறிய அளவில் செய்யப்படினும், 'இந்நூலுள் ஆகமப்பொருளாகிய முப்பொருள் இயல்பு முழுவதும் எஞ்சாமற் கூறப்படும்' என்றவாறு. துணிவு தோன்ற, ''விளக்கியிட்டேன்'' என இறந்த காலத்தாற் கூறினார்.

28. விளக்கிப் பரமாகும் மெய்ஞ்ஞானச் சோதி
அளப்பில் பெருமையன் ஆனந்த நந்தி
துளக்கறும் ஆனந்தக் கூத்தன்சொற் போந்து
வளப்பிற் கயிலை வழியில்வந் தேனே. 26

29. நந்தி அருளாலே மூலனை நாடிப்பின்
நந்தி அருளாலே சதாசிவ னாயினேன்
நந்தி அருளால்மெய்ஞ் ஞானத்துள் நண்ணினேன்
நந்தி அருளாலே நான்இருந் தேனே. 27

---

28. தெ-ரை: இவை அனைத்தையும் விளக்கிச் சிவபெரு மானது உபதேச முறையில் நின்று, 'திருக்கயிலாய பரம்பரையில் வந்த ஆசிரியன்' என்னும் பேற்றைப் பெற்றவனாவேன்.

கு-ரை: பரமாகும் சோதி, பெருமையன், ஆனந்த நந்தி என்பனவும் சிவபெருமானையே குறித்தன. 'வளப்பம்' என்பது, 'வளப்பு' என நின்றது

29. தெ-ரை: சிவபெருமானது திருவருளால் மூலனது உடலைப் பற்றிநின்றபின், அவனது திருவருளாலே ஆகமத்தைப் பாடும் நிலையை அடைந்தேன். அந்நிலையில் அவன் அருளால் நிட்டையும் பெற்றுச் சீவன் முத்திநிலையில் பல்லாண்டுகள் இருக்கின்றேன்.

கு-ரை: ''மூலனை நாடி'' என்றது வழிமொழிதல். 'ஆகமத்தை அருளிச்செய்தவர் சதாசிவ நாயனார்' என்றல் பற்றித் தம்மை அவ்வாறு கூறினார். 'சீவன் முத்தி நிலையிலிருந்தே இதனைச் செய்கின்றேனாதலின், இது, சிவன் மொழியேயன்றி என்மொழி யன்று' என்பதாம். உலகம் உய்தல் காரணமாக அருளாளர் இங்ஙனம் பட்டாங்குக் கூறுவனவற்றை நம்மனோர் சொற்போலத் தற்புகழ்ச்சி என்றல் கூடாமை அறிக. இது பற்றி யன்றே 'நிறைமொழி மாந்தரா யினார் சில சொற்களை ஆணையாற் கிளப்பர்' (*தொல் - செய்யுள் - சூ. 178*) என்றதூஉம் என்க. 'பல்லாண்டுகள்' என்பது ஆற்றலான் வந்தது.

30. இருக்கில் இருக்கும் எண்ணிலி கோடி
அருக்கிய மூலத்துள் அங்கே இருக்கும்
அருக்கனும் சோமனும் ஆரழல் வீச
உருக்கி யுரோமம் ஒளிவிடுந் தானே. 28

31. பிதற்றுகின் றேன்என்றும் பேர்நந்தி தன்னை
இயற்றுவன் நெஞ்சத் திரவும் பகலும்
உயற்றுவன் ஓங்கொளி வண்ணன்எம் மானை
இயற்றிகழ் சோதி இறைவனும் ஆமே. 29

---

30. தெ-ரை: பல்லாண்டுகள் ஓர் உடம்பிலே இருத்தல் கூடுமோ? உடம்பு தளர்ச்சியுற்று அழிந்தொழியாதோ எனில் மறை விடமாகிய மூலாதாரத்துள், எழாது கிடக்கின்ற அரிய நெருப்பை, 'சூரியகலை. சந்திரகலை' என்னும் இரு காற்றும் அடங்கி நின்று மூட்டி வளர்க்கும் படி இருந்தால், உடம்பு நெடுங்காலம் தளர்வின்றி இருக்கும்; உரோமமும் வெளிறாது கறுத்து அழகுற்று விளங்கும்.

கு-ரை: 'அவ்வாற்றால் நான் பல்லாண்டுகளாக இருக் கின்றேன்' என்பதாம். இரண்டாம் அடி முதலாகத்தொடங்கி, 'இருக்கும் ஆரழலை அருக்கனும் சோமனும் வீச இருக்கில் எண்ணிலி கோடி இருக்கும்' எனக்கூட்டி, ''இருக்கும்'' என்பதற்கு 'உடம்பு' என்பது வருவிக்க. உருக்குதல் - மனத்தைக் கவர்தல்.

31. தெ-ரை: இவ்வாறிருக்கின்ற நிலையில் நான் இரவும் பகலும் சிவபிரானது பெயரையே பிதற்றுவேன். நெஞ்சில் நினைப்பேன்; காயத்தால் அவனை வழிபடுவேன். அதனால், விளக்க விளங்குகின்ற என் அறிவும், இயல்பாய் விளங்குகின்ற சிவனது அறிவேயாய்த் திகழும்.

கு-ரை: விடாது சொல்லுதலை, 'பிதற்றுதல்' என்றார். 'நந்தி பேர் தன்னை' என மாற்றுக. நெஞ்சத்து இயற்றுதல், நினைத்தல். 'உஞற்றுவன்' என்பது, 'உயற்றுவன்' என நின்றது. 'முயற்றுவன்' எனவும் பாடம் ஓதுவர். 'இயல்பாகத் திகழ்கின்ற சோதி' என்க. இறைவன், ஆகுபெயர். ''ஆம்'' என்றதற்கு எழுவாய் வருவிக்கப் பட்டது.

அவையடக்கம்

32. ஆர்அறி வார்எங்கள் அண்ணல் பெருமையை
ஆர்அறி வார்அவ் வகலமும் நீளமும்
பேர்அறி யாத பெருஞ்சுடர் ஒன்றதின்
வேர்அறி யாமை விளம்புகின் றேனே. 30

33. பாடவல் லார்நெறி பாடஅறிகி லேன்
ஆடவல் லார்நெறி ஆடஅறிகி லேன்
நாடவல் லார்நெறி நாடஅறிகி லேன்
தேடவல் லார்நெறி தேடகில் லேனே. 31

பதினெட்டுத் திருமந்திரங்களால் தம் வரலாறும், நூல் வரலாறும் கூறிய நாயனார், நான்கு திருமந்திரங்களால் அவையடக்கம் கூறுகின்றார். நாயனார் அவையடக்கம் கூறியது, இறைவனது பெருமையை மாணாக்கர் உணர்தற்பொருட்டு என்க.

32. தெ-ரை: எங்கள் சிவபெருமானது திருவருளின் பெருமையை முற்ற உணர்வோர் யாவர்! அவனது பரப்பைத்தான் யாவர் உணர வல்லார்! சொல்லுக்கு அகப்படாத பேரறிவுப் பொருள் தன்னோடு ஒப்பது பிறிதொன்றில்லதாய் உளது. அதனது மெய்ந்நிலையை அறியாமலே நான் பலரும் அறியக்கூறத் தொடங்கினேன்.

கு-ரை: ''ஒன்று'' எனச் சிவபெருமானையே வேறு போலக் கூறினார். மெய்ம்மையை, ''வேர்'' என்றார். 'அறியாமல்' என்றது, 'முற்ற உணராது சிறிதுணர்ந்த அளவிலே' என்றவாறு. 'அறிந்த அளவில் செய்கின்றேன்' என்றபடி. விளம்புதல் - பலரறியக் கூறுதல்.

33. தெ-ரை: இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழுள் ஒன்றையும் நெறிப்பட அறிகிலேன். அளவை நூல் முறையால் ஆராயவும் வல்லனல்லேன். பேரன்பினால் இறைவனையே தேடி அலையும் நிலைமையும் இல்லேன்.

கு-ரை: 'நான் சிவபெருமானது பெருமையைக் கூறுதல் எவ்வாறு' என்பது குறிப்பெச்சம். எனவே, 'எனது சொல் அறிவுடை யோர்க்கு நகை விளைக்கும்' என்பதாம். பாடுதல், இயல்வகையாலும். இசைவகையாலும் என்க.

34. மன்னிய வாய்மொழி யாலும் மதித்தவர்
இன்னிசை உள்ளே எழுகின்ற ஈசனைப்
பின்னை உலகம் படைத்த பிரமனும்
உன்னும் அவனை உணரலும் ஆமே. 32

35. தத்துவ ஞானம் உரைத்தது தாழ்வரை
முத்திக் கிருந்த முனிவருந் தேவரும்
ஒத்துடன் வேறாய் இருந்து துதிசெயும்
பத்திமை யால்இப் பயன்அறி யாரே. 33

---

34. தெ-ரை: தன்னை அறிகின்றவரது உள்ளத்தில் வீணையுள் இனிய இசைபோல மெல்ல எழுகின்றவனும், உலகத்தைப் படைத்த பிரமனாலும் தியானிக்கப் படுகின்றவனும் ஆகிய இறைவனது பெருமையை, நிலைபெற்ற மெய்ந்நூல் வழியாகவும் சிறிது உணர்தல் கூடும்.

கு-ரை: 'அவ்வாற்றால் ஆகமத்தின்வழிச் சிறிது கூறு கின்றேன்' என்பது குறிப்பெச்சம். எனவே, 'அம்முதனூற் பொருளை யுடையது என்பதுபற்றி அறிவுடையோர் இந்நூலை இகழார்' என்பது கருத்து. 'மதித்தவர் உள்ளே இன்னிசைபோல எழுகின்ற ஈசனை'' எனக் கூட்டுக. ''இன்னிசை வீணையில் இசைந் தோன் காண்க'' (தி.8 திருவாசகம் . திருவண்டப்பகுதி - 35) என்றமை நினைக்கத்தக்கது. பின்னைப் படைத்தல் - மீளப் படைத்தல்.

35. தெ-ரை: மன்னிய வாய்மொழியாகிய சிவாகமங்கள், வீடு பேற்றை அடைவதற்கு விரும்பியிருந்த முனிவரும், தேவரும் கருத்தொருமை கொண்டு உலகப் பயன் விரும்பும் மக்களை விடுத்துத் தனி இடத்திலிருந்து வேண்டிக்கொண்ட அன்பு காரணமாக இறைவன் உண்மை ஞானத்தைக் கயிலைத் தாழ்வரைக்கண் இருந்து உணர்த்தியருளிய நூல்களாம். பக்குவம் இல்லாதோர் இவ்வுண்மையை அறிய மாட்டார்.

கு-ரை: 'அதனால், அவற்றை வேதத்திற்குப் புறம்பான நூல் என்று இகழ்வர். அவர் என்னையும் இகழ்வராதலின், அது பொருளன்று' என்பது குறிப்பெச்சம். மூன்றாம் அடி முதலாகத் தொடங்கி, 'பத்திமையால் தத்துவஞானம் தாழ்வரை உரைத்தது' எனக்கூட்டி உரைக்க. ''உரைத்தது'' என்னும் பயனிலைக்கு எழுவாய் முன்னைப் பாட்டினின்றும் வந்தது. 'பத்திமையால் உரைத்தது'

நூலின் அளவும் பயனும்

36. மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது
காலை எழுந்து கருத்தறிந் தோதிடின்
ஞாலத் தலைவனை நண்ணலும் ஆமே. 34

எனவே, அறியார் அஃதில்லாதோர் என்பது விளங்கிற்று. இதனால், 'வேதம் உலகர்பொருட்டும், சிவாகமம் சத்திநிபாதர் பொருட்டும் சிவபெருமானால் செய்யப்பட்டன' என்பது சொல்லப்பட்டது.

இதனை,

''வேதநூல் சைவநூல் என்றிரண்டே நூல்கள்;
வேறுமுள நூல்இவற்றின் விரிந்த நூல்கள்;
ஆதிநூல் அனாதிஅம லன்தருநூல் இரண்டும்;
ஆரணநூல் பொது; சைவம் அருஞ்சிறப்பு நூலாம்;
நீதியினால் உலகர்க்கும் சத்திநிபா தர்க்கும்
நிகழ்த்தியது''

எனச் *சிவஞானசித்தி* விளக்குதல் காண்க.

பாயிரத்திறுதியில் நூற்பாட்டின் தொகையும், நூற்பயனும் கூறுகின்றார்.

36. தெ-ரை: மூலன் பாடிய மூவாயிரம் பாடலையுடைய இத்தமிழ் நூல் நந்திபெருமானது அருள் உணர்த்திய பொருளை உடையதே. அதனால், நாள்தோறும் இதனைப் பொருளுணர்ந்து ஓதுவோர் முதற் கடவுளாகிய சிவபெருமானை அடைவர்.

கு-ரை: ''மூலன்'' என்றது தம்மைப் பிறர்போலக் கூறியவாறு. ஞானசம்பந்தரும், நம்பியாரூரரும் தம் பதிகத்திறுதியில் இவ்வாறு கூறுதல் காண்க. இங்ஙனம் நாயனார் ''மூவாயிரம் தமிழ்'' என்றமையானும், மேல் ''மந்திர மாலை'' என்றமையானும் சேக்கிழார், ''நற்றிரு மந்திரமாலை'' எனவும், ''தமிழ் மூவாயிரம் சாத்தி'' எனவும் கூறினார் என்க.

37,38,39. இப்பாட்டுக்கள் பின்வந்தோர் செய்தவை. இவை

37. வைத்த பரிசே வகைவகை நன்னூலின்
முத்தி முடிவிது மூவா யிரத்திலே
புத்திசெய் பூர்வத்து மூவா யிரம்பொது
வைத்த சிறப்புத் தரும்இவை தானே.

குருமட வரலாறு

38. வந்த மடம்ஏழு மன்னும்சன் மார்க்கத்தின்
முந்தி உதிக்கின்ற மூலன் மடவரைத்
தந்திரம் ஒன்பது சார்வுமூ வாயிரம்
சுந்தர ஆகமச் சொல்மொழிந் தானே.

39. கலந்தருள் காலாங்கர் தம்பால் அகோரர்
நலந்தரு மாளிகைத் தேவர்நா தாந்தர்
புலங்கொள் பரமானந் தர்போக தேவர்
நிலந்திகழ் மூலர் நிராமயத் தோரே.

முறையே 'முத்தி சாதனமாகிய இந்நூற்கு முதற்கண் உள்ள இப் பாட்டுக்கள் பாயிரம்' என்பதும், 'திருமூலரது முதல் மடத்தினின்றும் அவர் மாணாக்கர் எழுவரது கிளைமடங்கள் தோன்றின; அவை அனைத்திற்கும் நூல் இத்திருமந்திரம்; இஃது ஒன்பது தந்திரங்களையும் உடையது' என்பதும், 'திருமூலர் மாணாக்கர் எழுவருள், 'காலாக்கினி' என்பவரது மரபு, அகோரர், திருமாளிகைத் தேவர், நாதாந்தர், பர மானந்தர் போக தேவர், மூலர் என்னும் முறையில் தொடர்ந்து விளங் கிற்று' என்பதும் கூறுவன. இறுதிக்கண் சொல்லப்பட்ட 'மூலர்' என் பவர்தம் மாணாக்கரே இப்பாட்டுக்களைச் செய்தார் போலும்! அல்லது முதல் இரண்டை முன்னவருள் சிலர் செய்திருத்தலும் கூடுவதே.

பாயிரம் முற்றிற்று.

முதல் தந்திரம்

1. சிவபரத்துவம்

40. சிவனொடொக் குந்தெய்வந் தேடினும் இல்லை
அவனொடொப் பார்இங்கும் யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச் சடைமுடித் தாமரை யானே. 1

''தந்திரம்'' என்பது ''கயிறு'' எனப் பொருள்தரும். ''நூல்'' என்னும் பொருளில் ஆகமத்திற்கும் இது பெயராகும். இதன்கண் ஒன்பது தந்திரங்கள் இருத்தலின், இது ஒன்பது வடங்கள் கூடிய மாலை போல்வதாம். சிவநெறியின் தொடக்கநிலைப் பொருள்கள் பலவற்றை முதல் தந்திரமாக வைத்து அருளிச்செய்கின்றார். அனைத்துப் பொருள்கட்கும் முதலாவான் முதற்கடவுள் ஆதலின், அவனது இயல்பினை இம் முதல் தந்திரத்து முதற்கண் அருளிச்செய்கின்றார்.

பொது நூலாகிய வேதத்துள் பொதுவகையாற் குறிப்பாகச் சொல்லப்பட்ட பொருள்களைச் சிறப்புவகையால் இனிது விளங்கக் கூறுவனவே ஆகமங்கள் ஆதலின், அவ்வாற்றால், ''முதற் கடவுளாவான் சிவபெருமானே'' என்பதனை விளக்குதலின், இவ்வதிகாரம் சிவபரத்துவம் கூறுவதாம். இது, 'பரசிவப் பிரபாவம்' என முன்னைய பதிப்பிற் காணப்படுகின்றது. இதனையும் கடவுள் வாழ்த்தாகச் சில பதிப்புக்கள் கொண்டமை பொருந்துவதன்று என்பது பாயிரத்துட் கூறப்பட்டது.

40. தெ-ரை: தேவருள்ளும் ஒருவரும் சிவனோடு நிகர்ப்பவர் இல்லை; மக்களுள்ளும் அவனொடு ஒப்பவராவார் இல்லை; ஆதலின், இயல்பிலே உலகைக் கடந்து நின்று உணர்வுக் கதிரவனாய் (ஞான சூரியனாய்) விளங்கும் முதற்கடவுள் அச்சிவ பெருமானே.

கு-ரை: ''இங்கு'' என்றது ''இம் மண்ணுலகில்'' என்றபடி. 'சித்தியாலும், முத்தியாலும் சிலர் சிவனோடு ஒத்திருப்பர்' என மயங்கிக் கூறுவாரை மறுத்தற்கு, ''அவனொடொப்பார் இங்கும் யாவரும் இல்லை'' என்றார். ''ஆதலின்'' என்பது சொல்லெச்சம். ''அன்று கடந்து'' என மாற்றுக. ''அன்று'' என்றது ''அநாதி'' என்னும்

41. அவனை ஒழிய அமரரும் இல்லை
அவனன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவனன்றி மூவரால் ஆவதொன் றில்லை
அவனன்றி ஊர்புகு மாறறி யேனே. 2

42. முன்னையொப் பாயுள்ள மூவர்க்கு மூத்தவன்
தன்னையொப் பாயொன்றும் இல்லாத் தலைமகன்

பொருளது. ''அன்றே'' என்னும் தேற்றேகாரம் தொகுத்தல் பெற்றது. பொன் - பகலவன். ''பொன்னொளியாய்'' என உருவகப் பொருண்மைத்தாய ஆக்கம் விரிக்க. தவன் - தவத்தின் பயனாய் உள்ளவன்; பரமுத்திப் பேறாய் உள்ளவன்; ''முதற்கடவுள்'' என்றவாறு. தா மரையான் - தாவுகின்ற மானை ஏந்தியவன். ''சடைமுடித் தா மரையான்'' என்றது, 'சிவபெருமான்' என்னும் பெயரளவாய் நின்றது.

41. தெ-ரை: சிவபெருமானைத் தவிர இறவாதவர் பிறர் இல்லை; அவனை உணராது செய்யும் செயல் சிறந்த தவமாதல் இல்லை; அவனது அருளின்றி மும்மூர்த்திகளால் யாதொரு செயலும் நடவாது. அவனது அருளின்றி முத்திக்கு வழி இல்லை.

கு-ரை: ''சிவனொடொக்குந் தெய்வம் தேடினும் இல்லை'' என மேற்கூறியதனையே அநுவதித்தார்; அதனால், பின்வருவன வற்றை வலியுறுத்தற்பொருட்டு. அருந்தவம், வீடடைவிக்கும் தவம். ''ஊர் புகுதல்'' என்றது ஒட்டணியாய் நின்று, முத்திபெறுதலைக் குறித்தது. இறவாமை முதலிய நான்கும் முதற்கடவுளது இயல்புகள் என்பதைப் பெயர்த்துரை (அநுவாத) வாய்பாட்டாற் கூறி, 'அவ்வியல் புகளை உடையவன் சிவபெருமான் ஒருவனே' என்பது உணர்த்திய வாறு. நஞ்சுண்ட வரலாறு கூறும் புராணத்தால் சிவபெருமான் இறவாதவன் என்பது தெளிவாதலாலும், 'சிவன் முத்திக் கடவுள்' என்பதே வழக்காதலாலும் ''அவனை ஒழிய அமரரும் இல்லை; அருந்தவம் இல்லை'' என்றார். அவை அங்ஙனமாகவே, ஏனைய இரண்டும் இனிது பெறப்பட்டன. ''நீல மணிமிடற் றொருவன்போல மன்னுக'', *(புறம் - 91)* ''சாவா மூவாச் சிங்கமே'' (தி. 6. ப.99 பா.2) என்றாற் போலும் மெய்ம்மொழிகளைக் காண்க.

42. தெ-ரை: பொன்போலும் மேனியையுடைய, யானைத் தோற் போர்வையாளனாகிய சிவபெருமானே! ஊழிகளுள்

தன்னையப் பாஎனில் அப்பனு மாய்உளன்
பொன்னையொப் பாகின்ற போதகத் தானே. 3

43. தீயினும் வெய்யன் புனலினுந் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருளறி வார்இல்லை
சேயனு மல்லன் அணியன்நல் அன்பர்க்குத்
தாயினும் நல்லன் தாழ்சடை யோனே. 4

ஒன்றில் ஒருவர் மற்றிருவரையும், பிறிதொன்றில் மற்றொருவர் ஏனை இருவரையும் படைக்குமாற்றால் தம்முள், 'முன்னோர், பின்னோர்' என்னும் வேறுபாடில்லாத மும்மூர்த்திகளுக்கும் என்றும் முன்னோன்; அத்தன்மை பிறருக்கு இன்மையால், தன்னை ஒப்பாகின்ற பொருள் பிறிதொன்றும் இல்லாத பெருந்தலைவன்; தன்னை, ''அப்பா'' என்று அழைப்பவர்க்கு அப்பனுமாய் இருக்கின்றான்; (உம்மையால்) ''அம்மே'' என்று அழைப்பவர்க்கு அம்மையாயும் இருக்கின்றான்.

கு-ரை: ''முன்'' என்றது பல ஊழிக்காலங்களை. ''முன்னோன்'' என்றது, அவர்களை என்றும் தானே படைத்தல் பற்றி. ''படைப்போற் படைக்கும் பழையோன்'', ''முன்னோன் காண்க'' (தி.8 திருவாசகம் - திருவண்டப்பகுதி 13,29) என்றமை காண்க. ''அயனைமுன் படைத்திடும் ஒரு கற்பத்து; அரியை முன் படைத்திடும் ஒரு கற்பத்து'' *(சிவஞானபாடியம் - சூ. 1 அதி. 2)* என்றது அறிக. ''தன்னை யொப்பாய் ... ... தலைமகன்'' என்றது, ஒருவனாதல் குறித்தபடி. ''ஏகோ ஹிருத்ர:'' *(சுவேதாசுவதரம்)* ''தன்னேரில்லோன் தானே காண்க'' (தி.8 திருவாசகம் - திருவண்டப்பகுதி 30) என்றதும் காணத்தக்கது. இவ்வாறாகவே இது, ''ஒன்றவன்றானே'' என்றதனை விளக்கியவாறாம். ''அப்பனும், அம்மையும்'' என்றது, ''உலகிற்கு முதல்வன்'' என்றதாம். இதுவும், முதற் கடவுள் இயல்பும், அவற்றைச் சிவபெருமான் உடையனாதலுங் கூறியது.

43. ப-ரை: நீண்ட சடையை உடையவனாகிய சிவபெருமான், தேறுங்கால் நெருப்பினும் வெம்மை உடையன்; அருளுங்கால் நீரினும் தண்மையுடையவன்; ஆயினும், அத்தகைய அவனது ஆற்றலின் தன்மையை அறியும் உலகர் இல்லை. உலகர்க்கு இவ்வாறு அறியப்படாத சேய்மைக்கண் உளனாகிய அவன், மெய்யன்பர்க்கு அவ்வாறின்றி நன்கறியப்படும் அணிமைக்கண் உள்ளவனாய்த்

44. பொன்னாற் புரிந்திட்ட பொற்சடை யென்னப்
பின்னாற் பிறங்க இருந்தவன் பேர்நந்தி
என்னால் தொழப்படும் எம்இறை மற்றவன்
தன்னால் தொழப்படு வாரில்லை தானே. 5

தாயினும் மிக்க தயவுடையனாவான்.

கு-ரை: அறியாமையாவது, உலகில் நிகழும் மறமும், அறமும் அவன் ஆணைவழியால் நிகழ்வன என்பதை அறியாமல், பிறவாற்றான் நிகழ்வனவாக எண்ணுதல். தெறலும் கருணை யேயாதல் பற்றி, ''அருள்'' எனப் பொதுப்படக் கூறினார். தாயது தன்மை; குழவிக்குத் தனது பாலைக் கைம்மாறு கருதாது அளித்தல் ஆதலின் அஃது, உயிர்கட்குத் தனது பேரின்பத்தைக் கைம்மாறு கருதாது வழங்கும் கடவுட்டன்மைக்கு உவமையாயிற்று. தாய்க்குக் குழவி பசித்த காலத்தில் பால்கொடுத்தல் இயலாமையும், இயலினும் நிரம்பக் கொடுக்க இயலாமையும், அவை காரணமாகக் குழவி மாட்டு அவட்கு வெறுப்பும் ஒரோவழித் தோன்றுதலும் உண்டாகலின், அன்ன குறை பாடில்லாத கடவுளை, ''தாயினும் நல்லன்'' என்றார். ''பால் நினைந் தூட்டும் தாயினும் சாலப் பரிந்து' (தி.8 திருவாசகம் - பிடித்த பத்து 9) என்றதும் காண்க. இதனால், ''ஒறுத்தல், அளித்தல்களால் உலகத்தை உடனாய்நின்று நடத்துதலும், அவ்வாறு நடத்தினும் உலகர்க்கு வெளிப்படாது, உணர்வினர்க்கே வெளிப்படுதலும், வெளிப்படக் கண்ட உணர்வினர்க்குத் தனது பேரின்பத்தைக் கைம்மாறு கருதாது இடையறவின்றி வழங்குதலும் ஆகிய கடவுட்டன்மைகள் கூறப்பட்டன. ''சேயினும் நல்லன்'' என்பது பாடம் அன்று. 'நற் றாழ்சடையோனே' என்பது பாடமாதல் வேண்டும்.

44. தெ-ரை: என்னால் வணங்கப்படுகின்ற எங்கள் சிவபெரு மான், தனது பொற்சடை பொன்னால் செய்யப்பட்டனவே என்னும்படி பின்னலோடு விளங்குமாறு இருப்பவன். ''நந்தி'' என்னும் பெயர் உடையான். அவனால் வணங்கப்படுபவர் ஒருவரும் இல்லை.

கு-ரை: 'தானே எல்லாராலும் வணங்கப்படுபவன்' என்பதாம். ''பொற்சடை'' என்பதில், ''பொன்'' என்றது, வாளா பெயராய் நின்றது. பின் - பின்னுதல்; முதனிலைத் தொழிற்பெயர். ஆல், ஒடுவின் பொருளில் வந்தது. ''பின்னால்'' என்பதனை இடப்பொருட் டாக்கி, அது பிறரைத் தலைதாழ்த்து வணங்காமையைக் குறிக்கும்

45. அயலும் புடையும்எம் ஆதியை நோக்கில்
இயலும் பெருந்தெய்வம் யாதுமொன் றில்லை
முயலும் முயலின் முடிவும்மற் றாங்கே
பெயலும் மழைமுகிற் பேர்நந்தி தானே. 6

46. கண்ணுத லான்ஒரு காதலின் நிற்கவும்
எண்ணிலி தேவர் இறந்தார் எனப்பலர்

குறிப்புமொழியாக உரைப்பாரும் உளர். 'பின்தாழ் சடையானை'(தி.1 ப.74 பா.4) என்றாற்போல வரும் எவ்விடத்தும் அங்ஙனமே உரைத்தல் அவர் கருத்து. சடை தவக்கோலத்தை உணர்த்துதலால், பற்றின்மையைக் குறிக்கும் குறிப்பாகும். பொன்மை கவர்ச்சியையும், பின்னல் பழமையையும் குறிக்கும். நந்தி - இன்பம் உடையவன். ''அதனைத் தனக்கே உரிய பெயராக உடையவன்'' என்றவாறு. ''சிவன்'' என்பது இப்பொருளும் தரும். இன்பம், இயல்பாய் இருத்தற்குக் காரணம் மெய்ம்மையும், அறிவும் இயல்பாக இருத்தலே என்பது தோன்ற, முதற்கடவுளை, ''சச்சிதானந்தன்'' என உபநிடதங்கள் கூறுதல் அறிக. எனவே, அவையும் இதனாற் குறிக்கப்பட்டனவாம். இதனால், பற்றின்மையும், கவர்ச்சியும், காலத்திற்கு உட்படாமையும், மெய்யறிவின்பங்களை இயல்பாக உடைமையும், தனக்கு மேலாவார் இன்றித் தானே எல்லார்க்கும் மேலானவனாதலும் ஆகிய கடவுட்டன்மைகள் கூறப்பட்டன.

45. தெ-ரை: எங்கள் சிவபெருமானது பெருமையை நோக்குமிடத்து அவனோடொத்த பெருங்கடவுள் சேய்மையிலும் இல்லை; அண்மையிலும் இல்லை என்பது புலப்படும். உழவும், உழவின் பயனும், அவற்றிற்கு முதலாயுள்ள மழையும், அம் மழையைத் தருகின்ற மேகமும் ஆகிய எல்லாம், 'நந்தி' என்னும் பெயருடைய அவனேயன்றிப் பிறர் இல்லை.

கு-ரை: முயல் - முயற்சி; 'முயற்சி' எனினும், 'உழவு' எனினும் பொருந்தும். ''சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்''(*குறள். 1031*) என்பதனால், உலகத்திற்கு முதலாதலை இவ்வாறு கூறினார். இதனானே மெய்ந்நெறியிலும் சாதனமும், அதனைத் தருகின்ற திருவருளும், அதற்கு முதலும் ஆதலும் பெறப்படுவதாம். இதனால், பந்தம், வீடு இரண்டற்கும் முதல்வனாதல் கூறப்பட்டது.

46. தெ-ரை: சிவபெருமான் என்றும் ஒரு பெற்றியனாய்

மண்ணுறு வார்களும் வானுறு வார்களும்
அண்ணல் இவன்என் றறியகி லார்களே. 7

47. மண்ணளந் தான்மல ரோன்முதல் தேவர்கள்
எண்ணளந் தின்னம் நினைக்கிலார் ஈசனை
விண்ணளந் தான்தன்னை மேல்அளந் தாரில்லை
கண்ணளந் தெங்குங் கடந்துநின் றானே. 8

48. அடிமுடி காண்பார் அயன்மால் இருவர்
படிகண் டிலர்மீண்டும் பார்மிசைக் கூடி

அழிவின்றி இருக்கவும், அளவற்ற தேவர்கள் அழிந்தனர் என்று புராணங்கள் முழங்கவும், மண்ணிலும், விண்ணிலும் உள்ள பலர் அப்பெருமானை, 'இவனே முதல்வன்' எனத் துணியமாட்டாத வராகின்றனர்.

கு-ரை: 'இஃது இரங்கத்தக்கது' என்பது குறிப்பெச்சம். ''காதல்'' என்றது அருளை. ஒருபெற்றியாய அருளை, 'ஓர் அருள்' என்றார். நிற்றல் - அழிவின்றி நிலைத்திருத்தல். இதனால், அழிவில னாதல் கூறப்பட்டது. ஆகவே, 'அவனை ஒழிய அமரரும் இல்லை' என்பது விளக்கப்பட்டதாம்.

47. தெ-ரை: திருமால், பிரமன் முதலிய தேவர்களும் இன்னும் சிவபிரானது பெருமையை ஓர்ந்து தெளியவில்லை. ஆகவே, அண்டத்தின் அப்புறத்தும் உள்ள அவனது பரப்பை அளந்து கண்டவர் யார்? ஒருவரும் இல்லை. அவன் எவ்விடத்தையும் உள்அடக்கி அவை அனைத்தையும் கடந்து நிற்கின்றான்.

கு-ரை: எண் - எண்ணம்; சிந்தனை. 'எண்ணால் அளந்து' என்க. கண் - இடம். ''எங்கும்'' என்றது, 'எவ்விடத்தையும்' என்றவாறு. இதனால், அவனது பெருநிலை (வியாபகம்) கூறப்பட்டது.

48. தெ-ரை: 'சிவபெருமானது பெருநிலை (வியாபகம்) ஒருவராலும் அளத்தற்கரிது' என்பதற்கு, அயன், மால் இருவரும் அப்பெருமானது அடிமுடி தேடிக் காணமாட்டாது அல்லற்பட்ட வரலாறே போதிய சான்றாகும்.

அடிகண் டிலேனென் றச்சுதன் சொல்ல
முடிகண்டே னென்றயன் பொய்மொழிந் தானே. 9

49. கடந்துநின் றான்கம லம்மல ராதி
கடந்துநின் றான்கடல் வண்ணன்அம் மாயன்
கடந்துநின் றான்அவர்க் கப்புறம் ஈசன்
கடந்துநின் றான்எங்கும் கண்டுநின் றானே. 10

50. ஆதியு மாய்அர னாய்உட லுள்நின்ற
வேதியு மாய்விரிந் தார்ந்திருந் தான்அருட்

கு-ரை: 'காண்பாராய இருவர்' எனவும், 'கண்டிலராய்க் கூடி' எனவும் இயைத்துரைக்க. இருவருள் ஒவ்வொருவரும் அடி, முடி இரண்டையுங் காணுங் கருத்தினராய் முதற்கண்ணே தோல்வியுற்றமையின், ''அடி முடி காண்பார் அயன் மால் இருவர்'' எனப் பொதுப்படவே கூறினார். படி - தாம் கருதிய நிலை. நிலவுலகினின்றே புறப்பட்டமையின், ''மீண்டும் பார்மிசைக் கூடி'' என்றார். சிவபெருமானைப் பொதுநீக்கி உணர்தற்கு இவ்வரலாறு பெரிதும் சிறந்ததாய்ப் பயின்று வருவதாகலின், பின்னர்க் கூறப்படும் புராண வரலாறுகளுட் கூறுதலன்றி இவ்விடம் குறித்தருளினார். இவ்வாறன்றி, 'இத் திருமந்திரமும் பின்னர் வரும் இவ் வரலாற்று மந்திரங்களுள் ஒன்றாகற் பாலதே' என்பாரும் உளர்.

49. தெ-ரை: பிரமனும், திருமாலும் ஓரோர் எல்லையளவில் பெருநிலை (வியாபகம்) உடையவராயினும், அனைவரினும் மேம்பட்ட பெருநிலையுடையவன் சிவபெருமான். அவன் அத்தகையனாய்ப் புறத்து நிற்பினும், எப்பொருளிலும் நிறைந்து அவற்றை அறிந்து நிற்கின்றான்.

கு-ரை: ஆதி - முதல்வன். இறுதியில், ''கடந்து நின்றான்'' என்றதன்பின், 'ஆயினும்' என்னும் சொல்லெச்சம் வருவிக்க. இதனால் மேலதனை வலியுறுத்தி, எங்கும் நிறைந்து நிற்றலும் கூறப்பட்டது.

50. தெ-ரை: அருளாகிய ஒளி உருவினனாயும், என்றும் குறைதல் இல்லாத அவ்வருள் காரணமாக அனைத்துயிர்க்கும் நடுவுநிலைமையனாயும், அழிவில்லாதவனாயும் உள்ள சிவபெருமான், தானே உலகிற்கு முதலாகியும், முடிவாகியும், பல்வகை

சோதியு மாய்ச்சுருங் காததோர் தன்மையுள்
நீதியு மாய்நித்த மாகிநின் றானே. 11

51. கோது குலாவிய கொன்றைக் குழற்சடை
மாது குலாவிய வாள்நுதல் பாகனை
யாது குலாவி அமரருந் தேவரும்
கோது குலாவிக் குணம்பயில் வாரே 12

உடம்பிலும் காணப்படுகின்ற இன்ப துன்பங்களாகியும் பரந்து நிறைந்திருக்கின்றான்.

கு-ரை: ஆதி - பிரமன். அரன் - உருத்திரன். வேதி - மாற்றம். ''உடலுள் நின்ற'' என்றதனால், அஃது இன்பதுன்ப நுகர்ச்சியைக் குறித்தது. எனவே, இது நிலைத்தொழிலை உணர்த்திற்று. முதல் இரண்டடிகளால் முத்தொழிற்கும் முதல்வனாதல் கூறப்பட்டது. இறுதி இரண்டடிகளால் அத்தொழில் புரிதற்குக் காரணம் உடம்பொடு புணர்த்தலால் கூறப்பட்டது. முன்னைத் திருமந்திரத்தில் பேரறிவு கூறப்பட்டாற்போல, இத் திருமந்திரத்தில் பேராற்றல் கூறப்பட்டவாறு காண்க. 'எங்கும் நிறைந்து எல்லாவற்றையும் அறிதலின், உயிர்கள் நன்மையடைதற்பொருட்டு நடுவு நிலையாளனாய் என்றும் நின்று ஆக்கல் அழித்தல் முதலியவற்றைச் செய்கின்றான்' என்றபடி. 'விரிந்து ஆர்ந்திருந்தான்' என்றது, 'அவனது பெருநிலையால் விளையும் பயன் இது' என்றற்கு.

51. தெ-ரை: திருத்தி விளங்கிய, கொன்றை மாலையணிந்த குழல்போலும் சடையை உடைய, அழகு விளங்கும் மங்கையைப் பாதியில் உடைய சிவபெருமானை மும்மூர்த்திகளும், தேவர்களும் எதனை விரும்பிக் குற்றத்தையே குணமாகக் கொண்டாடி வணங்கு கின்றார்கள்?

கு-ரை: ''தாம்தாம் வேண்டுவன யாவற்றையும் விரும்பியே அவ்வாறு வணங்குகின்றார்கள்'' என்பது குறிப்பெச்சம். 'கோது' இரண்டனுள் முன்னது, 'கொழுது' என்பதன் மரூஉ. கொழுதுதல் - திருத்துதல். பின்னது - குற்றம். மகளிர் கூந்தலும் சிலபொழுது குழல் போலத் திருத்திவிடப்படுதல் பற்றியே, 'குழல்' எனப்படுகின்றது. அமரர் என்றது ஏனையோரை நோக்க நெடுநாள் வாழ்வுடையராதல் பற்றி மும்மூர்த்திகளைக் குறித்தது. 'கோது குணமாகக் குலாவிப் பயில்வார்' என மாற்றிக் கொள்க. குற்றமாவன, எலும்பும் சாம்பலும்

52. காயம் இரண்டுங் கலந்து கொதிக்கினும்
மாயங் கத்தூரி யதுமிகும் அவ்வழி
தேசங் கலந்தொரு தேவனென் றெண்ணினும்
ஈசன் உறவுக் கெதிரில்லை தானே. 13

அணிதல், சுடுகாட்டில் ஆடுதல், இரந்துண்டல் முதலியன.

கானார் புலித்தோல் உடை, தலைஊண், காடுபதி
ஆனால் அவனுக்கிங் காட்படுவார் ஆரேடி?
ஆனாலுங் கேளாய் அயனும் திருமாலும்
வானாடர் கோவும் வழியடியார் சாழலோ.
--தி.8 திருவாசகம். திருச்சாழல். 12

என்றமை காண்க. ஒன்றும் இல்லாதவன்போலவும், பித்தன் போலவும் காணப்படினும் வேண்டுவார் வேண்டுவன பலவற்றையும் அருளுதல் இதனால் தொகுத்துக் கூறப்பட்டது. ''மாது குலாவிய வாள்நுதல் பாகன்'' என்றதும் அதனைத் தெளிவிக்கும் குறிப்பு.

52. நே-ரை: ''காயம், கத்தூரி'' என்னும் இரண்டையும் கலந்து கொதிக்க வைத்தாலும் அவ்விடத்து வியப்புண்டாகுமாறு கத்தூரியின் மணம் காயத்தின் மணத்தை அடக்கி மேற்பட்டு விளங்கும்; அதுபோல, உலகத்தார் சிவபெருமானை ஏனைத் தேவர் பலரோடு ஒப்ப வைத்து எண்ணினாலும், சிவபெருமானது திருவருளுக்கு ஏனைத் தேவரது அருள் ஈடாகாது; சிவனருளே மேம்பட்டு விளங்கும்.

கு-ரை: ''கத்தூரி'' எனப் பின்னர் வருதலின், அது முன்னரும் கூட்டி எண்ணப்படும். மாயம் - மருட்கை. ''மாயமாக'' என ஆக்கம் வருவிக்க. ''அவ்வழி'' என்றதனை, ''கொதிக்கும்'' என்றதன் பின்னர்க்கூட்டுக. ''தேசம்'' என்றது மக்களை. கலத்தல் - ஒப்ப வைத்தல். 'ஏனைத் தேவர் பிற சில பயன்களைத் தரவல்லராயினும், உண்மை ஞானத்தையும், வீடு பேற்றையும் தரவல்லராகாமையின், அவரது அருளால் பெறும்பயன் யாது'' என்பதும், 'பிற பயன்களிலும் சிவபெருமானால் தரப்படுவனவேமிக்கு விளங்கும்' என்பதும் கருத்து. சிவபெருமான் இம்மை, மறுமைப் பயன்களையும் நிகரின்றித் தருதலும், முடிந்த பயனாய வீடு பேற்றைத் தருதலும் இதனால் வகுத்துக் கூறப்பட்டன. பின்னிரண்டடிகளில் யகரத்திற்குச் சகரம் எதுகையாயிற்று. உயிரெதுகையுமாம்.

53. அதிபதி செய்து அளகையர் வேந்தனை
நிதிபதி செய்த நிறைதவம் நோக்கி
அதுபதி யாதரித் தாக்கம தாக்கின்
இதுபதி கொள்ளென்றான் எம்பெரு மானே. 14

54. இதுபதி ஏலங் கமழ்பொழில் ஏழும்
முதுபதி செய்தவன் மூதறி வாளன்
விதுபதி செய்தவன் மெய்த்தவம் நோக்கி
அதுபதி யாக அமருகின் றானே. 15

---

53. தெ-ரை: அளகை நகரில் உள்ள இயக்கர்க்குத் தலைவனாகிய குபேரனை அவன் செய்த மிக்க தவத்தைக் கண்டு அவனை அந்நகருக்குத் தலைவனாகச் செய்து, அந்த அளகை நகரத்தைச் சுட்டி, 'இதுதான் உனது நகர்; இதனை நீ நன்கு புரந்து, செல்வத்தைப் பெருக்குவதாயின் ஏற்றுக்கொள்' என்று எங்கள் சிவபிரானே வழங்கினான்.

கு-ரை: 'அதனால் பெருஞ்செல்வம் உடையவன்' எனப் புகழப்படுகின்ற குபேரனுக்கு அந்நிலையை வழங்கினவனும், 'எங்கள் சிவபெருமானே' என்றவாறு. 'அளகை வேந்தனை' 'கொள் என்ற' என்பன பாடமல்ல. 'அந்நிதிபதி' என்னும் சுட்டு வருவிக்க. 'அது பதியை, இதுபதி; இதனை ஆதரித்து ஆக்கமதாக்கின் கொள் என்றான்' என முடிக்க. இதுகாறும் சிவபிரான் தேவர்க்குந் தேவனாதலைக் கூறி, 'சிவனோடொக்குந் தெய்வம் தேடினும் இல்லை' என்பதனை விரித்துரைத்தவாறு.

54. தெ-ரை: சந்திரனைத் தரித்துள்ளவனாகிய சிவபெருமான், இவ்வுலகத்தில் ஏலம் முதலியவற்றின் மணங் கமழ்கின்ற சோலையின் பெயராகிய 'பொழில்' என்பதனையே தமக்கும் பெயராகக் கொண்ட ஏழு தீவுகளையும், இவ்வுலகிற்கு மேலே ஒன்றைவிட ஒன்று நூறு கோடி யோசனை விரிவுடையனவாகிய பல உலகங்களையும் தோற்றுவித்தவன்; அவ் வளவையும் ஆக்கிக் காத்து அழிக்குமாற்றை அறிந்த பேரறிவுடையவன். அவன் தன்னை நோக்கிச் செய்யும் மெய்த்தவத்தைக் கண்டு அத்தவத்தையே தனக்கு இடமாக விரும்பி வீற்றிருக்கின்றான்.

கு-ரை: 'ஆதலின், அவன் அருளைப் பெறுதற்கு அத்தவமே செயற்பாலது' என அதற்குத் தோற்றுவாய் செய்யப்பட்டது. 'இப்பதி' என்பதனை 'இது பதி' என்றார். 'பதி' நான்கில் முன்னவை இரண்டும்

55. முடிவும் பிறப்பையும் முன்னே படைத்த
அடிகள் உறையும் அறனெறி நாடில்
இடியும் முழக்கமும் ஈசர் உருவம்
கடிமலர்க் குன்றம் அலையது தானே. 16

உலகம். இறுதியில் உள்ளது உறைவிடம். விது - சந்திரன். பதி செய்தவன் - பதித்தலைச் (சூடுதலை) செய்தவன். ''ஏலங் கமழ்'' என்றது சொல்லளவாய் நின்ற பொழிலுக்கு அடை. எல்லாவற்றையும் நினைத்த அளவாலே செய்தலின், செயலைக் கூறாது அறிவையே கூறினார். 'சிவபெருமானை நோக்கிச் செய்யும் தவமே மெய்த்தவம்' என்பதனை விளக்கவே, 'தவம்' என்றொழியாது; 'மெய்த்தவம்' என்றார். 'சிவபுண்ணியம்' அல்லது 'பதிபுண்ணியம்' எனப்படுவதும் இதுவே என்க. எனவே, இதனால், 'அவனன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை' என்பதனை விளக்கியவாறாயிற்று. 'சிவனை நோக்கிச் செய்யும் தவமே மெய்த் தவமாதற்குக் காரணம் உண்மைக் கடவுள் அவனாதலே' என்பதனை விளக்கவே, பொழில் ஏழும் முதுபதியும் செய்தவனா தலை எடுத்தோதினார். முதுமை, இங்குப் பெருமைமேல் நின்றது.

55. நே-ரை: உயிர்கட்கு இறப்பையும், பிறப்பையும் பண்டே அமைத்து வைத்த தலைவன் நிலைபெற்று நிற்கின்ற தவநெறியைக் கூறும் நூல்கள் யாவை என ஆராயின், அவை இடிபோலவும், முரசு முதலிய பறைகள் போலவும் அனைவரும் அறிய முழங்கும்; அவனது திருவுருவம் மலைபோலவும், கடல் போலவும் நன்கு விளங்கித் தோன்றும்.

கு-ரை: 'ஆதலின், அந்நூல்களின்வழி நின்று தவம் செய்து அவனது திருவுருவை விளங்கக் கண்டு பயன் பெறுக' என்பது குறிப்பெச்சம். ''அறனெறி'' என்றது காரியவாகு பெயராய் அதனை உணர்த்தும் நூலைக் குறித்தது. அறம், இங்குச் சிவதன்மமாதலின் அதற்கு, 'தவம்' எனப் பொருள் உரைக்கப்பட்டது. சிவதன்மத்தைக் கூறும் நூல்கள் சிவாகமங்கள். அவை இறைவன் திருவருள் வடிவாமாகலின், அவற்றை அவனுக்கு உறைவிடமாக அருளினார். அதனால் அந்நூல்கள் அவனது திருவருளை அங்கை நெல்லிக் கனியென இனிது விளக்குதல் பெறப்பட்டது. 'அவற்றின்வழி நிற்பின் அப்பெருமான் அநுபவப் பொருளாதல் தப்பாது' என்றற்கு, 'அவனது உருவம் மலையும், கடலும்போல விளங்குவது' என்றார். ''முழக்கம்'' என்றது, முழங்கும் பறைகளைக் குறித்த காரியவாகு பெயர். இதன்பின்,

56. மனத்தில் எழுகின்ற மாயநன் னாடன்
நினைத்த தறிவ னெனில்தாம் நினைக்கிலர்
எனக்கிறை அன்பிலன் என்பர் இறைவன்
பிழைக்கநின் றார்பக்கம் பேணிநின் றானே. 17

57. வல்லவன் வன்னிக் கிறையிடை வாரணம்
நில்லென நிற்பித்த நீதியுள் ஈசனை

'போலும்' என்பது எஞ்சி நின்றது. கடி - மணம். மலைகள் மணம் நிறைந்த மலர் மரங்களை உடையவாதல் அறிக. அலை, ஆகுபெயர். 'அரனெறி' என்பதும் பாடம்.

56. தெ-ரை: கண்ணிற்குப் புலப்படாது கருத்தினுள்ளே நிற்கின்ற கள்வனாகிய சிவன், யாவர் எதனை எண்ணினும் அதனை அறிவான் என்று உண்மை நூல்கள் கூறவும், உலகர் அவனை நினைத்து அவன் அருளைப் பெறுகின்றார்களில்லை. நினையாமலே ஒவ்வொருவரும் 'சிவன் எங்களுக்கு அருள் பண்ணவில்லை' என்று நொந்து கொள்கின்றார்கள். உண்மையில் சிவன், பிறவற்றை நினையாது தன்னை நினைப்பவர் பக்கமே விரும்பி நிற்கின்றான்.

கு-ரை: 'ஆதலின் அவன் அருளைப் பெறுதற்கு அவனை நினைத்து நிற்றலே செய்யத்தக்கது' என்றவாறு. மாய நாடன் - வஞ் சனையை இடமாகக் கொண்டு நிற்பவர். 'வஞ்சம்' என்றது புலனாகாமையை. 'பிறர்க்குத் தீங்கு சூழும் வஞ்சனை அன்று' என்பது தோன்ற, 'நல்' என்னும் அடை கொடுத்தார். ''எனக்கு'' என்றது பன்மை ஒருமை மயக்கம். 'எனக்கு அன்பிலன்' என இயையும். பிழைத்தல், பிறவற்றினின்று நீங்குதல். ஈற்றடி மூன்றாம் எழுத்தெதுகை.

57. தெ-ரை: உலகீர், எல்லாம் வல்லவனாய், கடல் நீரை, 'தீக்கடவுளாகிய வடவையிடத்து அடங்கிநிற்க' என மிகுந்து வாராமல் நிற்கச்செய்த அருளாணை உடையவனாகிய சிவபெருமானை, நுண்ணுணர்வின்றி, 'இல்லை' எனக் கூறிப்பிணங்குதல் வேண்டா; அவன் அயன், மால் முதலிய கடவுளர்க்கு முதல்வனாய் நின்று, எப்பொழுதும் உயிர்கட்கு நலம் புரிந்துவருகின்றான்.

கு-ரை: 'உலகம் ஒருவனது ஆணை வழிநடப்பதும், அவ் வொருவன் எல்லாம் வல்லவன் என்பதும் கடல் கரையின்றியே அடங்கி நிற்கும் இவ்வொன்றானே அறியப்படும்' என்பது

இல்லென வேண்டா இறையவர் தம்முதல்
அல்லும் பகலும் அருளுகின் றானே. 18

58. போற்றிசைத் தும்புகழ்ந் தும்புனி தன்னடி
தேற்றுமின் என்றுஞ் சிவனடிக் கேசெல்ல
மாற்றிய தென்று மயலுற்ற சிந்தையை
மாற்றிநின் றார்வழி மன்னிநின் றானே. 19

59. காணநில் லாயடி யேற்குற வாருளர்
நாணநில் லேன்உன்னை நான்தழு விக்கொளக்
கோணநில் லாத குணத்தடி யார்மனத்
தாணிய னாகி அமர்ந்து நின் றானே. 20

முன்னிரண்டு அடிகளின் கருத்து. ''வல்லவன், முதல்'' என்பவற்றில் ஆக்கச்சொல் விரிக்க.

58. தெ-ரை: 'நமது மனமே நம்மை நன்னெறியினின்று மாற்றி விட்டது' என்பதை உணர்ந்து, மயக்கம் பொருந்திய அம்மனத்தை மாற்றித் தெளிந்தவரது வழியிற்றான் சிவபெருமான் மறைவின்றி விளங்கி நிற்கின்றான். அதனால், உலகீர், அவனது திருவடி நிழலில் செல்வதற்குப் பன்முறை வணக்கம் கூறியும், பலவாற்றால் புகழ்ந்து பாடியும் அவனது திருவடிகளை என்றும் தெளிந்து நின்மின்கள்.

கு-ரை: ''சிவனடிக்கே செல்வம்'' என்பது பாடமாயின், 'இவ்வாறு செய்தால் சிவனடியை அடைவோம்' என உரைக்க.

59. தெ-ரை: 'இறைவனே! நீ முன்முன் தோன்றினால் உன்னைத் தழுவிக்கொள்ளுதற்கு நான் சிறிதும் நாணமாட்டேன்; எனக்கு உன்னையன்றி உறவாவார் யாருளர்! யான் காணும்படி வெளி நின்றருள்' என்று மாறுபாடின்றி இரக்கின்ற பண்புடைய அடியவர் உள்ளத்திலே சிவன் அறையப்பட்ட ஆணிபோல்பவனாய் வீற்றிருக்கின்றான்.

கு-ரை: 'அதனால் அவ்வாற்றால் அவனை மனத்தில் எழுந் தருளப் பண்ணிக்கொண்மின்கள்' என்பதாம். இரண்டாம் அடியை முதற்கண் மொழிமாற்றி வைத்து, ''உளர்'' என்றதன்பின், 'என்று' என்பது வருவித்து உரைக்க. இது காறும் நினைதல் கூறியவாறு; இதன் பின் வாழ்த்துதலைக் கூறுதலே முறையாயினும், அஃது இந்நூற்குச்

60. பிறப்பிலி பிஞ்ஞகன் பேரரு ளாளன்
இறப்பிலி யாவர்க்கும் இன்பம் அருளும்
துறப்பிலி தன்னைத் தொழுமின் தொழுதால்
மறப்பிலி மாயா விருத்தமும் ஆமே. 21

61. தொடர்ந்துநின் றானைத் தொழுமின் தொழுதால்
படர்ந்துநின் றான்பரி பாரக முற்றும்

சிறந்ததாதல் பற்றி இறுதிக்கண் கூறுவாராய், வணங்குதலை முன்னர் கூறுகின்றார்.

60. தெ-ரை: சிவபெருமான் பிறப்பில்லாதவன்; சடை முடி உடையவன்; மிக்க அருளுடையவன்; ஒருகாலத்தும் அழிவில்லாத வன்; யாவர்க்கும் வேறுபாடின்றி நன்மையையே செய்து, அவரை என்றும் விட்டு நீங்காதவன். அதனால் அவனை வணங்குங்கள். வணங்கினால் என்றும் மறவாத தன்மையாகிய மெய்யுணர்வு தோன்றுவதாகும்.

கு-ரை: 'சிவபெருமான்' என்பது அதிகாரத்தால் வந்தது. ''தன்னை'' என்றது, 'அவனை' என்றவாறு. இவ்வாறு 'பிறப்பிலி' முதலியவற்றைப் பயனிலையாக்காது, பெயராக வைத்துரைத்தல் சிறவாமை அறிக. பிறப்பிலி முதலிய பலவும் அவன் ஒருவனே வணக்கத்திற்கு உரியவனாதலைக் குறிப்பால் உணர்த்தி நின்றன. சடைமுடி யோகியாதலைக் குறித்தலின், அதுவும் வணக்கத்திற்கு உரிய வனாதலைக் குறித்தல் அறிக. மாயா விருத்தம் - மாயைக்கு மாறானது. மாயை - அஞ்ஞானம்; 'அதற்கு மாறு' எனவே, 'ஞானம்' என்பது போந்தது. இறைவனை மறக்கும் மறதி அஞ்ஞானத்தால் உளதாவதாம். அது நீங்கவே, மறவாமையாகிய மெய்ஞ்ஞானம் உளதாம் என்க.

61. தெ-ரை: யாவர்க்கும் இன்பம் அருளி, அவரை விடாது தொடர்ந்து நிற்கின்ற சிவனை வணங்குங்கள்; வணங்கினால் அவனது திருவடி ஞானம் உங்கட்குக் கிடைக்கும்.

கு-ரை: பரி பாரகம் - எல்லாவற்றையும் தாங்குகின்ற நிலமாகிய இடம். ''பாரகம் முற்றும்'' என்பது தாப்பிசையாய் முன்னும், பின்னும் சென்று இயையும். ''கமலமலர்'' என்றது அன்பரது உள்ளங்களை. 'புணர்ந்து' என்றது உயிரெதுகை. 'உடந்திருந்தான்' என்பது பாடம் ஆகாமை அறிக. 'படர்ந்து நிற்றல், நடந்து நிற்றல், புணர்ந்திருத்தல்' என்னும் மூன்றும் முறையே இறைவன் உலகத்தோடு ஒன்றாயும்,

கடந்துநின் றான்கம லம்மலர் மேலே
புணர்ந்திருந் தானடிப் புண்ணிய மாமே. 22

62. சந்தி எனத்தக்க தாமரை வாள்முகத்
தந்தமில் ஈசன் அருள்நமக் கேயென்று
நந்தியை நாளும் வணங்கப் படும்அவர்
புந்தியி னுள்ளே புகுந்துநின் றானே. 23

63. இணங்கிநின் றான்எங்கு மாகிநின் றானும்
பிணங்கிநின் றான்பின்முன் னாகிநின் றானும்
உணங்கிநின் றான்அம ராபதி நாதன்
வணங்கிநின் றார்க்கே வழித்துணை யாமே. 24

வேறாயும், உடனாயும் நிற்கும் முறைமையை உணர்த்தியவாறு. 'அம் முறைமையே சிவநெறி அத்துவிதம்' என்பதும், 'அதனை உணர்தலே சிவஞானம்' என்பதும் அறிக. சிவனடிப் புண்ணியம் - சிவதன்மம்; சிவதன்மத்தால் விளைகின்ற சிவஞானத்தை, 'சிவதன்மம்' என்றார்.

62. தெ-ரை: 'அந்தி வானம் என்று சொல்லத் தக்க நிறத்தை யுடைய தாமரை (செந்தாமரை) மலர்போலும் ஒளி பொருந்திய முகத்தை உடைய, அழிவில்லாத சிவபெருமானது திருவருள் நமக்கே உரியதாகும்' என்ற உறுதியுடன் அவனை நாள்தோறும் வணங்க உடன்படும் அவரது உள்ளத்துள்ளே அவன் குடிபுகுந்து நிற்கின்றான்.

கு-ரை: 'அதனால் நீவிரும் வணங்குமின்' என்பது கருத்து. படுதல் - உடன்படுதல்.

63. தெ-ரை: மாயோனும் சிவபெருமானை வழிபட உடன்பட்டு நின்றதல்லது வழிபட்டுக் காணவில்லை. படைப்புக் கடவுளாகிய பிரமன் வழிபடுதற்கு உடன்படவேயில்லை. அவர்கட்குப் பின் இந்திரன் காண இயலாதவனாய் வாட்டமுற்று நின்றான். ஆகவே, சிவபெருமான் தன்னை வணங்கி நிற்பவர்க்கே செல்கதித் துணையாய் நிற்கின்றான்.

கு-ரை: இங்கு வழிபடுதல், பயன் கருதாத மெய்யன்பினால் வழிபடுதலாதலின், 'திருமாலும் அது செய்யவில்லை' என்றும், பயன் கருதி வழிபட்டுச் சக்கரம் பெற்றமையால் ''இணங்கி நின்றான்'' என்றும் கூறினார். பிரமனும், இந்திரனும் அவ்வாறு வழிபட்டுப் பேறு

64. வானப் பெருங்கொண்டல் மாலயன் வானவர்
ஊனப் பிறவி ஒழிக்கும் ஒருவனைக்
கானக் களிறு கதறப் பிளந்தஎங்
கோனைப் புகழுமின் கூடலு மாமே. 25

65. வானின் றழைக்கும் மழைபோல் இறைவனும்
தானின் றழைக்குங்கொல் என்று தயங்குவார்
ஆனின் றழைக்கு மதுபோல்என் நந்தியை
நானின் றழைப்பது ஞானங் கருதியே. 26

பெற்ற வரலாறு ஒன்றும் சிறப்பாகச் சொல்லப்படாமையால், அவர் களை, பிணங்கியும், வணங்கியும் நிற்பவராகக் கூறினார். ''எங்குமாகி நின்றான்'' என்றது, 'விட்டுணு' என்னும் சொற்பொருளை எடுத்தோதியவாறு. ''பின்'' என்பதை இரண்டாம் அடியின் இறுதியிற் கூட்டி உரைக்க. மேல் பொது வணக்கம் கூறி, இதனால், உண்மை வணக்கம் கூறியவாறு. இதுகாறும் வணங்குதல் கூறப்பட்டது. இனி, வாழ்த்துதல் கூறப்படும்.

64. தெ-ரை: மேகம் போலும் நிறத்தையுடைய திருமால், பிரமன், மற்றைய தேவர் ஆகியோர்க்கும் இழிவான பிறவித் துன்பத்தை நீக்குகின்ற ஒப்பற்றவனும், யானையை உரித்த எங்கள் தலைவனும் ஆகிய சிவபெருமானைத் துதியுங்கள்; அதனால் அவனை அடைதலாகிய அப் பெரும்பேறும் கிடைக்கும்.

கு-ரை: வானம் - விண். ''கூடலும்'' என்ற உம்மை சிறப்பு.

65. தெ-ரை: 'வானத்தில் நின்று முழங்குகின்ற மேகம்போல இறைவன் மேலுலகத்தில் நின்று தன் அடியவரை 'வருக' என்று அழைப்பான் என்று ஆன்றோர் கூறுதல் உண்மையாய் இருக்குமோ' என்று சிலர் ஐயுறுவர். 'எங்கள் சிவபெருமான் தன்னைப் பிரிந்த கன்றைத் தாய்ப்பசு கதறி அழைப்பது போலத் தன் அடியவரைத் தன்பால் கூவி அழைப்பவனே; (இதில் ஐயமில்லை. அவனைப் பலர் துதித்து அவற்றிற்கு ஈடாகப் பல பயன்களைப் பெற்றனர். ஆயினும்,) நான் அவனைத் துதிப்பது ஞானத்தைப் பெறுதற்பொருட்டே.

கு-ரை: 'நான் நின்று அழைப்பது ஞானம் கருதியே' என்றதனால், 'பலர் பயன் கருதித் துதித்து அவற்றைப் பெற்றனர்' என்பது பெறப்பட்டது. 'அவர் அங்ஙனம் பெற்றமை அனுபவ

66. மண்ணகத் தான்ஒக்கும் வானகத்தான் ஒக்கும்
விண்ணகத் தான்ஒக்கும் வேதகத் தான்ஒக்கும்
பண்ணகத் தின்னிசை பாடலுற் றானுக்கே
கண்ணகத் தேநின்று காதலித் தேனே. 27

மாகலின், சிலர்போல நீங்கள் ஐயுற வேண்டுவதில்லை' என்றபடி. 'ஞானம் கருதித் துதித்தலே சிறந்தது' என்பதும் குறிக்கப்பட்டது என்க.

வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனம்நின்பால்
தாழ்த்துவதும் தாம்உயர்ந்து தம்மைஎல்லாந் தொழவேண்டிச்
சூழ்த்துமது கரம்முரலுந் தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானுமுன்னைப் பரவுவனே.

என்ற திருவாசகத்தையும் காண்க. (தி.8 திருச்சதகம். 20) 'போல்' என்பது வினைத்தொகையாய், ''நந்தி'' என்பதனோடு இயைந்தது.

66. தெ-ரை: மக்கள்முன் தோன்றி அருள்புரிதலால் மண்ணுலகத்தில் உள்ளவனைப் போலவும், தேவர்களுள் ஒருவனாய் நிற்றலால் வானுலகத்தில் உள்ளவனைப் போலவும், முத்தர்களுக்கு வீட்டுலகத்தில் நின்று அருள்புரிதலால் வீட்டுலகத்தில் உள்ளவன் போலவும், யாவரையும் தன்மயமாகச் செய்தலால் இரத குளிகை போல்பவன் போலவும் தோன்றுபவனாய், பண்களில் பொருந்திய இசையிடத்துள்ள விருப்பத்தால் தானே வீணையை இசைக்கின்ற சிவபிரான் பொருட்டு அவனது அருள் நோக்கில் நின்றே அவனிடத்து நான் அன்புசெய்கின்றேன்.

கு-ரை: ''ஒக்கும்'' நான்கும் பெயரெச்ச அடுக்கு. அவை, ''பாடலுற்றான்'' என்பதனோடு முடிந்தன. 'யாவர்க்கும் அவரவர் தகுதிக்கேற்ப நின்று அருள்புரிபவனாகிய சிவபெருமான் விரும்புவது இசை என்பதை உணர்ந்து, அவன் அருளாலே அவனைப் பாடித் துதிக்கின்றேன்' என்பது இத் திருமந்திரத்தின் திரண்ட கருத்து. துதிக்கும்பொழுதும் நான் என்ற முனைப்புடன் துதியாது, 'இப் பேறும் அவனது அருளால் கிடைத்தது' என அவனது அருள்வழி நின்று துதித்தல் வேண்டும் என்றற்கு, ''கண்ணகத்தே நின்று'' என்றார். 'அவன் கண்ணகத்தே நின்று' என்க. ''அவனரு ளாலே அவன்தாள் வணங்கி'' என்றதும் காண்க. (தி.8 திருவாசகம். சிவபுராணம் அடி 18).

67. தேவர் பிரான்நம் பிரான் திசை பத்தையும்
மேவு பிரான்விரி நீருல கேழையும்
தாவு பிரான்தன்மை தானறி வாரில்லை
பாவு பிரான்அருள் பாடலு மாமே. 28

68. பதிபல வாயது பண்டிவ் வுலகம்
விதிபல செய்தொன்றும் மெய்ம்மை உணரார்
துதிபல தோத்திரஞ் சொல்லவல் லாரும்
மதியிலர் நெஞ்சினுள் வாடுகின் றாரே. 29

---

67. தெ-ரை: சிவபெருமான் தேவர் பலர்க்கும் தலைவன்; நமக்கும் தலைவன்; உலகமுழுதும் நிறைந்து நிற்கும் நிறைவினன்; அவ்வாறு நிற்பினும் அவற்றை அகப்படுத்து அப்பால் நிற்கும் பெரியோன்; ஆதலின் அவனது தன்மையை முற்றும் அறிந்து துதிப்பவர் ஒருவரும் இல்லை. ஆயினும் எங்கும் நிறைந்த அவனது அருட்டன்மைகளை உயிர்கள் தாம் தாம் அறிந்தவாற்றால் பாடித் துதித்தலும் அமைவுடையதே.

கு-ரை: ''தேவர் பிரான்'' முதலியவற்றைப் பல தொடராகக் கூறியது, அவற்றின் சிறப்புணர்த்தற்கு. காட்சிக்கு எய்துதல் பற்றி ''விரிநீர் உலகு ஏழையும்'' என நிலவுலகத்தையே கூறினாராயினும், மேல், ''திசை பத்தும்'' கூறினமையால் பிற உலகங்களும் கொள்ளப் படும். 'முற்ற அறிய வாராமை பற்றி அவன் முனிதல் இல்லை; அறிந்த அளவு பாடின் உவப்பான்' என்பது கருத்து. ''யானறி அளவையின் ஏத்தி ஆனாது - நின்னளந் தறிதல் மன்னுயிர்க் கருமையின் - நின்னடி உள்ளி வந்தனென்'' (*திருமுருகாற்றுப் படை. 277 - 279*) என்றதும் காண்க. மேவுதல் - விரும்புதல்; அது, பற்றிநிற்றலைக் குறித்தது.

68. தெ-ரை: பண்டுதொட்டு இவ்வுலகத்தில் 'கடவுள்' என்ற ஒன்று, பலவாகக் கொள்ளப்படுகின்றது. அவற்றின்கண் பலரும் பல விதிமுறை வழிபாடுகளைச் செய்தும் மெய்ம்மையைச் சிறிதும் உணர்கின்றார்களில்லை. அக்கடவுளரைத் துதிக்கின்ற பல தோத்திரப் பாடல்களைத் தாங்களே ஆக்க வல்லவர்களும் மெய்யறிவில்லாதவர் களாய் மனத்தில் துன்புறுகின்றார்கள்.

கு-ரை: 'அதனால் சிவனது முதன்மையாகிய மெய்ம் மையைத் தெளிவித்தல் அரிதேயாம்' என்பது குறிப்பெச்சம். பதி - கடவுள்.

69. சாந்து கமழுங் கவரியின் கந்தம்போல்
வேந்தன் அமரர்க் கருளிய மெய்ந்நெறி
ஆர்ந்த சுடரன்ன ஆயிர நாமமும்
போந்தும் இருந்தும் புகழுகின் றேனே. 30

70. ஆற்றுகி லாவழி யாகும் இறைவனைப்
போற்றுமின் போற்றிப் புகழ்மின் புகழ்ந்திடில்
மேற்றிசைக் குங்கிழக் குத்திசை எட்டொடும்
ஆற்றுவன் அப்படி ஆட்டலும் ஆமே. 31

69. நே-ரை: சந்தனத்தில் நின்று கமழ்கின்ற கத்தூரி மானின் மதமணம்போலச் சிவபெருமான், முத்தியுலகத்தில் உள்ள சிலர்க்கு அறிவுறுத்திய நெறியே மெய்ந்நெறி. அந்நெறி நின்றே பகலவனது பல கதிர்கள் போன்ற அவனது பல திருப்பெயர்களை, நான் நடக்கும் பொழுதும், இருக்கும்பொழுதும் துதித்துக் கிடக்கின்றேன்.

கு-ரை: 'நீவிரும் அவ்வாறு செய்தலே தக்கது' என்பது குறிப்பெச்சம். 'மான்மத மணம் சந்தன மணத்தினும் வேறாய் மிக்குத் தோன்றுமாறுபோலச் சிவபிரான் அறிவுறுத்திய நெறி ஏனை நெறி யினும் மிக்குத் தோன்றுதல் அறிவுடையார்க்குப் புலனாகும்' என்பது, 'சாந்து கமழும் கவரியின் கந்தம்போல்' என்ற உவமையால் குறிக்கப் பட்டது. ''மாயங்கத் தூரியது மிகும் அவ்வழி'' என மேலேயும் கூறினார். (தி.10 திருமந்திரம் - 51) கவரி, ஆகுபெயர்.

'முத்தியுலகத்தில் மெய்ந்நெறி அறிவுறுக்கப்பட்டோர் பிரணவர் முதலியோர்' என்பது பின்னர்க் காணப்படும் 'மெய்ந் நெறி யானே' என உருபு விரிக்க. ''ஆர்ந்தசுடர்'' பன்மையும், ஒளியும் பற்றி வந்த உவமை. 'போர்ந்தும்' என்பதும் பாடமாகலாம்.

70. நே-ரை: பிறிதொரு நெறியும் ஒப்பாக மாட்டாதபடி உயர்ந்து நிற்பதாய சிவநெறியாற் பெறப்படுபவனாகிய சிவபெருமானுக்கு வணக்கம் கூறுங்கள்; கூறிப் பலவாற்றால் புகழுங்கள்; புகழ்ந்தால், மேலுலகத்தையும் கீழுலகமாகிய நிலவுலகம் முழுதையும் உமக்கு அவன் வழங்குவான்; அவ்வுலகங்களை நீங்கள் உங்கள் விருப்பப்படி ஆளலாம்.

கு-ரை: ''ஆற்றுகிலா'' என்றதில் ஆற்றுதல், ''வையகமும் -

71. அப்பனை நந்தியை ஆரா அமுதினை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரி சீசன் அருள்பெற லாமே. 32

வானகமும் ஆற்றல் அரிது'' *(குறள். 101)* என்பதிற் போல 'ஒத்தல்' என்றும், ''ஆற்றுவன்'' என்றதில், ஆற்றுதல் ''அற்றார்க் கொன்றாற் றாதான் செல்வம்'' *(குறள். 1007)* என்பதிற்போல, 'கொடுத்தல்' என்றும் பொருள் தந்து நின்றன. 'வழக்கும், எதிர்வழக்கும் கூறு வோரது கூற்றினுள் மெய்ம்மை இது என்பது நடுவுநிற்பார்க்கு இனிது விளங்கி நிற்றல்போலப் பல நெறிகளும் பிறர்கோள் மறுத்துத் தம் கோள் நிறுவுமாயினும், உண்மை காண் பார்க்குச் சிவநெறியது உயர்வு 'சாந்து கமழும் கவரியின் கந்தம் போல்' (தி.10 பா.69) இனிது விளங்கியே நிற்கும் என்பார், சிவநெறியை 'ஆற்று கிலா வழி' என்று அருளினார்.

ஆதல், உளவாதல். அஃது இங்குப் பெறப் படுதலைக் குறித்தது. ''மேற்கு, கிழக்கு'' என்பவை, 'மேல், கீழ்' என்னும் பொருளவாய் நின்றன. திசைக்கண் உள்ளவற்றை, 'திசை' என்றார். மூவுலகமும் இங்கு, 'மேல், கீழ்' என இரண்டாக அடக்கப் பட்டன. அப் படி - அவ்வுலகம். 'தம் விருப்பப்படி நடத்தலாம்' என்பது தோன்ற, 'ஆளலுமாம்' என்னாது, ''ஆட்டலுமாம்'' என்றார்.

இனி, 'ஆளலுமாம்' என்பதே பாடம் என்றலும் ஆம். 'சிவபிரானைப் போற்றுவோர் எவ்வுலகத்தை ஆளநினைப்பினும் ஆள்பவராவர்' என்பது திருமுறைகளுள் பலவிடத்தும் இனிது எடுத்துச் சொல்லப்படுவது. 'ஏனைக் கடவுளர்பால் அடையும் பயனையும் சிவபிரான்பால் அடையலாம்' என்பது கூறி, அவனை வாழ்த்துதலை வலியுறுத்தியவாறு.

71. தெ-ரை: எவ்வுயிர்க்கும் தந்தையும், 'நந்தி' என்னும் பெயருடையவனும், தெவிட்டாத அமுதமாய் இனிப்பவனும், வள்ளல் பிறர் ஒருவரும் ஒப்பாகமாட்டாத பெருவள்ளலும், ஊழிகள் பல வற்றிலும் உலகிற்குத் தலைவனாய் நிற்பவனும் ஆகிய சிவபெரு மானை யாதொரு முறைமையிலானும் துதியுங்கள்; துதித்தால், அம்முறைக்குத் தக அவனது அருளைப் பெறலாம்.

கு-ரை: 'பொது நீக்கி ஒப்புயர்வற்ற தலைவனாக உணருந்தன்மை

72. நானும்நின் றேத்துவன் நாடொறும் நந்தியைத்
தானும்நின் றான்தழல் தானொக்கு மேனியன்
வானில் நின் றார்மதி போல்உடல் உள்ளுவந்
தூனில்நின் றாங்கே உயிர்க்கின்ற வாறே. 33

இல்லாது பொதுப்பட ஏத்தினும் அது பின்னர் உண்மையுணர்வைப் பயக்கும்' என்பதும், பயன்கருதித் துதிப்பினும் அது பின்னர்ப் பயன் கருதாது துதிக்கும் மெய்யன்பினைப் பயக்கும் என்பதும் கருத்து.

''அஞ்சி யாகிலும் அன்புபட் டாகிலும்
நெஞ்சம் வாழி நினைநின்றி யூரைநீ''
(தி.5 பு.23 பா.9)

என்று அருளிச்செய்தார் ஆளுடைய அரசரும்.

72. தெ-ரை: சிவபெருமானை நானும் நாள்தோறும் மேற் கொண்டு நின்று துதிக்கின்றேன்; அவனும் நாள்தோறும் வானத்தில் பொருந்தி வளராநின்ற வளர்பிறைச் சந்திரன் போல எனது உடலில் மகிழ்ந்து மேன்மேல் விளங்கி நிற்கின்றான். தூயனாகிய அவன் எனது புலால் உடம்பில் நின்று உயிர்ப்பாய் வெளிப்படுகின்றவாறு வியப்பு.

கு-ரை: உம்மைகள் எச்சம். ''தழல்தான்'' என்பதில்தான், அசைநிலை. 'தழலொக்கு மேனியனாகிய தானும் மதிபோல் உடலுள் உவந்து நின்றான்' எனக் கூட்டுக. உவத்தல் - நிறைதல். ''ஊனில் நின்று'' என்பதனால், அவன் அதனோடு இயைபில்லாத தூயனாதல் பெறப்பட்டது. ''நிலாவாத புலாலுடம்பே புகுந்துநின்ற கற்பகமே'' (தி.6 ப.95 பா.4) எனவும், ''எந்தையே ஈசா உடலிடங்கொண்டாய் யானிதற் கிலனொர்கைம் மாறே'' (தி.8 கோயில் திருப்பதிகம் 10) எனவும் போந்த அருட்டிருமொழிகளைக் காண்க. உயிர்ப்பாய் வெளிப்படுதலாவது, உயிர்க்குந்தோறும் புறத்தும், அகத்தும் இன்பமாய்த் தோன்றுதல்.

''என்னு ளேஉயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்
கென்னு ளேநிற்கும் இன்னம்ப ரீசனே'' (தி.5 ப.21 பா.1)

என்றருளியதும் காண்க. இதனை அசபா மந்திரத்தின் அநுபவம் என்ப. ஏத்தினால் ஈசன் அருளைப் பெறுதலை அனுபவத்தின் வைத்து உணர்த்தியவாறு.

73. பிதற்றொழி யேன்பெரி யான்அரி யானைப்
பிதற்றொழி யேன்பிற வாஉரு வானைப்
பிதற்றொழி யேன்எங்கள் பேர்நந்தி தன்னைப்
பிதற்றொழி யேன்பெரு மைத்தவன் நானே. 34

74. வாழ்த்தவல் லார்மனத் துள்ளுறு சோதியைத்
தீர்த்தனை அங்கே திளைக்கின்ற தேவனை
ஏத்தியும் எம்பெரு மான்என் றிறைஞ்சியும்
ஆத்தஞ்செய் தீசன் அருள்பெற லாமே. 35

73. தெ-ரை: யாவரினும் பெரியவனும், யாவர்க்கும் அரியவனும், நால்வகைத் தோற்றத்துள் ஒன்றாகாது தன் இச்சையாற் கொள்ளப் படுவனவாய அருட்டிருமேனிகளை உடையவனும் ஆகிய எங்கள் சிவபெருமானைப் பிதற்றுதல் ஒருகாலும் ஒழியேன்; அதனால், நானே பெருமையை உடைய தவத்தை உடையவன்.

கு-ரை: பிதற்றுதல் போலுதலின், 'பிதற்று' என்றார்; இது முதனிலைத் தொழிற்பெயர். ''பிதற்றொழியேன்'' என்பதனைச் சொற்பொருட்பின் வருநிலையாகப் பலகாற் கூறியது, வலியுறுத்தற் பொருட்டு. வேறு வேறு தொடராதலின், இஃது ஒருசொல்லடுக்கன்மை உணர்க. 'பெரியானை' என்னும்

இரண்டனுருபு தொகுத்தலாயிற்று. 'இத்தன்மையனை இடையறாது துதித்தல் தவமிலார்க்குக் கூடாது' என்றற்கு, 'பெருமைத் தவன் நானே' என்றார். 'தவமும் தவமுடையார்க்கே ஆகும்' (*குறள் 262*) என்றார் திருவள்ளுவ நாயனாரும்.

யானே தவமுடையேன்; என்நெஞ்சே நன்னெஞ்சம்
யானே பிறப்பறுப்பான் எண்ணினேன் - யானேஅக்
கைம்மா உரிபோர்த்த கண்ணுதலான் வெண்ணீற்ற
அம்மானுக் காளாயி னேன். *-அம்மை திருவந்தாதி. 7*

என்றது காண்க.

74. தெ-ரை: தன்னை வாழ்த்த வல்லவரது மனத்தின் கண் ஒளியாயும், தூய்மையாயும், இன்பமாயும் விளங்குகின்ற சிவபெரு மானைத் துதித்தும், 'எம் தலைவன்' என்று வணங்கியும் உறவு கொண்டால், அவனது திருவருளைப் பெறலாம்.

75. குறைந்தடைந் தீசன் குரைகழல் நாடும்
நிறைந்தடை செம்பொனின் நேரொளி ஒக்கும்
மறைஞ்சடஞ் செய்யாது வாழ்த்தவல் லார்க்குப்
புறஞ்சடஞ் செய்யான் புகுந்துநின் றானே. 36

76. சினஞ்செய்த நஞ்சுண்ட தேவர் பிரானைப்
புனஞ்செய்த நெஞ்சிடை போற்றவல் லார்க்குக்
கனஞ்செய்த வார்குழல் பாகனும் அங்கே
இனஞ்செய்த மான்போல் இணங்கிநின் றானே. 37

கு-ரை: ''அங்கே'' என்பது ''தீர்த்தன்'' என்பதனோடும் இயையும். ''திளைக்கின்ற'' என்பது, ''தேவன்'' என்ற செயப்படு பொருட்பெயர் கொண்டது.

75. தெ-ரை: கரவு கொண்டு வன்மை செய்யாது தன்னை வாழ்த்த வல்லவர்க்குச் சிவபெருமான் அவர்களது உள்ளத்தைப் புறக் கணியாது புகுந்து நிற்பான்; அதனால் அவனது மாற்று நிறைந்து அடையப்பட்ட செம்பொன்னிடத்துப் பொருந்திய ஒளியை ஒத்த, ஒலிக் கின்ற கழல் அணிந்த திருவடியைக் குறைவேண்டி அடைந்து பற்றுங்கள்.

கு-ரை: 'குரைகழலை நாடும்; அது செம்பொன்னின் ஒளியொக்கும்' என்னும் தொடர்கட்குக் கருத்துநோக்கி இவ்வாறு உரைக்கப்பட்டது. 'நாடும்' என்பது உம்மீற்றுப் பன்மை ஏவல். மறைஞ்சு, 'மறைந்து' என்பதன் போலி. 'மறைந்தடம்' எனவும் ஓதுவர். உள்ளத்தைச் சடம் என்றது, உடம்பையும் குறித்தற்கு.

76. தெ-ரை: சீறி எழுந்த நஞ்சினை உண்டு தேவரைக் காத்த சிவபெருமானை, காடு வெட்டித் திருத்திய புனம்போன்ற உள்ளத்தில் வைத்துத் துதிக்க வல்லவர்கட்கு, உமையை ஒரு பாகத்தில் உடைய அவன் அவ்வுள்ளத்திலேயே மான் இனத் தோடு ஒப்பச் செய்யப்பட்ட பார்வை விலங்கு போல்பவனாய் அச்சந் தோன்றாது அன்பு தோன்றத்தக்க வடிவத்துடன் பொருந்தி நிற்பான்.

கு-ரை: 'நெஞ்சிடை வைத்து' என ஒருசொல் வருவிக்க. பார்வை விலங்கினை குருவடிவிற்கேயன்றி, உள்ளத்தில் நினைக்கப் படும் வடிவிற்கும் கூறினார் என்க. ''கனஞ் செய்த'' என்றதில் 'செய்த' உவம உருபு. கனம் - மேகம். 'வாள் நுதல்' என்பது பாடம் அன்று.

77. போயரன் தன்னைப் புகழ்வார் பெறுவது
நாயக னான்முடி செய்தது வேநல்கும்
மாயகஞ் சூழ்ந்து வரவல்ல ராகிலும்
வேயன தோளிக்கு வேந்தொன்றுந் தானே. 38

78. அரனடி சொல்லி அரற்றி அழுது
பரனடி நாடியே பாவிப்ப நாளும்
உரனடி செய்தங் கொதுங்கவல் லார்க்கு
நிரனடி செய்து நிறைந்துநின் றானே. 39

77. தெ-ரை: சிவபெருமானை அடைந்து துதிப்பவர்கள் பெறத் தக்க பயன், அவன் 'நான்' என்னும் பசுபோதத்தை ஒழித்துத் தரும் சிவபோத்மேயாம். அதனை அவன் தானே விரும்பிக் கொடுப்பான். அதுவன்றி, நிலையில்லாத அப்பசு போதத்தால் சில வற்றை விரும்பி அடையினும் அவற்றையும் அவன் உடன்பட்டுக் கொடுப்பான்.

கு-ரை: ''நான்'' என்றது, 'நான்' என்னும் முனைப்பிற்குக் காரணமான பசுபோதத்தைக் குறித்த காரியவாகுபெயர். முடி - முடிவு; முதனிலைத் தொழிற்பெயர். 'செய்த' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. இஃது எதிர்காலத்து இறந்த காலம். ''அது'' என்றது, ''அந்தப்பயன்' எனச் சிவபோதத்தை உணர்த்திற்று. ஆணவ சத்தி மெலிதல், அனாதிதொட்டே நோக்கிவரும் இறைவனது திரு வருள் நோக்கத்தாலாதலின், 'நாயகன் முடிசெய்த அது' என்றார். 'பெறுவது' எனக் கூறிப் பின்னரும், 'நல்கும்' என்றார்; 'தானே விரும்பிக் கொடுப்பான்' என்பது உணர்த்துதற்கு. ''அகம்'' என்றது, 'நான்' என்னும் பொருளதாகிய வடசொல், ''அகத்தால்'' என உருபு விரித்து, சூழ்தற்குச் செயப்படு பொருளாகிய, 'சிலவற்றை' என்பது வருவிக்க. ''வல்லர்'' என்றது வஞ்சப் புகழ்ச்சி. ஒன்றுதல் - உடன்படுதல்; அது, கொடுத்தலாகிய தன் காரியம் தோன்றநின்றது. சிவபெருமானை வாழ்த்துவார், போகம், மோட்சம் இரண்டும் பெறுவர் என்பது உணர்த்தியவாறு.

78. தெ-ரை: சிவபெருமானது திருவடியையே துதித்து, அலறி, அழுது, அவற்றையே விரும்பி நாள்தோறும் நினைக்க வல்லவர்க்கு, அவன் தனது திருவடியை உறுதுணையாகக் கொடுத்து, பின் அதிலே அடங்கிநிற்க வல்லார்க்கு அதனை இனிது விளங்கத் தந்து, அவரது அறிவில் நிறைந்து நிற்கின்றான்.

79. போற்றிஎன் பார்அம ரர்புனி தன்அடி
போற்றிஎன் பார்அசு ரர்புனி தன்அடி
போற்றிஎன் பார்மனி தர்புனி தன்அடி
போற்றிஎன் அன்புள் பொலியவைத் தேனே. 40

80. விதிவழி அல்லதிவ் வேலை உலகம்
விதிவழி இன்பம் விருத்தமும் இல்லை
துதிவழி நித்தலுஞ் சோதிப் பிரானும்
பதிவழி காட்டும் பகலவ னாமே. 41

கு-ரை: 'நாளும் பாவிப்ப' எனவும், 'அடி உரன் செய்து' எனவும், ' அடி நிரன்' செய்து எனவும் மாற்றுக. உரன் - வலிமை; அது துணைவலிமேல் நின்றது. 'நிறன்' என்பது எதுகை நோக்கித் திரிந்தது. நிறன் - விளக்கம்.

79. தெ-ரை: தேவர், அசுரர், மக்கள் ஆகிய அனைவரும் சிவ பெருமானது திருவடிக்கு வணக்கம் கூறித் துதிப்பர். அதனால் நானும் அவ்வாறே செய்து அதனை என் அன்பினுள் நின்று ஒளிரச் செய்தேன்.

கு-ரை: 'அதனால் நீவிரும் அதுவே செய்ம்மின்' என்பது குறிப் பெச்சம். இயக்கர், கந்திருவர் முதலியோரைத் தேவருள்ளும், நரகரை அசுரருள்ளும் அடக்கினார். நரகரும் தேவராதற்குச் சிவனது திரு வடியைத் துதிப்பர் என உணர்க. வேறு வேறு தொடராகக் கூறியது, போற்றுதலின் சிறப்பை விளக்குதற்கு. சிவன் அப்பெயரால் கூறப் படுதல், 'நிறைமலம் அனாதியின் நீங்கி நிற்றல்'. *(காஞ்சிப் புராணம். திருநெறிக்காரைக்காட்டுப் படலம். 23)* பற்றியும் ஆதலின், 'புனிதன்' என்றார்.

80. தெ-ரை: கடல் சூழ்ந்த இவ்வுலகம் வினைவழியல்லது நடத்தல் இல்லை. இங்கு இன்பச்சூழலும் வினைவழித் தோன்றுத லல்லது வேறோராற்றான் இல்லை. ஆயினும் ஒளிமயமாகிய சிவபெருமான் தன்னை நாள்தோறும் துதிப்பவர்க்கு அத்துதி வழியாக முத்திக்கு வழிகாட்டும் பகலவனாய் நிற்பான்.

கு-ரை: 'ஆதலின் வினைவழியினின்று விடுதிபெற வேண்டு வோர் சிவபெருமானைத் துதிக்க' என்பது குறிப்பெச்சம்.

81. அந்திவண் ணாஅர னேசிவ னேஎன்று
சிந்தைசெய் வண்ணந் திருந்தடி யார்தொழ
முந்திவண் ணாமுதல் வாபர னேஎன்று
வந்திவ்வண் ணம்எம் மனம்புகுந் தானே. 42

திருவள்ளுவ நாயனாரும், வினை நீங்குதற்கு வாயில் இறைவனது பொருள்சேர் புகழை விரும்பிச் சொல்லுதலே எனக் கூறுமாறு அறிக.

இருள் சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. ***(குறள். 5)***

''இன்பம்'' என்றதன்பின், 'உளதாதல்' என்பது வருவித்து, உம்மையைப் பிரித்து அதனொடு கூட்டுக. ''இல்லை'' என்பது ''அல்லது'' என்றதனோடும் இயை யும்.

இதன்பின், 'ஆயினும்' என்பது எஞ்சி நின்றது. வினை உள தாவது அஞ்ஞானத்தால் ஆதலின் அது மெய்ஞ்ஞான வடிவினனாகிய சிவபெருமானால் நீங்கும் என்பார், ''சோதிப் பிரான்'' எனவும், ''பகலவன் ஆம்'' எனவும் கூறினார். ''சோதிப் பிரானும்'' என்ற உம்மை, அசைநிலை.

81. தெ-ரை: 'அந்தி வானம்போலும் நிறம் உடையவனே, அரனே, சிவனே' என்று சிவபெருமானது திருப்பெயர்கள் பலவற்றைச் சொல்லி, தியானத்திற்கு உரிய அவனது வடிவத்தைச் செம்மை பெற்ற அடியார்கள் வணங்கும்பொழுது நானும், 'எவ்வுருவிற்கும் முதலாய திருவுருவத்தை உடையவனே, தலைவனே, மேலானவனே' என்று துதித்து வணங்கினேன்; அப்பொழுதே ஞானமயனாகிய அவன் இவ்வாறு என் உள்ளத்திற் புகுந்துவிட்டான்.

கு-ரை: அரன் - பாசத்தை அரிப்பவன். சிவன் - மங்கலமான வன். வடிவத்தை ''வண்ணம்'' என்றார். ''தொழ'' என்றது, ''ஞாயிறு பட வந்தான்'' என்பதிற்போல நிகழ்கால வினை. 'அடியார் தொழ நானும் தொழுதேன்' என்றது, 'அவர் செய்ததை நானும் செய்தேன்; அச் செயலின் திறம் முற்றும் அறிந்து செய்தேனில்லை' என்றபடி.

''ஞானத் தால்தொழு வார்கள் தொழக்கண்டு
ஞானத் தாய்உனை நானுந் தொழுவனே'' -தி.5 ப.91 பா.3

82. மனையுள் இருந்தவர் மாதவர் ஒப்பர்
நினைவுள் இருந்தவர் நேசத்துள் நிற்பர்
பனையுள் இருந்த பருந்தது போல
நினையாத வர்க்கில்லை நீள்இன்பந் தானே. 43

83. அடியார் பரவும் அமரர் பிரானை
முடியால் வணங்கி முதல்வனை முன்னிப்

என்ற அப்பர் திருமொழியும் காண்க. ''என்று'' என்றது, தன்மை ஒருமை இறந்த காலமுற்று. இங்கு ''என்றேன்'' என வருதல் யாப்பிற்கு ஒவ்வாமை அறிக. ''இவ்வண்ணம்'' எனச் சுட்டியது தம் அநுபவங்களை. இத்துணையும் வாழ்த்துதலே கூறினார். வணங்குதல், திருவடிவின் முன்னன்றிச் சிறவாது. நினைதற்கு நெஞ்சு ஒடுங்குதல் அரிது. அதனால் எப்பொழுதும் யாவர்க்கும் எளிதிற் கூடுதல் பற்றி வாழ்த்துதலையே பெரிதும் வலியுறுத்தினார். தேவாரம், திருவாசகம் முதலிய திருமுறைகள் பரக்க எழுந்தமைக்கும் இதுவே காரணம் என்க. திருவள்ளுவரும் மேற்குறித்த குறளில் இறைவனது பொருள்சேர் புகழையே எப்பொழுதும் இடைவிடாது சொல்லுதல் வேண்டுமென விதித்தல் நினைக்க. இனி மூவகை வழிபாட்டினையும் இறுதிக்கண் தொகுத்துணர்த்துவார்.

82. தெ-ரை: சிவபெருமானை ஒரோவொரு பொழுதாயினும் நினைப்பின், இல்லறத்தில் நிற்பவரும் பெரிய தவத்தவரேயாவர். துறவராயினார் சிவத்தியானத்திலே நிற்பாராயின், ஞானத்தில் நிற்பவராவர். இல்லறத்தவராயினும் துறவறத் தவராயினும், பனை மரத்தின் மேலே வாழ்ந்தும் அப்பனையின் பயனை அறிந்து நுகர மாட்டாத பருந்துபோலச் சிவனது திருவருளில் நின்றும் அதனை யறிந்து அழுந்தமாட்டாதவர்க்குப் பேரின்பம் உண்டாதல் இல்லை.

கு-ரை: பின்னர் 'நினையாதவர்' என வருதலால், முன்னர் 'நினைப்பவர்' என்பதும், முன்னர் ''மனையுள் இருந்தவர்'' என்றதனால். பின்னர், 'துறந்திருந்தவர்' என்பதும் பெறப்பட்டன. 'ஞானம் ஈசன்பால் அன்பே' (தி.12 பெ. பு. ஞானசம்பந்தர். 843) ஆதலின், ஞானத்தை, ''நேசம்'' என்றார். 'நின் இன்பம்' என்பது பாடம் அன்று. இதனால் நினைத்தலின் சிறப்புக் கூறப்பட்டது.

83. தெ-ரை: மெய்யுணர்ந்தோரால் துதிக்கப்படு கின்றவனும்,

படியார் அருளும் பரம்பரன் எந்தை
விடியா விளக்கென்று மேவிநின் றேனே. 44

84. பரைபசு பாசத்து நாதனை உள்ளி
உரைபசு பாசத் தொருங்கவல் லார்க்குத்
திரைபசு பாவச் செழுங்கடல் நீந்திக்
கரைபசு பாசங் கடந்தெய்த லாமே. 45

தேவர்கட்குத் தலைவனும், எப்பொருட்கும் முதல்வனும், இவ்வுலகத் திற்றானே நிரம்ப அருளைப் புரிபவனும், மேலானவற்றிற்கெல்லாம் மேலானவனும், எமக்குத் தந்தையாய் நிற்பவனும் ஆகிய சிவபெரு மானை நான் அணையா விளக்காகக் கொண்டு தலையால் வணங்கி, மனத்தால் நினைந்து அன்பு செய்து நிற்கின்றேன்.

கு-ரை: மெய்யுணர்ந்தோரே சிவனுக்கு ஆட்படுவாராதலின், அடியாராவர் அவரேயாதல் அறிக. 'படி ஆர' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. ''முடியால்'' என்றதற்கேற்ப, 'மனத்தால்' என்பது வருவிக்கப்பட்டது. ''வணங்கி, முன்னி'' என்று ஒழிந்தாராயினும், முன்னர் ''பரவும்'' என்ற குறிப்பால், வாயால் வாழ்த்தலும் பெறப்பட்டது. ''அமரர் பிரான்'' முதலாக வந்த சிறப்பினால் வணங்கப் படுதல் முதலியவற்றிற்கு அவனே உரியவன் எனக் குறித்தவாறு.

84. தெ-ரை: தன்னின் வேறாகாத பரையாகிய சத்திக்கும், தன்னின் வேறாகிய பசு பாசங்கட்கும் தலைவனாகிய சிவபெருமானை நினைந்து, உயிர்க்குரிய உடலிடத்தே சொல்லும் அந்நெறிப்பட்டு நிற்க வல்லவர்கட்கு, கட்டுற்ற உயிர்கட்கு உரித்தாகிய அலைமோதும் பிறவிப் பெருங்கடலை நீந்தி, மும்மலங்களும் கழன்று, பரமுத்தி யாகிய கரையை அடைதல் கூடும்.

கு-ரை: ''உரை பசு பாசம்'' என்பதில், ''பாசம்'' என்றது உடம்பை. ''உள்ளி உரை பாசத்து ஒருங்க'' என்றது, 'மனம் மொழி மெய் ஆகிய மூன்றும் அவனிடத்தே ஒரு நெறிப்பட' என்றவாறு. ''திரை'' என்பது, ''கடல்'' என்பதனோடு வினைத்தொகையாகத் தொக்கது. பாவம் - உளதாந்தன்மை; என்றது பிறப்பை. செழுமை, அளவிடப்படாத அகல ஆழங்கள். 'நீந்திக் கடந்து கரை எய்தல் ஆம்' எனக்கூட்டுக. ஆதல் - கூடுதல்.

85. சூடுவன் நெஞ்சிடை வைப்பன் பிரான்என்று
பாடுவன் பன்மலர் தூவிப் பணிந்துநின்
றாடுவன் ஆடி அமரர்பி ரான்என்று
நாடுவன் நானின் றறிவது தானே. 46

85. தெ-ரை: சிவபெருமானையே என் தலைவன் என்று நினைந்து அவனது திருவடியாகிய மலர்களை நான் தலையில் சூடிக்கொள்வேன்; நெஞ்சில் இருத்திக்கொள்வேன்; பாடித் துதிப்பேன்; பலவாகிய மலர்களைத் தூவிப் பணிந்துநின்று கூத்தாடு வேன்; தேவர்க்குத் தேவன் என்று கொள்வேன்; திருவருள் பெற்ற இந்நிலையில் நான் அறிவது இவ்வளவே.

கு-ரை: 'நான் இன்று அறிவது இவ்வளவே' என்றது, 'இதற்குமேல் உண்மை வேறில்லை' என்றதாம். 'பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த - மக்கட் பேறல்ல பிற' *(குறள் - 61)* 'யாம் மெய்யாக் கண்டவற்றுள் இல்லை - எனைத்தொன்றும் - வாய்மையின் நல்ல பிற' *(குறள் - 300)* என்றவற்றிற்கும் கருத்து இவ்வாறாதல் அறிக.

நாற்பத்தாறு திருமந்திரங்களால் சிவபெருமானது முதன்மையை முதற்கண் கூறிய நாயனார், 'சிவன் ஒருவனே கடவுளாயின் 'அயன், அரி, அரன்' என மும் மூர்த்திகளாக யாண்டும் கூறப்படுவோரது நிலை என்னை?' என்னும் ஐயத்தை நீக்குதற்கு அம்மூவரது மேல் கீழ் நிலையைப் பத்துத் திருமந்திரங்களால் விளக்குகின்றார்.

திரிமூர்த்திகளின் சேட்ட கனிட்ட முறைமை

86. அளவில் இளமையும் அந்தமும் ஈறும்
அளவியல் காலமும் நாலும் உணரில்
தளர்விலன் சங்கரன் தன்னடி யார்சொல்
அளவில் பெருமை அரிஅயற் காமே. 47

87. ஆதிப் பிரானும் அணிமணி வண்ணனும்
ஆதிக் கமலத் தலர்மிசை யானும்

---

86. தெ-ரை: என்றும் ஒழியாது செய்கின்ற படைப்பும், காப்பும், அழிப்பும், அருளும் என்ற நான்கனையும் ஆராயுமிடத்தும் அவை அனைத்தையும் சோர்வின்றிச் செய்பவன் சிவபெருமான் ஒருவனே. ஆயினும், மெய்யுணர்ந்தோராகிய அவன்றன் அடியார்கள் சொல்கின்ற அளவில்லாத அவன் பெருமைகள் 'மால், அயன்' என்னும் இருவர்க்கும் ஏற்ற பெற்றி பொருந்துவனவாம்.

கு-ரை: எனவே, 'புண்ணிய மிகுதியால் அத்தொழில்களுள் சிலவற்றை இயன்ற அளவு பெற்று நடாத்துதல் பற்றி அவரும் ஒருபுடைத் தலைவராய் நிற்பர்' என்றவாறு. தோற்றத்தை ''இளமை'' என்றார்.

''அந்தம்'' என்றது உயிர்களின் அலைவிற்கு முடிவாதலை; எனவே, அஃது அருளலாயிற்று; இறுதியில் நிற்கற்பாலதாய அதனைச் செய்யுள் நோக்கி இடை வைத்தார்.

ஈறு - ஒடுக்கம். அளவியல் காலம், 'தோற்றத்திற்குப் பின்னதாயும், ஈற்றிற்கு முன்னதாயும் இடைநிற்றலின் வரையறைப்பட்டு நிகழ்கின்ற காலம்; அஃது அதனை உடைத்தாகிய நிலைத்தொழிலின்மேல் நின்றது. மறைத்தலின் வகையே படைப்பு முதலிய மூன்றுமாகலின், அதனை வேறுவைத்து எண்ணாது, ''நாலும் உணரில்'' என்றார். இத்தொழில் அனைத்தும் என்றும் நிகழ்வன வாகலின், அவற்றிற்கு, 'அளவில்' என்ற அடை கொடுத்தார்.

87. தெ-ரை: யாவர்க்கும் முதல்வனாகிய சிவனும், அழகிய மணிவண்ணனாகிய மாயோனும், முதற்றொழிலாகிய படைப்பினைச் செய்யும் பிரமனும் என்கின்ற வடிவங்களை ஆராயின், அம்மூன்று

சோதிக்கில் மூன்றுந் தொடர்ச்சியில் ஒன்றெனார்
பேதித் துலகம் பிணங்குகின் றார்களே. 48

88. ஈசன் இருக்கும் இருவினைக் கப்புறம்
பீசம் உலகிற் பெருந்தெய்வ மானது

வடிவங்களும் தொழில் இயைபில் ஒன்றே என்று அறியாமல்,'வேறு வேறு' என்று சொல்லி உலகத்தார் இகலி நிற்கின்றார்கள்; இஃதோர் அறியாமை இருந்தவாறு!

கு-ரை: தொழில் இயைபு பின்னர் விளக்கப்படும். இயைபு பட்ட தொழில்கள் பலவற்றைப் பலர் இயற்றுங்கால் தம்முள் இணங்கி இயற்றுதலன்றிப் பிணங்கி இயற்றாமையும், ஒரோவழிப் பிணங்கி இயற்றியவழி ஒன்றும் நடவாதொழிதலும் காட்சியால் அறியப் படுவனவாகலின், அவைபற்றி இடையூறாது நிகழும் படைப்பு முதலியவற்றை இயற்றுவோர் அவற்றைத் தம்முள் இணங்கியே இயற்றுகின்றமை துணியப்படும் என்பார், ''மூன்றும் தொடர்ச்சியில் ஒன்றெனார் பேதித்துப் பிணங்குகின்றார்களே'' என்றார். எனவே, 'மால், அயன் இருவரும் பொருளால் சிவபெருமானின் வேறாயினும், தொழிலால் அவனோடு ஒருவரே என்றதாயிற்று.

88. தெ-ரை: வினையின் நீங்கி நிற்பவன் சிவபெருமான் ஒருவனே. அதற்கு உலகில் திருக்கோயில்களில், காணாத அரு வினுக்கும் காண்கின்ற உருவினுக்கும் (தி.8 பெரியபுராணம். சாக்கிய.8) முதலாயுள்ள அவனது இலிங்கத் திருமேனி நடுவிடத்தில் விளங்க, ஏனைத் தேவர் பலரும் அதனைச் சூழ்ந்து போற்றி நிற்றலும், அத்தேவர் நடுவிடத்தில் விளங்கும் கோட்டங்களில் அஃது அவ்வாறு நில்லாமையுமே சான்றாகும். காட்சியானே உணரப்படுகின்ற இதனையும் நோக்காது, முதற்கடவுள் 'அது' என்றும் 'இது' என்றும் பிற தெய்வங்களைச் சுட்டிச் சொல்லித் தம்முட் சிலர் கலாய்ப்பாராயின், அவர் பகுத்துணர்வில்லாதவரே யாவர். தூர்ப்புக்களையே பொருளென்று கண்டவர்கள் அத்தூர்ப்பைத் தான் அறிவார்கள்; அவற்றை அகற்றி உள்ளே உள்ள பொருளை அவர்கள் எவ்வாறு கண்டறிவார்கள்!

கு-ரை: ''ஈசன் இருக்கும் இருவினைக்கு அப்புறம் என்றதற்குக் கருத்து நோக்கி இவ்வாறு உரைக்கப்பட்டது. ''ஈசனே, தூரே'' என்னும் பிரிநிலை ஏகாரங்கள் தொகுத்தலாயின. முதலதனால், 'ஏனைத் தேவர் பலரும் வினையாற் கட்டுண்டு நிற்பவரே' என்பது பெறப்பட்டது.

ஈசன் அதுஇது என்பார் நினைப்பிலார்
தூசு பிடித்தவர் தூரறிந் தார்களே. 49

89. சிவன்முதல் மூவரோ டைவர் சிறந்த
அவைமுதல் ஆறிரண் டொன்றொடொன் றாகும்

'இருக்கும்' என்பது முற்று. ''உலகில்'' என்றதனால், காட்சிப் பொருளாய 'கோயில்' என்பது விளங்கிற்று. பெருமை, இங்கு முதன்மையைக் குறித்தது. ''ஆனது'' என்றது, 'ஆகிநின்றது' என்றவாறு. இதன் முதல் அடி மேற்கோளாயும், இரண்டாம் அடி ஏதுவாயும் நின்றன. நினைப்பு - ஆய்வு. ''தூசு'' என்றது பின்வரும் தூரினை. தூர் - பள்ளங்களைத் தூர்த்து நிற்கும் பொருள்கள். கூரிய நோக்குடையவரே, தூரினை அறிந்து அகற்றி உள்ளே கிடக்கும் பொருளைக் காண்பர். அதுபோல அறிவுடையவரே கலாய்ப்புக்களை அகற்றி உண்மையை உணர்வர் என்றவாறு.

89. தெ-ரை: 'சிவன், சதாசிவன், மகேசுரன்' என மூன்றாகவும், 'சதாசிவன், மகேசுரன், உருத்திரன், மால், அயன்' என ஐந்தாகவும், தொகுத்தும் வகுத்தும் சொல்லப்படுகின்றனர். நிலைகளே, 'சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவன், மகேசுரன், மால், அயன்' என ஒன்பதாக விரித்துச் சொல்லப்படும். அந்நிலைகள் எல்லாம், முதல்களாகிய விந்து நாதங்களினின்றே தோன்றுதலால், யாவும் அத்தொகுதித் தலைவனாகிய சிவபெருமான் ஒருவனது நிலை வேறுபாடுகளேயன்றி, ஒவ்வொன்றும் ஒவ்வொரு கடவுளன்று.

கு-ரை: 'இதனை யறியாது மேற்கூறியவாறு தம்முள் முரணிக் கூறிக் கலாய்க்கின்றவரைத் தெருட்டுதல் இயலாது'' என்பது குறிப்பெச்சம்.

முதற்கடவுள் ஒருவனே, பிறிதொன்றையும் நினையாது வாளா இருக்கும் பொழுது 'பரசிவன்' அல்லது 'பரமசிவன்' எனப் படுவான். பரமசிவனே, 'சொரூபசிவன், சுத்தசிவன்' என்றெல்லாம் சொல்லப்படுவான். அப்பொழுது அவனது, சத்தி 'பராசத்தி' எனப்படும். பின் அப்பரமசிவன் உலகைத் தொழிற்படுத்த நினைக்கும் பொழுது 'சிவன்' அல்லது 'தடத்த சிவன்' எனப்பட, அவனது சத்தி பராசத்தியில் பல கூற்றில் ஒருகூறாய் 'ஆதிசக்தி' எனப்படும், 'திரோதான சத்தி' எனப்படுவதும் இதுவே.

சிவனுக்கு உலகை உய்வித்தற்கு உள்ள விருப்பமே

'இச்சாசக்தி' என்றும், அச்செயலுக்கு ஆனவற்றை அறியும் அறிவே 'ஞான சத்தி' என்றும், அறிந்தவாறு செய்யும் செயலாற்றலே 'கிரியா சத்தி' என்றும் சொல்லப்படும், இவற்றுள் இச்சை, என்றும் ஒருபெற்றியாய் உள்ளதே. ஏனைய ஞானம் கிரியை இரண்டுமே பலவாறு அவ்வப்பொழுது செயற்படும். சிவன் (தடத்த சிவன்) சுத்த மாயை முதற்கண் தனது ஞானசத்தி மாத்திரத்தால் பொதுவாக நோக்கிப் பின்பு கிரியா சத்தியைப் பொதுவாக அதன்கண் செலுத்துவான். கிரியையின் செயற்பாடே செய்கையாகையால் இந்நிலை சத்திக்கே உரியது. அதனால், இந்நிலை 'சத்தி' என்றே சொல்லப்படும். இது முன் சொன்ன ஆதிசத்தியன்று. முன்பு, ஆதி சத்தியும், தானும் வேறின்றி ஒருவனேயாய் நின்ற சிவன், இச்சத்தி தோன்றிய பின்பு 'சிவன், சத்தி' என இரண்டாய் நிற்பன். அச்சிவன் பின்பு சுத்தமாயையை ஞான சத்தியால் சிறப்பாக நோக்கி 'நாதம்' என நின்று, பின்பு கிரியா சத்தியைச் சிறப்பாகச் செலுத்துவன். அந்நிலை யில் அவனது சத்தி 'விந்து' எனப்படும். எனவே, இந்த அளவிலே, இறைவனது நிலை, 'சிவன் சத்தி, நாதம், விந்து' என நான்காதல் அறியலாம், இந்நான்கிலும் ஞானமே மிகுந்திருப்பதால் இவை அருவம் (சூக்குமம்). சிவனை, 'பர நாதம்' என்றும், சத்தியை, 'பர விந்து' என்றும் ' நாதத்தை, 'அபர நாதம்' என்றும், விந்துவை 'அபர விந்து' என்றும் சொல்வது உண்டு. பரம் - மேல். அபரம் - கீழ். 'நாதனை' என்பதற்கு 'நாதம் என்கின்ற நிலையில் நிற்பவன்' என்பதே பொருள். நாதம் - ஒலி. சுத்த மாயையில் நாத தத்துவமே எழுத்தொலி என்பது உணர்க.

மேற்கூறியவாறு ஞான சத்தியே மிக்கு விளங்கிய நிலைக்குப் பின் ஞான சத்தியையும், கிரியா சத்தியையும் இறைவன் சமமாகச் செலுத்தி மாயையைச் செயற்படுத்த முயல்வன். இந்நிலையில் அவன் 'சதாசிவன்' எனப்படுவன். இந்நிலை அருவுருவம் (சூக்குமத்திற்கும், தூலத்திற்கும் இடைப்பட்டது). பின்பு ஞான சத்தியைக் குறைவாகவும் கிரியா சத்தியை மிகுதியாகவும் செலுத்திச் சுத்தமாயையில் ஐந்தொழில் செய்வான், அப்பொழுது அவன் 'மகேசுரன்' எனப் பெயர் பெறுவான். பின்பு ஞானசத்தியை மிகுதியாகவும், கிரியா சத்தியைக் குறைவாகவும் செலுத்தி உரியோர் சிலரை ஏவி அசுத்த மாயை, பிரகிருதி மாயைகளில் ஐந்தொழில் செய்யச் செய்வான், இந்நிலையில் அவன் 'வித்தி யேசுரன்' எனப்படுவான். வித்தியேசுரன் கீழ் நிற்போருள் உயர் நிலையை அடைந்தோரும், 'வித்தியேசுரர்' எனப் பெயர்பெறுவர். அவர், 'அனந்தர், சூட்சுமர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகருத்திரர், திரிமூர்த்தர், சீகண்டர், சிகண்டி' என எண்மராவர். இவருள் முதல்வராகிய 'அனந்தர்' என்பவரே அசுத்த மாயையில் ஐந்தொழில்

செய்தும், சீகண்டருத்திரரை ஏவி அவர் வாயிலாகப் பிரகிருதி மாயையில் ஐந்தொழிலைச் செய்வித்தும் நிற்பார்.

ஐந்தொழில்களுள், 'படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்றும் மாயையின் மேலும், 'மறைத்தல், அருளல் 'என்னும் இரண்டும் ஆன்மாக்கள் மேலும் நிகழ்வன, இவற்றை இறைவன் பிறரைக் கொண்டு செய்விக்குங்கால், படைப்பு முதலிய மூன்றனையும் தான் அவரேயாய் மறைந்து நின்றும், ஏனை இரண்டனையும் அவர் தானேயாக விளங்கி நின்றும் செய்வன். எனவே, படைத்தல், காத்தல், அழித்தல் தொழில்களைச் செய்யும் 'அயன், அரி. அரன்' என்னும் மூவரே மகேசுரனுக்கு வேறாக வைத்து எண்ணப்படுவர். அனந்த தேவரது தொழிலோடு எவ்வாற்றானும் நம்மனோர்க்கு நேரே தொடர்பு இன்மையால் அவரையும் அவர்கீழ் நிற்பாரையும் வேறு வைத்து எண்ணுவதில்லை. சீகண்டரது மறைத்தல், அருளல் தொழில் சிவனுடையனவே என்பது மேலே குறித்தவாற்றால் விளங்கும். எனவே, 'மகேசுரன், உருத்திரன், மால், அயன்' எனச் சதாசிவனுக்குக் கீழ் நான்கு நிலைகளே சொல்லப்படுகின்றன. இவை நான்கும் உருவம் (தூலம்). அனைத்தும் கூட, 'சிவன், சத்தி, நாதம், விந்து, சதாசிவன், மகேசுரன், உருத்திரன், மால், அயன் எனச் சிவனது நிலைகள் ஒன்பது என்பது விரியாக அமைந்துள்ளன. இவை 'நவந்தரு பேதம்' எனப்படும். முதல் நான்கும் இலய நிலைகள்; இடை ஒன்று போக நிலை; இறுதி நான்கு அதிகாரநிலை. இவைகளை மூன்றாகத் தொகுத்துக் கூறுமிடத்து. 'சிவன்' என்னும் இலய நிலையுள் ஏனைய மூன்றும் 'மகேசுரன்' என்னும் அதிகார நிலையுள் ஏனைய மூன்றும் அடங்கும். ஐந்தாக வகுத்துக் கூறுமிடத்து, 'சிவன்' என்பதில் நாதமும், 'சத்தி' என்பதில் விந்துவும் அடங்க, 'உருத்திரன்' மால், அயன் என்னும் மூன்றும் 'வித்தை' என ஒன்றாகச் சொல்லப்படும். இவற்றையே, ''சிவன் முதல் மூவர்'' என்றும், ''ஐவர்' என்றும், ''ஆறு இரண்டு ஒன்று-ஒன்பது'' என்றும் கூறினார். ஒன்பது நிலைகளுள் 'சத்தி, விந்து என்பன சத்தியின் நிலைகளே' என்பதை மேலே குறித்தோம். எனவே, இறைவன்' 'சிவன், நாதம், சதாசிவன், மகேசுரன், உருத்திரன், மால், அயன், என்னும் நிலைகளுள் நிற்கும்பொழுது இறைவி, முறையே, சத்தி, விந்து, மனோன்மனி, உமை, திரு, வாணி' என நிற்பாள். எனவே, மறைந்து நிற்றல் வகையாயினும், விளங்கி நிற்றல் வகையாயினும் ஒன்பது நிலைகளும் எவ்வாற்றானும் சிவபெருமானுடையனவே. ஆதலின்,'மால், அயன்' என்போரை அப்பெருமானின் வேறாக எண்ணி உயர்த்தியோ, தாழ்த்தியோ கூறிப் பிணங்க வேண்டுவது இல்லை என்பதாம்.

அவைமுதல் விந்துவும் நாதமும் ஓங்கச்
சவைமுதற் சங்கரன் தன்பெயர் தானே. 50

90. பயன்அறிந் தவ்வழி எண்ணும் அளவில்
அயனொடு மால்நமக் கன்னியம் இல்லை

சிறந்த அவை முதல் ஒன்பது - சிறப்புடைய அவை முதலாய் நிற்கின்ற ஒன்பது, 'முதலுகின்ற ஒன்பது' என வினைத்தொகை. இரண்டாவதாய் நின்ற ''அவை'' என்றது, ''ஓங்க' என்பதனோடு இயையும், இதனை அடுத்து நின்ற முதல், கருவி; தத்துவம். தத்துவத் திற்கு ஏதுவாகும் இறைவன் நிலைகளை 'தத்துவம்' என்றார். சவை - சபை. தொகுதி. ''பெயர்' எனச் சொல்மேல்வைத்துக் கூறினாரேனும், அதனால் உணர்த்தப்படும் நிலைகளைக் கூறுதலே கருத்து என்க. இறைவனது நிலைகளை இவ்வாறு தொகுத்தும், வகுத்தும் விரித்தும் கூறப்படுதலை எடுத்தோதி, இவையெல்லாம் ஒருவனது பல நிலைகளே யன்றி பொருளால் வேறல்ல என்பார். 'ஒன்று ஆகும்' என்றார்.

90. தெ-ரை: மேற்கூறிய நிலைகளால் உயிர்கட்கு விளையும் பயன்களை அறிந்து அவற்றை முறைப்படுத்தி எண்ணுங் கால் சீகண்ட வுருத்திரர்க்குக்கீழ் நிற்கும் 'அயன், மால்' என்பவர் தாமும் நமக்கு அயலாவாரல்லர்; அதனால் நீவிர் அக்கடவுளராலும் சிவனுக்கு அடியவராகும் வகையைப் பெற முயல்வீராக.

கு-ரை: ''எண்ணும்'' என்றதற்கு, 'அவற்றை' என்னும் செயப்படு பொருள் வருவிக்க, இங்கு, 'அயன், மால்' என்றது சீகண்ட உருத்திரர்க்குக் கீழ் நிற்பவரையே என்பது. ஏற்புழிக் கோடலால் விளங்கும், 'அன்னியம் இல்லை' என அமைதிகூற வேண்டுதல் அவரைப்பற்றியே யாகலின், அன்னியராவாரை, ''அன்னியம்'' என்றார். அதன்பின், ஆதலால் என்னும் சொல்லெச்சம் வருவிக்க. 'மாலும்' எனவும், 'அவ்வானவராலும்' எனவும் போந்த இழிவு சிறப்பும் தொகுத்தலாயின, ''அன்னியம் இல்லை' என்றது சிவ பிரானுக்கு வேறானவராய்த் தோன்றுதல் இல்லை என்றவாறு. அவரால் சிவனடியாராதலைப் பெறுதலாவது, 'இவரும் சிவ பெருமானது தொழிற்குரியராம் நிலைமையைப் பெற்றுச் சீகண்ட உருத்திரர் வாயிலாக அப்பெருமானது திருவருளைப் பெற்று நிற்பவர்' என உணர்ந்து அவனது அடியவராகக் கருதி வழிபட்டுச் சிவ புண்ணியத்தைப் பெறுதல். ''ஆம்'' என்றது எச்சம்; முற்றாதற்கு ஏலாமை அறிக. 'வயணம்' என்பது எதுகை நோக்கித் திரிந்தது. 'வயணம்' என்பதே பாடம் எனலுமாம், வயணம் - வகை.

நவந்தரு பேதங்களில் இறைவன் தன் அடியவரை அவர்க்கு விருப்பம் உள்வழி ஏற்புடையவற்றில் நிறுத்துதலும் உண்டு. ஆகவே, அவை 'சம்பு பட்சம், அணு பட்சம்' என இருவேறு வகையாய் நிற்கும். இறைவன் தானே கொள்ளும் நிலைகள் சம்பு பட்சம்; தன் அடியவரை அந்நிலைகளில் நிறுத்தித் தானே செய்விப்பனவும், பிறர் வாயிலாகச் செய்விப்பனவும் அணுபட்சம், இவ்விருவகை நிலைகளும் சுத்த மாயையிலே உள்ளன. ஏனை இருமாயைகளிலும் அணுபட்சம் மட்டுமே உள்ளன. அவற்றுள்ளும் தூலமாய் உள்ள உருவநிலை நான்குமே உள்ளன. அந்நான்கனுள் மகேசுர நிலையில் நிற்பவர் முறையே அனந்த தேவரும், சீகண்டருமேயாவர். ஆன்ம வருக்கத் தினராகிய இவர் எல்லாரிடத்தும் பதியாகிய சிவபெருமான் தான் அவரேயாய்க் கலந்துநின்று அவரவர் தொழிலை இயற்றுவிப்பான், இவ்வாற்றால் அணுபட்சத்தினராகிய அயன், மால் என்பவரும் ஓராற்றால் சிவ நிலையினரேயாகலின், ''அயனொடு மால் நமக்கு அன்னியம் இல்லை'' என்றார். இவ்வாறே.

''ஒருவிண்முதல் பூதலம் - ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்ப மும்மூர்த்திக ளாயினை'' -தி,1 ப.28

''நாரணன்காண் நான்முகன்காண் நால்வே தன்காண்''
-தி,6 ப.8 பா.3

''மாதிவர் பாகன் மறை பயின்ற
வாசகன் மாமலர் மேய சோதி'' -தி.8 திருவார்த்தை 1

''ஆதி - அரியாகிக் காப்பான் அயனாய்ப் படைப்பான்''
-ஞானவுலா 5

என அருட்டிருமொழிகள் 'அயன், மால்'' என்பவரையும் சிவபெருமானோடு ஒன்றாக வைத்து உயர்த்துக் கூறுமாறு அறிக.

அருட்டிருமொழிகளில் மேற்காட்டியவாறு அயனையும், மாலையும், சிவபெருமானோடு ஒன்றாக வைத்து உயர்த்துக் கூறுவனவேயன்றி,

''முந்நீர்த் துயின்றோன் நான்முக னறியாப்
பண்பொடு நின்றனை'' -தி.1 ப.28

''பிரமனும் மாலும் மேலை முடியோடு பாதம்
அறியாமை நின்ற பெரியோன்'' -தி.4 ப.14 பா.2

''பிரமன்மால் காணாப் பெரியோன் காண்க''
-தி.8 திருவாசகம். திருவண்டப் பகுதி 32

என வேறாக வைத்து இழித்துக் கூறுவனவும் உள்ளனவன்றோ எனின், ஆம், அவையெல்லாம், 'படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்' என இறைவன் செய்யும் தொழில் ஐந்து என்பதும், அவை ஐந்தும் ஒருவனது தொழிலே என்பதும் உணராது படைத்தல் முதலிய மூன்றே தொழில்கள் உள்ளன எனவும், அவற்றுள் அழித்தல் தொழில் கொடியதாகலின் அதனைச் செய்வோன் இறைவனாகான் என விடுத்து ஏனைய இரண்டும் செய்யத் தக்கனவாயினும் அவற்றுள் ஒவ்வொன்றே உயர்ந்தது எனவும் கொண்டு அதுவதற்கு உரிய ஒவ்வொருவனையே இறைவன் எனப் புகழ்ந்து, ஏனை இருவரையும் இகழ்ந்தொதுக்குவாரை நோக்கி, 'முதல்வனாவான் ஓரோர் தொழிற்கே முதல்வராய் அவர் எல்லாரினும் மேம்பட்ட ஒருவன்' எனத்தெளிவித்தற் பொருட்டு வருவனவாகலின், 'அவை, முன்னர்க் காட்டியவற்றோடு முரணுவன அல்ல' என்க.

எனவே, அயனையும், மாலையும் சிவபெருமானோடு ஒன்றாக வைத்துக் கூறும் திருமொழிகள் சிவபெருமான் தானே செய் வோனாய் சம்பு பட்சங்களில் வெளிப்பட்டு நிற்கும் நிலை, செய்விப் போனாய் அணுபட்சங்களில் மறைந்து நிற்கும் நிலை என்னும் இவற்றை நோக்கின எனவும், அவ்விருவரையும் வேறாக வைத்துக் கூறுந்திருமொழிகள் அவர் அணுபட்சத்தினராகின்ற நிலையை நோக்கின எனவும் பகுத்துணரற்பாலன என்பதாயிற்று.

இதுபற்றி யன்றே இந் நாயனாரும், ''பயனறிந் தவ்வழி எண்ணும் அளவில் ... ... நமக்கு அன்னியமில்லை'' என்றார்! 'அவ்வழி எண்ணும் அளவில் அன்னியம் இல்லை' எனவே, 'சிவபெருமானது நிலைவேறுபாடுகளாகிய சம்புபட்சங்களை எண்ணாது அணுபட்சங்களாகிய அவரவரையே எண்ணிய வழி அன்னியம் உண்டு'' என்து போந்தது.

''நமக்கு அன்னியம் இல்லை'' என்றது, 'சம்புபட்சங்களை எண்ண வல்ல சிவநெறியாளராகிய நமக்கு அன்னியம் இல்லை'' என்றவாறு. எனவே, 'அது மாட்டாது அணுபட்சத்தையே எண்ணும் ஐரணியகருப்பர், பாஞ்சராத்திரிகள் முதலியோர்க்கு எவ்வாற்றானும்

உளதாவது அன்னியமே என்பதும் போந்தது. இதனானே, 'இது மாட்டாத பௌராணிகர், அனைவரையும் ஒப்பவைத்து அனேகேச்சுர வாதம் பேசுவர்' என்பதும் பெறப்படும்.

இன்னும், ''பயனறிந்து அவ்வழி எண்ணும் அளவில்'' என்றதனால், உயிர்களின் நன்மையின் பொருட்டு இறைவன் கொள்ளும் தடத்த நிலைகள் மேற்கூறியவாற்றான் முன்னும் பின்னுமாய் நிற்றல் நோக்கிச் சம்புபட்சமாகிய அவற்றில் மேல், கீழ் கூறப்படுதல் பற்றி அணுபட்சத்திலும் மேல், கீழ் கூறப்படுகின்றனவன்றி, அணு பட்சத்தில் உண்மையில் மேல் கீழ் இன்றி யாவரும் ஒரு தன்மையினரே என்பதும் உணர்த்தப்பட்டதாம். இதனை,

அயனை முன்படைத் திடுமொரு கற்பத்
　　தரியை முன்படைத் திடுமொரு கற்பத்
துயரு ருத்திரன் றனைமுனம் படைப்பன்
　　ஒருகற் பத்தின்மற் றொருகற்பந் தன்னின்
முயலு மூவரை ஒருங்குடன் படைப்பன்
　　முற்பி றந்தவர் மற்றிரு வரையும்
செயலி னாற் படைக் கவும் அருள் புரிவன்
　　சிவபிரான் எனில் ஏற்றமிங் கெவனோ.

எனச் *'சிவதத்துவ விவேக'* நூல் விளக்கிற்று.

'இச் *சிவதத்துவ விவேகச்* செய்யுளில் 'சிவபிரான்' என்றதற்கு ஈடாக 'மாயோன்' அல்லது 'நான்முகன்' என்பதைப் பெய்து, இவை அனைத்தையும் மால் அல்லது அயனுக்கு ஆக்கிக் கூறின் வரும் குற்றம் யாது' எனின், ''சிவம் சாந்தம் சதுர்த்தம்' என்று சிவபெருமானைக் குணமூர்த்திகளாகிய மூவரின் மேம்பட்ட நான்காமவனாய நிர்க்குண மூர்த்தியாகக் கூறியது போல, அவரை ஓரிடத்தும் கூறாமையானும், மாயோனையும், நான்முகனையும் முதல்வராகக் கூறுவோர் அவரை முறையே 'சத்துவ மூர்த்தி, இராசத மூர்த்தி' என்பதல்லது, நிர்க்குண மூர்த்திகளாகக் கூறாமையானும் அங்ஙனம் கூறுதல் கூடாது என்க. உருத்திரனைச் சிவபிரானின் மேம்பட்டவனாகக் கூறிப் பிணங்குவார் இன்மையின், அவன் அன்னியன் ஆகாமையைக் கூறிற்றிலர்.

நயனங்கள் மூன்றுடை நந்தி தமராம்
வயனம் பெறுவீர்அவ் வானவ ராலே. 51

91. ஓலக்கஞ் சூழ்ந்த உலப்பிலி தேவர்கள்
பாலொத்த மேனி பணிந்தடி யேன்தொழ
மாலுக்கும் ஆதிப் பிரமற்கும் ஒப்புநீ
ஞாலத்து நம்மடி நல்கிடென் றானே. 52

---

91. தெ-ரை: எண்ணில்லாத தேவர்கள் திருவோலக்கத்தில் சூழ்ந்து பணிகின்ற சிவபிரானது திருமேனியை அடியேனும் பணிந்து கும்பிட, அவன், 'நீ திருமாலையும், படைப்புக் கடவுளாகிய பிரமனையும் நிகர்த்தவன்; ஆதலின், நிலவுலகத்திற்கு நமது திருவருட் பெருமையை உணர்த்து' என ஆணை தந்தருளினான்.

கு-ரை: 'ஆகவே, மக்களுலகத்துள்ளாரைச் சிவபெருமான் மாலும் அயனுமாகச் செய்தல் உண்டு' என்றவாறு. ''உலப்பிலி தேவர்கள்'' என்றதை முதலிற் கூட்டுக. சிவபெருமானது திருமேனி, பால் போலுதல் திருநீற்றுப் பூச்சினாலாம். இனிபால், இனிமை பற்றிவந்த உவமை என்றலுமாம், அருளை, 'அடி' என்றல் மரபு என்பது, ''இறைவனார் கமல பாதம் இன்றியான் இயம்பும் ஆசை'' என்ற *சிவஞான சித்தியானும் (சுபக்கம் - பாயிரம் - 4)* உணர்க. திருமாலும், பிரமனும் வேதம் முதலியவற்றால் பலர்க்குச் சிவபிரானது திருவருட் பெருமையைப் பலர்க்கு உணர்த்துவோராதல் அறியத்தக்கது. 'ஞாலக்கு' என்பதே பாடம் போலும். நாயனார்க்கு சிவபெருமான் இவ்வாறு ஆணை தந்தது நந்திதேவர் வாயிலாக என்க. இனித் திருவாவடுதுறையில் சிவபோதியின் கீழ் இருந்து கண்ட யோகக் காட்சியில் என்றலும் பொருந்துவதேயாம், இவ் ஆணையின் வழி நல்கப்பட்டதே இத் திருமந்திர மாலை என்க.

92. தெ-ரை: உடம்போடு கூடி நிற்பவருள் சிலரை'இவர் தேவர்' என்றும், சிலரை, (இவர் மக்கள்) என்றும் உணர நிற்கும் நிலைமைகள் எல்லாம் சிவபெருமானது செயலால் அமைவனவன்றித் தானாகவே அவ்வாறு நிற்கும் தனித் தெய்வம் இல்லை.

கு-ரை: 'அதனால், ஏனைத் தேவரும், தலைமக்களும் மாலயன் போலச் சிவபெருமானது கலப்பினை நோக்கும்வழி அவனாதலும், இவர்தந் தன்மையை நோக்கும்வழி இவரோயாதலும் பெறப்படும், என, வானுலகத்தில் இந்திரன் முதலாகவும், மண் ணுலகத்தில் அரசர்

92. வானவர் என்றும் மனிதர்இவர் என்றுந்
தேனமர் கொன்றைச் சிவனருள் அல்லது
தானமர்ந் தோருந் தனித்தெய்வம் மற்றில்லை
ஊனமர்ந் தோரை உணர்வது தானே. 53

93. சோதித்த பேரொளி மூன்றைந் தெனநின்ற
ஆதிக்கண் ஆவ தறிகிலர் ஆதர்கள்

முதலாகவும் உள்ள தலைவரது நிலைமையை விளக்கியவாறு. இவ்வாற்றானே. ''திருமாலுக் கடிமைசெய், தெய்வம் இகழேல், சக்கர நெறிநில் *(ஆத்திச்சூடி)* என்றற்றொடக்கத்து அறநூற் கட்டளைகள் எழுந்தன என்க. ''ஓரும்'' என்றது செயப்பாட்டு வினையாய் நின்றது. தனிமை, இங்குச் சுதந்திரத்தைக் குறித்தது. மற்று, அசைநிலை,

93. தெ-ரை: *சிவதன்ம* நூலுள், 'உருத்திரன், மால் அயன்' என்னும் மூவரும், மெய்யுணர்ந்தோர் ஆய்ந்துணர்ந்த பேரொளியாகிய அநாதிப் பொருள் ஒன்றே மூன்றாயும், ஐவந்தாயும் நின்ற முதனிலைகளில் அமைவனவாதலை அந்நூலை அறியாதார் அறிய மாட்டார். அதனால், அவர் உலகியல் நூலே பற்றி அவரை வேறு வேறு கடவுளாக்கி அவருள் ஒருவராகப் புகழ்ந்தும், ஏனையிருவரையும் இகழ்ந்தும் திரிகின்றனர்.

கு-ரை: 'அவர் உரை பொருளாதல் இன்று' என்பது குறிப்பெச்சம். ''ஆதி'' என்றதனால், 'அநாதி' என்பதும், நீதி நூல் என்றதனால் ''*சிவதன்ம நூல்*'' என்பதும் கொள்ளப்பட்டன. நீதி - உலகியல்; இஃது ஆகுபெயராய் நின்றது. ''நீதிக்கண் நின்று'' என ஒருசொல் வருவிக்க. ஈசன் முதலிய மூவரும் நின்று' என ஒரு சொல் வருவிக்க ஈசன் முதலிய மூவரும் பின்னர்க் கூறப்படுதலின் முன்னர்க் கூறாயினார். 'அவரைப் பேதித்துப் பிதற்றுகின்றார்' என மாறிக் கூட்டுக.

'உலகியல் நூல், பல்வேறு சமயத்தாருக்கும் பொது வாய அறங்களைக் கூறும் நூல், அஃது 'முதற்கடவுளாவது இதுவே' என ஒருதலையாக ஒருதெய்வத்தை வரையறுத்துணர்த்தாமையின், அதனையே பற்றி நிற்பார்க்கு மலைவுண்டாதல் இயல்பு' என்பதும், 'அம்மலைவு, மெய்ந்நெறி நூலை உணர்வார்க்கு இல்லை' என்பதும் உணர்த்தியவாறு அறிக.

நீதிக்கண் ஈசன் நெடுமால் அயன்என்று
பேதித் தவரைப் பிதற்றுகின் றாரே. 54

94. பரத்திலே ஒன்றாய்உள் ளாய்ப்புற மாகி
வரத்தினுள் மாயவ னாய்அய னாகித்
தரத்தினுள் தான்பல தன்மைய னாகிக்
கரத்தினுள் நின்று கழிவுசெய் தானே. 55

95. தானொரு கூறு சதாசிவன் எம்இறை
வானொரு கூறு மருவியும் அங்குளான்

---

94. தெ-ரை: சிவபெருமான் ஒன்றோடும் ஒட்டாது தனித்து நிற்கும் மேல் நிலையில் ஒருவனேயாய், அந்நிலையினின்று வருதலாகிய பொதுநிலையில் எல்லாப் பொருட்கும் உள்ளும், புறம்பும் நிறைந்து நிற்பவனாய் மால், அயன் முதலிய ஒன்பது நிலைகளை உடையவனாகியும், உயிர்களின் தகுதி வேறுபாட்டிற்கேற் மற்றும் பல்வேறு நிலைகளையுடையனாகியும் இவ்வாறெல்லாம் தனது திருவருள் ஒன்றிலே நின்று உயிர்கட்குப் பாசத்தைப் போக்கி யருளுகின்றான்.

கு-ரை: எனவே, 'இவற்றிற்கெல்லாம் காரணம் பல்வேறு நிலைப்பட்ட உயிர்கள் மாட்டுக் கொண்ட அருளேயன்றிப் பிறிதில்லை' என, 'ஒருவன் ஒருநிலையில் நில்லாது பல நிலையை மேற்கொள்ள வேண்டுவது என்னை' என்னும் ஐயத்தை நீக்கியவாறு ''மாயவன், அயன்'', ''தரம்'' என்பன உபலக்கணம். வரத்து, 'வரவு' என்னும் தொழிற் பெயர். சொரூபம் நிலையும், தடத்தம் வரவும் ஆதல் உணர்ந்து கொள்க. கரம் போல்வதனை, ''கரம்'' என்றார். இறைவனது சத்தியை அவனுக்குக் கை போல்வதாதலை.

''நங்கையினால் நாம் அனைத்தும் செய்தாற்போல் நாடனைத்தும்
நங்கையினால் செய்தளிக்கும் நாயகனாம்''

என்னும் *திருக்களிற்றுப்படியார். 78* இதனாலறிக. இதனானே, ''என்னை இப்பவத்திற் சேராவகை எடுத்து'' *(சிவஞானசித்தி. பாயிரம். 2)* என்பதில் எடுத்து என்றது, 'அருளாகிய கையால் எடுத்து' எனப் பொருள் தந்தது.

95. தெ-ரை: எம் கடவுளாகிய சிவபெருமான் தானே ஒரு கூற்றில் சதாசிவ மூர்த்தியாய் 'சாந்தியதீதை' என்னும் ஒரு கலையுள் நின்று

கோனொரு கூறுடல் உள்நின் றுயிர்க்கின்ற
தானொரு கூறு சலமய னாமே. 56

அதனையே தன்னிடமாகக் கொண்டும் இருக்கின்றான். மற்றொரு கூற்றில் உயிர்க்குயிராய் நின்று உணர்த்துவதாகிய இலயசிவனாயும் நிற்கின்றான். பிறிதொரு கூற்றில் பாசங்களின் வழிநின்று நடத்தும் மறைப்பாற்றலாயும் உள்ளான். வேறொரு கூற்றில் பாசத்தை நீக்கித் தன்னைத் தரும் அருளாற்றலாயும் இருப்பன்.

கு-ரை: 'அதனால் அவனது நிலைவேறுபாடுகளை அறிதல் உயிர்கட்கு அரிது' என்பது கருத்து. 'இந்நிலையெல்லாம் தன் இச்சையாற் கொள்வனவே' என்றற்கு முதற்கண், ''தான்'' என்றார். சாந்தியதீத கலையும் ஆகாயம் எனப்படுமாறு அறிக. உண்மையை ''அங்கு'' என்பதனுடன் கூட்டுக. ''கோன்'' என்றது. 'எசமானன்' என்னும் பொருளது. பாசத்தின் வழி நின்று நடத்துதலை, 'உடலுள் நின்று உயிர்த்தல்' என்றார். இறுதிக் கண் நின்ற ''ஒரு கூறு'' என்றது முன்னும் சென்று இயையும், ''ஆம்'' என்பதனை, ''தான்'' என்றதற்கும் கூட்டுக. தண்ணியனாதல் பற்றி அருள்வோனாதலை, ''சலமயன் ஆம்'' என்றார்.

2. வேதச் சிறப்பு

96. வேதத்தை விட்ட அறம்இல்லை வேதத்தின்
ஓதத் தகும்அறம் எல்லாம் உளதர்க்க
வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற
வேதத்தை ஓதியே வீடுபெற் றார்களே. 1

இதுகாறும் சிவநெறியில் இறைவனாகிய சிவபெரு மானது பெருமையைக் கூறிய நாயனார், இனி அவனாற்செய்யப்பட்ட நூலது பெருமையைக் கூறுகின்றார். அந்நூல் தான், 'பொதுவும், சிறப்பும்' என்று இருவகைத்தாய் முறையே' 'வேதமும், ஆகமமும்' எனப் பெயர்பெற்றன என்பதை நாயனார் பின்னர்க் கூறுகின்றார் (தி.10 எட்டாந் தந்திரம் ''வேதமொ டாகமம்'') ஆதலின், அவற்றுள் பொது நூலாகிய 'வேதத்தின்' சிறப்பை முன்னர் ஆறு திருமந்திரங்களால் கூறுகின்றார்.

96. தெ-ரை: 'அறவேட்கை உடையேம்' எனத் தம்மைப் பற்றிச் சொல்லிக்கொள்வார் சிலர், 'வேதத்திற் சொல்லப்படாத அறமும் உண்டு' எனக் கூறுவராயினும், அஃது உண்மையன்று; வேதத்திற் சொல்லப்படாத அறம் யாதொன்றும் இல்லை. மக்கள் ஓதி உணர வேண்டுவனவாய எல்லா அறங்களும் வேதத்திலே உள்ளன. அதனால், அறிவுடையோர் பலரும் வேதத்தை மறுத்துச் செய்யும் சொற்போரை விடுத்து எல்லாச் சொல்வளமும், பொருள்வளமும் உடைய வேதத்தை ஓதியே வீடடையும் நெறியைப் பெற்றார்கள்.

கு-ரை: 'கொல்லாமையே சிறந்த அறம்; அது வேதத்துள் இல்லை' எனக் கூறும் புத்த சமண மதத்தவரது கூற்றை உட்கொண்டு கூறியது இத்திருமந்திரமாதலின், இதற்கு இவ்வாறு உரைக்கப்பட்டது. வேதத்துள் ஊன் வேள்வி கூறப்பட்டதாயினும், வேதம் பல்வேறு திறத்தார்க்கும் அவரவர்க்கு ஏற்புடைய அறங்களைக் கூறுவதாகலின், அதனுட் கூறப்பட்ட அறங்கள் அவ்வத்திறத்தார்க்கே உரியனவன்றி, எல்லா அறங்களும் எல்லார்க்கும் உரியன அல்ல; அவ்வாற்றால், ஊன் வேள்விகளும் அவற்றிற்கு உரியாரை நோக்கியே கூறப்பட்டன என்பதும், ஊன் வேள்வியன்றித் தூய வழிபாடுகளும், தூய நோன்பு களும் அவற்றிற்கு உரியாரை நோக்கி வேதத்திற் கூறப் பட்டுள்ளன என்பதுமே வேதத்தை உடன்பட்டோர் துணிபாகலின் ''வேதத்தை விட்ட அறமில்லை'' என்பது முதலியவற்றால் வேதத்தின் சிறப்பை வலியுறுத்தினார் நாயனார். *திருவள்ளுவ நாயனாரும்,*

அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று. *-குறள் 259*

என 'ஊன்வேள்விகள் உயர்ந்தோர்க்கு உரியன அல்ல என்பது மாத்திரையே கூறியதல்லது, 'ஒருவர்க்கும் ஆகாது' என முற்றக் கடிந்து கூறினாரல்லர். ஊன் வேள்விகளை அறிவுடையோர் விலக்காமைக்குக் காரணம், அவற்றாலும் சிலர்க்குக் கடவுள் உணர்ச்சி உளதாதல் பற்றியேயாம். புத்த சமண மதங்கள் கடவுட் கொள்கை இல்லாத மதங்களாதலின் அவை அவற்றை மறுக்கு முகத்தான் கடவுள் வழிபாட்டினையே மறுப்பனவாயின. அன்றியும், ஊன் வேள்வியை விலக்குதலைத் தம் மதத்தினைப் பரப்புதற்குத் தக்கதொரு கருவியாகவுங் கொண்டு தம் ஆரவார உரைகளைப் பெருக்கின என்பது, ''கொல்லாமை மறைந்துறையும் அமண்சமயம்'' (தி.12 திருநாவுக்கரசர் புராணம். 37) என்ற சேக்கிழாரது திருமொழிக் குறிப்பால் நன்குணரலாம்.

''வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆத மில்லி அமணொடு தேரரை'' -தி.3 ப.108 பா.7

என்னும் திருமொழியும் இக்கருத்தே பற்றி எழுந்தது.

'கடவுள் வழிபாடு உயிர்க்கொலையோடு கூடாது நிற்றலே சிறப்பு; கூடினும் அமைக' என்பது வேத மதங்களின் கருத்து. 'கடவுள் வழிபாடு செய்யப்படாது ஒழியினும் ஒழிக; உயிர்க் கொலை கூடாது' என்பது புற மதங்களின் கொள்கை. 'இப்புறமதக் கொள்கையால் ஒழிவது கடவுள் வழி பாடேயன்றி உயிர்க்கொலையன்று' என்பதை ஊன்றியுணரவல்லார்க்கு, அம்மதங்களால் விளையும் தீங்கு புலனாவதாகும். அது நோக்கியே அறிவுடையோர் அனைவரும் வேதத்தை உடம்பட்டு ஒழுகினர் என்க.

அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல். *-குறள் 543*

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவான் எனின். *-குறள் 560*

என்பவற்றால் *திருவள்ளுவ நாயனாரும்* வேதத்தை உடம்பட்டமை புலனாகும். ''வேதத்தில் அறம் எல்லாம் உள'' என்றதனால், 'வேதம் அறத்தைக் கூறும் பொது நூல்' என்பது பெறப்பட்டது.

97. வேதம் உரைத்தானும் வேதிய னாகிலன்
வேதம் உரைத்தானும் வேதா விளங்கிட
வேதம் உரைத்தானும் வேதியர் வேள்விக்கா
வேதம் உரைத்தானும் மெய்ப்பொருள் காட்டவே. 2

98. இருக்குரு வாம்எழில் வேதத்தி னுள்ளே
உருக்குணர் வாயுணர் வேதத்துள் ஓங்கி

---

97. தெ-ரை: வேதத்தை எப்பொழுதும் ஓதுபவனாகிய பிரமனும் வேதத்தைச் செய்தவனாயினானில்லை. ஏனெனில், வேதத்தைச் செய்தவன் அதனைச் செய்தது, அப்பிரமன் அதனை ஓதி அறிவு விளங்கப் பெறுதற் பொருட்டும், மற்றும் கன்மத்தில் விருப்பம் உடையவர்க்கு வேள்விகளை உளவாக்குதற்பொருட்டும், மெய் யுணர்வு பெற விரும்புவோர்க்கு மெய்ப்பொருளை உணர்த்தற் பொருட்டுமாம்.

கு-ரை: 'பிரமன் வேதத்தால் அறிவு விளங்கப்பெறுதல், அவன் அதனை இடையறாது ஓதுதலால் அறியப்படும்' என்றற்கு, அவனை 'வேதம் உரைத்தான்' என்னும் பெயராற்கூறினார். உம்மை நான்கனுள் முதலது, சிறப்பு; ஏனையவை எச்சம். 'வேதத்தை ஓதி அறிவு விளங்கப் பெறுபவன், அவ்வேதத்தைச் செய்தவனாதல் எவ்வாறு' என்றற்கு, ''வேதம் உரைத்தானும் வேதா விளங்கிட'' என்றார். இக்கருத்தால் இது கூறப் புகுந்தவர், வேதத்தால் உளவாகும் ஏனைய பயன்களையும் உடன் கூறினார் என்க. இப்பயன்களது சிறப்பை வலிறுத்தற்கு எச்ச உம்மை புணர்த்து வேறு வேறு தொடராற் கூறினார். அவ்வும்மைகட்கு முன் 'உரைத்தது' என்பன சொல் லெச்சமாய் எஞ்சிநின்றன. இதனால் 'வேத்தைச் செய்தவன் பிரமன் எனக் கூறும் ஐரணிய கருப்பமத'த்தவர் முதலாயினவர் கூற்றும் பொருந்தா' என்பதும், 'வேதத்தின் பயன் இவை' என்பதும் கூறப்பட்டன. இதனானே வேதம் ஒருவராலும் செய்யப்பட்டதன்று என்னும் மீமாஞ்சகரது கொள்கையும் பொருந் தாமை பெறப்பட்டது.

98. தெ-ரை: பூனையை ஒத்த புறத்தோற்றம் உடைய வேதியர்கள் சொல்கின்ற, பிறப்பை உடைய ஆசிரியனாகிய மாயோன் றானும், மந்திரவடிவாகிய எழுச்சியான ஓசையை உடைய கன்ம காண்டத்துள் உள்ளத்தை உருக்குகின்ற அன்புருவாயும், ஞான காண்டத்துள் கேள்வி, ஆய்வு முதலியவற்றால் துணியப்படும் மெய்ப்

வெருக்குரு வாகிய வேதியர் சொல்லுங்
கருக்குரு வாய்நின்ற கண்ணனு மாமே. 3

பொருளாயும் உயர்ந்து நிற்பவனாவனோ? ஆகான்.

கு-ரை: 'அதனால், அவனும் வேதத்தைச் செய்தவன் ஆகான்' என்றபடி. வேதத்தின் பாகங்களையும் 'வேதம்' என்றல் வழக்கு. உருக்கு உணர்வு, அன்பு உணர்வேதம், உணரப்படும் வேதம். ''ஓங்கி'' என்றது பெயர். 'வேதம் முதல் நூலாதலின், அதனைச் செய்தவன் யாவர்க்கும் முன்னோனாய தன்னிகரில்லாத் தனிப்பெருந்தலைவனேயாதல் வேண்டும். அதனால், அவன் தனது தன்மையை உணர்ந்து தன்னைச் சாரமாட்டாத பிறர்க்கு அன்பினானும், ஆராய்ச்சியானும் தன்னை அடையுமாற்றையே அந்நூலுட் கூறியிருத்தல் வேண்டும். ஆகவே, அவன் அதன் கன்ம காண்டத்துள் அன்பிற்கும், ஞானகாண்டத்துள் அறிவிற்கும் பற்றாய் நிற்றல் வேண்டும். அத்தன்மை பிறப்பினுட்பட்டு நிற்கும் மாயோனுக்கும் கூடாது' என்பார், ''கருக் குரு வாய் நின்ற கண்ணனும் ஆமே'' என்றார். ''கரு'' என்றது பிறப்பை. ''கருக்குரு'' என்றதை, 'கருவை உடை குரு' என விரிக்க. 'கருவில் வீழ்பவன் குருவாகமாட்டான்' என்பது குறிப்பு. 'கண்ணன்' மாயோன்' என்பன ஒருபொருட்சொற்கள். ''கண்ணனும்'' என்ற உம்மை இழிவு சிறப்பு. 'ஆமே' என்ற வினா, 'ஆகான்' என எதிர்மறைக்கண் வந்தது. 'கண்ணனும் உருக்குணர்வாய் ஓங்கி ஆமே' எனக் கூட்டுக.

வரையறை இன்மையின், ''வெருக்குரு'' என, வேற்றுமைப் புணர்ச்சியுள் நிலைமொழியில் சிறுபான்மை ககரம் இரட்டிற்று. ''வெருக்குக்கண்'' *(நாலடியார் 210)* எனப் பிறவிடத்தும் வந்தது. 'பிரமத்தை உணர்ந் திருத்தலால் பிராமணர் எனவும், பிரமஞானம் மிக்கிருத்தலால் விப்பிரர் எனவும் சொல்லப்படுகின்றோம்' என்று சொல்லிக்கொண்டு, பிரமமாகிய சிவபெருமானைச் சிறிதும் உணர்ந்து அன்பு செய்யாமலே, மாயோன் முதலியோரையே புகழ்வதோடு சிவபெருமானை இகழ்வதும் செய்துகொண்டே, நூலும் சிகையும் முதலாய தோற்றத்தால் மட்டும் சிலர் பிராமணராய் நிற்றலின், அவரது தோற்றத்திற்குத், தவத்தோடு சிறிதும் இயைபின்றி அதற்கு மாறாய் நின்று கொண்டே தோற்றத்தால் பெரிதும் தவமுடயைது போலத் தோன்றுகின்ற பூனையினது தோற்றத்தை உவமை கூறினார். பிராமணருட் சிலர் இவ்வாறு நிற்றற்குக் காரணம், ததீசி, கௌதமர் முதலிய முனிவர் சிலரது சாபம் என்பதைக் *காந்தம், கூர்மம்* முதலிய புராணங்களுட் காண்க.

99. திருநெறி யாவது சித்தசித் தன்றிப்
பெருநெறி யாய பிரானை நினைந்து
குருநெறி யாஞ்சிவ மாநெறி கூடும்
ஒருநெறி ஒன்றாக வேதாந்தம் ஓதுமே. 4

இதனால், 'வேதத்தை மாயோன் இயல்பாய் நின்றே செய்தான்' எனப் *பாஞ்சராத்திரிகளும்*, 'வியாதனாய் அவதரித்துச் செய்தான்' எனப் *பௌராணிகரும்* கூறுங் கூற்றுக்கள் பொருந்தா என்பது உணர்த்தினார். 'வேதத்தைச் செய்தவன் பிரமனு மல்லன்; மாயனுமல்லன், என்பதைப் பொருந்துமாற்றின் வைத்து உணர்த்தி, 'அது செய்தவன் சிவபெருமானே' என்பதைப் பாரிசேடத்தாற் பெறுவித்தார் என்க. வியாச முனிவன் வேதத்தை வகைப்படுத்திய தல்லது செய்திலாமை அறிக.

99. தெ-ரை: 'வீட்டு நெறியாவது, ஞானாசிரியன்வழி உளதாவதாய், சித்தும், அசித்தமாய் இருதிறப்பட்டு நிற்கும் உலகத்தை நினையாமல், அவை அனைத்தையும் கடந்து நிற்கும் சிவபெருமான் ஒருவனையே நினைந்து அவனாந் தன்மையைப் பெறுகின்ற ஒரு நெறியே' என வேத முடிவு ஒருதலையாக அறுதியிட்டுக் கூறும்.

கு-ரை: 'அதனால், வேதத்தைச் செய்தவன் சிவபெருமானே' என்பது குறிப்பெச்சம். 'திரு' என்பது வீடாதலை 'போகமும் திருவும் புணர்ப்பானை'' (தி.7 ப.59 பா.1) என்பதனுட் காண்க. வியாபக நிலையை, ''பெரு நெறி'' என்றார். ''சிவமாம் நெறி'' எனப் பின்னர் வருகின்றமையின், வாளா, ''பிரான்'' என்று போயினார். ''குருவே சிவம்'' (தி.10 ஆறாம் தந்திரம்) எனப் பின்னர்க் கூறுவாராகலின், ''குருநெறிஆம்'' என்றது, 'அவனருளால் அல்லது கிடைக்கப்பெறாத' என்றவாறு. ''ஒருநெறி'' என்றதன்பின், 'என்று' என்பது எஞ்சிநின்றது. 'பிரானையே, ஒருநெறியே' என்னும் பிரிநிலை ஏகாரங்கள் தொகுத்தலாயின. 'திருநெறியாவது சிவமாம் நெறி கூடும் ஒருநெறியே' என வேதாந்தம் கூறுதல், ''பிற எல்லாவற்றையும் விடுத்துச் சிவன் ஒருவனே தியானிக்கப்படத் தக்கவன்; அதர்வ சிகை முற்றிற்று'' ''ஸிவ ஏகா தியேயக சிவங்கர ஸர்வ மன்யத் பரித் யஜ்யேதி ,மாப் தார்த்த வஸிஹா'' என்று வேதாந்தம் *(அதர்வசிகோப நிடத முடிவு)* இறுதியிற் கூறி முடிதலால் அறியப்படும்.

இதனால் மேல் பாரிசேடத்தாற் பெறப்பட்டதனைப் பொருந்து மாற்றின் வைத்துணர்த்தி வலியுறுத்தல் செய்யப்பட்டது. இதனானே,

100. ஆறங்க மாய்வரு மம்மறை ஓதியைக்
கூறங்க மாகக் குணம்பயில் வாரில்லை
வேறங்க மாக விளைவுசெய் தப்புறம்
பேறங்க மாகப் பெருக்குகின் றாரே. 5

சிவமாம் நெறியாகிய திருநெறியது இயல்பும் தொகுத்துணர்த்தப் பட்டவாறு அறிக.

திருஞானசம்பந்தரது, ''அருநெறிய மறை'' (தி.1 ப.1 பா.11) என்னும் திருப்பாடல் இத்திருமந்திரத்தை அடியொற்றிச்செல்வதாய் இருத்தலும், அவர் தமது பாடலை, ''திருநெறிய தமிழ்'' என்று குறித்திருத்தலும் இங்கு நினைவுகூரத் தக்கன.

100. தெ-ரை: ஆறு அங்கங்களை உடையதாய், மேற்றொட்டு எழுதாக் கிளவியாய் வருகின்ற அவ்வேதத்தைச் செய்த சிவபெரு மானை அதன் முடிவில் விளங்குபவனாக உணர்ந்து அவனது அருட் குணங்களைப் போற்றுபவர் உலகருள் ஒருவரும் இல்லை; அவர் பலரும் வேறு எவ்வெவற்றையோ தங்கள் கடனாக நினைந்து, அவற் றால் சில பேறுகளை உளவாக்கிக் கொண்டு அவற்றால் கிடைக்கின்ற பயன் மேலும் மேலும் வரும் பிறப்பேயாக அவற்றைப் பெருக்கி உழல்கின்றார்கள்.

கு-ரை: 'இஃது அவர் வினையிருந்தவாறு' என்பது குறிப் பெச்சம். 'சிவஞானத்தாலன்றிப் பிறவி அறமாட்டாது' என்பது கருத்து. ஆறங்கம்'-'சிட்சை, வியாகரணம், நிருத்தம், சோதிடம், கற்பம், சந்தோவிசிதி' என்பன. அவற்றுள் 'சிட்சை வேதத்தை ஒலிக்கும் முறையை நன்குணர்த்துவது; வியாகரணம், வேதத்தில் உள்ள தொடர் மொழிகளின் இயல்பைப் புலப்படுத்துவது; நிருத்தம், வேதத்தின் தனி மொழிகளின் இயல்பைக் கூறுவது; சோதிடம், வைதிக கருமங்கட் குரிய காலத்தின் இயல்பைத் தெரிவிப்பது. கற்பம், வைதிக கருமங் களை அனுட்டிக்கும் முறையைக் கூறுவது சந்தோவிசிதி வேதத்தின் சந்தங்களை எழுத்தெண்ணிக்கை கூறி உணர்த்துவது. இவையின்றி வேதத்தாற் பயன்கொள்ளுதல் கூடாமையின், இவை வேதத்திற்கு அங்கமாயின. அங்கம் உடையதனை ''அங்கம்'' என்றார்' ''ஆறங் கமாய்'' என்றும், ''வரும்'' என்றும் கூறியது, 'இவ்வாற்றால் வேதத்தை வருந்திக் கற்றும் சிலர் அதனால் பயன் பெறாத வராகின்றனர்' என்பது உணர்த்துதற்கு.

101. பாட்டும் ஒலியும் பரகுங் கணிகையர்
ஆட்டும் அறாத அவனியின் மாட்டாதார்
வேட்டு விருப்பார் விரதமில் லாதவர்
ஈட்டும் இடஞ்சென் றிகலுற் றாரே. 6

கூறு அங்கம் - சிறப்பாகச் சொல்லப்படும் உறுப்பு; தலை; ''வேறு அங்கம்'' என்றதில், ''அங்கம்'' என்பது, 'இன்றியமையாதது' என்னும் பொருட்டு.

101. தெ-ரை: இயலும், இசையும், நாடகமும் ஆகிய கலை களின் பயனை அறியாவிடினும் அவற்றை இடையறாது நிகழ்த்தி நிற்கின்ற இவ்வுலகில், வேதத்தை இடையறாது ஓதுகின்ற வேதியரும் அத் தன்மைரேயாய்ப் பொருள் பெறவிரும்பி, பொருளாசை நிறைந்த நெறி முறை இல்லாத அக்கலைவல்லுநர் பொருள் ஈட்டும் இடத்திற் சென்று அவரோடு மாறுகொண்டு நிற்கின்றனர்.

கு-ரை: ''பாட்டு'' என்றது, இயற் பாட்டினையும், ''ஒலி'' என்றது பண்ணமைந்த இசைப் பாடல்களையுமாம். நெறிப்பட்ட வாழ்க்கையை 'விரதம்' என்றார் 'இயற் பாட்டு முதலிய கலைகள் யாவும் நற்பண்பினை வளர்த்தற்கு உரியனவாகவும், அவற்றில் வல்லுநராகியும் அவை வளரப் பெறாதார் பொருளீட்டுதல் ஒன்றே அவற்றாற்பெறும் பயனாகக்கொள்வர். என்பார். ''விருப்பு ஆர் விரதம் இல்லாதவர்'' என்றும், 'அவர் பொருளீட்டும் இடம் அரசர் முதலிய செல்வம் மிக்கோர்களாதலின், அவ்விடத்தில் இவ்வேதியரும் சென்று, அவர்க்கு முன்னே எமக்குத் தம்மின் என அவரின் முந்துகின்றதல்லது, தாம்வேதம் ஓதியதற்குப் பயன் பிறிதில்லை' என்பார், ''அவர் ஈட்டு மிடஞ்சென்று இகலலுற்றாரே'' என்றும் கூறினார். வேதியர் அவரின் முந்துதல், 'தக்கார்க்குக் கொடுத்தலாகிய இது முன்செய்யத் தக்கது' என அறிவுறுத்தி நிற்றல். 'வேதியர், பிறரெல்லாம் இலௌகிகர், யாம் வைதிகர் என்று சொல்லால் தம்மை உயர்த்திக் கொள்வதல்லது, செயலால் இலௌகிகரோடு ஒக்கின்றார்' என்பதும் கூறியவாறு. 'சிவபிரானை உணராதார்க்கு உலகப் பற்று நீங்காது' என்பதாம்.

இம்மூன்று திருமந்திரங்களாலும், 'வேதத்தின் பயன் சிவநெறியே நெறி என்று உணர்ந்து அந்நெறிநிற்றலே' என்பது உடம்பாட்டானும் எதிர்மறையானும் வலியுறுத்தப்பட்டது. ''வேதப் பயனாம் சைவம்'' (தி.12 சண்டேச்சுரர் 9) என்று அருளிய சேக்கிழார்

திருமொழி இங்கு நினைக்கத்தக்கது. இப்பயன் எய்தாதாரை நோக்கியே,

''அசிக்க ஆரியங்கள் ஓதும்
ஆதரைப் பேத வாதப்
பிசுக்கரைக் காணாக் கண்; வாய்
பேசாத பேய்க ளோடே'' (தி.9 திருவிசைப்பா. 4, 5)

என்றாற்போலும் திருமொழிகள் எழுந்தன.

'வேதத்தைச் செய்தவன் இவன்' என்பது பற்றியும், அதனால், முடித்துக் கூறப்படும் நெறி இன்னது' என்பது பற்றியும் நாயனார் இவ்வாறெல்லாம் வலியுறுத்து அருளிச் செய்தமையால், 'வேதம் அவரவர் தகுதிக்கேற்பப் பலவாற்றாற் பொருள் கொள்ள நிற்பது' என்பது பெறப்பட்டது, எனவே, நாயனார் பின்னர்க் கூறுமாறுபோல, உண்மையை முதற்கண்ணே முற்ற உணர்த்தினால் உணர்தல் அரிதாதல் பற்றி அதனை முதற்கண் ஒருவாற்றான் உணர்த்தும் பொது நூலே வேதம்' என்பதாயிற்று.

3. ஆகமச் சிறப்பு

102. அஞ்சன மேனி அரிவையோர் பாகத்தன்
அஞ்சொ டிருபத்து மூன்றுள ஆகமம்
அஞ்சலி கூப்பி அறுபத் தறுவரும்
அஞ்சாம் முகத்தில் அரும்பொருள் கேட்டதே. 1

இங்ஙனம் பொதுநூலை உணர்ந்த பின்னர்ப் பலதலைப்பட்ட உணர்வினான் மலைவுற்று, 'உண்மை யாது' என ஆராய்ந்துணரும் வேட்கையும், அறிவும் உடையராயினார்க்கு அதனை ஒருதலையாக உணர்த்தும் நூல் சிவாகமங்கள் ஆதலின், அவற்றது சிறப்பினை அடுத்துக் கூறுகின்றார்.

உண்மையை முற்ற உணரும் வேட்கையும், அறிவும் இல்லாது ஓரளவில் உணர விரும்புபவரே உலகர். அவ்வேட்கையும், அறிவும் சத்திநிபாதர்க்கே உளவாம். அதனால், உலகர் பொருட்டு 'வேதம்' என்னும் பொதுமுதல்நூலும், சத்திநிபாதர் பொருட்டு, 'ஆகமம்' என்னும் சிறப்பு முதல்நூலும் இறைவனாற் செய்தளிக்கப்பட்டன. எனவே, 'முதல்நூல் ஒன்றாகாது, இரண்டாயினவாறு என்னை' என ஐயுறவேண்டாமை அறிக.

வேதநூல் சைவநூல் என்றிரண்டே நூல்கள்;
வேறுமுள நூல்இவற்றின் விரிந்த நூல்கள்;
ஆதிநூல், அனாதிஅம லன்தருநூல் இரண்டும்;
ஆரணநூல் பொது; சைவம் அருஞ்சிறப்பு நூலாம்;
நீதியினால் உலகர்க்கும், சத்திநிபா தர்க்கும்
நிகழ்த்தியது; நீண்மறையின் ஒழிபொருள் வேதாந்தத்
தீதில்பொருள் கொண்டுரைக்கும் நூல்சைவம்; பிறநூல்
திகழ்பூர்வம்; சிவாகமங்கள் சித்தாந்த மாகும்.

என இக்கருத்தைச் *சிவஞான சித்தி சூ. 8.15* இனிது விளக்கினமை காண்க.

சேக்கிழாரும் இவ்வாறே ஞானசம்பந்தர் புராணத்து முதற் கண், ''வேதநெறி தழைத்தோங்க, மிகுசைவத் துறை விளங்க'' (தி.12 திருஞான. பு. 1) எனப் பொதுப்பட இரண்டாகக் கூறிய நெறியது இயல்பினைப் பின்னர்,

''உலகியல் வேதநூ லொழுக்கம் என்பதும்
நிலவுமெய்ந் நெறிசிவ நெறிய தென்பதும்''
-தி.12 திருஞான. பு. 820

என இனிது விளங்கக் கூறி, 'இதுவே, சைவ சமயத்தின் உண்மையைத் திருப்பாசுர வாயிலாகப் பாண்டியனுக்கு அறிவுறுத்த, பிள்ளையாருக் கும் கருத்து' என்று அருளிச்செய்தார். அது, ''வாழ்க அந்தணர் வான வர் ஆனினம்'' (தி.3 ப.54 பா.1) என்று முதலில் அந்தணர் பலரையும், வானவர் பலரையும் பொதுப்படக் குறித்துப் பின்னர், ''எல்லாம் அரன் நாமமே சூழ்க'' எனச் சிவநெறியையே நிலை நிறுத்தினமையால் விளங்குதல் காண்க.

102. தெ-ரை: சிவபெருமான் அருளிச்செய்த ஆகமங்கள் இருபத்தெட்டு உள்ளன. அவை, அறுபத்தாறுபேர் அப் பெருமானை வணங்கி அவனது மேன்முகமாகிய ஈசான முகத்தில் அரிய கருத்துக் களைக் கேட்டுணர்ந்தனவாம்.

கு-ரை: அவ்வாகமங்கள், '*காமிகம், யோகசம், சிந்தியம், காரணம்,அசிதம், தீத்தம், சூக்குமம், சகத்திரம், அஞ்சுமான், சுப்பிர பேதம், விசயம், நிசுவாசம், சுவாயம்புவம், ஆக்கினேயம், வீரம், இரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம், புரோற் கீதம், இலளிதம், சித்தம், சந்தானம், சர்வோத்தம், பாரமேசுவரம், கிரணம், வாதுளம்*' என்பன.

சிவபெருமானுக்கு நாற்றிசை நோக்கி நான்கு முகங்களும், உச்சியில் வான்நோக்கி ஒருமுகமுமாக உள்ள ஐந்து முகங்களையும் கீழிருந்து முறையே, 'சத்தியோசாதம் (மேற்கு), வாமதேவம் (வடக்கு), அகோரம் (தெற்கு), தற்புருடம் (கிழக்கு) ஈசானம் (உச்சி)' என எண்ண, ஐந்தாவதாக வருவது ஈசான முகம். 'சிவபெருமான் மேற்சொல்லிய இருக்கு முதலிய வேதங்கள் நான்கனையும் கீழுள்ள தற்புருடம் முதலிய நான்கு முகங்களானும், ஆகமங்களை மேலே உள்ள ஈசான முகத்தாலும் அருளிச்செய்தான்' என்பவாகலின், ஆகமங்களை, ''அஞ்சாம் முகத்தில் அரும்பொருள் கேட்டது'' என்றார்.

அஞ்சாம் முகம் - ஐந்து என்னும் எண்ணின்கண் நிற்கும் முகம். இனி, 'சத்தியோசாதம் முதல் கீழே உள்ள நான்கு முகங்களாலும் முகத்திற்கு ஐவைந்தாகக் காமிகம் முதல் முகவிம்பம் ஈறாக உள்ள இருபது ஆகமங்களையும், மேலே உள்ள ஈசானமாகிய ஒருமுகத்தால்

எஞ்சிய எட்டு ஆகமங்களும் அருளிச்செய்தான்' எனக் கூறுதலும் உண்டு. ஆதலின், அப்பொருளும் தோன்றுமாறு ''அஞ்சாம் முகத்தில்'' என்றார். இப்பொருட்கு, ''அஞ்சாம் முகம்'' என்றதை, 'அஞ்சாகி நிற்கின்ற முகம்' என்றவாறாக உரைக்க. பின்னர்க் கூறிய முறைமைக்கு, 'மேல்முகமாகிய ஈசானம் ஒன்றே சத்தியோசாதம் முதலிய ஐந்தனையும் உடையதாய் இருக்கும்; அவற்றின்கண்ணே காமிகம் முதலிய ஆகமங்கள் ஐவைந்தாகவும், எட்டாகவும் தோன்றின' என, இரண்டு கருத்தும் தம்முள் முரணாதவாறு விளக்கம் தருபவர் உளர்.

இனிச் சத்தியோசாதம், வாமதேவம், அகோரம், தற்புருடம், ஈசானம் என்னும் முகங்களால் முறையே, 'கௌசிகர், காசிபர், பாரத்துவாசர், கௌதமர், அகத்தியர்' என்னும் முனிவர்கட்கு மேற்சொல்லிய ஆகமங்கள் உணர்த்தப்பட்டன என்பது, 'நிலவுலகில் மகேந்திர மலையில்' என்ற, தி.8 திருவாசகக் கீர்த்தித் திருவகவலால் (அடி. 19. 20) அறியப் படுவதாம்.

இனி, ஆகமங்களைக் கேட்ட அறுபத்தறுவருள், 'எல்லாரும் எல்லா ஆகமங்களும் கேட்டனர்' என்பதில்லை; 'காமிகம் முதல் சுப்பிரபேதம் ஈறாக உள்ள பத்தினையும் ஒன்றை ஒருவராகப் பதின்மர் சிவபெருமானிடங் கேட்க, அவருள் ஒருவரிடத்து ஒருவராக ஓராகமத்தை மற்றும் இருவர் கேட்டனர்' என்பதே வரலாறு. ஆகவே, காமிகம் முதலிய பத்தினையும் கேட்டவர் முப்பதின்மராகின்றனர்.

அவருள் காமிக முதலிய பத்தினையும் சிவபெருமானிடம் நேரே கேட்ட பதின்மராவார், 'பிரணவர், சுதாக்கியர், சுதீத்தர், காரணர், சுசிவர், ஈசர், சூக்குமர், காலர், அம்பு, தேசேசர்' என்போர்.

இனி இப்பதின்மருள் ஒருவரிடத்தினின்று இவ்விருவராக வழிவழிக் கேட்ட இருபதின்மராவார், 'திரிகலர், அரர் - பசுமர், விபு - கோபதி, அம்பிகை - சர்வருத்திரர், மிரசேசர் - சிவர், அச்சுதர் - திரிமூர்த்தி, உதாசனர் - வைச்சிரவணர், பிரபஞ்சனர் - பீமர், தருமர் - உக்கிரர், ஆதித்தியர் - விக்னேசர், சசி' என்போர்.

இம்முப்பதின்மரும், 'சிவர்' எனப்படுதலால், இவர்களால் கேட்கப்பட்ட *காமிகம்* முதலிய பத்து ஆகமங்களும் '*சிவபேதம்*' எனப்படுகின்றன.

இனி, எஞ்சிய *விசயம்* முதல் *வாதுளம்* ஈறாக உள்ள பதினெட்டு

ஆகமங்களுள் ஒவ்வொன்றை ஒவ்வொருவர் சிவபெரு மானிடம் நேரே கேட்க, அவரிடம் அவற்றை மற்றும் ஒவ்வொரு வராகக் கேட்டனர். ஆகவே எஞ்சிய பதினெட்டு ஆகமங்களைக் கேட்டோர் முப்பத்தறுவர் ஆகின்றனர். அவர் பெயர் முறையே வருமாறு:

அநாதிருத்திரர் (அநாதிருத்திரரை, 'மகாருத்திரர்' என்றும் சொல்வது உண்டு.) பரமேச்சுரர் - தசாரணர், பார்வதி - நிதனேசர், பதுமபூ - வியோமர், உதாசனர் - தேசர், பிரசாபதி - பிர மேசர், நந்திகேசர் - சிவர், மகாதேவர் - சர்வான்மர், வீரபத்திரர் - அநந் தர், பிருகற்பதி - பிரசாந்தர், ததீசி - சூலி, கவசர் - ஆலயேசர், இலளிதர் - பிந்து, சண்டேசர் - சிவநிட்டர், அசம்பாதர் - சோமதேவர், நிருசிங்கர் - சீதேவி, உசனர் - தேவவிடி, சம்வர்த்தர் - சிவர், மகா காளர், இவரெல்லாம் 'உருத்திரர்' எனப்படுதலின், இப்பதினெட்டு ஆகமங்களும், '*உருத்திரபேதம்*' எனப்படுகின்றன.

இவர்களுள் ஒருவர் பெயரையே பிறரும் உடையவராய் இருத்தல் பற்றியும், ஆகமங் கேட்டவரல்லாத பிறரது பெயரும் இவர்களுட் சிலர்க்குக் காணப்படுதல் பற்றியும் நாம் மலைவெய்துதல் கூடாது. இவரெல்லாரும் சுத்தாமாயா புவனங்களுள் சதாசிவ புவனத்தில் சதாசிவ மூர்த்திபால் ஆகமங்களைநேராகவும், வழிமுறை யாலும் கேட்டவர் என்க.

ஐந்து முகம் உடைய மூர்த்தி சதாசிவ மூர்த்தியே. அதனால், ''அஞ்சாம் முகத்தில் அரும்பொருள் கேட்டது'' என்றது, இவரிடம் கேட்டதையே என்பதாதல் அறிக. இவரது நிலை மேலே விளக்கப்பட்டது.(தி.10 பா.89 - 90) ''அஞ்சாம் முகத்தில் அரும் பொருள் கேட்டது'' என்பதற்கு ஈடாக, 'எஞ்சலில் விஞ்ஞகர் இருபத் தெண்மரும்'' என்று ஓதுவது, தாமே தமக்கு வேண்டியவாறு கட்டிக் கொண்ட பாடம்.

''அரும்பொருள்'' என்றது, மெய்யுணர்வினை. எனவே, 'ஆகமங்கள் மெய்ந்நெறியை உணர்த்தும் சிறப்புநூல்' என்பது கூறியவாறாயிற்று. ''பாகத்தன் ஆகமம்'' என்பது, செய்யுட் கிழமைக்கண் வந்த ஆறாவதன் தொகை.

103. அண்ணல் அருளால் அருளுஞ் சிவாகமம்
எண்ணில் இருபத்தெண் கோடிநூ றாயிரம்
விண்ணவர் ஈசன் விழுப்பம் உரைத்தனர்
எண்ணிநின் றப்பொருள் ஏத்துவன் நானே. 2

103. தெ-ரை: சிவபெருமான் உயிர்கள்மேல் வைத்த அருள் காரணமாக அருளிச்செய்த ஆகமங்களை எண்ணாற்கூறின், 'இருபத் தெட்டு' என்னும் அளவில் நில்லாமல், அளவின்றியுள்ளன. அவைகளால் மேற்கூறிய அறுபத்தறுவரும், பிறரும் சிவபெரு மானது மேன்மையைத் தத்தமக்கியைந்தவாற்றால் விளங்க உரைத்தார்கள். அவ்வாறு உரைக்கப்பட்ட அளவிலே நானும் கேட்டுச் சிந்தித்துத் துதிக்கத் தொடங்கினேன்.

கு-ரை: ''கோடி நூறாயிரம்'' என்றது அளவின்மை கூறிய வாறு. அற்றாயினும் முற்கூறிய இயைபு தோன்றுதற் பொருட்டு, ''இருபத்தெண்கோடி நூறாயிரம்'' என்றார். விண்ணவர் என்றது மக்களினும் மேம்பட்ட பலரையும், 'அவர் இவர்' என்பது பின்னர் விளக்கப்படும். 'வேதம் நான்கு' எனவும், 'ஆகமம் இருபத் தெட்டு' எனவும் வரையறை கூறப்படினும், அவ்வப்பொழுது இறைவன் அவரவருக்கு உணர்த்துமாற்றால் உண்மையில் அவை அளவில் லனவே என்பது உணர்த்துதற்கு இவ்வாறு கூறினார். ''வேதங்கள் அநந்தம்'' என்ற வாக்கியமும் உண்டு. இது பற்றியே, ''ஒருமுகம் எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித் - திங்கள் போலத் திசைவிளக் கும்மே'' என்னும் திருமுருகாற்றுப் படைப் பகுதிக்கு நச்சினார்கினியர் உரைகூறுமாறும் அறிக.

இனி 'இஃது ஆகமங்களின் கிரந்தங்கள் எண்ணில வாதலையும், உபாகமங்கள் இருநூற்றேழாதலையும் கூறியது' என்றலுமாம். சேக்கிழாரும் ''எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர்'' என்றமை அறியத் தக்கது. (தி.12 திருக்குறிப்புத் தொண்டர். 51) இதனால், 'ஆகமங்கள், அறுபத் தறுவரேயன்றிப் பின்னும் பலரால் கேட்கப்பட்டு வந்து நிலவுலகில் விளங்கின' என்பது கூறப்பட்டது.

ஆகமங்களின் கிரந்த அளவு மரபாகச் சொல்லப்பட்டுவரும் முறை வருமாறு:

1.	காமிகத்திற்குக்	கிரந்தம்	பரார்த்தம்.
2.	யோகஜத்திற்கு	கிரந்தம்	ஒரு லட்சம்.
3.	சிந்தியத்திற்கு	கிரந்தம்	ஒரு லட்சம்.
4.	காரணத்திற்கு	கிரந்தம்	ஒரு கோடி.
5.	அஜிதத்திற்கு	கிரந்தம்	நியுதம்.
6.	தீப்தத்திற்கு	கிரந்தம்	நியுதம்.
7.	சூட்சுமத்திற்கு	கிரந்தம்	பத்மம்
8.	சகஸ்ரத்திற்கு	கிரந்தம்	சங்கம்
9.	அம்சுமானுக்கு	கிரந்தம்	ஐந்து லட்சம்
10.	சுப்பிரபேதத்திற்கு	கிரந்தம்	மூன்று கோடி
11.	விஜயத்திற்கு	கிரந்தம்	மூன்று கோடி
12.	நிஸ்வாசத்திற்கு	கிரந்தம்	ஒரு கோடி
13.	சுவாயம்புவத்திற்கு	கிரந்தம்	ஒன்றரைக் கோடி
14.	ஆக்னேயத்திற்கு	கிரந்தம்	முப்பதினாயிரம்
15.	வீரத்திற்கு	கிரந்தம்	நியுதம்
16.	ரௌரவத்திற்கு	கிரந்தம்	எட்டு அற்புதம்
17.	மகுடத்திற்கு	கிரந்தம்	ஒரு லட்சம்
18.	விமலத்திற்கு	கிரந்தம்	மூன்று லட்சம்
19.	சந்திர ஞானத்திற்கு	கிரந்தம்	மூன்று கோடி
20.	முக விம்பத்திற்கு	கிரந்தம்	ஒரு லட்சம்
21.	புரோத்கீதத்திற்கு	கிரந்தம்	மூன்று லட்சம்
22.	லளிதத்திற்கு	கிரந்தம்	எண்ணாயிரம்
23.	சித்தத்திற்கு	கிரந்தம்	ஒன்றரைக் கோடி
24.	சந்தானத்திற்கு	கிரந்தம்	ஆறாயிரம்
25.	சர்வோக்தத்திற்கு	கிரந்தம்	இரண்டு லட்சம்
26.	பாரமேசுரத்திற்கு	கிரந்தம்	பன்னிரண்டு லட்சம்
27.	கிரணத்திற்கு	கிரந்தம்	ஐந்து கோடி
28.	வாதுளத்திற்கு	கிரந்தம்	ஒரு லட்சம்

இருபத்தெட்டு மூலாகமங்கட்கு உபாகமங்களின் அளவு மரபாகச் சொல்லப்பட்டு வரும் முறை வருமாறு:

1. காமிகத்திற்கு உபாகமம் 3:- வக்தாரம், பைர வோத்தரம், நாரசிம்மம் (மிருகேந்திரம்).
2. யோகஜத்திற்கு உபாகமம் 5:- தாரம், வீணாசிகோத்ரம், ஆத்மயோகம், ஸந்தம், ஸந்ததி.
3. சிந்தியத்திற்கு உபாகமம் 6:- ஸுசிந்தியம், ஸுபகம், வாமம், பாபநாசம், பரோத்பவம், அம்ருதம்.
4. காரணத்திற்கு உபாகமம் 7:- காரணம், வித்வேஷம், பாவனம், மாரணம், தௌர்கம், மாஹேந்திரம், பீனஸம்ஹிதை.
5. அஜிதத்திற்கு உபாகமம் 4:- பிரபூதம், பரோத்பூதம், பார்வதீஸம்ஹிதை, பத்மஸம்ஹிதை.
6. தீப்தத்திற்கு உபாகமம் 9:- அமேயம், சப்தம், ஆச்சாத்தியம், அஸங்கியம், அமிருதோஜஸம், ஆனந்தம், மாதவோத்பூதம், அற்புதம், அக்ஷயம்.
7. சூட்சுமத்திற்கு உபாகமம 1:- சூட்சுமம்.
8. சகஸ்ரத்திற்கு உபாகமம் 10:- அதீதம், மங்கலம், சுத்தம், அப்ரமேயம், ஜாதிபாக்கு, பிரபுத்தம், விபுதம், அஸ்தம், அலங்காரம், ஸுபோதம்.
9. அம்சுமானுக்கு உபாகமம் 12:- வித்தியா புராணம், தந்திரம், வாஸவம், நீலலோகிதம், பிரகரணம், பூததந்திரம், ஆத்மாலங்காரம், காசியபம், கௌதமம், ஐந்திரம், பிராமம், வாசிட்டம், ஈசானோத்தரம்.
10. சுப்பிரபேதத்திற்கு உபாகமம் 1:- சுப்பிரபேதம்.
11. விசயத்திற்கு உபாகமம் 8:- உற்பவம், சௌமியம், அகோரம், மிருத்யுநாசனம், கௌபேரம், மகாகோரம், விமலம், விசயம்.
12. நிசுவாசத்திற்கு உபாகமம் 8:- நிசுவாசம், நிசுவாசோத்தரம், நிசுவாச சுகோதயம், நிசுவாச நயனம், நிசுவாச காரிகை, நிசுவாச கோரம், நிசுவாச குய்யம், மந்திர நிசுவாசம்.
13. சுவாயம்புவத்திற்கு உபாகமம் 3:- பிரஜாபதி மதம்,

பதுமம், நளினோற்பவம்.

14. ஆக்னேயத்திற்கு உபாகமம் 1:- ஆக்கினேயம்.

15. வீரத்திற்கு உபாகமம் 13:- பிரஸ்தரம், புல்லம், அமலம், பிரபோதகம், அமோகம், மோகசமயம், சகடம், சகடாதிகம், பத்திரம், விலேகனம், வீரம், அலம், போதகம்.

16. இரௌரவத்திற்கு உபாகமம் 6:- காலாக்கியம், காலதகனம், இரௌரவம், இரௌரவோத்தரம், மகாகாலமதம், ஐந்திரம்.

17. மகுடத்திற்கு உபாகமம் 2:- மகுடம், மகுடோத்தரம்.

18. விமலத்திற்கு உபாகமம் 16:- அனந்தம், போகம், ஆக்கிராந்தம், இருடபிங்கம், இருடோதரம், இருடோற்பூதம், இரௌத்திரம், சூதந்தம், தாரணம் ஆரேவதம், அதிக்கிராந்தம், அட்டகாசம், பத்திரவிதம், அர்ச்சிதம், அலங்கிருதம், விமலம்.

19. சந்திர ஞானத்திற்கு உபாகமம் 14:- ஸ்திரம், ஸ்தாணு, மகாந்தம், வாருணம், நந்திகேசுரம், ஏகபாதபுராணம், சாங்கரம், நீலருத்திரகம, சிவபத்திரம், கற்பபேதம், சீமுகம், சிவசாசனம், சிவசேகரம், தேவீமதம்.

20. முக விம்பத்திற்கு உபாகமம் 15:- சதுமுகம், சமத்தோபம், பிரதிபிம்பம், அயோகஜம், ஆன்மாலங்காரம், வாயவியம், பட்டசேகரம், தௌடிகம், துடிநீரகம், குட்டிமம், துலாயோகம், காலாத்தியயம், மகாசௌரம், நைருதம், மகாவித்தை.

21. புரோத்கீதத்திற்கு உபாகமம் 16:- வாராகம், கவசம், பாசபந்தம், பிங்கலாமதம், அங்குசம், தண்டதரம், தனுதரம், சிவஞானம், விஞ்ஞானம், சீகாலஞானம், ஆயுர்வேதம், தனுர்வேதம், சர்பதம், ஷ்டரவிபேதனம், கீதகம், பரதம், ஆதோத்தியம்.

22. இலளிதத்திற்கு உபாகமம் 3:- இலளிதம்,